2778.

# T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LXII NO: 3

March 22nd 1984

D
V211, 31 N84
N84·62·3
136239

வெளியீடு 24-11-84] [Issued 24-11-84

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 22, 1984 - தொகுதி LXII எண் 3

Thursday, the 22nd March 1984 - Volume LXII No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras - 600 009**

விலை: ரூ. 3-50 காசுகள்] **[Price Rs. 3-50 paise**

V211, 31 N84
N84. 62-3
136239
600 008.

# உள்ளடக்கம்.

22-3-1984.

பக்கங்கள்


1. வினாக்கள்-விடைகள் —

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 511—545

2. தகவல் கோரல் —

(அ) பி. அன்ட் ஸி. மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் .. .. .. 545

(ஆ) தர்மபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட நில அதிர்ச்சி .. .. .. .. 546

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள் .. .. .. 546

3. ஒத்திவைப்புத் தீர்மானம் :

கல்லூரி மாணவி ஒருத்தி நெய்வேலியில் மரணமடைந்துள்ளது .. .. 547—549

4. அறிக்கை அளித்தல் —

விதி 107-ன்கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை .. 549—551

5. கவன ஈர்ப்புகள்—

(அ) தமிழ்நாட்டின் தென் பகுதிகளில் காலரா நோய் பரவி வருவது .. 551—557

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து சேலம் அருகே விபத்திற்குள்ளானது. .. .. 557—566

6. வரவு-செலவுத் திட்டம், 1984-85 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. 566—732

(ஆ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-
அச்சுத் துறை .. .. .. 567—732

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி .. 568, 710—731
திரு. எல். இளையபெருமாள் .. .. 568—585, 588—590
திரு. கே. சௌந்திரராசன் .. .. 585—589, 591—597
திரு. து. இராசரத்தினம் .. .. 601—604
திரு. த. மாரிமுத்து .. .. .. 604—609
திரு. ரா. கிருஷ்ணன் .. .. .. 610—618
திரு. சீ. சிவப்பிரகாசம் .. .. 618—623
திரு. சோ. அழகர்சாமி .. .. 623—632
திரு. ஏ. பெரியசாமி .. .. .. 632—634
திரு. பி. துரைராஜ் .. .. .. 634—639
திரு. ஜி. மூர்த்தி .. .. .. 640—649
திரு. ஆர். சக்கரபாணி .. .. .. 649—654
திரு. கே. தனுக்கோடித் தேவர் .. 654—656
திரு. சோ. கலிதீர்த்தான் .. .. 656—660
திரு. க. பாரமலை .. .. .. 660—664
திரு. பெ. கலியமூர்த்தி .. .. 665—667
திரு. ஜே. எஸ். இராசு .. .. .. 667—676
திரு. செ. குப்புசாமி .. .. .. 676—681
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. 681—687
திரு. சி. சபாபதி .. .. .. 687—688
திரு. என். பழனிவேல் .. .. .. 689—691
திருமதி டி. யசோதா .. .. .. 692—710

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 733—734

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

———

1984, மார்ச் 22, வியாழக்கிழமை

பங்குனி 9, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர் "

மேன்மையான நிலையில் இருப்பதாகத் தோன்றினாலும் மேன்மைப் பண்பு இல்லாதவர் மேலானவர் அல்லர். சமூகத்தில் தாழ்வு நிலையில் இருப்பதாகத் தோன்றினாலும் இழி குணம் இல்லாதவர் கீழ் மக்கள் அல்லர். எனவே, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்பது அவரவர் குணத்தைப் பொறுத்தது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Cars purchased by Government during 1982-83.*

387 (*Q. No. 20058) Thiru P. VENKATASUBRAMANIAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of cars purchased by the Government for the use of the Ministers, Speaker and Officials in 1982 and upto March 1983;

(b) the makes of the cars and their cost; and

(c) the period fixed for changing the cars and the cost of maintenance of these vehicles in 1982 and 1983?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1982 மற்றும் 1983 மார்ச் வரை, அமைச்சர்களுக்காக கீழ்க்கண்ட நான்கு புதிய சிருந்துகள் வாங்கப்பட்டன ;—

1. டி.எம்.கே. 7777
2. டி.எம்.கே. 9999
3. டி.எம்.எம். 777
4. டி.எம்.ஜே. 999

(ஆ) அச் சிருந்துகள் ஹிந்துஸ்தான் மோட்டார் கம்பெனியாரால் தாயரிக்கப்பட்ட அம்பாசிடர் வகையைச் சார்ந்தது. நான்கு சிருந்துகளின் மொத்த விலை ரூ. 2,86,974 ஆகும்.

(இ) 2,00,000 கிலோ மீட்டர் அல்லது 10 வருடங்கள் (எது பின்னதாக அமைகிறதோ) ஓடிய சிருந்துகளை அரசு விதிகளின்படி பயனற்றதென கழிவு செய்து அதற்குப் பதிலாக புதிய சிருந்துகள் வாங்கப்படுகின்றன. 1982 மற்றும் 1983 மார்ச் வரை அச்சிருந்துகளுக்குப் பராமரிப்பு செலவினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. டி.எம்.கே. 7777 .. ரூ. 341.62 பை.
2. டி.எம்.கே. 9999 .. ரூ. 205.47 பை.
3. டி.எம்.எம். 777 .. ரூ. 1,475·55 பை.
4. டி.எம்.ஜே. 999 .. ரூ. 58.20 பை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கார்களை உபயோகப்படுத்துவதினால் பெட்ரோலுக்கு அதிகமாக செலவாகிறது. அவைகளுக்குப் பதிலாக இந்த அரசு கார்களில் டீசல் என்ஜினைப் பொருத்தி செலவைக் குறைக்க பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஜீப் போன்ற வேன்கள் மற்றவைகளுக்கெல்லாம் டீசல் என்ஜின்களை வாங்கிப் பயன்படுத்தி வருகிறோம். கார்களை எல்லாம் டீசலாக மாற்ற வேண்டுமென்கிறீர்கள். டீசல் எண்ணெய் விலை மிகக் குறைவாக இருக்கிறதே ஒழிய, கார்களிலே ரிப்பேர் வந்துவிடுமேயானால், இந்த பெட்ரோலுக்கு ஆகும் செலவை விட அதிகமாகிறது. இந்த இரண்டையும் பார்க்கும்போது, 40, 50 பேர்களை எடுத்துச் செல்லும் பேருந்துகளை நாம் டீசலாக மாற்றுவதில் பலன் ஏற்படுகிறது. ஆனால் கார்களை மாற்றுவதினால், அதிக பலன் ஏற்படுவதில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தச் செலவினங்களைக் குறைக்க சிக்கன நடவடிக்கைகளில் அரசு முனைந்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, செயலாளர்கள், அமைச்சர்கள், மற்றவர்கள் உபயோகப்படுத்தும்போது, இவ்வளவு பெட்ரோல் பயன்படுத்த வேண்டும், இவ்வளவு தூரம் போக வேண்டும் என்று வரைமுறை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இவைகள் எல்லாம் ஒரு கட்டுப்பாட்டுடன் அமைந்துவிடுகிறது. அதிகச் செலவு ஆவதில்லை.





திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிர்லா கம்பெனியில் தயாரிக்கப்படும் "காண்டிசா" (Contessa) எனப்படும் கார்களை வாங்குவதற்கு தமிழக அரசு ஆர்டர் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இது உண்மையானால், அது பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரங்கள் இல்லை.

**சர்வீஸ் கமிஷன் தேர்வுகளுக்கான வயது வரம்பினை உயர்த்தும் திட்டம்.**

388—(*வினா எண். 20416)— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சர்வீஸ் கமிஷன் தேர்வுகளுக்கான வயது வரம்பினை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் படித்து பட்டம் பெற்று, அதிலும் குறிப்பாக தமிழகத்திலே ஏராளமான பேர் வேலைக்காக பதிவு செய்துவிட்டு பல்லாண்டுக்காலமாக வேலை கிடைக்காமல் அவதிப்படுகின்ற இந்தக் கால கட்டத்தில், இப்போது எல்லா உத்தியோகங்களுக்கும் சர்வீஸ் கமிஷன் எழுத வேண்டும் என்று ஒரு நிலை வந்தபிறகு, இந்த வயது வரம்பை உயர்த்தித் தந்தால் வேலை கிடைக்காமல் இருப்பவர்களுக்கு இது ஒரு சலுகையாகக் கூட இருக்குமே, இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுகின்ற வயது 55 ஆக இருக்கின்றபோது 25 வயதுக்குள்ளாக சர்வீஸ் கமிஷன் எழுத வேண்டும் என்ற ஒரு நியதி இருந்தது. பிறகு 25–26 ஆக உயர்த்தப்பட்டது. இப்போது ஓய்வு பெறும் வயதை 58 ஆக உயர்த்தியதற்குப் பிறகு, எல்லோருக்கும் 26-லிருந்து 28 வயது வரை நாம் வயதை உயர்த்தியிருக்கிறோம். பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர்களுக்கு உச்ச வயது வரம்பில் 5 வருடங்கள் சலுகை அளித்துக் கொண்டு வருகிறோம். இதுதான் தற்போது நடைமுறையில் இருந்துகொண்டு வருகிறது.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக பரவி இருக்கக்கூடிய காலத்தில், நேற்றையதினம் கூட நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இடைநிலை ஆசிரியர்கள், 10 ஆண்டுக்

[1984 மார்ச் 22

காலமாக, 10 ஆயிரம் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். ஆகவே வேலையில்லாதவர்கள் தொகை அதிகமாக மிகுந்திருக்கின்றபோது, அவர்கள் தேர்வாணைக்குழுவை நெருங்குகிறபோது, அங்கே தவறுகள் நடக்க வாய்ப்பு இருப்பதாகக் தெரிகிறது. ஆகவே இந்த நல்ல காரியத்தைச் செம்மையாக நடத்துவதற்கும், இந்தத் தவறுகளை திருத்துவதற்கும் இந்த வயது வரம்பை உயர்த்தி வேலை இல்லாதவர்களுக்கு சலுகை அளிக்க அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி, ஓய்வு வயதை உயர்த்தும் போது, இந்த வயது வரம்பும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குள்ளாகவே இவர்கள் வேலை பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வேலை வாய்ப்பு அலுவலகங்கள், பல்வேறு துறைகளுக்கு கொடுக்கிற நேரத்தில், 1973, 1974, 1975-ல் பதிவு செய்தவர்களுக்கு முதல் சலுகை தந்து, கடைசியில் வயது குறைவானவர்களுக்கு இடம் கொடுக்காமல், அதிக அளவிற்கு வயது ஏறிக்கொண்டு போகிறது என்று, மேலே இருப்பவர்களுக்கு சலுகை அளித்து, 1974, 1975 மற்றும் 1976-ஆம் ஆண்டுகளில் பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை தந்து அவர்களுக்குத்தான் இப்போது வேலைக்காக அனுப்புகின்ற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. எனவே சர்வீஸ் கமிஷனில், இப்போது உயர்த்தியிருக்கின்ற அளவே போதுமானது என்ற அளவிற்கு நாம் கருதுகிறோம்.

### லாட்டரி சீட்டில் பரிசுத் தொகையினைப் பெற்றுக்கொள்ளாமையால் சேர்ந்துள்ள தொகை.

389—(* வினா எண். 21722)— திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1981-82, 1982-83 மற்றும் 1983-84-ல் நவம்பர் முடிய லாட்டரி சீட்டில் பரிசுத் தொகை பெறப்படாமல் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

| | |
|---|---|
| 1981-82-ம் ஆண்டு வழங்கப்படாத பரிசுத் தொகை | ரூ. 39,80,480 |
| 1982-83 ஆண்டு வழங்கப்படாத பரிசுத் தொகை | ரூ. 41,40,830 |
| 1983-84 ஆண்டு (நவம்பர் முடிய) வழங்கப் படாத பரிசுத் தொகை | ரூ. 17,39,770 |
| மொத்தம் ரூபாய். | 98,61,080 |



1984 மார்ச் 22]

### நெற் பயிருக்குச் சொட்டு நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்துவது குறித்த ஆராய்ச்சி.

393—(* வினா எண். 20650)— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெற்பயிருக்குச் சொட்டு நீர்பாசன முறையைப் பயன்படுத்த ஆராய்ச்சி நடந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ). இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திலே பயிர்களுக்கு '' சொட்டு நீர்பாசன '' முறையை பயன்படுத்தினால் அதிகமான மகசூல் கிடைக்கிறது என்று அதிலே சம்பந்தப்பட்ட, அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் சொல்லுகிறார்கள், அதை அரசாங்கம் பரீட்சார்த்தமாகக்கூட சில இடங்களில் நடத்தியதாக எனக்குத் தகவல் சொன்னார்கள். எனவே அதைப் பரவலாக நடத்துவதற்கு அரசாங்கத்திடம் குறிப்புகள் ஏதாவது உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் இந்தப் பாசன முறைகளை நாம் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்த இருக்கிறோம். இதில் தென்னை, மா, காய்க்கறிகள் போன்றவைகளுக்கு இந்த முறை பயன்படுத்தப்படும். நெல்லைப் பொறுத்தவரையிலே, அதற்கு தகுந்த இடைவெளிவிட்டு நடுகின்றபோது அதிலே தண்ணீர் தேங்கி நிற்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் இந்தப் பாசன முறை அதற்குப் பயன்படுத்த முடியாது. ஆகவே மற்றவைகளுக்குத்தான் இதைப் பயன்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது. இதிலே முன்னோடித் திட்டமாக, ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கவும் அரசு முடிவு செய்திருக்கிறது.

(முற்பகல் 9-10)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மூன்று வகையான பயிர்களைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மணிலாவுக்கும் அதைப் பயன்படுத்தலாம். அதேபோல கேழ்வரகு, கம்பு, சோளம் போன்ற புன்செய் தானியங்களுக்கும் கூட அதைப் பயன்படுத்திக் கொள்வதனால் தண்ணீரும் சிக்கனமாகும். செலவு கூட குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி விவசாயிகள் அந்த

[1984 மார்ச் 22

முறையைப் பயன்படுத்துவதற்கும், பயன்படுத்துகின்ற விவசாயி
களுக்கு ஏதாவது சலுகைகளை அளிப்பதற்கும் அரசாங்கம் முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்
களே, அந்த வகைகளிலே அரசு ஆராயும். ஆனால் குறைந்த
இடைவெளியில் இருக்கிற பயிர்களுக்கு அதைப் பயன்படுத்து
வது என்பது மிக மிக அதிகமாக செலவு ஆகும். தென்னையைப்
பொறுத்தவரையில் ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய் செலவு ஆகும்
என்று சொல்லப்படுகிறது. காய்கறிகளுக்கு 7 ஆயிரம், 8
ஆயிரம் ரூபாய் செலவு ஆகும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே,
அந்தசெலவுத் தொகை, அதிலே வரக்கூடிய ஆதாயம் இவைகளை
யெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டுதான், இந்த திட்டத்
தைச் செயல்படுத்த இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தச் சொட்டு நீர்ப்பாசனம், தண்ணீரை மிகச்
சிக்கனமாக பயன்படுத்துவதற்கு பிரயோஜனப்படுவதாகச் சொல்
லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஏக்கருக்கு
3 ஆயிரம் வரையில் மானியம் வழங்கப்படுவதாகச் சொன்
னார்கள். அதற்குத் தகுதி எந்த அடிப்படையில் நிர்ணயிக்
கிறார்கள்? சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று ஏதாவது
உள்ளதா? ஒரு ஏக்கருக்கு 3 ஆயிரம் என்று சொன்னால், கூடுத
லாக எத்தனை ஏக்கர்கள் வரை இந்த மானியம் அளிக்கப்
படும்? எந்தத் துறையின் மூலம் பெறவேண்டும் என்ற விவரங்
களை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே,
வேளாண்மைத் துறையின் மூலமாகத்தான் அத்தகைய முயற்சி
களை மேற்கொள்ள வேண்டும். வேளாண்மை பொறியியல்
துறைதான் அதன் செயல்பாட்டிற்கான பொறுப்பை ஏற்
றிருக்கிறது. இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறோம். அது
பற்றி விரிவாகப் பரிசீலனை செய்து முடிவுகள் அவ்வப்போது
எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நமது
தமிழகத்தில் பாசன நிலங்களில் பற்றாக்குறை ஏற்பட்டிருக்
கிறது. நம்மிடம் மீதம் இருப்பது கடல் மட்டும் தான்.
வங்கக் கடலில் ஆயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் வற்றாத
கடல் தண்ணீர் இருக்கிறது. எனவே கடல் தண்ணீரைப் பயன்
படுத்தி, கடலுக்குள்ளேயே பாசி போன்ற வகையில் நெல்
பயிர் ரகங்களை விளைவிக்க ஆராய்ச்சிகளை அரசாங்கம் மேற்
கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்
களே, அதைப்பற்றிய விரிவான திட்டத்தை உறுப்பினர் திரு.
தாமரைக்கனி அவர்கள் தயாரித்துக் கொடுத்தால் அரசு
ஆராயும்.



1984 மார்ச் 22]

மாவட்ட அளவில் நில மேம்பாட்டுக் குழுக்களை அமைக்கும் திட்டம்.

394—*(வினா எண். 21431) திரு. எஸ். இராசாராமன் :
திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் நில மேம்பாட்டுக் குழுக்கள்
அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்பெறும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ):
தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் 28-9-1983ல் நடை
பெற்ற கூட்டத்தில் சென்னை மற்றும் கன்னியாகுமரி மாவட்
டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் மாவட்டக் குழுக்களை
அமைத்துள்ளது. இதுகாறும், பெரியார், தர்மபுரி மாவட்டங்
களில் குழுக்கள் செயல்பட, தொடர் நடவடிக்கைகள் சம்பந்தப்
பட்ட ஆட்சித் தலைவர்களால் எடுக்கப்பட்டுள்ளன. இதர
மாவட்டங்களில் குழுக்களின் கடமையைத் துவக்க தக்க நட
வடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மாவட்டங்களில்
குழுக்கள் அமைக்க இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக்
குழுக்கள் அதிகாரிகள் மட்டத்தில் மட்டும் இருக்கிறதா? அதி
காரப் பற்றில்லாமல், மக்களில் உண்மையாக விவசாயிகளின்
நிலைமையை அறிந்து ஆலோசனை சொல்லக் கூடிய வகையில்,
அதிகாரப் பற்றற்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கிற
தா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி என்றால் யார்
யார் என்ற விவரமும் சொல்லப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்
களே, மாவட்ட ஆட்சித் தலைவர், அதன் தலைவர் மாவட்ட
வன அலுவலர், மாவட்ட வேளாண்மை அலுவலர், வேளாண்மை
உதவிப் பொறியாளர், அக் குழுவில் அலுவல் தொடர்பாக உறுப்
பினர்கள் மற்றும் மாநிலத்தில் உள்ள சட்டமன்ற, நாடாளுமன்ற
உறுப்பினர்களில் 4 பேர்களுக்கு மேற்படாமல் அதில் உறுப்
பினர்களாக இருப்பர், முற்போக்கு விவசாயி ஒருவரும் இதில்
உறுப்பினராக இருப்பர்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட
ஆட்சித் தலைவர் மற்றும் நிர்வாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள்
அதிலே இருப்பதாகக் கூறினார்கள். தனியாக முற்போக்கு
விவசாயி என்றும் சொன்னார். சட்டமன்ற உறுப்பினர்களில்
ஒரு மாவட்டத்தில் 4 பேர்கள் என்று சொன்னார். அந்த 4
பேர்களும், கட்சியின் அடிப்படையில் தரப்படுகிறார்களா? அல்
லது அரசே நிச்சயிக்கின்ற முறையில் உறுப்பினர்களை நியமனம்
செய்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அந்தப் பணிக்குத் தேவையான வகையில், எந்தெந்த உறுப்பினர்களுக்கு ஆர்வம் இருக்கிறதோ, அந்த உறுப்பினர்களின் பெயர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் செய்வார்கள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியிலே முற்போக்கு விவசாயி என்று ஒரு விவசாயி உறுப்பினராக இருப்பார் என்று சொன்னார்களே. முற்போக்கு விவசாயி என்பதற்கு ஏதாவது நார்ம்ஸ் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பயிர் தொழிலிலே ஈடுபாடோடு ஈடுபட்டுள்ளவர்கள். அதிலே மிக அதிகமாக ஆர்வம் உள்ளவர்கள்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நில மேம்பாடு திட்டம் மதுரை போன்ற இடங்களில் எல்லாம் தற்போது இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே எம்.எல்.ஏக்கள் பங்கு பெற்றிருப்பதாகவும் சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் அப்படி இருக்கக் கூடிய எம்.எல்.ஏக்கள் யார் யார்? இந்த நில மேம்பாடு திட்டத்தால் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள், வி.பி. பாலசுப்பிரமணியன், சந்திரசேகரன், குப்புசாமி, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜக்கையன், முற்போக்கு விவசாயி என்ற முறையில் டபிள்யூ பி.ஏ. நாகராஜன், ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நிலத்தை எப்படிச் சீர்படுத்துவது, கடினமான நிலங்களை, விவசாயத்திற்குக் கொண்டுவருவது போன்ற கருத்துக்களை எடுத்துச் சொல்வார்கள். அதற்கு வேளாண்மைத் துறை, பொறியியல் துறைகளினுடைய ஆலோசனை பெறப்படும்.

• தமிழ்நாட்டில் மேலும் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

395. *(வினா 22044) திரு. இரா. தாமரைக்கனி: திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் மேலும் ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க செயற்குறிப்புள்ளதா?

(ஆ) புதிய கல்லூரி எங்கு அமைக்கப்படும்?

(இ) எப்போது முதல் கல்லூரி செயல்படும்?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம் கிள்ளிகுளத்தில் அமைக்கப்படும்.

(இ) 1984-85 ஆம் கல்வியாண்டிலிருந்து செயல்படலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரிகள் அமைப்பதே நவீன விவசாய முறைகளையும் புதிய ரக விதைகளைக் கண்டுபிடிப்பதும் ஆராய்ச்சி செய்வதற்கும் தான். ஆனால் விவசாயக் கல்லூரிகளிலே படித்துப் பட்டம் பெற்றவர்கள் விவசாய ஆராய்ச்சி செய்யாமல் பேங்குகளிலே அதிகாரிகளாகப் போய் வேலைபார்க்கிறார்கள். ஆகவே இப்படி அவர்கள் பட்டப் படிப்பு படித்தும் பிரயோஜனம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே அது பயன்படும் வகையில் வேலைவாய்ப்பு மாற்றி அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நம்முடைய தேவைக்குரிய அளவுக்கு விவசாயப் பட்டதாரிகள் இப்போது இருக்கிறார்கள். இன்னும் பல புதிய திட்டங்களை அரசு அறிமுகப்படுத்துகிறபோது அதற்குத் தேவையான அளவில் அவர்கள் இருக்கவேண்டுமென்ற என்ற அளவில் புதிய கல்லூரிகளைத் திறக்கிறோம். ஆகவே அந்த அளவில் நம்முடைய துறையினுடைய தேவையை நிறைவேற்றுகின்ற நிலையில் எந்த விதமான சிக்கலும் இருக்காது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி நெல்லை மாவட்டத்திலேயும் தஞ்சை மாவட்டத்திலேயும் அமைக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்திலே வேளாண்மைக் கல்லூரியை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அப்படி இல்லாவிட்டால் கால்நடைக் கல்லூரியையாவது ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதிலேயிருந்து நாம் நடுநிலையோடு முடிவு செய்கிறோம் என்பது தெரிகிறது.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, வருகிற கல்வியாண்டிலே ஆரம்பிக்கப்பட இருக்கிற இந்த விவசாயக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆரம்ப நிலையில் இருக்கிறது. பின்னர்தான் முடிவு செய்ய வேண்டும்.

**திரு. டி. மணி :** தலைவர் அவர்களே, வேளாண்மைக் கல்லூரி சம்பந்தமாக ஒரு நீண்டகாலக் கோரிக்கை இருக்கிறது. குமரி மாவட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வதாக ஒரு கூட்டத்திலே பேசினார்கள். இந்த ஆண்டு அல்ல, அடுத்த ஆண்டிலாவது குமரி மாவட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** நெல்லை மாவட்டம் குமரி மாவட்டத்திற்குப் பக்கத்திலேதான் இருக்கிறது.

**திரு. தி. அன்பழகன் :** தலைவர் அவர்களே, வருகிற கல்வி ஆண்டிலே விவசாயக் கல்லூரியைப் போல் 2 ஆவது 3 ஆவது ஆரம்பிக்கப்படும் விவசாயக் கல்லூரியை குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே எப்போது ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இப்போது சொல்ல முடியாது.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவசாயக் கல்லூரியிலே படித்து பட்டம் பெற்றவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறதா? அப்படிக் கிடைக்கவில்லை என்றால் கிடைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** வேலைக்கு ஆள் இல்லை என்ற பற்றாக்குறைதான்.

**தமிழ்நாட்டில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி நிறுவும் திட்டம்.**

396. *(வினா 22308) **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் புதியதாகக் கால்நடை மருத்துவக் கல்லூரி நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** ஆம்.

**திரு செ. செம்மலை :** தலைவர் அவர்களே, ஆரம்பிக்கப்பட இருக்கிற கால்நடைக் கல்லூரி எங்கு ஆரம்பிக்கப்படுவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது? சேலத்திலே அந்தக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக் கல்லூரியினுடைய தலைவர் கல்லூரி துறையினுடைய இயக்குநர் ஆகியவர்களுடைய கருத்துரைகளின் அடிப்படையில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பதிவாளருடைய கருத்துரை அடிப்படையில் அரசு விரைவில் முடிவு செய்யும்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே குமரி மாவட்டத்திற்கு விவசாயக் கல்லூரி கேட்கப்பட்டது, கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்கள் இல்லை என்று நேற்றைய அறிவித்தார்கள் ஆகவே கால்நடைக் கல்லூரி அங்கே ஆரம்பிப்பதற்கு முன்வருமா? அங்கே அரசு சார்பிலே ஒரு கல்லூரி கூட இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அந்தக் குழுவின் பரிந்துரை வந்ததற்குப் பிறகு அதைப்பற்றி முடிவு செய்யவேண்டும்.

[முற்பகல் 9-20]

**டாக்டர் கே. சமரசம் :** தலைவர் அவர்களே, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே கால்நடைப் பண்ணை தர்மபுரி, ஓசூரிலே நிறுவப்பட்டது. கால்நடை வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் வேண்டிய இயற்கை அமைப்பும் நல்ல சீதோஷண நிலையும் இருக்கிற காரணத்தினாலும் ஏற்கனவே அரசு ஆர்ஜிதம் செய்த நிலங்கள் இருப்பதாலும் அங்கே கால்நடை மருத்துவக் கல்லூரியைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அதையும் சேர்த்துப் பரிசீலிப்போம்.

**சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க கோடை நீர்த் தேக்கம் கட்டும் திட்டம்.**

397. (*வினா 16546) **திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிப் பகுதிகளுக்குக் கோடையில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாமலிருக்கக் கோடை நீர்த் தேக்கம் கட்ட அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1984 மார்ச் 22

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புளியங்குடி பகுதியிலும் சங்கரன்கோயில் பகுதி யிலும் ஒவ்வொரு ஆண்டும் கோடைக் காலத்தில் தண்ணீர் தட்டுப் பாட்டால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஏற்கனவே ஒரு குடிநீர் தேக்கம் உருவாக்குவதற்காக அங்கு இருக்கக்கூடிய பொறியாளர்கள் ஆய்வு செய்து இங்கே பரிந்துரை செய்து இருப்ப தாக நான் கேள்விப்பட்டேன். அப்படி இங்கே அரசுக்கு அனுப்ப வில்லை என்றாலும் அரசு அதில் உடனடியாகத் தலையிட்டு அந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஆய்வு செய்து புதிய குடிநீர்திட் டம் கொண்டு வரவேண்டியது மிக முக்கியமானது. ஆனால் நக ராட்சிகள் பொறுத்தவரையில் ஆய்வுப் பணிக்கான தொகையை செலுத்திய பின் தான் இந்த வேலைகள் மேற்கொள்ளப்படும். எனவே, குடிநீர் வடிகால் வாரிய இயக்குநர் அவர்கள் இதற்கான ஆய்வுத் தொகை செலுத்தவில்லை என்று தெரிவித்துள்ளார். எனவே, ஆய்வுத் தொகை செலுத்துவதற்கு வேண்டிய முயற்சி அனைவரும் எடுத்துக்கொள்வது நல்லது.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புளியங்குடிக்கு மேற்கே உள்ள வனப் பகுதியில் நீர் வளம் போதுமானதாக இல்லை என்று தாமிரபரணி ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதை அரசு அறியுமா? அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதை ஆராய்வதாக இருந்தாலும் எங்கே தண்ணீர் இருக்கிறது? எவ்வளவு ரூபாய் இந்த திட்டத் திற்கு செலவு ஆகும்? மெயின்டெனன்ஸ் சார்ஜ் எவ்வளவு? இதை ஆய்வதற்கு அவர்கள் இன்வெஸ்டிகேஷன் தொகையை கொடுக்க வேண்டும். அந்தத் தொகையை கொடுப்பதற்கு அவர்களால் இயலாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, இன்வெஸ்டிகேஷன் தொகையை கொடுப்பார்களானால் ஆதாரம் எங்கே இருக்கிறது? எவ்வளவு செலவு ஆகும் என்ற பர்டிகுலர்ஸ் தயார் செய்து அதற்கு மேல் நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபோது இன்வெஸ்டிகேஷன் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னார் கள். அந்த இரண்டு நகராட்சிகளும் மிகவும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நகராட்சிகள் ஆகும். அரசு அதற்கு கடன் கொடுத்து அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1924 மாச்ச் 22]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் இப் போதைக்கு இல்லை

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோயில் நகர மன்றத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறை பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு வரு டத்தில் 6 மாதத்திற்கு மேலாக குடிநீர் தட்டுப்பாடு இருக்கிறது என்பதைக் கடந்த காலத்தில் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கி றார்கள். கடந்த காலத்தில் குடிநீர் வடிகால் வாரியத் தலை வராக இருந்த மதிப்பிற்குரிய திரு. இ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு ஒரு கருத்தரங்கத்திற்கு வந்த போது இந்தப் பிரச்சினையை அங்கே அவர்களிடம் வைத்த போது அவர்கள் சங்கரனகோயில் முக்கியத்துவத்தை உணர்ந்து தாமிரபரணி ஆறறு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்வதாக அந்த இடத்திலேயே வாக்குறுதி கொடுத்தார்கள். இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் அந்த நகர மன்றம் கொடுக்க முன்வந்தால் அந்தத் திட்டத்தைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோயில், புளியங்குடி ஆகிய 2 நகராட்சிகளும் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் ஆய்வுத் தொகையை கொடுக்க முன்வந்தால் நிச்சயமாக ஆய்வு செய்யப் படும்.

**வணிக நிறுவனங்கள் கட்டாயம் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வேண்டும் என்பது குறித்து பிறப்பிக்கப்பட்ட ஆணை.**

398 *(வினா எண். 19496) திரு. நா. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள வணிக நிறுவனங்கள் கட்டாயம் தமிழில் பெயர்ப்பலகை வைக்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் தமிழ்ப் பெயர்ப்பலகை வைக்காத நிறு வனங்கள் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1948ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளின் 15-வது விதி யில் அனைத்து நிறுவனங்களின் பெயர் பலகைகளில் தமிழ் பெயர் முதலாவதாக எழுதப்படவேண்டும் என்றும் பிறமொழிகள் உப யோகிக்கப்படுமிடத்து ஆங்கிலப் பெயர் இரண்டாவதாகவும் மற்ற மொழி ஏதாவது இருக்குமேயானால் அது ஆங்கிலப் பெயருக்கு

[1984 மார்ச் 22

கிழே எழுதப்படவேண்டும் எனபதற்கும் தமிழ் பெயர் சிறப்புப் பெற்றிருக்கும் வகையில் பெரியதாகவும் மற்ற மொழிப் பெயர் களுக்கு ஒதுக்கப்படும் இடத்தை விட அதிகமாக இருக்கும் வகை யிலும் சீர்திருத்திய எழுத்தில் எழுதப்பட வேண்டும் மென்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஆய்வாளர்கள் ஆய்வுகள், நடத்தி, தமிழில் பெயர்ப் பலகை எழுதாத நிறுவனங்களுக்கு தமிழில் எழுதும்படி அறிவுரை வழங்கியும் ஆய்வு உத்தரவுகளும் வழங்கி வருகிறார்கள். இதன் பின்னரும் தமிழில் பெயர்ப் பலகைகள் எழுதாத நிறுவனங்கள் மீது நீதி மன்றங்களில் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றன. இந்தத் திருத்தம் 8—8—77-ல் செய்யப்பட்டது.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க கடந்த காலங்களில் இப்படிப்பட்ட தமிழில் எழுதுவற்கு முக்கியத்துவம் தராமல் இருந்து வழக்கு தொடரப்பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வ ளவு ? அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது? பலமுறை அரசு இதை எடுத்துச் சொல்லியும் சட்டங்கள் போட்டும் அதை நிறைவேற்றாதவர்களுக்கு, எதிர்காலத்தில் இந்தச் சட்டத்தை மீறுபவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, எத்தனை பேர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. ஆனால் நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த உத்தரவு நான் ஏற்கனவே சொன்னதுபோல் 8—8—77-ல் —மீண்டும் அந்தத் தேதியைச் சொல்கிறேன். 8—8—77-ல் போடப்பட்டிருக்கிறது. அதற்கும் மேல் ஒழுங்காக செயல்படவில்லையென்றால் சம்பந் தப்பட்ட அதிகாரிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சரி யாக எழுதவில்லை என்றால் அறிவுரை வழங்குகிறார்கள். அறி வுரை வழங்கியும் கேட்கவில்லை என்றால் ப்ராசிக்யூட் செய்கி றார்கள். எவ்வளவு பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்ற புள்ளிவிவரம் தற்சமயம் என்னிடமில்லை.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, தமிழில் பெயர்ப்பலகை வைக்காத நிறுவனங்கள்மீது அறிவுரைகள் மட்டும் வழங்காமல் அவர்கள் உரிமங்களை ரத்து செய்வோம் என்ற கண் டிப்பான அறிவிப்பை அறிவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, ஒரு ஜனநாயக நாட்டில் We cannot afford to be rash; எனவே அறிவுரை வழங்கியதற்குப் பிறகும் செய்யவில்லையென் றால் இருக்கக் கூடிய சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பது, ப்ராசிக்யூட் செய்வது என்று அந்த அளவிற்குத்தான் இருக்க முடி யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அந்த அளவிற்கு இப்போது போகவேண்டியதில்லை. ப்ராசிக்யூஷன் என்று



1984 மார்ச் 22]

செய்தாலே மாற்றி எழுதிவிடுகிறார்கள். ஏனென்றால், தமிழில் மேலே எழுதவேண்டும் என்பதில் அவர்களுக்கு எதிர்ப்பு இல்லை. ஏதோ தெரியாத்தனமாக செய்துவிடுகிறார்கள் என்றுதான் இந்த அரசாங்கம் கருதுகிறது.

திரு. இல். பலராமன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழுக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று ஒரு சட்டம் இயற்றியிருப்பதாகவும் அதற்கான நடவடிக் கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்றும் சொனனார்கள். ஆனால் பெயர்ப்பலகையின் அளவு எவ்வளவு இருக்கவேண்டும் எனறு ஏதாவது குறிப்பிட்டு அரசாங்கம் செய்திருக்கிறதா? அதில் தமிழ் இந்த அளவிற்கு என்று குறிப்பிடும்போது அங்கே ஒரு சிக்கல் இருக்குமே. அதற்கான விதிமுறைகள் ஏதாவது செய்யப்பட்டிருக் கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு சட்டம் போட்டிருந்தோம். இந்த அளவு இருக்க வேண்டும் இவ்வளவு அங்குலம் இருக்க வேண்டும் என்று. அதெல் லாம் சிரமமாக இருந்தால் நான் ஏற்கனவே சென்னதைப்போல் முக்கியமான இடமாக இருக்கவேண்டும், பெரிய எழுத்துக்களாக இருக்கவேண்டும், கான்ஸ்பிக்யூவஸ்—ஆக இருக்க வேண்டும், அடுத்து ஆங்கிலம் வரவேண்டும், பிற மொழிகள் அதற்கு அடுத்து வரவேண்டும் என்று அதை மாற்றி கடைகள் மற்றும் நிறுவனங்கள் நடத்தக்கூடியவர்களுக்கு சிரமம் இல்லாமல் எளிதில் செயல்படுத் தக்கூடிய வகையில் To facilitate easy implementation அதற் கேற்றாற்போல் விதிமுறைகளை இயற்றியிருக்கிறோம்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள், பெயர்ப்பலகைகளை தமிழில் எழுதாத வர்கள் மீது குற்றவியல் நீதிமன்றங்கள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி நடவடிக்கை எடுப்பதன் மூலம் அவர்கள் சரியாக செயல்படுவதாகத் தெரிய வில்லை. எனவே சரியான முறையில் நிரந்தரமான முறையில் அவர்கள் செய்தே தீரவேண்டும் என்றளவிற்கு சரியான முறை யில் நடவடிக்கைகள் எடுத்து அல்லது அரசாங்கமே பெயர்ப் பலகைகளை எழுதி அந்தப் பலகைகளை மாட்டி அதற்குரிய கட்டணங்களை, அதற்குரிய தண்டனைக் கட்டணத்தையும் சேர்த்து வசூலிக்கும் விதத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து உடனடியாக குறிப்பிட்ட தேதிக்குள்ளாக இந்த பெயர்ப் பலகைகளை உருவாக்குவதற்குள்ள நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே அந்த 15வது விதியில் குறிப்பிட்டுள்ளபடி நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ்ப் பெயர் முதலாவதாக எழுதப்பட வேண்டும். பிற மொழிகள் உபயோகிக்கப்படுமிடத்து ஆங் கிலப் பெயர் இரண்டாவதாகவும் மற்ற மொழி ஏதாவது இருக் குமேயானால் அது ஆங்கிலப் பெயருக்குக் கீழே எழுதப்பட

[1984 மார்ச் 22

வேண்டும். பெயர்ப்பலகையில் தமிழ்ப்பெயர் சிறப்புப் பெற்
றிருக்கும் வகையில் பெரியதாகவும் மற்ற மொழிப்பெயர்
களுக்கு ஒதுக்கப்படும் இடத்தை விட அதிகமாக இருக்கும்
வகையிலும் எழுதப்பட வேண்டும். பெயர்ப்பலகையில் உள்ள
தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்திய எழுத்தில் எழுதப்பட வேண்
டும். அதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். பழைய
மாதிரி எழுதக்கூடாது. சீர்திருத்திய எழுத்துக்களில் எழுத
வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். வார்னிங்க் தரு
கிறோம். சரியாக எழுதிவிடுகிறார்கள். அப்படி எழுதாதவர்
கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம். எனக்குத் தெரிந்த
வரையில் அப்படிச் சொல்லியும் எழுதாமல் இருக்கக்கூடிய
வர்கள் அதிகமாக இல்லை என்பது எனக்குக் கிடைத்திருக்கக்
கூடிய தகவல்.

(முற்பகல் 9-30)

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, வணிகர்கள் தங்களுடைய நிறுவனங்களுக்கு
தமிழுக்கு முதலிடம் கொடுத்து, போர்டுகளை வைக்க
வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருப்பதாக மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். தமிழ் நாட்டு மக்
கள் முழுமையாக தமிழைப் பின்பற்றவேண்டும், அதற்கு முத
லிடம் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கூறுகிறார்கள். அந்த அடிப்படையில், டாக்டர்கள் என்று
ஆங்கிலத்தில் பட்டப்பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்
களே, அதை மாற்றி மருத்துவர் என்று போடுவதற்கு ஏற்பாடு
செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும்
சம்பந்தமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்
களே, இங்கே பல்வேறு வியாபார நிறுவனங்களுக்கு இந்தச்
சட்டத்தின் மூலம் தமிழில் பெயரைப் போடுவதற்கான நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். மத்திய அரசு அலுவலகங்களிலே இப்படிப்
பட்ட தமிழ்ப் பெயர்ப் பலகைகளை நம்முடைய மாநிலத்
திலே வைப்பதற்கு, எழுதப்பட வேண்டும் என்பதற்கு மத்திய
அரசுக்கு ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்
புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கடைகள், வணிக நிறுவனங்கள்,
திரை அரங்குகள், கேளிக்கை மற்றும் மனமகிழ் மன்றங்கள்
ஆகியவைகளுக்கு என்று வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு
உறுப்பினர் சொல்வதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்



1984 மார்ச் 22]

**பெரம்பலூர் பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் :**

*399. (* வினா எண் 20067)*:—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் பேரூராட்சி பகுதிக்குக் குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : திருச்சி மாவட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்படும் துறையூர் மற்றும் குறும்பாலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பெரம்பலூர் பேரூராட்சியும் இடம் பெறுகிறது.

**மம்சாபுரம் நகரப் பஞ்சாயத்திற்கான குடிநீர்த் திட்டம் :**

*400 (*வினா எண் 20608)*:—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா மம்சாபுரம் நகரப் பஞ்சாயத்திற்குக் குடிநீர் வசதி செய்துதரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) மம்சாபுரம் பேரூராட்சிக்கான பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தால் பரிசீலனை செய்யப்பட்டு அதற்கான குடிநீர் ஆதாரங்கள் சரியானதாக இல்லை என அறியப்பட்டது. எனவே, வேறு நிலையான குடிநீர் ஆதாரம் கிடைக்குமா என மறு ஆய்வு செய்யப்பட உள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மம்சாபுரமானது 10,000 ஜனத்தொகை உள்ள ஒரு பெரிய நகர பஞ்சாயத்து. அதற்குப் பக்கத்திலே குடிநீர் ஆதாரம் இல்லையென்று சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 3 மைல்கள் தூரத்தில் அத்திகூத்து ஆற்றிலிருந்து ஏற்கெனவே 20 வருஷங்களாக ஸ்ரீவில்லிப்புத்தூர் டவுனுக்கு தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் நீர் ஆதாரம் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். எனவே, இந்த அத்திகூத்து ஆற்றிலிருந்து உடனடியாகத் தண்ணீரை எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,

[1984 மார்ச் 22

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில் சுமார் 15,000 பேர்கள் இருக்கிறார்கள். உறுப்பினர் சொல்வதற்கு மேல் 5,000 பேர்கள் அதிகமாக அங்கே இருக்கிறார்கள். ஆய்வுத் தொகையாக அவர்கள் ரூ. 17,000 செலுத்தினார்கள். இருந்தும், பரிசீலனை செய்ததில் அங்கே தண்ணீர் ஆதாரம் இல்லையென்று தெரிகிறது. எனவே, மறு ஆய்வு நடத்த வேண்டியிருக்கிறது. அதற்காக ரூ. 1.05 இலட்சம் பேரூராட்சி ஆய்வுத் தொகையாக வாரியத்திற்குச் செலுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு நடத்த போவதாகவும், அதற்காக ரூ. 1.05 இலட்சம் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. உடனடியாக அவர்கள் கட்டணத் தொகை கட்டத் தயாராக இருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது. ஆய்வு செய்வதிலே தான் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே. உடனடியாக இந்த அத்திகுளத்து ஆற்றிலிருந்து தண்ணீரை எடுக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். உண்மையிலேயே அவர்கள் சொன்னது போல், அங்கே உள்ள கிணறுகளில் உப்புத் தண்ணீர்தான் இருக்கிறது. அது சவர் (sour) தண்ணீராக இருக்கிறது. அந்த சவர் (sour) தண்ணீரைத்தான் குடித்துக்கொண்டு இன்றைக்கு வரைக்கும் உயிரோடு இருக்கிறார்கள். அதை மாற்றியமைத்து, நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னதைப்போல 1.05 இலட்சம் ஆய்வுத் தொகையைக் கட்டிவிட்டால் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மம்சாபுரம் பேரூராட்சியில் இப்பொழுது அங்கே உள்ள மக்கள் கிணற்றுத் தண்ணீரைத்தான் குடிக்கிறார்கள். அடிக்கடி காலரா நோய் அந்த ஊரில் அதிகமாக வருகிறது. இப்பொழுது வெள்ளம் வேறு வந்துவிட்டது. ஆகவே, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் அவர்களுக்குக் கிடையாது. தண்ணீர் அந்தப் பகுதியில் இல்லை. அருமை அண்ணன் திரு. சிவசாமி அவர்கள் கூறும்பொழுது அத்திகுளத்து என்ற இடத்தில் இருக்கின்ற தண்ணீரை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தத் தண்ணீர் ஸ்ரீவில்லிப்புத்தூருக்கே சரியாக இருக்குமாதலால் அந்தத் தண்ணீரை எடுக்க முடியாது. மம்சாபுரத்தில் நீரோட்டம் அதிகமாக இருக்கின்ற வாழைக்குளம் என்ற இடம் இருக்கிறது. அதிகாரிகளை என்னோடு அனுப்புங்கள். நீரோட்டம் உள்ள இடத்தை நான் காட்டுகிறேன். விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 22]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஊரில் 21 குடிநீர்க் கிணறுகள் உள்ளன. ஆனால் அதிலே நல்ல தண்ணீர் இல்லை. இருப்பினும் இந்த அரசால் 16 கைபம்புகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆய்வுத் தொகையைக் கொடுக்க ஏற்பாடு செய்தால் நல்லது. தன்னோடு, என்ஜினியர்களை அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். அது முறையாக இருக்காது. வேண்டுமானால்' என்ஜினியர்கள் ஆய்வுக்குப் போகும்பொழுது அவர்களோடு இவரும் சேர்ந்து போகலாம். அதில் தடை இல்லை. அவ்வாறு சென்று இன்னின்ன இடத்தில் தண்ணீர் இருக்கிறது என்று ஆலோசனை சொல்வது முறையாக இருக்கும். ஏனென்றால் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்வார்கள். ஆளுங்கட்சி எம். எல். ஏ.வுடன் அதிகாரிகள் போகலாமா என்று. ஆகவே, என்ஜினியர்கள் ஆய்வுக்குச் செல்லும்பொழுது மாண்புமிகு உறுப்பினர்களும் சென்று இன்னின்ன இடங்களில் சோர்சஸ் இருக்கின்றன என்று " ஜியாலஜிகல் சர்வே " (Geological Survey) செய்பவர்களிடம் சொன்னால் உதவியாக இருக்கும். முதலில் நீங்கள் கொடுக்க வேண்டியது ஆய்வுத் தொகை. அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படியாக வேண்டிக்கொள்கிறேன்.

தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தொழிற் பயிற்சியளிக்கும் திட்டம்.

401.—(*வினா எண். 21596)—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள தேயிலை, காப்பி தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுடைய குழந்தைகள் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிற் பயிற்சி பெறுகிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு பயனடைந்தோர் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'என்னுடைய கேள்வி, தமிழகத்திலுள்ள தேயிலை ,காப்பித் தோட்டங்களில் பணி புரியும் தொழிலாளர்களுடைய குழந்தைகள் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிற் பயிற்சி பெறுகின்றார்களா என்பது. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள், இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

நான் அமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே உள்ள தேயிலை, காப்பித் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுடைய ஊதியத்திலிருந்து வருஷம் மூன்றுக்கு ஒரு நிதி பிடிக்கப்படுகிறது. அந்த நிதியின் மூலம் அதே தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தொழிற் பயிற்சி கற்றுக் கொடுப்பதற்கு இந்த அரசு முன் வர வேண்டும். அதே நேரத்தில் வால்பாறை பகுதியில் இரண்டு இடங்களில் தொழிற் பயிற்சிக் கூடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு ஐம்பது பேர்களுக்குமேல் தொழிற் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி என்ன என்பதைச் சுருக்கமாகக் கூற வேண்டும்.

திரு. ஏ. டி. கருப்பையா : ஆகவே, இரண்டு தொழிற் பயிற்சிக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், கேள்விக்கே இடமில்லை என்று அமைச்சரவர்கள் சொல்லிவிட்டார்கள். எனவே, மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தமிழகத்திலே இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களின். குழந்தைகளுக்குத் தொழிற் பயிற்சிக் கூடங்களை மாவட்ட வாரியாக அமைத்துத் தொழிற் பயிற்சி கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேள்வி, தமிழகத்திலுள்ள தேயிலைக் காப்பித் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுடைய குழந்தைகள் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிற் பயிற்சி, அதாவது, டெக்னிக்கல் எஜுகேஷன் பெறுகின்றார்களா என்பது. தொழிற் பயிற்சி பெறவில்லை.

(முற்பகல் 9-40)

We are not imparting Technical Education.

அது உண்மை. அதே போல் நீங்கள் சொன்னதும் உண்மை. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் தோட்டத் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் அதாவது மகள், மனைவி, திருமணம் ஆகாத சகோதரி ஆகியோருக்குத் தையல் பயிற்சி அளிக்கும் திட்டம் நடைமுறையிலுள்ளது. இது வரையில் அவர்களுக்கு ஓராண்டுக் காலத்திற்கு அப்பயிற்சிக்காக 40 ரூபாய் கொடுத்துக் கொண்டு வந்தோம். 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதியிலிருந்து 50 ரூபாய் கொடுக்கிறோம் ஓராண்டுக் காலத்திற்கு ஒவ்வொரு மாதமும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கப்படுவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளில் பலர் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற எண்ணத்தைக் கருத்தில் கொண்டு அந்த இளைஞர்களுக்கும் தொழில் பயிற்சி அளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்வதுடன், இன்னும் அதிகமான அளவில் தையல் தொழில் பயிற்சியைச் சொல்லிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, பொதுவாகத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட தொழிலாளர் நல வாரியத்திற்குச் சந்தா செலுத்தக் கூடிய தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் மருத்துவப் படிப்புக்கு 25 பேருக்கு 1,000 ரூபாயும் பொறியியல் பட்டப்படிப்பிற்கு 25 பேருக்கு 1,000 ரூபாயும், சட்டம் பட்டப் படிப்பிற்கு 25 பேருக்கு 1,000 ரூபாயும், மருத்துவப் பட்டப் படிப்பிற்கு அதாவது டிப்ளமோ படிப்புக்கு 25 பேருக்கு 600 ரூபாயும், பொறியியல் பட்டப் படிப்பிற்கு 25 பேருக்கு 600 ரூபாயும், தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு அதாவது ஐ.டி.ஐ. படிப்புக்கு 25 பேருக்கு 300 ரூபாயும் கொடுக்கப்படுகின்றது.

அதுமட்டுமல்லாமல் கல்வி பயில்பவர்களில் மாவட்டத்திற்கு இருவர் வீதம் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூபாய் 500 வீதம் அளிக்கப்படுகின்றது. இதற்கென்று ஒரு தனி வாரியம் இருக்கின்றது. அதன் கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடக்கின்றது. அதற்குத் தலைவர் நான். அதிலே பல சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர்களுக்கு மேலும் என்னென்ன செய்யவேண்டும் என்ற வகையில் அங்கே அவர்கள் தீர்மானம் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்தால் அதைப்பற்றி அந்த வாரியம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் பின்தங்கி இருக்கின்ற மலைப் பகுதிகளில் தங்கி இருக்கக்கூடியவர்கள் என்ற காரணத்தால் அவர்களுடைய குழந்தைகளுக்கு படிப்புக்கு பல வசதிக் குறைவுகள் இருப்பதால் இந்தத் தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பிரத்தியேகமாக சீட்டுக்களை ரிசர்வ் பண்ணுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

[1984 மார்ச் 22

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அது இந்த வாரியத்தினுடைய எல்லைக்குட்பட்டதல்ல என்று நான் கருதுகிறேன்.

It is beyond the province the Board அது எஜுகேஷன் டிப்பார்ட்மெண்ட் தான் ஒதுக்குகின்றது என்பதைப் பற்றி நமக்குத் தெரியும். ஆனால் வாரியக் கூட்டத்தில் இப்படி ஒரு தீர்மானத்தை கொண்டு வருவார்களானால் அதை நிறைவேற்றி சம்பந்தப்பட்ட இலாக்காவுக்கு அனுப்பி பரிந்துரை செய்வது பற்றி பரிசீலனை செய்யலாம்.

சத்துணவுத் திட்டத்தின் அமைப்பு முறைகள் பற்றிய விளக்கம் கோரியுள்ள இதர மாநிலங்கள். :

*402(*—வினா எண் 16197)*—திரு. ஆர். மணிமாறன் : *மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இலவச சத்துணவுத் திட்டத்தின் அமைப்பு முறைகள் பற்றிய விளக்கம் கேட்டு அண்டை மாநிலங்கள் ஏதாவது தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனரா?*

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : ஆம். அண்டை மாநிலமான ஆந்திர அரசும் மற்றும் அசாம், ஒரிசா அகிய மாநில அரசாங்கங்களும் கேட்டுள்ளன.

திரு. ஆர். மணிமாறன் : தலைவர் அவர்களே, மற்ற மூன்று மாநில அரசுகள் சத்துணவுத் திட்டத்தினுடைய நடைமுறையைப் பற்றிக் கேட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி எந்தெந்த மாநில அரசுகளுக்கு நம்முடைய அரசின் சார்பிலே அளிக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தினை இங்கே மாண்புமிகு அமைச்சர் தெரிவிப்பாரா? அந்தந்த மாநில அரசுகளின் பிரதிநிதிகளை இங்கே வரவழைத்து சத்துணவுத் திட்ட நடைமுறைகளைப் பற்றி அவர்களுக்கு காண்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கை கிட்டத்தட்ட 13 பக்கங்கள் இருக்கின்றன. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதனை ஒரு அறிக்கையாகத் தருவதற்கு முனைகிறேன். மேலும் அவரவர்கள் விரும்பி அதுபற்றி அறிய, முன்வருவார்களானால் அவர்களை எல்லாம் நம்முடைய சத்துணவுக் கூடங்களுக்குக் கொண்டு சென்று காட்டுவதில். ஐயப்பாடு இல்லை. தற்போது வெளிநாடுகளில் இருந்து கூட பெரும்பாலானவர்கள் வந்து இந்தச் சத்துணவுத் திட்ட மையங்களைப் பார்த்துப் பாராட்டியிருக்கிறார்கள்.



1984 மார்ச் 22]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய இராணுத் தளபதி அவர்கள் சத்துணவுத் திட்டத்தைப்பற்றி பாராட்டியிருக்கிறார்களே, அது பற்றிய விவரங்களை அறிவிக்க இயலுமா என அமைச்சரைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய இராணுத் தளபதியான திரு. வைத்தியா அவர்கள் நம்முடைய சத்துணவுத் திட்டத்தைப் பாராட்டி, நம்முடைய முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அதில் இராணுவத்திலே உழைத்த நாட்டுக்காக பாடுபட்டவர்கள் ஓய்வு பெற்று வீடு திரும்பிய பின்னாலே அவர்களுக்கு நம்முடைய இந்தச் சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக ஒருவேளை உணவு வழங்குவதைப் பாராட்டி, நாட்டுக்கு உழைத்தவர்களுக்கு நீங்கள் உணவு வழங்குவதை நான் பாராட்டுகிறேன் என்று தெரிவித்து, எப்படி இந்தத் திட்டத்தை நீங்கள் செயல்படுத்துகிறீர்கள் என்பதைத் தெரியப்படுத்துமாறும் அதைக் கொண்டு மற்ற மாநிலங்களிலேகூட இதுபோன்ற இராணுவத்தில் உழைத்தவர்களுக்கு உணவு கொடுப்பதற்கு வழிவகை செய்வதற்கு ஏதுவாகும் என்றும் அவர்கள் கேட்டார்கள். அதன்படி அவர்களுக்கு அந்த அறிக்கை விரிவாக அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு சம்பந்தமாக மற்ற 3 மாநிலங்கள் கேட்டு அனுப்பிய அறிக்கை மிக விரிந்த அளவிலிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை அச்சடித்து எங்களுக்கெல்லாம் கொடுப்பதோடு, இந்தச் சத்துணவு சம்பந்தமாக நிபுணர் குழு ஏதாவது பரிசீலித்து இதிலே எந்த, எந்த வகையான சத்துக்கள் இருக்கின்றன என்று அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இன்ன, இன்ன உணவுப் பொருள்களில், இது, இது கலந்து கொடுத்தால், இந்த, இந்த அளவிற்குச் சத்து உடம்பிற்கு ஏற்படும் என்று மருத்துவர்கள் எல்லாம் சொன்னதற்குப் பிறகுதான் அது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை ஒரு நிபுணர் குழுவிலேயிருந்து தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. நம்முடைய நாட்டிலேயே மிக நல்ல நிபுணர் குழு இருக்கிறது. மேலும் இன்றைக்குப் பல இடங்களிலிருந்து வருபவர்கள் இந்தச் சத்துணவுத் கூடங்களைப் பார்வையிடச் செல்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே உலக வங்கி நிர்வாக இயக்குநர் திரு. குல்சா சத்துணவுத் திட்டத்தைப் பாராட்டி, உலக நாடுகளுக்கு இதை பரிந்துரை செய்யப்

போகிறேன் என்று சொன்னார்களே, ஆகவே, உலக வங்கிக்கு இலவச சத்துணவுத் திட்டத்தின் அமைப்பு முறைகள் பற்றிய விளக்கத்தை அரசு அனுப்ப முயற்சி எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் விரும்பிப் கேட்பார்களானால் அரசு அதை அனுப்பும்.

### சத்துணவுத் திட்டத்திற்காக 1983 அக்டோபர் முடிய நன்கொடையாக வசூலிக்கப்பட்ட தொகை

403(*—வினா எண். 21483)—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்திற்காக இதுவரை 1983 அக்டோபர் முடிய நன்கொடையாக வசூலித்துள்ள தொகை எவ்வளவு?

(ஆ) இத்தொகை எந்த அடிப்படையில் பயன்படுத்தப் படுகின்றது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) 1983 அக்டோபர் திங்கள் முடிய வசூலிக்கப்பட்ட நன்கொடை ரூ. 2·77 கோடிகளாகும்.

(ஆ) இந்தத் தொகை கிராமப்புறங்களில் புதிய சத்துணவு மையங்கள் கட்டுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. நன்கொடையாளர்கள் விரும்பினால் அவர்கள் பெயரில் அவர்கள் விருப்பப்பட்ட இடத்தில் சத்துணவு மையம் கட்டப்பட்டு வருகிறது.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு அக்டோபர் முடிய தனியார்களிடமிருந்து வசூலித்திருக்கக்கூடிய தொகை ரூ. 2·77 கோடி. இந்தத் தொகை முழுவதுமே சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் சத்துணவுத் திட்டத்திற்காக, கிட்டத்தட்ட ரூ. 200 கோடிக்கு அதிகமாக நம்முடைய பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்ட தொகையில் தான் சத்துணவுக் கூடங்கள் கட்டியிருப்பதாக ஊராட்சி ஒன்றியங்களிலும் மற்ற பகுதிகளிலும், வரவு-செலவுத் திட்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி என்றால் இந்தத் தொகையை இதற்கு ஒதுக்கியிருப்பதாக இப்பொழுது அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியென்றால் இதற்கு என்று தனியாகக் கணக்கு வைக்கப்பட்டு, பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்ட தொகையுடன் அது சேர்க்கப்பட்டிருக்கிறதா என்ற விவரத்தை நான் அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60,000-க்கு மேற்பட்ட சத்துணவு கூடங்கள் தமிழகத்திலே செயலாற்றுகின்றன. அவ்வளவுக்கும் நாம் ஒதுக்குகின்ற நிதியிலிருந்து கூடங்களைக் கட்டுவது என்பது அவ்வளவு முடியக்கூடிய காரியம் அல்ல. எனவே, இப்படிப்பட்டவர்களிடமிருந்து வருகின்ற இந்தத் தொகையைக் கொண்டு அந்தக் கூடங்கள் அந்த இடங்களிலே கட்டப்பட்டு வருகின்றன. அதைப் போலவே ஊரக வளர்ச்சிக் கட்டிடத் துறையிலேயிருந்து கூட இந்த கூடங்களை நாம் கட்டிக் கொண்டு இருக்கிறோம். அது போலவே, இன்றையதினம் இந்தத் திட்டத்திற்காக மக்களால் தரப்பட்ட நன்கொடைகளை வசூலித்து, நாம் அவைகளை எப்படி செலவு செய்து வருகிறோம், எப்படிக் கூடங்களைக் கட்டி வருகிறோம் என்பதை இங்கே சொன்னேன். இந்தத் திட்டத்தினுடைய ஆரம்பத்திலிருந்து பொதுமக்களிடமிருந்து, மற்றும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து இதுவரையில் நன்கொடைகள் வசூலிக்கப்பட்டு அரசு தலைமைச் செயலகத்தில் உள்ள சிண்டிகேட் வங்கியில் கணக்கு வைக்கப்பட்டு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட நிதி என்று ஆரம்பிக்கப்பட்ட கணக்கில் செலுத்தப்பட்டு அந்த நிதியினுடைய கணக்கைத் தலைமைச் செயலகத்தில் உள்ள சத்துணவுத் திட்ட தனி அலுவலர் அவர்கள் நிர்வகித்து வந்தார். 31-3-1983 வரை இந்த நிதியில் செலுத்தப்பட்ட நன்கொடை ரூ. 2·43 கோடியாகும்.

இதில் 31-3-1983 வரை ரூபாய் 2.80 இலட்சங்கள் நன்கொடையாளர்களின் விருப்பத்திற்கேற்ப இராமநாதபுரம், திருச்சி, மதுரை, செங்கல்பட்டு, தர்மபுரி, பெரியார் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சத்துணவு மையங்கள் கட்ட வழங்கப்பட்டது. மீதித் தொகை ரூபாய் 2.40 கோடிகளாகும். 1-4-1983 முதல் இந்த நிதி தமிழ் நாட்டில் ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் ''தாரா'' நிறுவனத்திற்கு அரசு ஆணை எண். 357, பொதுத்துறை 4-3-1983 தேதி ஆணையின்படி மாற்றி கொடுக்கப்பட்டது. இதன்படி 1-4-1983 முதல் அரசு தலைமைச் செயலகம் வளாகத்தில் உள்ள சிண்டிகேட் வங்கி கிளையில் புதிய கணக்கு ஒன்று தலைமை நிர்வாக அதிகாரி 'தாரா' பெயரில் துவக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு அல்லது தமிழகத்திற்கு தேவையான அளவு உணவிற்கு அரிசி கொடுக்காத இந்தச் சூழ்நிலையில் இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்திய அரசு அரிசி கொடுப்பதில்லை: எனவே கிராமங்களில் இருக்கிற நியாய விலைக் கடைகளை எல்லாம்

மூடக்கூடிய அபாயம் இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் சத்துணவுத் திட்டத்திற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கி, தனியார்களிடமும், கம்பெனிகளிடமும் சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்கு செய்யப்பட்டிருக்கிறதே, எதிர் காலத்தில் இந்தத் திட்டத்தை முறையாக நிறைவேற்றுவதற்கும், தொடர்ச்சியாக நடத்துவதற்கும் என்ன உத்தரவாதம்? இந்தத் திட்டம் முறையாக நடத்துவதற்கு உத்தரவாதம் ஏதாவது அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை தமிழகத்திற்கு தந்த, தமிழக முதலமைச்சர் அவர்கள் முழு உத்தரவாதத்தைத் தந்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு நன்கொடை வசூல் செய்தது சம்பந்தமாக அன்று ஒரு சீட்டை தொகையில்லாமல், மாண்புமிகு முதல்வர் அவர்களும், குழந்தைகளும் உட்கார்ந்து சாப்பிடக்கூடிய, அந்தச் சீட்டை காண்பித்த . போது மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள். பிளாக் தினம், கொடி தினம் என்று இராணுவத்திற்காக பணம் வசூல் செய்கிறமாதிரி இந்த வசூல் செய்யப்பட்டிருக்கலாம் என்று சொன்னார்கள். கொடி தினத்திற்கு அவர்கள் வசூல் செய்கிறபோது சீல்ட் உண்டியல் கொடுப்பார்கள். ஆகவே கொடி தினத்திற்கு பணம் கொடுக்கிறபோது சீல்ட் உண்டியலில்தான் பணம் போடுவார்கள். இந்தச் சீட் உண்டியல் இல்லாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்கூல்களில் எல்லாம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஊழல்கள், தவறுகள் வருவதற்கு இடமிருக்கிறதால் யார் அந்தமாதிரி டிஸ்ட்ரிபியூட் பண்ணினார்கள்? அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை அரசினால் எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியே நன்கொடை வசூல் பற்றியதுதான். அதனால் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் என்னிடத்தில் அந்தச் சீட்டை தந்தார்கள். நான் அதை அந்தத் துறைக்கு அனுப்பியிருக்கிறேன். எடுத்துச்



சொல்லப்பட்ட குறிப்புகளை ஆராயும்படியும், ஏதாவது தவறுகள் ஏற்பட்டிருந்தாலும் நடவடிக்கை எடுக்கும்படியும் அந்தத் துறை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு நன்கொடை பெறப்படும் தொகைகளுக்கான வரவு செலவு கணக்குகள் யாரால் தணிக்கை செய்யப்படுகின்றன? ஆடிட்டர் ஜெனரலால் தணிக்கை செய்யப்படுகின்றதா? இல்லையென்றால் அந்தக் கணக்குகளை ஆடிட்டர் ஜெனரலின் தணிக்கைக்கு அனுப்புவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரா நிறுவனத்தின் மூலமாக இந்த நன்கொடை தொகைகள் பெறப்பட்டிருக்கின்றன. அது ஊரக வளர்ச்சித் துறையினுடைய ஒரு பிரிவாகும். எனவே அதனுடைய கணக்குகள் எப்படி தணிக்கை செய்யப்படுகிறதோ அதுபோல இதுவும் செய்யப்படும்.

திரு. கே. தனுக்கோடித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் பணிபுரிகிற பெண்கள், என்னுடைய தொகுதியில் இப்போது குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆள்கொண்டு வரவில்லை என்றால் அவர்களை சஸ்பெண்ட் செய்கிறார்கள். அந்த நிலையில் குழந்தைகளை சரியாக பராமரிக்க முடியாத நிலை இருக்கிறது. இது அரசுக்கு தெரியுமா? அதுபோன்று இருந்தால் அதைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் குறிப்பிட்ட குற்றச்சாட்டை உறுப்பினர் அவர்கள் தருவார்களானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, நன்கொடையாளர்கள் விருப்பத்திற்கு ஏற்ப அந்தக் கட்டிடம் கட்டப்படுகிறதா? ஆமெனில், எந்தெந்த மாவட்டங்களில், எத்தனைக் கட்டிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, நன்கொடையாளர்கள் விரும்பினால் அவர்களுடைய பெயரில் அந்தக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. முன்பே சொன்னேன், இராமநாதபுரம், திருச்சி, மதுரை, செங்கற்பட்டு, தருமபுரி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் இத்தகைய கட்டிடங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நிதி வழங்கப்பட்டு கட்டப்படுகின்றன.

[1984 மார்ச் 22

தமிழகத்தில் 1981—82-ல் விதவை மறுமணம் செய்துக்கொண்டவர்கள் எண்ணிக்கை.

404 (*வினா எண். 18081)—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1981—82-ல் விதவை மறுமணம் செய்துகொண்டவர்கள் எத்தனை பேர்? மாவட்ட வாரியாக

(ஆ) அவர்களுக்கு அரசு வழங்கிய உதவித்தொகை எவ்வளவு ?

(இ) அவர்களுள் கலப்புமணம் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழகத்தில் 1981—82-ல் விதவைத் திருமணம் செய்துகொண்ட அத்துணைத் தம்பதியரின் எண்ணிக்கைக் குறித்து அரசிடம் தகவல் இல்லை. ஆனால் விதவைத் திருமணம் செய்து கொண்டத் தம்பதிகளில் உதவித் தொகைவேண்டி விண்ணப்பித்து 1981—82-ல் தேர்ந்து எடுக்கப்பட்ட 100 தம்பதியருக்கு அரசின் உதவித் தொகை வழங்கப்பட்டது. மாவட்ட வாரியான விவரம் கீழ் வருமாறு :—

| | |
|---|---|
| சென்னை .. .. .. .. .. | 7 |
| செங்கல்பட்டு .. .. .. .. | 7 |
| வடஆற்காடு .. .. .. .. | 7 |
| தென் ஆற்காடு .. .. .. .. | 7 |
| தர்மபுரி .. .. .. .. | 7 |
| சேலம் .. .. .. .. .. | 7 |
| பெரியார் .. .. .. .. | 4 |
| கோயம்புத்தூர் .. .. .. .. | 7 |
| நீலகிரி .. .. .. .. .. | 2 |
| திருச்சி .. .. .. .. .. | 7 |
| மதுரை .. .. .. .. | 7 |
| இராமநாதபுரம் .. .. .. .. | 7 |
| தஞ்சாவூர் .. .. .. .. | 7 |
| புதுக்கோட்டை .. .. .. .. | 4 |
| திருநெல்வேலி .. .. .. .. | 7 |
| கன்னியாகுமரி .. .. .. .. | 6 |
| மொத்தம் | 100 |



1984 மார்ச் 22]

(ஆ) ஒவ்வொரு தம்பதியருக்கும் ரூ. 5,000 மதிப்புள்ள 7 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

(இ) விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு வகுப்பு மற்றும் மதம் என்ற வேறுபாடின்றி இவ்வுதவி வழங்கப்படுகிறது. அதனால் விதவை மறுமணம் செய்து கொண்டவர்களில் கலப்பு மணம் பற்றிய விவரம் அவர்களிடம் கேட்கப்படுவதில்லை.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும் விதவைகளுக்கு 5,000 ரூபாய் 7 ஆண்டுகால தேசிய சேமிப்பு பத்திரங்கள் என்ற வகையில் அரசு கொடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி விதவைகள் மறுதிருமணம் செய்து கொண்டவர்கள் மனு செய்யும் நேரத்தில், அவர்களுக்கு உடனடியாக அந்தப் பணத்தைக் கொடுக்க அரசு முன் வருமா ? 7 ஆண்டுகால பத்திரங்களாகக் கொடுப்பதால், அவர்களுக்கு இடையில் கஷ்டம் ஏற்படுகிறபோது, அவ்வப்போது அந்தப் பணத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொள்ள அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, விதவைகள் மறுமணம் செய்து கொள்கிற நேரத்தில் அவர்களுக்கு 5,000 ரூபாய் மதிப்புள்ள தேசிய சேமிப்புப் பத்திரம் கொடுக்கப்பட்டு அது வங்கிகளில் போடப்பட்டு, 7 ஆண்டுகாலம் கழிந்த பின்னர் அது 10,000 ரூபாய் என்று வருகிற நேரத்தில், அப்போது அது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மறுமணம் செய்து கொள்கிற சமயத்திலேயே கொடுத்து விட்டால் அவர்களிடையே ஒரு அன்பு ஏற்படாது என்ற காரணத்தால், அவர்களிடையே ஒரு அன்பு ஏற்படுத்தவேண்டும் என்ற அளவில், அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்து விட்டால் அவர்கள் பின்னர் பிரிய முடியாத அளவிற்கு இருந்து விடுவார்கள் என்பதால், இந்த 7 ஆண்டுகால பத்திரங்கள் கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு 10,000 ரூபாய் என்று வழங்கப்படுகிறது.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, விதவைகள் மறுமணம் என்பது ஒரு பெரிய சமூக சீர்திருத்தமாகும். இப்படி விதவைகளை மறுமணம் செய்து கொண்டவர்கள் பல சமூகத்தில் இருக்கின்றனர். அவர்கள் இதை ஊக்குவிப்பதற்கு எதிராக இருக்கிறார்கள். சில குறிப்பில் இருப்பவர்கள் விதவைகளை மறுமணம் செய்து கொள்கிற நேரத்தில் வெளியே தெரியாமல் செய்கிறார்கள். ஆகவே, எப்படிப்பட்டவர்கள் எல்லாம் மறுமணம் செய்து கொண்டார்கள் என்பது வெளி உலகத்திற்கு அறிவிக்கப்பட்டால், அது நல்ல வகையில் இதை ஊக்குவிக்க வசதியாகவும், உதவியாகவும் இருக்கும். ஆகவே,

[1984 மார்ச் 22

எந்த வருஷத்தில் இருந்து திருமணம் செய்து கொண்ட வர்களுக்கு இந்த ஊக்கத்தொகை கொடுக்கப்படும் என்கிற நிர்ணயிப்பு இல்லாமல், ஒரு 10 ஆண்டுகளுக்கு முன்பாக அப்படி மறுமணம் செய்து கொண்டு இருந்தால், அவர்களுக்கும் இந்த ஊக்கத் தொகை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர் களே, 10 வருஷத்திற்கு முன்னாலே மறுமணம் செய்து கொண் டவர்களை இப்போது அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள முடியாது. எந்தெந்த வருஷம் பணம் ஒதுக்கப்படுகிறதோ அந்தந்த வருஷத்தில்தான் அவர்களை அந்தப் பட்டியலில் சேர்த்து உதவித் தொகை வழங்கப்படும்.

விதவைகள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 31—3—1983 முடிய பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை.

405—(*வினா எண். 19105)—திரு. மு. அப்பாதுரை மற்றும் திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சமூகநலத் துறை மூலம் விதவைகள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 31—3—1983 முடிய பயன்பெற்ற வர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் பெற்றுள்ள பயன்கள் யாவை?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) 10864 பேர்.

(ஆ) சமூக நலத்துறை மூலம் விதவைகள் மற்றும் ஆதரவற்ற தாய்மார்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறுதொழில் செய்து பிழைக்க அதாவது பூ, பழம், காய்கறிகள், மீன், அரிசி, புடவை, எவர்சில்வர் பாத்திரங்கள், பிளாஸ்டிக் சாமான்கள் வியாபாரம் செய்வதற்கு வங்கிகளில் கடனுதவி வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இத்திட்டம் சென்னை, மதுரை, கோவை மற்றும் தஞ்சை மாவட்டங்களில் இயங்கி வரும் வழி காட்டி நிலையங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரு கின்றது.

2. பல்வேறு தேசியமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் விதவை கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு கடனுதவி பெற்றுத் தந்து சுய வேலைவாய்ப்புகளுக்கு வசதி செய்து தரப்படுகிறது. குறைந்த வட்டி விகிதத்தில் 200 முதல் 1,000 ரூபாய் வங்கிக் கடன் தொகை பெற்று, சுயமாகத் தொழில் செய்து அதன் மூலம் தங்களது வாழ்க்கையினை நடத்த வழி



1984 மார்ச் 22]

பெற்றதுடன் இப்பெண்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத் தியும் வருகின்றனர். தனி நபரிடமிருந்து கடன் பெற்று அதிக வட்டி செலுத்தி அல்லல்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்ததனால் வழிகாட்டி நிலையங்களின் செயல் திட்டம் பெண் களால் பெரிதும் வரவேற்கப்படுவதுடன் சிறப்பாக பயன்படுத்தப் படுகின்றது. 1978 முதல் 31—3—1983 வரை 10,864 பெண்கள் பல்வேறு தேசியமாக்கப்பட்ட வங்கியின் மூலம் கடனுதவி பெற்று வியாபாரம் செய்து வாழ்க்கைத் தரத்தை சீராக்கிக் கொண்டுள் ளார்கள். ஆக மொத்தம் இத்திட்டத்தின் கீழ் 30—9—1983 வரை 15,666 பெண்கள் சுமார் ரூபாய் 31,33,200 வரை வங்கி மூலம் 4 சதவீதவிகிதத்திற்கு குறைந்த வட்டியில் கடன் பெற்று பயனடைந்துள்ளனர். இவ்வாறு குறைந்த வட்டியில் வாங்குவதால் வாங்கிய பணத்தை திருப்பி கட்டவும் சுலபமாக இருக்கிறது. எனவே மேலும் கடன் தரவும் வங்கிகள் முன்வருவது குறிப்பிடத் தக்கது. இதுபோன்ற வழிகாட்டி நிலையங்கள் 1983—84 ஆம் ஆண்டில் மேலும் திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் கன்னியா குமரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு ஏற்படுத்த ஆணையிடப் பட்டுள்ளது.

3. மாநில அரசு சமூக நலத்துறை சிற்றுண்டி மூலமாக சாலைகள் அமைக்கும் திட்டம் ஒன்றினை அங்கீரித்துள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளித்தலும் பொது மக்களுக்கு மலிவு விலையில் சிற்றுண்டிகள் கிடைக்கச் செய்தலும் ஆகும். இதன் கீழ் இரண்டு வகையான மாதிரி திட்டங்களை அரசு அங்கீரித் துள்ளது.

(1) திட்டம் ஒன்றின்படி விதவைகள், அவர்கள் இல்லத்திலேயே சிற்றுண்டி வகைகளைத் தயாரித்து பொதுமக்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்வார்கள். இம்மாதிரி திட்டத்தின் கீழ் விதவைகளுக்கு அதிக பட்சமாக ரூபாய் 500 மானியமாகவும், குறைந்த வட்டி வீதத்தில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக அதிகபட்ச கடனாக ரூபாய் 2,500ம் வழங்கப்படும்.

(2) திட்டம் இரண்டின் கீழ் இச்சிற்றுண்டிச்சாலைகளை நிறுவ தகுதியான இடங்களைத் தேர்ந்தெடுத்து அரசு அலுவலகங் களிலோ கல்லூரிகளிலோ மற்றும் தொழிற்சாலைகளிலோ பெட்டி கடைகள் அமைத்து அதன் மூலமாக சிற்றுண்டி தயாரித்து மலிவு விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அதிக பட்சம் ரூபாய் 2,500 மானியமாகவும் குறைந்த வட்டி விகிதத்தில் அரசுடைமையாக் கப்பட்ட வங்கிகள் மூலமாக அதிகபட்ச கடனாக ரூபாய் 7,500-ம் வழங்கப்படும்.

[1984 மார்ச் 22

4. தமிழ் நாட்டில் மொத்தமாக 70 இடங்களில் இச்சிற்றுண்டி சாலைகள் ஏற்படுத்த அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றில் சென்னை நகரில் 30 இடங்களிலும் மற்றும் தஞ்சை, திருச்சி, கோயம்பத்தூர், சேலம் ஆகிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் 10 இடங்களிலும் இச்சிற்றுண்டிசாலைகள் நிறுவ முடிவு செய்யப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதர முக்கிய அம்சங்களாவன

(1) இத்திட்டத்தில் பயன்பெறும் விதவைகளுக்கு சுத்தமான முறையில் சிற்றுண்டி தயாரித்தல், பொட்டலம் கட்டுதல், வரவு செலவு கணக்கு எழுதுவதிலும் போதிய பயிற்சி அளிக்கப்படும்.

(2) சிற்றுண்டி வகைகள் பொட்டலமாக விற்பனை செய்யப் படும்.

(3) சிற்றுண்டிகள் தயாரிக்க தேவையான அரிசி மற்றும் உணவு பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தினரால் மலிவு விலையில் வழங்கப்படும்.

(5) திட்ட அமுலாக்கம் இதுவரையில் 68 இடங்களில் சிற்றுண்டி சாலைகள் அமைக்கப்பட்டு செயற்படுகின்றன.

(முற்பகல் 10-00)

திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச் சரவர்கள் 10,000 பேர்களுக்குமேல் பயன் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் நிரந்தரமாக அந்தத் தொழில் செய்து முன்னேறும் வாய்ப்பு இருக்கிறதா அவர்கள் செய்யக் கூடிய தொழில்களுக்கு தேசியமாக்கப்பட்ட வங்கிகளாக இருந்தா லும் மற்ற வங்கிகளாக இருந்தாலும் உடனடியாகக் கடன் கொடுப்பதில்லை. ஆகவே, குறிப்பிட்ட வங்கிகளை அரசு அறி வித்து, அந்த வங்கிகள் மூலம் அவர்கள் கடன் பெறவழிவகைச் செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே அவர்களுக்கு நிரந்தரமான வருமானத்தை தேடிக் கொடுப்பது என்பதைப் பொருத்த வரையில் அந்த விதவைகள் கடன் பெற்று தொழில் நடத்தும்போது அவர்கள் அதிலே அக்கரைக் காட்டி, அதன் மூலமாகத்தான் நிரந்தர வருமானத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். ஆனால் குறிப்பிட்ட இந்த இந்த வங்கிகள் தான் கடன் கொடுக்க வேண்டும் என்று சொல்ல முடியாது. எந்த எந்த வங்கிகள் விதவைப் பெண்களுக்கு உதவி செய்ய முன் வருகி றார்களோ அந்த வங்கிகளை அனுகித்தான் அவர்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.



1984 மார்ச் 22]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவரவர்களே, வழிகாட்டும் நிலையங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் அமைக்கப்படுமா? காஞ்சிபுரத்திற்கும் இந்தத் திட்டத்தின் பலன் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இரா தாமரைக்கனி: தலைவரவர்களே, கோரிக்கையற்றுக் கிடைக்குதண்ணே வேரில் பழுத்த பலா என்று விதவைகள் மறு வாழ்வு பற்றி பாவேந்தர் பாரதிதாசன் பாடியிருக்கிறார். ஆகவே விதவைகள் மறுமணம் செய்து வாழ்க்கையில் முன்னேற்றமடையத் தக்க வகையில் திருமணம் செய்த உடனயே அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போட் டால் பதில் கொடுக்கப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்; தலைவரவர்களே, தற்போது விதவைகள் கடன் வாங்க தேசியமாக்கப்பட்ட வங்கிகள் பல கண்டிஷன்களை போடுவதாக அறிகிறேன். விதவைகளுக்கு உதவி செய்கிறோம் என்ற முறையில் இருக்கின்ற நடைமுறை களை சுலபமாக்கி, அதன் மூலம் பலன் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, வழிகாட்டி நிலையங்கள் மூலமாக விதவைகளுக்கு வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்றுக் கொடுத்து, அதன் மூலமாக விதவை கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் சூழ்நிலையை அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அரசு ஏற்றுக் கொண்டு செயல் படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்; தலைவரவர்களே, மாண்பு மிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் சென்னை, மதுரை, கோவை, தஞ்சை ஆகிய நகரங்களில் வழிகாட்டி நிலையங்கள் அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 1983 செப்டம்பர் வரையில் 15,666 பெண்கள் பயன் பெற்றிருக்கிறார் கள் என்றும் இருக்கிறது. நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமப் புறங்களிலும் குழந்தை குட்டிகளுடன் விதவைப் பெண்கள் கஷ்டப் படுகிறார்கள். எனவே, கிராமப்புறங்களுக்கும் இந்தத் திட்டம்

விரிவுபடுத்தப்படுமா கிராமப்புரங்களில் வழிகாட்டி நிலையங்கள் இல்லாவிட்டால், பதிவு செய்யப்பட்ட மாதர் சங்கங்கள் மூலமாக கடன் பெற, இதர வசதிகள் பெற வழி வகைச் செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, வழி காட்டி நிலையங்கள் மூலமாக கிராமப்புற விதவைப் பெண் களும் பயனடையும் வகையில்தான் அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

திரு. கே. சௌந்திரராஜன்: தலைவரவர்களே, சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் விதவைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதாக குறிப்பிட்டார்கள். நான் குறிப்பிட விரும்புவது அவர்கள் விதவையானவுடனே அவர்களுக்கு வேலை வாங்கித் தருகிற பெரும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு குறிப்பிட்ட கால வரைய றக்குள் வேலை கொடுத்து, அதன் மூலம் நிரந்தரமான பரிகாரம் அளிக்கும் திட்டம் ஏதாவது அரசின் ஆய்வில் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன்; தலைவரவர்களே, மூலக் கேள்வி விதவைகள் சுய வேலை வாய்ப்புப் பெறும்திட்டம் பற்றியது அரசு வேலை தேடி கொடுப்பது என்பது, அவர்களுடைய தகுதிக் கேற்ப தான் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். ஆனால், சுய வேலை வாய்ப்பு என்ற திட்டத்தின் மூலம் விதவைகளுக்கு இந்த அரசைப் பொருத்த வரையில் என்ன என்ன உதவிகளைச் செய்து கொடுக்க முடியுமோ அவற்றை செய்து கொடுக்க அரசு தயாராக இருக்கிறது.

## மகளிர் முன்னேற்ற வாரியம்.

406—வினா எண். 21790 திரு. எம். சின்னசாமி மாண்புமிகு மூகநலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா?

மகளிர் முன்னேற்ற வாரியம் (women welfare corpration) மூலம் 1983-84 ஆண்டிற்கு எத்தனை பேருக்கு உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 12-12-1983 முதல் செயல்பட்டு வருகிறது 1983-84 இல் இக்கழகம் நேரடியாக உதவி அளிக்க திட்டங்கள் ஏதும் உருவாக்கவில்லை.



திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே 1983-84-ஆம் ஆண்டிற்கான நேரடியாக திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த வாரியம் எப்போது உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு எவ்வளவு நிதியை அரசு ஒதுக்கி யிருக்கிறது? என்னென்ன திட்டங்களை எதிர்காலத்தில் பெண்க ளுக்காக தயாரித்துள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 12—12—1983 முதல செயல்பட்டு வருகின்றது. இதற்காக மாநில அரசு ரூ. 1 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. என்னென்ன திட்டங்கள் என்ற விவரம் இப்போதுதான் மகளிர் மேம்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் தான் அதை ஆராய்ந்து என்னென்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 390,391,392 ஆகியவை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் வேண்டு கோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (1) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## தகவல் கோரல்.

அ) பி. அண்ட். சி. மில். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

திரு க. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பி. அண்ட். சி. மில் தொழிலாளர்கள் 68 நாட்க ளாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பி. அண்ட். சி. தொழிலா ளர்களைப் பற்றி இங்கே என்ன செய்யச் சொல்கிறீர்கள் கான்சிலி யேஷனுக்குப் போக வேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும். ஏதாவது முக்கி யமான அம்சம் இருந்தால் சொல்லுங்கள்,

[1984 மார்ச் 22

(ஆ) தர்மபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட நில அதிர்ச்சி.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட நில அதிர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள பரபரப்பான சூழ்நிலை குறித்த ஏதாவது அறிக்கையை அரசு வைக்க முன்வருமா

மாண்புமிகு பேரவை தலைவர்: அறிக்கை வந்தால் அளிக்கப்படும்

திரு. என் ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பேசின் பிரிட்ஜ் பகுதியிலே மின்சார ஊழியர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் கன்சிலிவேஷனுக்கு போக வேண்டும்.......

திரு. கே. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்தில் மாம்பாக்கம் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றுகிறவர்கள்... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாம்பாகத்திற்கு இப்போது நாம் போக முடியாது. அதைப்பற்றி இப்போது எடுப்பதற்கில்லை முறையாகக் கொண்டு வர வேண்டும்.

(இ) (உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள்)

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைச் சிறையில் 1,700 கைதிகள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். பரிசீலனையில் இருக்கிறது. நாளை வரலாம்.

திரு.செ. சிவகாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சிவகாசி அய்யா நடார் கல்லூரி கடந்த 50 நாட்களாக மூடில் கிடக்கிறது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் இதை உரிய முறையிக் கொண்டு வாருங்கள்.



1984 மார்ச் 22

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கல்லூரி மாணவி ஒருத்தி நெய்வேலியில் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திருவாளர்கள் கு. பா. பழனியப்பன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஜெ. ஹேமச் சந்திரன் ஆகியோர் "கடந்த 26—2—1984 அன்று நெய்வேலியில் கல்லூரி மாணவி உஷா என்பவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு இறந்ததும் போலிசார் சரிவர நடவடிக்கை எடுக்காததால் பொது மக்களிடையே இருக்கும் பீதியும் கலவரமுமான சூழ்நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக அவர்கள் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் சென்ற பிப்ரவரி மாதக் கடைசியில் கல்லூரிக்குப் படிக்கச் சென்ற உஷா என்ற மாணவியை பலாத்காரமாக கடத்திச் சென்றிருக்கிறார்கள். என்று தெரிகிறது ஒரிரண்டு நாட்கள் கழித்து அந்தப் பெண்ணின் பிணம்தான் கிடைத்திருக்கிறது. அதுகுறித்து போலிசாரிடம், எழுத்துப்பூர்வமான புகார், அந்தப் பெண்ணினுடைய உறவினர்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இது சம்பந்தமாக தக்க விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று புகார் கொடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நெய்வேலியிலுள்ள போலிஸ் ஸ்டேஷனிலுள்ளவர்கள், முறையாக பதில் சொல்லாது, இதுபோன்று வரக்கூடிய பல்வேறு புகார்களுக்கும், பல்வேறு மனுக்கள் கொடுக்கப்பட்டாலும், கூட, முறையான நடவடிக்கை எடுக்காத நிலையில் இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-10)

இதற்கு மேலும் உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், 4 தினங்களுக்கு முன்னால் ஒரு கணவனும் மனைவியும் சேர்ந்து சினிமா பார்த்துவிட்டு வருகின்ற நேரத்தில், சில சமூக விரோதிகள் கணவனை பிடித்து கட்டிவிட்டு, அவனுக்கு எதிரே அவனுடைய மனைவியை கற்பழிப்பு செய்துவிட்டு அந்தப் பெண்ணைப் போட்டுவிட்டு போய்விட்டார்கள். பின்னர் அந்தக் கணவனை அடித்து தண்ணீரிலே தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அதற்குப் பிறகு போய்ப் பார்த்த பிறகு, அவனும் இறந்து கிடக்கிறான். பிறகு போய்ப் போலிஸ் ஸ்டேசனில் புகார் கொடுத்தாலும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படாத நிலையிலிருக்கிறது. ஆகவே, போலிசாரைப் பொறுத்த மட்டில் புகார் கொடுத்தால் அதிலும் குறிப்பபக இப்படிப்பட்ட புகார் வந்தால், அவைகளை

காலாகாலத்தில் நடவடிக்கைகள் எடுக்காததின் காரணமாக இப்படிப்பட்ட சமூகவிரோதிகளின் செயல்கள் அந்த வட்டாரத்திலே அதிகமாக இருக்கின்றன. ஆகவே, போலிசாருடைய அஜாக்கிரதையின் காரணமாக, லா அண்ட் ஆர்டர் (Law and Order) பிரச்சினை பற்றி விரிவாகப் பேசவேண்டியிருப்பதாலும் போலிசாருடைய நடவடிக்கைப் பற்றி விரிவாகப் பேசவேண்டியிருப்பதாலும் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்;** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, செல்வி பீட்ரைஸ் உஷா தாரிக், (வயது 22) தகப்பனார் பெயர் அந்தோணிசாமி, பிளாக்-13 டி. 131, பெரியார் சாலை, நெய்வேலி நகர குடியிருப்பு, என்பவர் சென்னை கிண்டியில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சிப்பள்ளியில் பயிற்சி பெற்று வந்தார் அவரது தந்தை அந்தோணிசாமி 3 வருடங்களாக துபாயில் இருந்துவிட்டு நவம்பர் 1983ல் இந்தியாவிற்கு திரும்பி வந்தார். அவர் துபாயிலிருந்த இடைக்காலத்தில் உஷாவிற்கும் அனந்தபுரத்தைச் சேர்ந்த மகிமைதாசுக்கும் நட்பு ஏற்பட்டு, அதன் தொடர்பாக இருவரும் சென்னையில் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். இத்திருமணச் செய்தியைக் கேள்வியுற்ற உஷாவின் தந்தை, தனக்கு உடல் நலம் மிகவும் குன்றியிருப்பதாக பொய்யாக தந்தி ஒன்று கொடுத்து பின் உஷா நெய்வேலியிலுள்ள தனது வீட்டிற்கு வந்தபின் அவரைத் திட்டியுள்ளார். நிலைமையை உணர்ந்த, உஷா ஆபரணங்களில் தனது பங்கு பற்றிக் கேட்கவே அவரது தந்தை ஆவரை கம்பு கொண்டும் பெல்ட் கொண்டும் தாக்கி சிறு காயங்கள் உண்டுபண்ணி துன்புறுத்தியுள்ளார். இதனால் வெறுப்புற்ற உஷா என்டிரின் விஷ மருந்தை உட்கொண்டுள்ளார். இதன் தொடர்பாக அவர் நெய்வேலி பழுப்பு நிலக்கரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையளித்தும் பயனின்றி 26-2-1984 அன்று 1 மணி 45 வினாடி அளவில் மரணம் அடைந்தார்.

அவரது தந்தை கொடுத்த தகவலின் பேரில் நெய்வேலி நகரம் குடியமைப்பு காவல்நிலைய குற்ற எண். 118/84, குற்ற விசரணை முறை சட்டப்பிரிவு 174-இன் கீழ் வழக்கொன்று பதியப்பட்டு விசாரணை செய்யப்பட்டது. உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. பிரேத பரிசோதனை செய்த பெண் மருத்துவர் இரசாயன பரிசோதனை அறிக்கைக்காக இதுபற்றி தமது கருத்தை தக்க வைத்துள்ளார். இவ்வழக்கில் அந்தோணிசாமி தனது மகள்உஷாவை தமக்கு உடல் நலம் குன்றியுள்ளது என்று பொய்யான தகவல் கொடுத்து வீட்டிற்கு வரவழைத்து கோபத்தால் அவரைத் திட்டியும், தாக்கிய வகையிலும் தனது மகளுக்குத் தீங்கு இழைத்திருக்கிறார் என்று காவல்துறைக்கு





இதுவரையில் செய்தி கிடைத்திருக்கிறது. மேலும் இந்த மருத்துவத்துறை அறிக்கையும், இரசாயனப் பரிசோதனையின் அறிக்கையும் வந்ததற்குப் பிறகு, உள்ளபடியே தக்க நடவடிக்கை எடுப்பதற்கு காவல்துறையினர் ஆயத்தமாக இருக்கிறார்கள். இப்போது அவருடைய தந்தையின்மீதே சந்தேகப்படக்கூடிய அளவிற்கு, அவருடைய தாக்குதலினால்தான் இறந்திருக்கக் கூடுமோ என்பதும், இந்த விஷம் அருந்தியதினுடைய தன்மைகள் எல்லாம் வந்தற்குப் பிறகு முழு புலன் விசாரணை முடிந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்:

எனவே இதுபற்றி மேலும் விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: :** மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கபெறுகிறது.

## அறிக்கை அளித்தல்

### விதி 107ன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12—3—1984 அன்று தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில், உடுக்குறியிட்ட எண். 273,— பழைய எண். 18626— தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின் போது உறுப்பினர் திரு. மா. வின்செண்ட் அவர்கள் கீழ்க்கண்டவாறு வினாக்களைக் கேட்டிருந்தார்.

விவர அறிக்கையிலே இரண்டாம் நிலையில், படகுத்துறை, சிற்றுண்டிசாலை மாற்றுப்பாதை ஒழுங்குப்படுத்துவது போன்றவைகளுக்காக ரூ. 108 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 141 இலட்சம் செலவிடப்பட்டு இருக்கிறது. படகுத்துறை இப்போது சென்னையில் நடைபெறுகிறதா? அதிலே யார் யார் பயணம் செய்கிறார்கள்? இந்தியர்கள் அதிகமாகப் பயணம் செய்கிறார்களா? வெளிநாட்டவர்கள் அதிகமாகப் பயணம் செய்கிறார்களா? இதிலிருந்து அரசுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படகுத்துறைகள் எல்லாம் ஒன்றும் இப்போது செயல்படவில்லை. எனவே மற்ற கேள்விகளுக்கு இடம் இல்லை, நாம் இப்போது முக்கியமாகச்

செய்ய வேண்டியது, கூவத்தில் நாற்றம் அடிக்காமல், இருப்பதற்கு முகத்துவாரத்தில் மண்மேடிட்டுக்கொண்டு, கூவத்தின் தண்ணீர் கடலில் கலக்காமல், செய்வதற்கு அந்த மண்ணை எடுப்பதற்கு இப்போது தேவையானதைச் செய்துவிட்டால் பிறகு கூவத்திலே மற்ற இடங்களில் கலக்கிற சாக்கடை தண்ணீரை தடுத்து விட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபடி படகுகள் போகலாம், என்னென்ன செய்திருக்கிறோம் என்று முதல் பக்கத்தில் கொடுத்திருக்கிறோம். எனவே, படகுகள் இப்போது விடுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை'' என்பதற்குப் பதிலாக கீழ்க்கண்ட பதிலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் :—

'' மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் முகத்துவாரத்தில் அமைந்துள்ள படகுத் துறையை, திருவாளர்கள் சுந்தரம், சுல்தான் ஜின்னா என்பவர்களுக்கு 15-11-1981 முதல் 14-1-1986 வரை 5 வருடங்களுக்கு குத்தகைக்கு 12 படகுகளை விட அனுமதிக்கப்பட்டுள்ளது. வருஷத்திற்கு 4,920 ரூபாயை குத்தகைத் தொகையாகச் செலுத்தி வருகிறார்கள். கூவம் முகத்துவாரத்தில் தொடர்ந்து நீர் தேங்கியிருப்பதால் துர்நாற்றம் வீசுவதால், இந்தப் படகுப் பயணத்திற்கு போதிய ஆதரவு இல்லை. மற்றவைகளைப் பற்றி தகவல் இல்லை. ''

Thiru K. S. G. HAJA SHAREEF: Sir, I would like to know from the Hon. Minister why the gushing of sea water into the Cooum water has been discontinuer?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : அவர்கள் விளக்கம் கேட்கிறார்கள்? கூவம் தண்ணீர் கடலில் கலப்பதற்கு சரியாக நடவடிக்கை எடுக்கவில்லையா என்று கேட்கிறார்........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, விதி 107-ன்கீழ் நான் விவரங்களை அளித்தேன். இதிலே சப்ளிமெண்டரி கேட்பதற்கு இருக்கிறதா என்று தெரியவில்லை?........

Thiru K. S. G. HAJA SHAREEF: Mr. Speaker, I only put this question arising over the reply the Hon. Minister has given. I just wanted to know why the gushing of sea water inside the Cooum has been discontinued and since when it is being discontinued?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்குக் கேட்க உரிமை இருக்கிறது. விளக்கம் இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் தனிக் கேள்வி போட்டச் சொல்லுங்கள்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருக்கக்கூடிய ஒரு டிரட்ஜர் போதாது என்று சொல்லி, மேலும் ஒரு டிரட்ஜர் வாங்குவதற்காக இருக்கிறோம். அந்த டிரஜ்ஜரை வாங்கிவிட்டால் கூடுமானவரையில், அந்தத் தண்ணீர் போவதற்கு ஏற்பாடு செய்ய வசதியாக இருக்கும்.

Thiru K. S. G. HAJA SHAREEF: Mr. Speaker, dredging has nothing to do. This is gushing of sea water inside the Cooum water. We have already taken up a decision and there has been a lot of machineries put in there. I think the High Power Generator has already been kept and it was doing the work of gushing water inside the Cooum water. Why it has been discontinued and when it has been discontinued?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதற்கு தனிக் கேள்வி போட்டால் விவரமான பதில் தருகிறேன்.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) தமிழ் நாட்டின் தென் பகுதிகளில் காலரா நோய் பரவி வருவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். வரதராஜன், என். பழனிவேல், டி. மணி, ரா. உமாநாத், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே '' தமிழ் நாட்டில் தென்பகுதிகளில் குறிப்பாக திண்டுக்கல் நகரிலும் அதனை ஒட்டியுள்ள கிராமங்களிலும் காலரா நோய் பரவியுள்ளதால் மக்கள் மத்தியில் நிலவும் கவலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[டாக்டர்எச். வி. ஹண்டே] [1984 மார்ச் 22

அறிக்கை.

1984-ஆம் ஆண்டு (15-3-1984) முடிய தென் மாவட்டங்களில் வாந்தி பேதி (cholera) மற்றும் கடுமையான குடற் அழற்சி (Acute Gastro Enterities) நோய்களினால் பாதிக்கப் பட்டோர் இறந்தோர் விவரம் கீழ் வருமாறு:

| மாவட்டம். | வாந்திபேதி. | | கடுமையான குடற் அழற்சி. | |
|---|---|---|---|---|
| | பாதிப்பு. | இறப்பு. | பாதிப்பு. | இறப்பு. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மதுரை .. .. | 19 | 2 | 519 | 12 |
| இராமநாதபுரம் .. | 6 | 0 | 54 | 3 |
| திருநெல்வேலி .. | 33 | 0 | 224 | 16 |
| கன்னியாகுமரி .. | .. | .. | 5 | 0 |
| மொத்தம் .. | 58 | 2 | 802 | 31 |

மதுரை, திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் இந்நோய்களினால் இவ்வருடம் 15-3-84 வரை பாதிக்கப்பட்ட பகுதிகளும் பாதிக்கப்பட்டவர் எண்ணிக்கையும் கீழ்வருமாறு :

| | வாந்திபேதி. | | குடற் அழற்சி. | |
|---|---|---|---|---|
| | பாதிப்பு. | இறப்பு. | பாதிப்பு. | இறப்பு. |
| மதுரை மாவட்டம் : | | | | |
| மதுரை மாநகராட்சி | 3 | 0 | 41 | .. |
| திண்டுக்கல் நகராட்சி | .. | .. | 156 | .. |
| பழனி நகராட்சி .. | .. | .. | 12 | .. |
| பெரியகுளம் நகராட்சி | .. | .. | 30 | .. |
| இராமப்புறம் .. | 16 | 2 | 280 | 12 |
| மொத்தம் .. | 19 | 2 | 519 | 12 |



1984 மார்ச் 22] [டாக்டர் எச். வி. ஹண்டே]

| | | | | |
|---|---|---|---|---|
| திருநெல்வேலி மாவட்டம் : | | | | |
| பாளையங்கோட்டை நகராட்சி .. | .. | .. | 2 | 0 |
| தூத்துக்குடி நகராட்சி | .. | .. | 2 | 0 |
| மேலப்பாளையம் நகராட்சி .. | 2 | 0 | 24 | 0 |
| கடையநல்லூர் நகராட்சி | .. | .. | 14 | 1 |
| கிராமப்புறப் பகுதிகள் | 31 | 0 | 182 | 15 |
| மொத்தம் ... | 33 | 0 | 224 | 16 |

திண்டுக்கல் நகரைப் பொறுத்தவரை காலரா நோயினால் எவரும் பாதிக்கப்பட்டு இறக்கவில்லை. குடற் அழற்சி நோயினால் 156 பேர்கள் பாதிக்கப்பட்டனர். 'எவரும் இறக்கவில்லை. தற்சமயம் (16-3-84 அன்று) நான்கு பேர்கள் மட்டும் தீவிர வயிற்றுப்போக்கு நோயினால் பாதிக்கப்பட்டதாக அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகிறார்கள். அவர்கள் காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்களா என்பதைக் கண்டறிவதற்காக அந் நால்வரின் மலமும் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத்துறையைச் சேர்ந்த வட்டார உதவி இயக்குநர்கள், மாவட்ட நல அலுவலர்கள், நகராட்சி நல அலுவலர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய அலுவலர்கள் ஆகியோர் தீவிரமான முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். தேவையான மருந்துகள், தடுப்பு ஊசிகள், பிளீச்சிங் பவுடர், பினாயில் போன்ற மருந்துகள் சேகரித்து வைக்கப்பட்டு பாதிக்கப் பட்ட பகுதிகளில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. நீர் நிலைகளில் குளோரின் கலத்தல், குடிநீரைப் பரிசோதித்தல் முதலிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இந்த வியாதிகள் மூலம் பாதிக்கப்பட்டோருக்கு குடலில் நீர் வற்றுவதைத் தடுக்க உப்பு கலந்த கரைசல் தயாரிக்கும் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது. இக் கரைசலை வீட்டிலேயே எவ்வாறு தயாரிப்பது என்பதைப்பற்றிய துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு கிராமப்புற மக்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

அண்மையில் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக குடற் அழற்சி, வாந்திபேதி, டைபாய்டு, மஞ்சள் காமாலை போன்ற நீரினால் பரவும் நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டி நடவடிக்கை எடுப்பதற்காக பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத்துறையைச் சேர்ந்த இரண்டு துணை இயக்குநர்கள் வெள்ளப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

நிலைமை இப்போது கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. நிலைமை உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது. மக்கள் நலம் காக்க அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்றும், தேவைப்படின் மேற்கொண்டு நடவடிக்கைகளை எவ்வித தடங்கலோ தயக்கமோ இன்றி அரசு எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலேயே சில உண்மையான விவரங்கள் இடம் பெறவில்லை. இதிலே பாதிக்கப்பட்டிருப்பவர்களுடைய கணக்குகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் எழுப்பியிருப்பது எல்லாம், காலரா நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றி. ஆனால் இவர்கள் புதியதாக குடற் அழற்சி நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் மிக சாமர்த்தியமாக. அண்மையிலே தமிழ்நாட்டில் பெய்த பெரு மழையின் காரணமாக தொத்து நோய்கள் வரக்கூடிய ஆபத்து இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், இந்த மாதம் 13, 14 தேதிகளில் திண்டுக்கல் நகரத்திலும், அதைச் சுற்றியுள்ள 40 கிராமங்களைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். உங்களுடைய அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்கள் 156 பேர்கள் குடற் அழற்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று. இப்படி பெரிய எண்ணிக்கையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கக்கூடிய நேரத்தில் திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய மருத்துவ மனையிலே அவர்களை வைத்திருப்பதற்குக் கூட இடம் இல்லை. திண்டுக்கல் நகராட்சி அதிகாரிகளைக் கேட்டால், அரசு மருத்துவ மனை அதிகாரிகள்தான் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

(முற்பகல் 10–20)

அரசு மருத்துவ மனை அதிகாரிகளைக் கேட்டால் திண்டுக்கல் நகராட்சிதான் கொட்டகை போட்டுத்தரவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே இருக்க இடம் இல்லாமல் அந்த 156 பேர்களையும் வைத்திருக்கிறார்கள். அந்த நோயாளிகளை ஆபத்தான நிலையில் போதுமான மருத்துவ வசதி இல்லாமல் வைத்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இத்தகைய கடுமையான பாதிப்பு தமிழ் நாட்டிலே ஏற்பட்டு, மஞ்சள் காமாலை நோயும், காலரா நோயும் படிப்படியாக மக்களை பற்றிக் கொள்கிற, தொற்றிக்கொள்கிற ஆபத்து இருக்கிறபோது





மாவட்ட மருத்துவ மனைகள், தாலூகா மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இவைகளிலே எல்லாம் இந்த ஆபத்தை போக்கக்கூடிய முறையிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய, காலராத் தடுப்பு நோய் மருந்துகளையும் உயிர்பாதிப்பு ஏற்படாமல் இருக்கக்கூடிய முறையில் தடுப்பு மருந்துகளையும் அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா? திண்டுக்கல் நகரிலே உள்ள அவல நிலையைப் போக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பல்வேறு கேள்விகளை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கிறார்கள். குடற் அழற்சி என்பது (Gastro Enteritis என்று ஆங்கிலத்திலே சொல்லக்கூடிய வார்த்தை, Gastro Enteritis நம்முடைய நாட்டிலே மட்டுமல்ல; Third World என்று சொல்லக்கூடிய Asian Countries, Developing Countries நாடுகளிலேயும் எங்கு பார்த்தாலும் அது பிரச்சினையாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் குழந்தைகள் இறப்பிற்கு Infant Mortality-க்கு Acute Gastro Enterities is one of the positive factors அது ஒரு பெரிய காரணம். நாம் இப்போது ஒரு பிரச்சாரத்திலே ஈடுபட்டு இருக்கிறோம். யாருக்கு பேதி ஏற்பட்டாலும் Gastro Enteritis ஏற்பட்டாலும் உடனடியாக நிறைய தண்ணீர் சாப்பிட வேண்டும். இந்த கவன ஈர்ப்பு அதற்கு பயன்படும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் இதன் மூலம் செய்தி நாட்டு மக்களுக்குத் தெரியும். ஆகவே அவ்வாறு ஏற்படுகிறபோது நிறைய தண்ணீர் சாப்பிட வேண்டும். Orel Rehydration ஒரு லோட்டா தண்ணீரில் ஒரு ஸ்பூன் சர்க்கரை ஒரு சிட்டிகை உப்பு போட்டு தண்ணீர் குடித்தால் பயனுள்ளதாக இருக்கும். உயிரைக் காப்பாற்ற முடியும். அதற்கு Orel rehydration packets என்று வைத்திருக்கிறோம். ஏராளமாக குடற் அழற்சி Gastro Enterities வருகிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அதன் விளைவாக Infant Mortality ஆயிரத்திற்கு 120 ஆக இருந்தது இப்போது ஆயிரத்திற்கு 80 ஆக குறைந்து இருக்கிறது. அகில இந்தியாவிலே கேரளாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை நாம் பெற்றிருக்கிறோம். இன்னும் பணியாற்ற வேண்டும். Adults பொறுத்தவரையில் பிரச்சாரம் செய்யவேண்டும். One Glass butter milk with sugar and salt. சாப்பிட்டால் அதற்குப் பின்னாலே தேவையான வைத்தியம் செய்துகொள்ளலாம். அதற்கு பிரச்சாரம் செய்யவேண்டும். அது மட்டுமல்லாமல் Glucose and Saline bottle உடனடியாக எல்லா மருத்துவ மனைகளிலும் வைத்திருக்க வேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறோம். எந்த நேரத்திலே Dehydration வந்தால்கூட Prenatal உடனடியாக செய்யவேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் நீண்ட கேள்விகளாகப் போட்டதால்தான் நான் பதில் விளக்கமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்னொன்று காலரா. அதை Motion examine செய்து positive or negative என்று

சொல்லலாம். 58 கேஸ்களிலே 2 இறப்பு இருக்கிறது என்று புள்ளி விவரம் கொடுத்திருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம். காலரா தடுப்பு ஊசி போடவேண்டுமென்று சொல்லி அதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம். பிரச்சாரம் இல்லாவிட்டால் Death rate ஜாஸ்தியாக இருக்கும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலத்தில் மதுரை மாவட்டம், திண்டுக்கல் பகுதியில் காலரா நோய் பரவி பல பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக எங்களுக்கு கிடைத்த தகவல் தெரிவிக்கிற வகையில் இந்தப் பிரச்சினையை இங்கே கிளப்பினோம். ஆனால் இந்தக் குறிப்பில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக குடற் அழற்சி, வாந்தி பேதி, டைபாய்டு, மஞ்சள் காமாலை போன்ற நீரினால் பரவு நோய்கள் ஏற்பட்டு சுமார் 1,545 பேர் பாதிக்கப்பட்டதாகவும் 63 பேர் இறந்ததாகவும் சொல்லியிருக்கிறார்கள். பொது சுகாதாரத் துறையைச் சேர்ந்த இயக்குநர்கள் 2 பேர் அனுப்பப்பட்டதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் அதை ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை. நான் கேட்டுக்கொள்வது சமீப காலத்தில் பெய்த மழையை அடிப்படையாக வைத்து இன்றைக்கு மாநிலத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் இந்த காலரா நோய் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் ஏற்பட்டு ஆங்காங்கே பலயிடங்களில் இந்த காலரா பேதி கண்டு மக்கள் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக் கூடிய மருத்துவ மனைகளில் இவ்வளவு மழை, வெள்ளம் ஏற்பட்ட பின்னால் இதை கணக்கு எடுத்து விசேஷ மருந்து அங்கே சப்ளை செய்யப்பட்டதா? விசேஷ மருத்துவ அதிகாரிகள் அங்கே நியமிக்கப்பட்டார்களா? இன்று வரை அவர்கள் அங்கே இருந்து செயல்படுகிறார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேற்கொண்டு இந்த மாதிரியான காலங்களில் முன் எச்சரிக்கையாக நாம் உணவு மற்ற வகைகள் கொடுப்பதற்கு முன்பாக சுகாதார வசதியை முதலில் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்விக்கு நான் சுருக்கமாக பதில் அளிக்கிறேன். கூடுதலாக மருந்துகள் அனுப்பபபட்டு இருக்கின்றன. கூடுதலாக அதிகாரிகள் அங்கே அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். அங்கே உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாமல் தடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அது உண்மை. அதற்காகத்தான் பிரச்சாரம் செய்கிறோம். வாந்தி பேதி. ஏற்படுமானால் நாம் என்ன செய்யவேண்டும்





என்றால் உடனடியாக தண்ணீர் சாப்பிடவேண்டும். சிலபேர் தண்ணீர் சாப்பிட்டால் இன்னும் அதிகமாக பேதி ஆகும் என்று நினைத்து அந்த அச்சத்தின் காரணமாக தண்ணீர் சாப்பிடாமல் இருக்கிறார்கள். இது ஒரு பெரிய தொல்லையாக இருக்கிறது. ஆகவே, அதனால் நமக்கு கொஞ்சம் இறப்பு ஏற்படுகிறது. Due to insufficient health education, there is death rate.

ஆகவே நாம் பிரச்சாரத்தின் மூலமாக As soon as a person gets diarhoea, he should take plenty of water with a pink of salt and sugar என்று நாம் பிரச்சாரம் செய்து கொண்டு வருகிறோம். நிச்சயமாக இந்த கவன ஈர்ப்பு அந்த பிரச்சாரத்திற்குப் பயன்படும் என்று நான் நினைக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலரா கண்டவர்களை மருத்துவ மனைககு அவர்களது உறவினர்கள் எடுத்துச் செல்ல மறுக்கிறார்கள். ஏன் என்றால், அது தொற்று நோயாக இருப்பதால் அந்த நோய் நமக்கும் தொற்றிக் கொள்ளும் என்று பயப்படுகிறார்கள். உறவினர்களுக்கே சிறிது சாராயம் வாங்கிக் கொடுத்து மருத்துவ மனைக்கு எடுத்துப் போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தடுப்பு நடவடிக்கையாக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கின்றதா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இந்த காலரா கண்டவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று கிராமத்தில் பிரச்சாரம் செய்வதற்கு ஒரு சினிமா படம் எடுத்து கிராமப்புறத்தில் போட்டு காண்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியே பிரச்சாரமாக அமைகிறது. இதற்கு எல்லா வகையான பிரசசாரமும் செய்ய நாம் தயாராக இருக்கிறோம்.

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து சேலம் அருகே விபத்திற்குள்ளானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், தி. கா. நல்லப்பன், பொ. உத்திராபதி, இரா. கருப்பையா, மு. அப்பாதுரை, ஏ. டி. கருப்பையா மற்றும் சி. பழனிமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, "10—3—1984 அன்று சேலத்திற்கருகில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்தும், தனியார் பேருந்தும்

[திரு. ப. பொன்னுரங்கம்] [1984 மார்ச் 22

மோதிக் கொண்டதில், 4 பயணிகள் இறந்தும், 32 பேர் காய முற்றதும் குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

10—3—1984 அன்று. சேலத்தில் இருந்து சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து வ-434 (டி. எம். எல். 9128), தடம் எண் 505, காலை சுமார் 09-45 மணியளவில் வைதிகவுண்டன்புரம் (சேலத் திலிருந்து 32/8 மற்றும் 33 கி.மீ. கற்களுக்கிடையில்) என்னு மிடத்தைக் கடக்கும் தருவாயில் எதிரே வந்து கொண்டிருந்த '' ஸ்ரீதரன் ரோட் வேஸ்'' என்று பெயரிட்ட தனியார் பேருந்து டன் (டி. என். எல். 8995) நேருக்கு நேர் மோதியதால் விபத்துக் குள்ளாகியது. இவ்விபத்தின் விளைவாக திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழக பேருந்தில் பயணம் செய்த ஒரு பெண் பயணியும், தனியார் பேருந்தில் பயணம் செய்த ஒரு பெண் மற்றும் ஒரு ஆண் பயணிகள் ஸ்தலத்திலேயே இறந்து விட்டனர். இது தவிர, இரண்டு பேருந்துகளிலும் பயணம் செய்த (தி. போ. க. நடத்து னர், ஓட்டுனர் உட்பட) 31 நபர்கள் காயமடைந்தனர். காயம் அடைந்த பயணிகள் அனைவரும் உடனடியாக சேலம் மற்றும் ஆத்தூர் அரசு மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்லப் பட்டனர். இவர்களில் தி. போ. க. பேருந்தில் பயணம் செய்த ஒரு பெண் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே மரணம் அடைந்தார். மற்ற 30 காயம் அடைந்த பயணிகளில் 6 நபர்கள் வெளி நோயாளிகளாகவும், 10 நபர்கள் உள் நோயாளி களாகவும், ஆத்தூர் அரசு மருத்துவ மனையிலும், 14 நபர்கள் (தி. போ. க. ஊழியர் உட்பட) சேலம் அரசு மருத்துவ மனையி லும் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப் பட்டனர்.

இவ்விபத்து குறித்து, ஏதாபுரம் காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டு அந்நிலையத்தார் இவ்விபத்து தொடர்பாக குற்ற எண் 45/84, இ. த. ச. 279, 337, 338 மற்றும் 304ஏ பிரிவுகளில் வழக்கொன்று பதிவு செய்து, புலனாய்வில் ஈடுபட்டு உள்ளார்கள். விபத்தில் இறந்தவர்களின் சடலம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பார உந்தின் மூலம் ஏதாபுரம் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக, சேலத்தில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்தின் பயணிகளுக்கு தலா ரூபாய் 50-ம் மற்றும் இறந்த



1984 மார்ச் 22] [திரு. சு. முத்துசாமி]

பெண் பயணிக்கு ரூ. 250 (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) தற்காலிக உதவித் தொகையாக உடனடியாக வழங்கப் பட்டது.

[முற்பகல் 10-30]

இவ்விபத்திற்குப் பின் உடனடியாக செய்யப்பட்ட ஸ்தல ஆய்வின்படி தி. போ. க. பேருந்தின் முன் இடது சக்கரம் தார் சாலையின் இடது புற கோடியிலிருந்து 2'7'' தூரம் வலது புறமும் பின் இடது சக்கரம் 2' தூரம் வலது புறமும் தள்ளி நின்றுள்ளது. தனியார் பேருந்தின் இடது முன் சக்கரம் அதன் இடது புற தார் சாலையில் இருந்து 8'-யும் பின் இடது சக்கரம் 7'-யும் வலது புறமாக தள்ளி நின்றுள்ளது. இதிலிருந்து தனியார் பேருந்து அத்துமீறி வலதுபுறம் வந்து மோதியுள்ளது என்பது தெளிவா கின்றது. இந்த விபத்துக்கு தனியார் பேருந்து அதிக வேகத்தில் அத்துமீறி சாலையின் மையப் பகுதியை கடந்து வலது பக்கமாக வந்து மோதியதே காரணமாகும். இந்த விபத்தினால் தி. போ. க. பேருந்துக்கு ஏற்பட்ட சேதாரத்திற்கான நட்ட ஈட்டுத் தொகைக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்த குறிப்பிட்ட விபத்து தனியார் பேருந்து ஓட்டுநரின் கவனக் குறைவால் தான் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் இது போன்ற விபத்துக்கள் எதிர் காலத்தில் ஏற்படாமல் இருக்க தி. போ. கழகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது :

(அ) வேகக் கட்டுப்பாடு கருவிகள் பேருந்துகளில் பொருத் தப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகிறது.

(ஆ) விபத்துக்களைத் தடுப்பதற்காக விபத்தில்லா ஓட்டுனர் களுக்கு வருடா வருடம் பண வெகுமதி அளிக்கும் திட்டம் செவ்வனே செயல்பட்டு வருகிறது.

(இ) 40 வயதைக் கடந்த எல்லா ஓட்டுநர்களுக்கும் கண் பார்வைய மருத்துவ சோதனை மூலம் வருடா வருடம் அறிந்து தக்க நடவ்டிக்கை எடுக்கப்படுகிறது.

(ஈ) தி. போ. கழகம் மதுரை ஓட்டுனர் பயிற்சி பள்ளியில் 2 மாத கால அளவிற்கு விபத்தை தடுக்கும் முன்னேற்பாடு பற்றியும், நெடுந்தூர பயணத்தில் முறையாக பத்திரமாக பேருந்தை இயக்கவும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் விபத்துக்களை தவிர்ப்பது பற்றியும், விபத்துக்களில் ஏற்படும் விளைவுகள் பற்றியும் சேரன் போக்குவரத்து கழகத் தாரால் வெளியிடப்படுகின்ற ஏடுகள் எல்லா ஓட்டுநர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விபத்தினால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்ட நட்டம் பின்வருமாறு :—

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| (அ) | பேருந்துக்கு ஏற்பட்ட சேதாரம் | .. | 30,000 |
| (ஆ) | பேருந்தை சீராக்கி வழித்தடத்தில் விட குறைந்தது 15 நாட்கள் ஆகும். இந்த நாட்களில் பேருந்து ஓடாததினால் ஏற்பட்டுள்ள நட்டம். | | 30,000 |
| | மொத்த நட்ட தொகை | .. | 60,000 |

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து வந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவு பேருந்தும் தனியார் பேருந்தும் மோதிக் கொண்டதால் 4 பேர் இறந்தது பற்றியும் 32 பேர் காயமடைந்தது பற்றியும் நாம் அறிவோம். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதில் மற்ற விஷயங்களில் ரொம்ப திறமைசாலி, நியாயமாகவும் பதில் சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரை இப்போது பாராட்ட வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு அமைச்சரை பாராட்டக்கூடாதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு அமைச்சரை பாராட்டத் தேவையில்லை.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் ரொம்ப தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட விபத்து தனியார் பேருந்தின் டிரைவரின் கவனக் குறைவினால் தான் ஏற்பட்டது. இருப்பினும், இது போன்ற விபத்துக்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளது. வேகக் கட்டுப்பாடு கருவிகள் பொருத்துதல், ஊக்க போனஸ், 40 வயதைக் கடந்த எல்லா ஓட்டுநர்களுக்கும் கண் பரிசோதனை செய்தல் மற்றும் பயிற்சி அளித்தல் என்று நடவடிக்கைகள் எடுத்துள்ளதைப் பற்றிச் சொல்கிறார்கள். ஆனால் தனியாருடைய பேருந்து ஓட்டுநரால்தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நீங்கள் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறீர்கள். இந்த ஸ்டேட்மெண்டை இப்படி வைப்பதால் தனியார் உஷார் ஆகிவிடுவார்கள்





தனியாரிடத்தில் நஷ்ட ஈடு கோருகிறீர்கள். கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்று சொல்லி நம்முடைய டிரைவர்களுக்குச் செய்வதைப்பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். இதன் மூலம் தனியார் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்றால், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் இந்த விபத்து ஏற்பட்டு விட்டது என்று நினைத்துக் கொள்வார்கள். அப்படிப்பட்ட எண்ணத்தை உருவாக்கும் முறையில் இந்த மாதிரி அறிக்கை வந்திருப்பது முறை அல்ல. இது ஒன்று.

இரண்டாவதாக, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் முன் டயர் வெடித்ததால்தான் இது ஏற்பட்டது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. டயர் வெடிப்பதற்கு என்ன காரணம் என்றால், ஒன்று அது பழைய டயராக இருக்க வேண்டும் அல்லது காற்றை அதிகமாகப் பிடித்து இருக்க வேண்டும். இந்த இரண்டு காரணங்களால்தான டயர் வெடித்திருக்க வேண்டும். இதைச் செக்கப் செய்யாமல் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து எப்படி வெளியே வந்தது ? இது என்ன பல்லவன் டிரான்ஸ்போர்ட்டா ? திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்திலிருந்து வருவது நேரடியாக டெப்போவிலிருந்து வருவதாகும். அவ்வாறு டெப்போவிலிருந்து வரும் அந்தப் பேருந்துகளின் டயர்களை செக்கப் பண்ணாமல் அனுப்பினார்களா ? இது என்ன மெயின்டனென்ஸ் ? அட்மினிஸ்ட்ரேஷன் சரியாகவா நடக்கிறது ? இன்று காலையில்கூட ஒரு விபத்தைப் பற்றிப் பத்திரிக்கைகளில் பார்த்தேன். அது வருந்தத்தக்க ஒன்று. நெய்வேலியிலிருந்து வருகின்றபொழுது பல நண்பர்கள் மதுராந்தகத்திற்கு அருகில் ஏற்பட்ட விபத்தில் வேனில் வரும் பொழுது இறந்திருக்கின்றார்கள். இப்படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விபத்துக்கள் இன்கிரீஸ் ஆகிக் கொண்டு வருகிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்வதைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வியைக் கேட்டு முடிக்க வேண்டும். கேள்வியாகக் கேட்கத் தெரியவில்லை என்றால் விட்டு விடலாம்; அடுத்த உறுப்பினரைக் கேள்வி கேட்கச் சொல்லுகிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது விளக்கம் கேட்கும்பொழுது ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுவதைப் போல நேரேஷன் கொடுத்துப் போனால் என்ன செய்வது ? பெரிய அறிக்கையாகத் தான் வைக்கப்பட்டிருப்பதால் சுருக்கமாகக் கேள்வியைக் கேட்டு முடிக்க வேண்டும்.

[1984 மார்ச் 22

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, மருத்துவ
மனையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு 50 ரூபாயும், இறந்த
பெண் பயணிக்கு 250 ரூபாயும் வழங்கப்பட்டதாகச் சொல்
லப்படுகிறது. சில சமயங்களில் ஆக்சிடெண்ட் ஆன நேரத்தில்
பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 5,000 ரூபாய் கொடுத்து
இருக்கிறீர்கள். ஆகவே, அந்த முறையில் பாதிக்கப்பட்ட
குடும்பத்திற்கு 5,000 ரூபாய் வழங்க அரசு ஆவன செய்யுமா
என்று அறிய விரும்புகிறேன். மேலும், இம்மாதிரி விபத்
துக்களைத் தவிர்ப்பதற்கு எக்ஸ்பர்ட் கமிட்டி அல்லது ப்ளையிங்
ஸ்குவாட் போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட
முதல் கேள்வி, அறிக்கையிலே, தனியார் துறையின் பேருந்து
ஓட்டுநரால்தான் இந்த விபத்து நடந்து இருக்கிறது என்று சொல்லி
விட்டு, பின்பு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த
ஓட்டுநர்களுக்குப் பயிற்சி ஏன் என்று கேட்டார்கள். இதில்
குறிப்பாகவே நாங்கள் சொல்லிவிட்டோம், தனியார் ஓட்டுநர்
தான் இதற்கு முழுக் காரணம் ஆக இருக்க முடியும் என்று
சொல்லியிருக்கிறோம். எனவே, இதிலிருந்து அவர்கள் தப்
பித்துக் கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்று சொல்வதற்கு
வாய்ப்பு இல்லை.

ஏன், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த
ஓட்டுநர்களுக்குப் பயிற்சி என்று கேட்டார்கள். ஒவ்வொரு
விபத்தும் நடக்கின்றபொழுது, எந்த முறையிலே, எப்படி
நடக்கிறது என்று பார்த்து, அதை எப்படித் தடுக்க முடியும்
என்று ஆய்வு செய்து, அதற்கேற்ப ஓட்டுநர்களுக்குப் பயிற்சி
கொடுக்கிறோம். தனியார் ஓட்டுநர்கள் செய்தாலும், அப்
படிப்பட்ட விபத்துக்கள் நம் போக்குவரத்துக் கழகத்தில்
எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க இந்தப் பயிற்சியைக்
கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறோமே தவிர,
ஏதோ இதை ஒப்புக் கொள்வதற்காக இல்லை என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். விபத்து ஏற்பட்ட இரண்டு பேருந்து
களும் தனியார் பேருந்துகளாக இருந்தாலும்கூட அவை மோதிக்
கொண்டால் அந்த விபத்து எப்படி நடந்தது என்பதைப் பற்றி
விளக்கி இந்தத் தொழிலாளர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதன்
மூலம் அந்த விபத்துக்களை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு
வாய்ப்பு உண்டு என்பதால் அப்படிச் செய்திருக்கிறோம்.

இன்னொன்றை கேட்டார்கள். டயர் வெடித்து ஏதோ
நடந்து விட்டது என்ற அப்படிப்பட்ட தகவல் இல்லை. அப்
படிப்பட்ட சூழ்நிலையும் இல்லை. மேலும் அதிகமாகக் காற்று
பிடித்ததால்தான் இந்த விபத்து நடந்திருப்பதாக நீங்கள் நினைப்
பது தவறான கருத்து. அது ஒரு பேருந்து மோதியதால்தான்
நடந்திருக்கிறது.





மூன்றாவதாக, ஐயாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டு
மென்ற கோரிக்கையை வைத்தார்கள். சட்டப்படி என்ன
கொடுக்க வேண்டும் என்பதற்கான வழிவகைகளை நாம்
எல்லோரும் சேர்ந்து செய்து வைத்திருக்கிறோமோ அதை
எல்லாம் செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : இந்த விபத்து 10 ஆம் தேதி
நடைபெற்று இருக்கின்றது. அதற்குப் பிறகு கோவில்பட்டியில்
ஒரு விபத்து ஏற்பட்டிருக்கின்றது. நேற்றைய தினம், நெய்
வேலியிலிருந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைச்
சந்திப்பதற்காக வந்த அண்ணா தொழிற்சங்கத் தலைவர்கள்
விபத்திலே இறந்து இருக்கிறார்கள். தினசரி இந்தமாதிரி விபத்
துக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு ஆண்டிற்குள்
குறைந்தது 10 ஆயிரம் பேர் இம்மாதிரி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் சவன ஈர்ப்புத்
தீர்மானம் ஒரு விபத்து பற்றியது. எனவே நீங்கள் தமிழ்
நாட்டில் நடந்த எல்லா விபத்துக்களைப் பற்றியும் சொல்லிக்
கொண்டிருந்தால் நேரம் போதாது: சுருக்கமாகச் கேளுங்கள்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, விபத்து
ஏற்படாமல் பாதுகாப்பதற்காக அமைச்சர் அவர்களும் சில
யோசனைகளைச் சொல்லி இருக்கிறார்கள். வேகக்கட்டுப்
பாடு கருவிகள் வைத்தல், ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளித்தல்
ஆகியவை பற்றி எல்லாம் சொல்லி இருக்கிறார்கள். இந்த
மாதிரி விபத்துக்கள் நடக்கின்றபோது வழக்குப் பதிவு
செய்து நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் நடந்துள்ள
விபத்துக்கள் அனைத்தும் எவ்வாறு ஏற்பட்டது, என்ன
காரணங்களால் ஏற்பட்டது என்பதைப் பற்றி எல்லாம் ஒரு
ஆய்வு நடத்துகின்ற வகையில் ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டியை
நியமித்து விபத்துக்கான காரணங்களை அறிந்து அவற்றைத்
தடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அந்த வகையிலே ஒரு எக்ஸ்
பர்ட் கமிட்டி நியமித்து அவர்கள் ஆய்வு நடவடிக்கை எடுக்கின்ற
வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

விபத்தில் இறந்தவர்களுக்கு கொடுக்கின்ற ஆயிரம் ரூபாய்
முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுக்கப்படுகின்றது என்று நான்
கருதுகிறேன். விபத்திலே இறந்தவர்களுக்கு குறைந்தது 10
ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?
இதை நான் இன்ஸூரன்ஸ் சம்பந்தப்படாத வகையில் கேட்கி
றேன். ஏனென்றால் பல இடங்களில் இன்ஸூரனஸ் மூலமாகத்
தொகை கொடுக்கப்படுவது கிடையாது. இரயில் விபத்து போன்ற
வற்றில் இறப்பவர்களுக்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட தொகை
வழங்கப்படுகின்றது. ஆகவே இம்மாதிரியாக பேருந்துகளிலும்,
லாரிகளிலும் விபத்துக்கள் ஏற்பட்டு இறப்பவர்களுக்கு 10 ஆயிரம்
ரூபாய் நஷ்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1984 மார்ச் 22

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இங்கே மற்ற விபத்துக்களைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அதைப் பற்றி ஆய்வு செய்யவேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட ஆய்வுகளை ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் தனியாகச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். விபத்து எவ்வாறு நடந்தது, அதை எப்படி தவிர்க்க முடியும் என்ற முறைகள் எல்லாம் ஓட்டுநர்களுக்குச் சொல்லித் தரப்படுகின்றது. அப்படிப்பட்ட முறைகளை வழக்கமாக நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். தனிப்பட்ட முறைகளில் நடக்கின்ற விபத்துக்களைப் பற்றிக்கூட ஆய்வு செய்து இன்னின்ன முறைகளில் நடந்துகொண்டால் அப்படிப்பட்ட விபத்துக்களையும் தவிர்க்க முடியும் என்ற வகைகளிலே சொல்லித்தரப்படுகிறது.

அடுத்து அதிகமான தொகை கொடுப்பது பற்றிக் கேட்டார்கள். என்ன தொகை கொடுக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதோ அதைத்தான் கொடுக்க வேண்டி இருக்கின்றது. ஒருவேளை எதிர்காலத்தில் அவ்வாறு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் நாம் எல்லாம் சேர்த்து ஏதாவது ஒரு முடிவை எடுத்தால் வாய்ப்பாக இருக்கும்.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் ' இருப்பினும் இதுபோன்ற விபத்துக்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது ' என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் இவை எல்லாம் ஏற்கெனவே போக்குவரத்துக் கழகங்களில் இருக்கக்கூடிய நடைமுறைகள் தான். அதாவது வேகக்கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்தப் பட்டிருப்பது என்பதெல்லாம் ஏற்கனவே இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் இந்த மாதிரி விபத்து தொடர்ந்து நடக்கின்றது. குறிப்பாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே இம்மாதிரி நடப்பதற்குக் காரணம் ரீபட்டன் டையரைப் போடுகிறார்கள். தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வரக்கூடிய போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இவ்வாறு ரீபட்டன் டயர் போடப்பட்டிருக்கின்றது. இதைத் தடுக்க..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரீபட்டன் டையர் போடுவது ஒன்றும் பெரிய தப்பு இல்லை.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, 460 கிலோ மீட்டர் வரக்கூடிய வெகுதூர பேருந்துகளில் இப்படி ரீபட்டன் டயர் போடுவது சரிதானா ? மேலும் தனியார் பேருந்துகள் எக்கச்சக்கமான வண்ண விளக்குகளுடன் இரவு நேரங்களில் எமன் போல வருகின்றன. ஆகவே பேருந்துகளில் பயணம் செய்கின்ற நாங்கள் எல்லாம் உயிரோடு திரும்புவோமா என்ற சந்தேகம் வருகின்றது. எனவே இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுக்க துரிதமான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?



1984 மார்ச்2 2]

(முற்பகல் 10–40.)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்கள் ஏற்கனவே நான் சொன்னேன். அதிலே ரீபில்ட் டயர் போடப்படவில்லை. அதிலே ஒரிஜினல் டயர்தான் போடப்பட்டு இருந்தது. அது அதிக தூரம் போக வேண்டுமென்ற காரணத்தால், அந்தப் பேருந்துகளிலே நல்ல டயர்கள்தான் போட்டு ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். விபத்து அதன் காரணமாக நடக்கவே இல்லை. வேறு ஒரு பேருந்து வந்து இடித்ததன் காரணமாக அது நடந்திருக்கிறது.

இங்கே இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள். வண்ண விளக்குகளை போட்டுக்கொண்டு தனியார் பேருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். நாம் விளக்குகளிலே இப்படிப்பட்ட அமைப்போடுதான் இருக்க வேண்டுமென்ற ஒரு வரையறையை வைத்திருக்கிறோம். எனவே அதற்கு மேலே விளக்குகள் இருக்குமானால் அதிலே நடவடிக்கை எடுப்பதற்கு நம்முடைய போக்குவரத்துத் துறையிலே இருக்கக் கூடியவர்கள் நிச்சயமாக ஏற்பாடு செய்வார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையில்லாத பயத்தை மனதிலே வைத்துக்கொள்ளக் கூடாது என்று தெரிவிக்கிறேன். நாம் எல்லாம் மிகத் தைரியமாக இருந்து இந்த நாட்டு மக்களுக்குப் பணியாற்ற வேண்டியவர்கள். எனவே, இப்படி பயந்து கொண்டு இருக்கக் கூடாது என்பதை என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாக நான் அவர்களுக்கு வைக்க விரும்புகிறேன். (சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1984–85 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். இன்று ' எடுத்துக் கொள்ளப்படும் கோரிக்கைகள்—பழங்குடியினர், ஆதி திராவிடர் ஆகியோர் நலன் மற்றும் எழுதுபொருள்-அச்சுத் துறை. இவற்றில் பேச 17 பேர்களுக்கு மேல் பெயர்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது மணி 10–40 ஆகிறது. ஆகவே, 2½ மணி வரையில் இருந்து முடித்து விடலாமா, அல்லது மாலை 4–00 மணிக்குமேல் வைத்துக் கொள்ளலாமா ?

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நல்லெண்ணத்தோடுதான் இதைக் கேட்கிறீர்கள். அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. இந்த ஆதி திராவிடர்—பழங்குடியினர் மக்களுடைய சப்ஜெக்ட் வரும்போது, ஏனைய உறுப்பினர்களும், தலைவர்களாக இருப்பவர்களும் பேசினால், அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், நாட்டு மக்களுக்காக ஒரு தேசிய பிரச்சினையாக இதை மட்டும் எடுத்துச் சொல்ல முடியும் இரண்டாவது, ஒரு நாள், கொடுப்பது நல்லதல்ல. குறைந்த பட்சம், இரண்டு நாளாவது கொடுக்க வேண்டும்.

[திரு. எல். இளையபெருமாள்] [1984 மார்ச் 22

இதை தேசிய பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டும். மூன்றாவது, மாலையில் எடுத்துக்கொள்ள நாம் தவறுவோமானால் இந்த விஷயத்தில் நாம் அக்கறையற்றவர்கள் என்ற ஒரு கெட்ட பெயர் வரும். அது வராமல் இருக்க தாங்கள் காபந்து செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் சபையை மாலையிலும் வைத்துக்கொள்ளலாம் பேரவை 1-30 மணிக்கு முடிவுற்று மாலை 4-00 மணிக்கு மீண்டும்கூடும். பேச விரும்பும் உறுப்பினர்கள் அனைவரும் பேசிவிடலாம்.

## 6. வரவு—செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 48,03,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் அரசினர் கலைக் கல்லூரியில் அரசு மாணவர் இல்லம் தொடங்கக் கோருவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 48,03,21,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்குத் தற்பொழுது தங்கி படிக்கும் விடுதியில் அளிக்கப்படும் படிச் செலவு குறைவாக உள்ளதால் அவைகளை உயர்த்தித்தர நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 48,03,21,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



1984 மார்ச் 22]

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, ஆதி திராவிடர் வகுப்பு மாணவர்களுக்குப் பள்ளி மற்றும் கல்லூரி ஆகியவற்றில் வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 48,03,21,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

திரு. மு. அப்பாதுரை: பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியிலுள்ள கடம்பூர், சொல்லங்கிணறு, கழுனாமலை ஆகிய இடங்களில் அரசு மாணவர் இல்லம் கட்டப்பட வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 48,03,21,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 44—எழுது பொருள்-அச்சுத் துறை

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 44—எழுது பொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,16,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

Thiru N. S. V. CHITHAN: Sir,

To discuss policy, I move—

"that the allotment of Rs. 15,16,30,000 under Demand No. 44—Stationery and Printing be reduced by Rs. 100".

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அச்சுத்துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அவ்வப்போது அவர்களது கண்களைப் பரிசோதனை செய்து தக்க பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 44-எழுது பொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,16,30,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தவைலர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் ** புத்தக வடிவிலே அச்சிடப்பட்டு அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிற கருத்துக்களை இந்த அவையிலே நான் ஆற்றிய உரையாக எடுத்துக் கொண்டு மாண்புமகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இந்த அவையிலே எடுத்துச் சொன்னதற்குப் , பின்னால் எனனுடைய பதிலுரையைத் தருகிறேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

***திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்து இருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கோரிக்கை பற்றி சொல்கிற போது இது 1932 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏரவாடா சிறையில் அண்ணல் காந்தியடிகள் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயன் என்பதை யாரும் மறுக்க முடியாது. 1920 ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கார் அவர்கள் மாணவ பருவத்திலே இருக்கிற போது தானே அனுபவித்த கஷ்டங்களை உணர்ந்து இந்திய நாட்டிலே இந்து சமுதாயத்தின் பேரிலே இழைக்கப்படுகிற அவதிகளைப் போக்க இந்த நாடு சுதந்திர வேட்கை பெறுகிற காலத்தில் தன் வாழ்நாள் முழுவதையும் அதற்கே தியாகம் செய்த காரியத்தையும் யாரும் மறக்க முடியாது. இந்த நாடு அன்னியர் ஆட்சியிலே இருந்த போது 1928 ஆம் ஆண்டு அன்றைய வைஸ்ராய் கவுன்சிலில் உறுப்பினராக இருந்த போது அவர்கள் சொன்னார்கள். '' அம்பேத்கார் அவர்களை இன்னமும் நாடு புரிந்துகொள்ள முடியாத அவலநிலைமை இருக்கிறது '' என்று சொன்னார்கள். இந்த நாட்டிற்கு சுதந்திரம் வந்தால் தான், இந்த நாடு இந்த நாட்டு மக்களால் ஆளப்பட்டால் தான், இந்த நாட்டின் அரசியல் அதிகாரம் இந்த நாட்டு மக்கள் கையிலே வந்தால் தான் எங்களுக்கு விமோசனம் உண்டு என்று சொன்னார்கள்.

அப்போது வைஸ்ராய் கவுன்சிலில் Mr. Ambedkar, you are a nominated member by the Briti n Gove nment. என்று சொன்னார்கள். அப்போது அண்ணல் அம்பேத்கார் அவர்கள் yes, I know I am : nominated member. But I am an Indian first and then a m mber என்று சொன்னார்கள்.

---

**734—790ம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.





அந்த உத்தமர் சொன்ன வார்த்தைகளை இப்போது ஏன் சொல்கிறேன் என்றால் 1928 ஆம் ஆண்டு தொடங்கி 1932 ஆம் ஆண்டு பூனாவில் ஒப்பந்தம் ஏற்பட்டு, இந்தச் சலுகைகளை உத்தமர் காந்தியடிகளும், பண்டித ஜவஹர்லால் நேருவும், இந்திய சமுதாயத்தின் பெயரால் மதன்மோகன் மாளவியா போன்ற பெரியோர்கள் அன்றைக்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பெயரால் தான் இன்றைக்கு இந்த கோரிக்கை மீது நாம் பேச வசதி, வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இன்னும் பச்சையாக சொல்ல வேண்டுமென்றால் கிராமத்தில் பிறந்த இளையபெருமாள் இன்றைக்கு நகரத்தில் உறுப்பினராக நின்று வெற்றி பெற்றேன் என்றால், உத்தமர் காந்தி அவர்களும், அன்றைய போராட்டத்தில் தலைமை தாங்கிய அண்ணல் அம்பேத்கார் அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயன்தான் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அறிக்கைகளை வருடா வருடம் கொடுப்பதும், நாங்கள் ஏதோ பேசுவதும், அதற்கு அமைச்சர் ஏதோ பதில் சொல்வதும், இதை ஏதோ வியாபாரத்தைச் செய்வதைப் போல இருக்கக் கூடாது. உண்மையில் காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் செய்த காரியங்களுக்கு என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர வேண்டும். இதை உணர்த்துவதற்கு தான் உங்களுக்கு இதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1932 ஆம் ஆண்டு வந்த எரவாடா ஒப்பந்தத்திலே அரசியல் வாதிகளுக்கு கிடைக்கிற இந்த எம்.எல்.ஏ., எம்.பி. பதவிகளுக்குத் தான் சாசனம் வரையறுக்கப்பட்டதே தவிர; பின் தங்கியவர்களான தீண்டாமை கொடுமையால் இருந்த இன்னல் மனித குலத்திலே இவர்கள் மனிதர்களாக மதிக்கப்படாத ஒரு காட்டுமிராண்டிப் போக்கு இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய கல்விக்கோ, உத்தியோகத்திற்கோ, உத்தியோக உயர்விற்கோ சாலக்கெடு வைக்கவில்லை. அரசியல்வாதிகளும் இதைப் புரிந்துக் கொள்ளாமல் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு கவர்னராக இருக்கிறவர் கூட—நான் இதை வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது— இவர்களுக்கு உத்தியோகம் கொடுத்ததால் தான் இன்றைக்கு நிர்வாகத்திலே திறமைக் குறைவு வந்து விட்டது என்று கேவலமாக, காட்டுமிராண்டித்தனமாக, மனிதாபிமானமற்ற முறையில் வார்த்தைகளைச் சொல்லியிருக்கிற நிலை இருக்கிறது. படித்துப் பட்டம் பெற்ற டைரக்டர்களும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், ஏன் அரசியல்வாதிகளும் கூட மனித இரக்கம் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். இந்திய தேசத்தில் அன்றைய மக்களில் ஐந்தில் ஒரு பகுதியாக இருந்தவர்கள் அவர்கள். அன்றைய மக்கள் தொகை 30 கோடி. இன்றைக்கு மக்கள் தொகை கிட்டத்தட்ட 65 கோடிக்கு மேலே வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட மக்களுக்கு கொடுப்பதை ஏதோ பிச்சை கொடுப்பதாக நினைக்கிறார்கள். அவர்களுக்கு கொடுப்பதை ஏதோ வக்கற்றவர்களுக்கு, திக்கற்றவர்களுக்கு, நாடற்றவர்களுக்கு கொடுப்பதாக அரசியல்வாதிகள் நினைப்பது மிக பாதகமான எண்ணமாக இருக்கிறது.

[திரு. எல். இளையபெருமாள்] [1984 மார்ச் 22

(முற்பகல் 10-50)

ஆனால் நல்லவர்கள் இல்லை என்று சொல்லவில்லை. நல்ல
வர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். சட்டத்தை நிறை
வேற்றி நாம் அதிகாரிகள் கையில் கொடுக்கிறோம். அப்படி
ஒப்படைக்கின்ற நேரத்தில் அதை சில அதிகாரிகள் ஒழுங்காகச்
செயல்படுத்துகிறார்கள்: ஒரு சில அதிகாரிகள் அதை ஒழுங்
காகச் செயல்படுத்துவது இல்லை. இது பற்றி அமைச்சர்
அவர்களிடத்தில் கூட நான் பல முறை எடுத்துச் சொல்லி
இருக்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது எந்த
விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதை எதற்காகச்
சொல்கிறேன் என்றால், தேசத் தலைவர்கள் நல்ல எண்ணத்
தோடு இதைச் செய்தார்கள். இந்த நாடு பல்வேறு வகைகளில்
கூறுபட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சொன்னார்கள். ஆனால்
இன்றைக்கு ஏற்பட்டு இருக்கும் நிலைமைகளின் காரணமாக பல்
வேறு காட்டுமிராண்டித்தனமான எண்ணங்கள் எழுந்து இருக்
கின்றன. அவைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இல்லை
என்றால் விபரீத விளைவுகள் ஏற்படும்.

நான் பிரிவினையை விரும்புகிறவன் அல்ல, அதை ஆதரிப்
பவனும் அல்ல. அந்த உணர்வைக் கொண்டவனும் இல்லை.
இருப்பினும், இந்தியா இந்த நிலைமையில் போய்க்கொண்டு இருந்
தால் 15 கூறுகளாகப் பிரிக்கப்பட வேண்டிய நிலைமை வந்து
விடும். அதை நான் வரவேற்கவில்லை. அப்படிப்பட்ட நிலை
மைகள் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் தேசத் தலைவர்
கள் அன்றைக்கு அரசியல் சட்டத்திலேயே பாதுகாப்புக் கொடுத்
தார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நேற்று ஐ.சி.எப். லே என்ன நடந்தது என்று சொன்
னால், — நான் அரசியல் கட்சியின் பெயரைச் சொல்ல விரும்ப
வில்லை. அமைச்சர் அவர்கள் விசாரித்துத் தெரிந்துகொள்ளட்
டும், நான் அரசாங்கத்திற்கு எழுதிக் கொடுத்து இருக்கிறேன்,
முதலமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்து இருக்கிறேன்
ஒரு பட்டதாரி, சூப்பிரண்டெண்டாக, வேலை செய்கிறவர்,
தன்னால் ஒரு அரசியல் கட்சியில் சேர முடியாது என்று
சொல்கிறார், ஏதோ வார்த்தைகள் வருகிறது, உடனே அவரை
அலுவலகத்திலேயே சட்டையைக் கிழித்து, பனியனைக் கிழித்து
இழுத்து அடித்து இருக்கிறார்கள். போலீசில் புகார் கொடுக்கப்
பட்டு இருக்கிறது. இந்த நிலைமை எங்கே ஏற்பட்டது என்று
சொன்னால், ஐ.சி.எப். ரயில்வே அலுவலகத்தில் நடந்து இருக்
கிறது. இத்தகைய ஒரு காட்டுமிராண்டித்தனம் இன்றைக்கு
தமிழ் நாட்டில் நடந்து இருக்கிறது. பெரியார் அவர்கள்,
அண்ணா அவர்கள் வழியில் வந்த நண்பர்கள் இப்படி செய்து
இருக்கிறார்கள். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு
நகரத்தில் படித்த பட்டதாரிக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு



1984 மார்ச் 22] [திரு. எல். இளையபெருமாள்]

இருக்கிறது என்று சொன்னால், கிராமப் புறத்தில் எந்தவிதமான
கல்வித் தகுதியும் இல்லாமல் இருக்கும் ஏழைக்கு என்ன நிலைமை
ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்
பட்ட நிலைமைகள் எல்லாம் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்
தான் 3,000 ஆண்டுகளாக அடிமைப்பட்டு வஞ்சிக்கப்பட்ட
ஏமாற்றப்பட்ட இவர்களுக்கு நாம் ஏதாவது வகை செய்ய
வேண்டும், அப்ப்டி செய்யத் தவறினால் இந்த நாட்டிலே அந்த
சமூகம் தலை எடுக்கவே முடியாது, அதனால் ஒரு கலவரம்
ஏற்படலாம். அதன் காரணமாக இந்த நாடு கூறு போடப்படும்
ஒரு நிலை வரும். ஆகவே அதற்கு நாம் இடம் கொடுக்கக்
கூடாது என்று அரசியல் சட்டத்திலேயே வகை செய்தார்கள்.
ஆனால், அரசாங்கம், எவ்வளவுதான் சட்டங்களைப் போட்டா
லும், நிர்வாகத்தில் இருக்கிற அதிகாரிகள் அதை நடைமுறைப்
படுத்துவதில்லை. இன்றைக்கு எவ்வளவோ இளைஞர்கள் தலை
எடுத்து விட்டார்கள். இன்னும் வருகின்ற ஆண்டுகளில் அவர்கள்
நல்ல முறையில் வருவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடிய நேரத்தில்
தேசத்திற்கு விடுதலை வந்தால் போதும் என்று எண்ணப்பட்டது.
இருந்தாலும் அரசியல் சட்டம் இயற்றப்படுகிற போது அம்பேத்
கார் அவர்கள் இந்தச் சமுதாய மக்களுக்கு அரசியல் சட்டத்திலே
பாதுகாப்புக் கொடுத்தால் தான் அவர்களின் நிலை ஒழுங்காக
இருக்கும் என்று சொன்னார்கள். தேசிய விடுதலைக்கு முன்
னாலே வைஸ்ராய் ஆட்சி இருந்தபோது அம்பேத்கார் அவர்களை
தனியாக அழைத்துக் கேட்டார்கள். ''நீங்கள் இவர்களைப்
பற்றி ஏன் தனியாகப் பேசக் கூடாது'' என்று கேட்டார்கள்.
அம்பேத்கார் சொன்னார், சமுதாய மக்களை ஒன்று திரட்டி
இந்த ஜாதிப் பிரச்னை ஒழிக்கப்பட வேண்டுமென்று சொன்னால்
அது அரசியல் சட்டத்திலே வைத்தால் தான் சரியாகி வரும்.
மற்ற வகையில் வரும் என்று நான் நம்பிக்கை கொள்ளவில்லை
என்று அவர் சொன்னார். இன்றைக்கு ஜாதி நம்பிக்கை இல்லை
என்று சொன்னாலும் ஒரிசாவிலும், பீகாரிலும் இருக்கிற வேதம்
படித்த சங்கராச்சாரியார்கள் இந்து மதத்திலே நம்பிக்கை
உடையவர்கள் தீண்டாமை என்பது இருக்க வேண்டும் என்று
சொல்கிறார்கள். அரசியல் சட்டத்திலே தீண்டாமை ஒழிக்கப்
பட்டது என்று சொல்லிய பிறகும் இப்படி சங்கராச்சாரியார்கள்
சொல்கிறார்கள் என்றால் சட்டம் அவர்களைப் பார்த்து
என்ன செய்தது? ஆகவே நான் கேட்டுக் கொள்கிறேன், இந்த
நிலை நீடித்தால் நாட்டிலே ஒரு பெரிய கலவரம் வரக்கூடும்—
அது வரவேண்டுமென்று நான் விரும்பவில்லை—அப்படிப்பட்ட
நிலைமைகள் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் தமிழகத்
திலே அண்ணா, பெரியார் போன்றவர்களும், எல்லோருக்கும் முன்
மாதிரியாக இருக்கின்ற வகையில் இராஜாஜி அவர்களும் நடந்து
காட்டினார்கள். உத்தமர் காமராஜ் அவர்கள் வாழ்ந்து காட்டி
னார்கள். ஆனால், அப்படிப்பட்ட தமிழகத்தில், ஐ.சி.எப்.லே
கொடுமை நடந்திருக்கிறது, நம்முடைய முதலமைச்சர்

அவர்கள் நல்ல இதயம் படைத்தவர். அவர்களுடைய தலைமையின் கீழ் செயல்படுகிற இந்தத் துறை அமைச்சர் அவர்கள் அவரை சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். அன்றைக்குக் கலைஞர் அவர்கள் கூட நல்ல எண்ணத்தோடு 16 சதவீதம் என்று இருந்ததை 18 சதவீதம் என்று ஆக்கினார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 1980உடன் முடிவடைகிற அரசியல் சட்டத்திலே அனுமதிக்கப்பட்டிருந்த பாதுகாப்பை பல்வேறு கட்சிகளை அழைத்து அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று பாராளுமன்றத்திலே இன்னும் 10 ஆண்டு காலத்திற்கு இந்த மக்களுக்கு அந்தச் சலுகைகள் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்கிற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி, உறுதியளிக்கிற வகையில் ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் கூட அரசியல்வாதிகள் பேசாதவர்கள், ஒன்றையும் கேட்கமாட்டோம் என்கிறார்கள். தங்கள் வாயைப் பொத்திக்கொண்டு இருப்பவர்கள், பதவியில் இருந்தால் போதும் என்ற ஒரு கேவலமான நிலையில்லை என்று இந்த நாட்டில் இருப்பவர்களை இல்லை என்று எந்த அரசியல் வாதியும் மறைத்துக் கொள்ள முடியாது. எத்தனை நாளைக்கு இப்படி செய்யப் போகிறீர்கள்? இப்படி செய்தால் தீண்டாமை ஒழியுமா ? சீர்திருத்தம் வருமா ? அவர்கள் விஞ்ஞான ரீதியில் முன்னேறுவார்களா ? இந்தச் சமுதாயம் எப்படி முன்னேற முடியும் ? இளையபெருமாள் அடுத்த தடவை நின்றால் ஓட்டு கிடைக்காது என்ற பயம் வந்துவிட்டால் நான் உடனே வாயைப் பொத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படிப் பொத்திக் கொள்கின்ற நிலைமைக்கு குற்றவாளி யார்? என்று சொல்கிறார்கள். என் அவர்கள் தைரியமாக இருக்கலாமே என்று கூட சொல்கிறார்கள். அவர்களுக்கு தைரியம் இருக்கிறது. அவர்களுடைய தலைவருக்குத்தான் தைரியம் இல்லை. அவர்கள் வைத்திருக்கிற கட்சிக்காரர்களுக்குந்தான் தைரியம் இல்லை. அவர்கள் மனசாட்சியை விற்றிருக்கிறார்கள் எப்படியாவது நாட்டை ஆளவேண்டும், எப்படியாவது சுகமாக சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிலைமை இருப்பதால் இந்த நல்ல நேரத்திலே இதை உங்களுககு நினைவு படுத்துவதற்காகச் சொல்கிறேன். இப்போது வந்திருக்கிற இளைஞர்களுக்குக் கூட இந்த உண்மை புரிய வேண்டும் என்பதற்காகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ பதவி கிடைத்துவிட்டது என்பதற்காக, தொடர்ந்து பதவி கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இப்படிச் செய்யக்கூடாது என்று நான் உங்களுக்கு புத்தி சொல்லவில்லை ; நினைவு படுத்திக் கொள்கிறேன்.

இல்லாவிட்டால் இங்கே ஐ. ஐ. டி. யில் இருக்கிற ஒரு பெரிய டைரக்டர் ஜனாதிபதி அவர்களை வைத்துக் கொண்டு இந்தச் சமுதாய மக்களைச் சேர்த்துவிட்டதால்தான் திறமை குறைந்துவிட்டது என்று சொன்னால் இந்த நாட்டிலே சட்டம் இருந்து என்ன பயன் ? மேலும் அவர்களுக்கு சப்போர்ட்டாக இந்தியன் எக்ஸ்பிரஸில் எடுத்துச் சொன்னார்கள். நான் திறமை குறைந்தவர்களை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் இப்படிச் சொல்வது சரிதானா ? அப்படியானால் டாக்டர் அம்பேத்கார் சொன்னது தவறா ? உத்தமர் காந்தி சொன்னது தவறா? இதை சமாதானம் பண்ணிவைத்த புண்ணியவான் இராஜகோபாலாச்சாரி செய்தது தவறா? இல்லாவிட்டால் அன்றைக்கு நாடு கூறாயிருக்கும். நாடு கூறாகியிருந்தால், அப்படி கூறு போட்ட பாகிஸ்தான் கதி என்ன ? மொழி வெறியாக, மத வெறியாக அல்லது இந்துக்களிடம் கொண்ட கோபத்தின் காரணமாக பிரித்தார்கள். அவர்கள் கதி என்ன ? கிழக்கும் மேற்கும் மீண்டும் பிரியும் என்று அவர்களுக்குத் தெரியாது. ஆக, என்றோ ஒரு நாள், மனித குலத்திற்கு இருக்கிற உண்மையான குறைகள் தீர்க்கப்படவில்லை என்றால் மனித சமுதாயம் என்றைக்கோ ஒருநாள் புரட்சியைத் தொடங்கும். நாட்டைக் கூறுபோடுவதற்கு அஞ்சாது. அதற்காக என்ன தியாகத்தையும் செய்ய துணிந்துவிடும் மனித கூட்டம். அந்த நிலைமை வரக்கூடாது என்பதற்காகத்தான் அன்றைக்குச் செய்தார்கள். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் நான் இதை உங்களுக்கு நினைவு படுத்துவதற்காகச் சொன்னேன்.





இங்கே நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு நல்ல தலைமையில் இருந்தும் காரியம் செய்யவில்லையே என்று எனக்கு வருத்தம். அவர்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. நான் எனக்கு இருக்கிற கஷ்டத்தைச் சொல்லித்தான் தீரவேண்டும். இந்த அரசு வந்த பிறகு ஆதிதிராவிட மக்களுக்கு பஞ்சாயத்துப் போர்டு, பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிட்டி, இவைகளுக்கு எல்லாம் இட ஒதுக்கீடு செய்தது வரவேற்கத் தக்கது. அம்பேத்கார் என்ன சொன்னாரோ அந்த முறையில் செய்வதற்கு முன்வந்தது வரவேற்கத்தக்கது, வரவேற்க கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் அது கிடைக்காமல் இருப்பதற்கு என்னென்ன செய்தார்கள் ? அதைச் செய்தது எந்த அரசியல் கட்சி என்று அல்ல ; எங்கள் கட்சி, உங்கள் கட்சி என்று சொல்ல மாட்டேன். மனித உள்ளம் இல்லாமல் கோர்ட்டுக்குச் செல்லுகின்ற நிலைமை வந்துவிட்டது. ஆகவேதான் இந்த நாட்டு அரசியல்வாதிகளின் பிரதிநிதியாக இருக்கிற நீங்கள் கட்டாயம் உணர வேண்டியது அவசியம். இப்படிச் செய்துகொண்டே போனால் அவர்களுக்கு இருக்கிற நம்பிக்கைக் குறையும். அவர்கள் இனிமேல் முன்னுக்கு வரமுடியாது, ஆகவே நாம் ஏதாவது ஒரு வழியை கண்டுபிடிக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அதற்கு அரசியல்வாதிகள் அல்லது சந்தர்ப்பவாதிகள் இடம் கொடுக்கக் கூடாது. பொது மக்களைத் தூண்டிவிட்டு தர்மபுரியில் சிக்கிக் கொண்டு செத்ததைப் போல பல மாவட்டங்களில் சிக்கிக்கொண்டு சாகக்கூடிய நிலைமை வரும். அந்த அளவுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வீடு கட்டும் திட்டத்தில் எழுதியிருக்கிறீர்கள். ஒரே வீடு கட்டும் திட்டத்தில் மூன்று பேர்களும் சொல்கிறீர்கள். போன சட்டமன்றக் கூட்டத்தில் கூட நான் சொன்னேன். பங்க்

சிஸ்டம் அருந்ததி மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. காதி அண்ட் வில்லேஜ் இன்டஸ்டிரிஸ் டிபார்ட்மென்டில் அதை நாங்கள் கொடுத்தோம் என்கிறார்கள். ஆதி திராவிட நலத்துறையிலிருந்து நாங்கள் கொடுத்தோம் என்கிறார்கள். இரண்டையும் கூட்டிப் பார்த்தால் நூறு வருகிறது. இவர்களும் 100 என்கிறார்கள், அவர்களும் 100 என்கிறார்கள். அப்புறம் விளக்கம் சொல்லும்போது கேட்டால் அவர்கள் மூலம் கொடுத்தார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் யாராவது ஒருவர் எழுதினால் என்ன? ஏன் இரண்டு பேரும் எழுத வேண்டும்? இப்படி இரண்டு பேரும் எழுதினால் கணக்கு தவறாகப் போகாதா?

அதைப் போன்றுதான் 1982—83-ஆம் ஆண்டில் டி. வி. கொடுத்ததை 1984—85-ஆம் ஆண்டில் எழுதியிருக்கிறார்கள். இந்த வருஷம் என்ன கொடுத்தோம் என்று எழுதினால் நன்றாக இருக்கும். அங்கே இருக்கிற அதிகாரிகள் சீக்கிரம் அவசரம் அவசரமாக எழுதி ஒரு ரிப்போர்ட் தயார் பண்ணி கொடுத்துவிட்டால் இதையெல்லாம் யார் பார்க்கப் போகிறார்கள் என்று எண்ணக் கூடாது. அதுவும் நம் டிபார்ட்மென்ட் இதற்காகப் பணம் ஒதுக்கி, இதற்காக இருக்கிறவர்கள் இப்படி செய்தால் இது வருத்தமாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, கன்னியாகுமரியில் 1962-லே மறைந்த பெரியவர் காமராஜ் பௌண்டேஷன் ஸ்டோன் வைத்தார்கள். இன்றைக்கு நாம் 1984-ல் இருக்கிறோம். 62-ல் வைத்தது 84-ல் கூட முடியவில்லை. அதுபற்றி நான் சட்டமன்றத்தில் கேள்வி மூலம் கேட்டேன்; அமைச்சரிடம் சொன்னேன். கட்டாயம் செய்கிறேன் என்று உறுதி கொடுத்தார்கள். என்ன முடிவு? ஒன்றும் ஆகவில்லை. ஏன் என்று கேட்டால் எங்குரோச் செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். என்குரோச் செய்திருக்கிறார்கள் என்றால் அப்புறப்படுத்துங்கள். அதை யார் தடுக்கிறார்கள்? காங்கிரஸ் தடுக்கிறதா? தி. மு. க. தடுக்கிறதா? அண்ணா தி. மு. க. தடுக்கிறதா? கம்யூனிஸ்ட் கட்சி தடுக்கிறதா? அல்லது அங்கே இருக்கிற எக்சிக்யூட்டிவ் ஆபீசர் பணம் வாங்கிக் கொண்டு செய்கிறாரா?

கன்னியாகுமரி ஒரு முக்கியமான இடம் தானே? அங்கே நமக்கு சாதகமாக இருந்தது. தனி மனிதனை கோர்ட்டுக்கு போகவிட்டு, அதில் நம் சார்பில் வாதாடுவதற்கு நல்ல வக்கீலை வைக்காமல் அவன் பக்கம் சாதகமாகிவிட்டது. உலகம் என்றைக்கு வெள்ளத்திலே போகிறதோ தெரியவில்லை. தனியான அதிகாரிகள் இருந்தும், ஏன் இதைச் செய்யவில்லை என்று தெரியவில்லை.

(முற்பகல் 11—00)

அதுபோல், திருநெல்வேலி ஜில்லாவில் சத்திரம் ஒன்றை ஏழை மக்கள் கட்டினார்கள். அதை டிஸ்ட்ரிக்ட் போர்டு ஆபீஸ், கலெக்டர் ஆபீஸ் என்க்ரோச் பண்ணினார்கள். அந்த ஆக்கிரமிப்பை வைத்துக்கொண்டு 15 வருஷமாக அதைவிட்டுப் போக மாட்டேன் என்கிறார்கள். அந்த ஏழைப் பிள்ளைகளுக்கு ஹாஸ்டல் வைக்கலாம். நானும் கடிதம் எழுதியிருக்கிறேன். நடவடிக்கை எடுக்கிறோம் என்று நேற்று தான் தபால் வந்தது. இதற்காகவா 10 வருஷம்? அதற்கு டிரஸ்டி, டைரக்டர் ஆப் ஹரிஜன் வெல்பேர். ஏன் அந்தப் பிள்ளைகளுக்காக இன்னும் கட்டவில்லை?



அதுபோல் மதுரை ஜில்லாவில் அனுமார்பட்டி 1970-ஆம் ஆண்டு பட்டா கொடுத்தோம். இன்று 1984-ல் இருக்கிறோம். அவன் பட்டா வாங்கினாலும் அவனால் கட்டமுடியவில்லை. இதை அமைச்சரிடம் கூட சொன்னேன். 1981-லே சொல்லியிருக்கிறேன். நான் உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன் என்று சொன்னேன். ஒரு நல்ல கலெக்டர் இருக்கிறார். நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. அதிகாரிகளிலே நல்லவர்கள் இருக்கிறார்கள். பட்டா வைத்திருக்கிறவர்கள் வீடு கட்டப் போனால், பட்டா இல்லாதவர்களுக்கும் பாதி பங்கு கொடுத்தால் தான், அதைக் கட்டமுடியும் என்று சொல்கிறார்கள். அது யாராக இருந்தாலும் சரி, ஹரிஜனராக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் சரி கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்கள் நிர்வாகத்திலே நமக்கு இருக்கிறது.

அடுத்து மாணவர் விடுதி. இதைப்பற்றி பெரியார் சொன்னார், காந்தி சொன்னார், அண்ணா சொன்னார், காமராஜ் சொன்னார், ராஜகோபாலாச்சாரி சொன்னார். அந்த மாணவர்கள் இருக்கும் இடங்களைப் போய்ப் பாருங்கள். நீங்கள் மண்வெட்டி கொடுத்தோம், கோழி கொடுத்தோம, யானை கொடுத்தோம், பூனை கொடுத்தோம் என்று சொல்வதில் பிரயோசனம் இல்லை. படிப்பு தான் அவர்களுக்கு முக்கியமானது. அவர்கள் எங்கே வாழ்ந்தாலும் அறிவு அவர்களுக்கு அவசியம். நிலையும், நினைப்பும் என்று அண்ணா அவர்கள் சொன்னதை இங்கு சொல்கிறேன். அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்களோ, அதற்குத் தகுந்தாற்போல் தான் நினைப்பும் வரும். ஆக எவ்வளவு செய்தும், அவர்களுடைய சமுதாயத்தில் ஏன் மாற்றம் இல்லை. நீங்கள் சொல்லலாம், ஏன் காங்கிரஸ் ஆட்சியில் செய்யவில்லை? அன்று வருமானம் ரூ. 250 கோடி தான். இப்போது ரூ. 1,000 கோடி வருமானம் இருந்தும் நிலைமை அப்படியே தான் இருக்கிறது. ரூ. 1,000 கோடிவருமானம் இருந்தாலும் உங்களுக்குச் செலவு இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். அந்த சமுதாயத்திற்காக, அந்த மலை வாழ் மக்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தில், முதலிடம் கல்விக்காக கொடுங்கள். மண்வெட்டி, ஆடு, மாடு, கோழி இவைகளை வாங்கித் தரவேண்டாம். மண்வெட்டி வாங்கிக் கொடுத்தால், அவன் திரும்பவும் மண்வெட்டும் தொழிலுக்குத்தான் போவான். ஏன் அவன் படித்து முன்னுக்கு வரக்கூடாதா?

அடுத்து நர்சரிக் கான்வென்ட் என்று வைக்கிறீர்கள். இளையபெருமாள் மகன் கான்வெண்டில் படிக்கிறான். அவருடைய பெரியப்பா மகன், தம்பி மகன் கிராமத்தில் படிக்கிறார்கள். இவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீட்சைக்குப் போகிறார்கள். இதிலே யார் முன்னுக்கு வருவார்கள். தமிழில் சொல்லிக் கொடுப்பதைப் பற்றி எனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. யார் கேட்டாலும் நான் தமிழன் என்று சொல்லிக்கொள்வதில் குறைந்தவன் அல்ல. நான் ஏதோ இந்தியைப் பற்றிப் பேசினால், இந்த ஆதரவாளன் என்று நினைத்துவிடக் கூடாது. உதாரணமாக இரண்டு ஊர்களைப் பற்றிச் சொல்கிறேன். 15 வருஷமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலிருந்த ராஜாங்கம் அப்போது அமைச்சராக இருந்தார். இன்றைக்கு அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார்.

நாஞ்சலூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அந்த ஊரில் உள்ள பள்ளியில் கட்டிடம் நாற்காலி கிடையாது. அந்த ஊரில் உள்ளவர்கள் இரண்டு நாற்காலிகளைக் கொடுத்தார்கள். அந்த நாற்காலிகளையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். இப்போது அந்த வாத்தியார் கீழே தான் உட்கார்ந்து கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. இப்போது இங்கே முதலமைச்சர் அவர்கள் இல்லை. முன்னவர் தான் இருக்கிறார். கலெக்டரிடத்தில் ஒப்படைத்தால் தாசில்தார் நன்றாக வேலை செய்வார்கள் என்பதைப் போல் இதை முதல்வரிடம் ஒப்படைத்தால், வேலை நன்றாக நடக்கும்.

இத்துறைக்கு ஒரு அட்வைசரி பாடியை அமைக்கவேண்டுமென்று பல முறை கேட்டும், இதுவரை அமைக்கவில்லை. இப்போது 4 வருஷம் முடிந்து 5-வது வருஷத்திற்குப் போயிருக்கிறோம். அடுத்த பட்ஜெட் இல்லாமல் கூட இருக்கலாம். அப்படியே இருந்தாலும் ஜனவரி, பிப்ரவரியோடு நம்முடைய காலம் முடிந்துவிடும். எனவே ஒரு அட்வைசரி போர்டு போடுவதற்கு ஏன் தாமதம்? இதற்கு என்று அமைச்சர் இருக்கிறார், முதலமைச்சர் இருக்கிறார், செயலாளர் இருக்கிறார். இவர்களெல்லாம் இருக்கும்போது, இதைப்போடுவதில் என்ன கஷ்டம்? பைல் யார் கையில் போய் தூங்குகிறது? அதற்குக் காரணம் என்ன? அட்வைசரி கமிட்டி போடுவது அல்லது பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டி இருப்பதைப் போன்று இதை நிரந்தரமாகச் செய்தால்தான் நல்லது.

ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தயவு செய்து இதை ஒரு பெர்மனென்ட் கமிட்டியாகப்போடவேண்டும். அந்தப் பெர்மனென்ட் கமிட்டியிலே எம்.எல்.ஏக்களைப் போடுங்கள், சர்வ கட்சி என்ற முறையிலே வேண்டுமானாலும் போடுங்கள். இப்படிப்பட்ட கமிட்டிகளை



பார்லிமெண்டில் வைத்திருக்கிறார்கள். எஸ்.சி., எஸ்.டி., டிரைபல் வெல்பர் கமிட்டி என்று வைத்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலும் வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த நல்ல காரியத்தை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுச் செய்வார்கள் என்று நம்புகிறேன். அவை முன்னவர் அவர்களும் இதை அவர்களுக்குத் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன். முதல்வர் அவர்கள் எங்கேயிருந்தாலும் இதைக் கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். அப்படி ஒன்றும் ஏமாந்தவர் அல்ல நம்முடைய முதல்வர். ஆகவே நிச்சயமாக இதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்து இன்னும் ஒன்று. திருச்சி ஜில்லா, நக்கம்பட்டி கிராமம், அரியலூர் தாலுக்காவில் இருக்கிறது. அந்த ஊரிலே ஓவர் ஹெட் டாங்க் இருக்கிறது. பொது ஜனங்கள் எல்லாம் போய் தண்ணீர் எடுக்கிறார்கள். ஆனால் இந்த ஜனங்களுக்கு கிடைக்கவில்லை. அவர்கள் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி கலெக்டரிடம் சொன்னேன், வெல்பர் ஆபீசரிடம் சொன்னேன். மந்திரியிடம் லெட்டரைப் பார்வேட் பண்ணி அனுப்பினேன். இப்போது அங்கே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். செந்துர் பஞ்சாயத்து யூனியன் அது. நானே போய், உண்ணாவிரதம் வேண்டாம், ஏய்யா நீ என்ன செத்துப் போகணுமா? அதெல்லாம் வேண்டாம். செத்தால் சீக்கிரமாகச் சாகவேண்டும் என்றுதான் இப்போது நினைப்பார்கள். சாவதைக்காட்டிலும் நான் கேட்டு வாங்கித் தருகிறேன் என்று சொன்னேன். அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுவிட்டார்கள். ஆனால் இன்று வரையிலும் அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. கிணறு இல்லை. எக்ஸ்டன்சனும் கொடுக்கவில்லை. எங்களுக்கும் பதில் வரவில்லை. என்ன செய்கிறது இந்த வெல்பேர் டிபார்ட்மென்ட்?

அடுத்து நம்முடைய சகோதரர் பலராமன் அவர்கள் தொகுதியில், போளூரிலும் இன்றைக்கு வரையிலும் அந்த ஜனங்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். குறை சொல்வதற்காக நான் சொல்லவில்லை. முதல்வர் அவர்கள் நன்றாகச் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். கட்டாயம் செய்வோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் இது யார் செய்கிற தப்பு? ஒன்று மந்திரி இல்லாவிட்டால் இந்த டிபார்ட்மெண்ட் செக்கரட்டரி. இந்த 2 பேரும் செய்யக்கூடாது என்று இருப்பவர்கள் அல்ல. ஆனால் ஏன் செய்யவில்லை? என்ன கஷ்டம் இதிலே? உண்ணாவிரதம் இருக்கிற அளவிற்கு நிலைமை போய் இருக்கின்றது. தண்ணீரைக் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். தமிழகத்திலே பஞ்சாயத்து யூனியன் வந்தபிறகு, பஞ்சாயத்து ராஜ்யமே வந்த பிறகு, ஜெனரல் பூலிலேயிருந்து 18 பர்செண்ட் இவர்களுக்குச் செலவு செய்யவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அப்படி இந்த 18 பர்செண்ட் செய்தால் கூட இதைச் செய்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை? இதிலே என்ன சங்கடங்கள் இருக்கின்றன?

நீங்கள் வேறு சுகாதாரம் பற்றி பேசுகிறீர்கள்? கக்கூஸ் கட்டுகிறேன். லைட் போடுகிறேன் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் இவைகளை ஒழுங்காகச் செய்கிறார்களா என்றால் இல்லை. நாங்கள் போய் கேட்கும் போது, அந்த மனுசன் என்ன சொல்கிறான். பி. டி. ஓ. வைக் கேளுங்கள், பஞ்சாயத்து ஆபீசரைக் கேளுங்கள். வெல்பேர் ஆபீசரைக் கேளுங்கள் என்றும் உங்கள் மந்திரியை கேளுங்கள் என்றும் சொல்கிறார்கள். எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறீர்கள் என்று தெரியாது. திட்டத்தட்ட 1 கோடி ரூபாய் என்றோ 94 லட்சம் என்றோ கணக்குச் சொல்லியிருக்கிறார்கள் எந்தக்கணக்கை வைத்து இந்த 94 லட்சம் வந்திருக்கிறது. நான் நம்பவேண்டாம் என்று சொல்லவில்லை. அவன் பிள்ளைகளைப் பெற்றவுடனே ஒழுங்காக எழுதி வைத்துக்கொள்வதில்லை அவனோ, கிராமத்திலே உள்ள தலையாரியை விட்டு, இந்த வீட்டிலே பிள்ளை ஒன்று பிறந்தது என்றால் 2 பிறந்தது என்றுதான் எழுதுவார்கள் அவனும் பிள்ளை பிறக்கவில்லை என்றால் இந்த ஜனன மரணக் கணக்கை எழுத மாட்டேன் என்று சொல்லுவான். இரண்டு பேரும் தெரியாதவர்கள். அவனோ ஒழுங்காக எழுதி வைத்துக்கொள்ளவில்லை உத்தியோகஸ்தர் வந்தவனும் ஒழுங்காக எழுதுவதில்லை. இப்படிப் பட்ட நிலைமைகள் இருக்கின்றன. எப்படி இருந்தாலும், 94 லட்சமோ 1 லட்சமோ. எனக்குப் பணம் கொடுப்பதிலே ஆட்சேபனை இல்லை. ஒன்று இப்பணியை நீ எடுத்துக்கோள் என்று சொல்லுங்கள். அப்படி இல்லை என்றால் விட்டு விடுங்கள். எங்களை ஏன் பிரிக்கிறீர்கள். இதனால் நன்மை இல்லை.

எங்கள் சிதம்பரத்திலே 14 வார்டுகள் இருக்கின்றன 14 வார்டுகளிலே ஒரு வார்டிலே ஹரிஜன் இருக்கிறான். அவனுக்குக் கூட லைட் போகவில்லை சாக்கடை போகவில்லை. இது மாதிரி பல கிராமங்களிலே மதுரை, திருமங்கலத்திலே இப்படி இருக்கிறது. இங்கே எங்களுடைய டெப்புட்டி லீடர் தொகுதியிலே திருமங்கலத்திற்குப் பக்கத்திலே பத்துப்பட்டி என்று ஒரு கிராமம் இருக்கிறது, வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து எழுதிக்கொண்டு இருக்கிறார்கள். இன்று வரையிலும் கிடையாது. தன்னிறைவுத் திட்டம் என்று போட்டோம். ஆனால் அங்கே போடவில்லை. என்னுடைய சொந்த ஊர் சிதம்பரம் தாலுக்காவிலே உள்ள பூரத்தங்குடி என்ற கிராமம், அங்கே சுடுகாட்டுக்குப் போவதற்கு வழி கேட்டிருக்கிறார்கள். இதை நீங்கள் சுலபமாகச் செய்யலாம். நான் மத்திய சர்க்காரையோ, மாநில சர்க்காரையோ, யாராக இருந்தாலும், அவர்களைக் குறை சொல்வதாக நினைக்க வேண்டாம். இந்தப் பிரச்சனை எல்லாம் எப்படி வருகிறது என்று பார்க்கவேண்டும். அந்த ஊரிலே 2 சுடுகாடுகள் ஏன் இருக்கின்றன. அவன் சொல்கிறான் நானும் இந்து, எனவே இந்தச் சுடுகாட்டிலே வைப்பதற்கு சட்டம் இருக்கிறது. எங்கள் ஊருக்கு என்று இன்னொரு சுடுகாடு எதற்கு என்று கேட்கிறான். அவன் கேட்டவுடனே கேஸ் ஹைகோர்ட் வரையிலும்





போய்விடுகிறது. கோர்ட் ஒரு கடல். அவர்களுக்கு பட்டால் சரி என்பார்கள். அவர்களுக்குப் படவில்லை என்றால், அவர்கள் ஏதோ தேவலோகத்திலிருந்து வந்த மாதிரி இல்லை என்பார்கள். நான் குறை கூறுகிறேன் என்று நினைக்கவேண்டாம். உடனே கன்டெம்ப்ட் ஆப் கோர்ட் என்று நினைக்கவேண்டாம்.

திருச்சி மாவட்டம் வேப்பூர் என்ற ஒரு ஊர். பெரம்பலூர் தாலுக்கா. வீடு கட்ட இடம் கேட்டார்கள். நல்ல மாதிரியாக செய்தார் அந்த வெல்பேர் ஆபீசர். உடனே ஒருவர் அந்த இடத்திலே அனிமல் ஹஸ்பண்டரி வைப்பதற்கு இலவசமாகவே— உடனே நிலத்தை நல் அரசாங்கத்தின் மேலே வந்து—இனாமாக தருகிறேன் என்று சொல்லிவிட்டான். அதிலே ஒரு புண்ணியவான் வந்தார் கலெக்டர். ஆமாம். அதை இனமாசக் கொடுக்கிறார் என்று சொன்னார். ஏன் இந்த மனையை இனாமாகக் கொடுத்தார்கள்? என்ன காரணம்? ஜாதி இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் இருக்கிற தெருவும், ஆதி திராவிடர்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் இருக்கிற தெருவும், இரண்டும் ஒன்றாகி, இரண்டும் லிங்காக ஆகிவிடும், எனவே இதைத் தடைசெய்வதற்காக இப்படிச் செய்திருக்கிறார்கள். இந்தமாதிரி பல விஷயங்கள் இருக்கின்றன.

(முற்பகல் 11-10)

இரண்டாவது, வீடு கட்டப்படுவது. இதிலே இரண்டு விதம். தாட்கோ மூலம் கட்டுவது ஒன்று. இன்னொன்று ரூரல் வெல்பேர் அவுசிங் ஸ்கீம். இந்த இரண்டு துறைகளின் மந்திரிகளும் எப்பொழுது பார்த்தாலும் ஒரே மாதிரி ஒன்றையே சொல்லி வருகிறார்கள். அவர்களைக் கேட்டால் 20 லட்சம் பேர்களுக்கு கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இவர்களைக் கேட்டால் 10 லட்சம் பேர்களுக்கு கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்றுசொல்லுகிறார்கள். இந்த நாலாயிரம் ரூபாயில் வீடு கட்ட எவன் வருவான்? எந்த வழியும் இல்லாமல், மம்மட்டியும், மண்ணையும் கொண்டு வீடு கட்ட, எதுவுமே இல்லாதவன், இதுவாவது கொடுத்தால் போதும் என்று வருவான். வேறு யார் வருவான்? இந்த 4 ஆயிரம் ரூபாயிலும் ஆயிரம் ரூபாய் அவனுடைய கான்டிரிபியூஷன். அதிலே எப்படி வீடு கட்ட முடியும்?

நான் முதல்வர் அவர்களிடத்திலே கூட இந்த உண்மையை சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். இந்த உண்மைகளை அவரிடம் ஒருவரும் சொல்வதில்லை. இந்த அமைச்சரும் சொல்லவில்லை. இந்த செயலாளரும் சொல்லவில்லை. இப்படிச் சொல்லாததினால்தான் இப்படிப்பட்ட நஷ்டமே வருகிறது. நான் அமைச்சர்களுக்கு முன்னாடியேதான் சொல்கிறேன். ஏன் இந்த திட்டங்கள் நடைபெறவில்லை என்பதற்கான உண்மையை, முதலமைச்சரிடம் விளக்கமாகச் சொல்லவேண்டும். ஆனால் அப்படிச் சொல்லவில்லையோ என்று சந்தேகப்படுகிறேன். தாட்கோ

மூலம் இலவச வீடுகட்டும் திட்டம் என்பது தமிழ்நாட்டிலேயே நடக்கவில்லை. ஆகையினால் இரண்டு அமைச்சர்களும் ஒன்றையே வைத்துக் கொண்டு பதில் சொல்லி வருகிறார்கள். தொழிலாளர் நல அமைச்சரும், ரூரல் வெல்பேர் கோவாப்பரேட்டிவ் அவுசிங் ஸ்கீம் என்று பெயர் வைத்து, அதைச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். இவர்களும் சொல்கிறார்கள்

அந்த 4 ஆயிரம் ரூபாயில் நான்கில் ஒரு பங்கு அவன் உழைப்பு இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். சரி என்று ஒத்துக் கொண்டாகிவிட்டது. பிறகு 6 ஆயிரமாக வந்த பிறகு அவன் உழைப்பு இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் இன்று வரையிலும் 6 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள உதவிப் பணம் இருக்கிறது என்ற அந்த உத்தரவு சம்பந்தப்பட்ட எந்த அதிகாரிகளுக்கும் போய்ச் சேரவில்லை. அமைச்சர் அவர்கள் விசாரித்துப் பார்த்தால் அந்த உண்மை தெரியும். இது அந்த மினிஸ்டருக்கு வருகிறதா அல்லது உங்களுக்கு வருகிறதா என்று எனக்குத் தெரியவில்லை. போர்ட்போலியோ யார் பக்கம் இருக்கிறது என்று தெரியவில்லை.

ஆனால் அரசாங்கம், இந்த அவுசிங் ஸ்கீமிலே கட்டிய வீடுகளைப் போய் பார்த்தால் தெரியும். மேல்சபையிலே தலைவர் ராமமூர்த்தி அவர்கள் இது பற்றி பேசியபிறகு, முதல்வர் அவர்கள் அதை வெரிபை பண்ணினார்கள். உண்மை என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். பல இடங்களிலே இந்த ரூபாயிலே கட்ட முடியவில்லை. இந்தப்பணத்தை வாங்குவதற்கு சம்பளம் வாங்குபவர்களுக்கு தனி பணம் வேறு கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனை கொடுக்க முடியாத கஷ்டத்தினாலேயே அது சீக்கிரம் பலருக்கு கிடைப்பதில்லை. ஆகவே, அரசுபணம் வீணாகப்போய்க் கொண்டிருக்கிறது. அவர்களுக்கும் போய்ச் சேரவில்லை. சர்க்காருக்கும் லாபமில்லை. வீடுகளும் கட்டப்படவில்லை அது குட்டிச்சுவராக நிற்கிற நிலைமையில் இருக்கிறது.

இதற்கு ஏதாவது திட்டத்தைப் போட்டு, புதுவீடுகளாக கட்டாவிட்டாலும், இருக்கிற பழைய வீடுகளை, நீங்கள் கட்டியதோ, அல்லது காங்கிரஸ் கட்டியதோ, அல்லது தி.மு.க. கட்டியதோ யார் கட்டியதாக இருந்தாலும் அதை பழுது பார்த்து சீர் செய்யவேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டையே மாற்றக் கூடிய அரசியல் வாதிகள், எதிர்காலத்தில், தேர்தல் நேரத்தில் அதைப் படம் போட்டுக் காட்டி பிரச்சாரம் செய்வார்கள். அப்படிப்பட்ட நிலைமை வராமல் இருப்பதற்கு, புதிய கட்டிடங்களை கட்டுவதை நிறுத்தி, கட்டியிருக்கின்ற பழைய கட்டிடங்களிலே என்ன தவறு இருக்கிறது என்று பார்த்து, அவைகளை பழுது பார்த்து, நல்லபடியாக வைப்பதற்கு ஒரு யோசனையை நீங்கள் செய்தாக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





பிறகு ஐ.ஆர்.டி.பி. ஸ்கீம். அதை மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் இரண்டு பேரும் சேர்ந்து செய்கிறார்கள். நல்ல ஸ்கீம். அதிலே ஒன்றும் ஆட்சேபணையில்லை. அதிலே வருஷா வருஷம் பணத்தை அதிகமாக்கி கொடுத்து வருகிறார்கள். அதிலே ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் நடுவிலே அதிலே ஈடுபட்டு போய்ச் செய்யக்கூடிய ஏஜண்டுகள் சரியாகச் செய்யவில்லை. கேட்டால் மத்திய சர்க்கார்தானே வங்கிக்குப் பொறுப்பு என்கிறார்கள். மத்திய சர்க்காராக இருந்தாலும், யார் எங்களுக்கு துணை என்று இருக்கிறார்களோ, அந்த வெல்பேர் ஆபீசர் அந்த பாங்குக்கு போய் பேசினார்களா? அந்த பாங்க்காரர்கள் என்ன சொன்னார்கள்? அந்த பாங்க் பற்றி அந்த டைரக்டருக்கு எழுதினார்களா? அந்த டைரக்டர் அரசு செயலாளருக்கு எழுதினார்களா? செக்ரட்டரி மந்திரிக்கு சொன்னார்களா? மந்திரி முதலமைச்சருக்கு சொன்னார்களா? இல்லை சென்ட்ரல் கவர்ன்மென்டிலே யிருக்கிற இந்திராஜீக்கு எழுதி, அந்த பாங்க்காரர்கள் இவ்வளவு மோசம் பண்ணுகிறார்கள், என்பதனை தெரிவித்தார்களா? இந்தியன் பாங்க்காரர்கள் என்ன செய்தார்கள், ஸ்டேட் பாங்க்காரர்கள் மதுரை பாங்க்காரர்கள் செய்தார்களா? என்று யாராவது ரிப்போர்ட் கொடுத்தார்களா? அதற்கு மத்திய சர்க்காரிடம் இருந்து என்ன பதில் கிடைத்தது என்ற உண்மைகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னால், நான் மிகவும் சந்தோஷப் படுவேன் நம்முடைய அதிகாரிகள் பெயரிலும், அமைச்சர் பெயரிலும்,

அடுத்து பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு என்று டிரையினிங் கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். எத்தனை ஆயிரம் பேர்களுக்கு டிரையினிங் கொடுத்தீர்கள்? ஆனால் யாருக்கும் வேலை கிடைக்கவில்லை. காரணம் பாலோ அப் ஆக்ஷன் புரோக்கிராம் இல்லை. இதில் எவ்வளவு ரூபாய் செலவு செய்தீர்கள் ஹாஸ்டலில் வைத்து சாப்பாடு போட்டு டிரையினிங் கொடுத்தீகள். ஆனால் அவர்களுக்கு வேலையில்லை. அதற்குக் காரணம் பாலோஅப் புரோக்கிராம் இல்லை. வயது நிர்ணயித்திருக்கிறீர்கள். ஜாதி இந்துவுக்கு 28 வயது என்றால், அரிசன மக்களுக்கு 33 வயது என்று. நல்ல எண்ணத்தில்தான் வைத்திருக்கிறீர்கள். ஆனால் அவனுக்கு வேலை கிடைப்பதற்குள் அந்த வயது முடிந்துவிடும்போல் இருக்கிறதே. காலையில் நம்முடைய நாவலர் அவர்கள்கூட நல்ல எண்ணத்தோடு சொன்னார்கள். ஆனால் என்ன பயன் அவர்களுக்கு வயது முடிந்த பிறகும் வேலை கிடைக்கவில்லையே, அதற்குப் பிறகு 5 வருஷம் கூட்டி அதிகமாக்கிக் கொடுக்கப் போகிறீர்களா ?

உத்தியோகத்தில் இன்றைக்கு இருக்கிறபடி கிளாஸ் ஒன் போஸ்ட்டிலே 18 சதவீத ஒதுக்கீடு இல்லை. கிளாஸ் 2 விலே 18 சதவீத ஒதுக்கீடு இல்லை. கிளாஸ் 3யிலே இல்லை. கிளாஸ் 4லும் இல்லை. நான் இப்பொழுதுகூட சொல்கிறேன். நான் முட்டாளுக்கு உத்தியோகம் கொடுங்கள் என்று கேட்கவில்லை. பட்டம்

படித்து புத்தியுள்ளவன் இருக்கிறான். புத்தியுள்ளவர்களுக்கு, 5 வருஷத்திற்குள், 3 வருஷத்திற்குள், அந்த 18 சதவீத ஒதுக்கீட்டை கொடுத்து முடியுங்கள். பிறகு காம்படிஷனிலே ஓட்டு மொத்த மான போட்டியிலே தாராளமாக சேர்த்து செய்யுங்கள் என்று தான் சொல்கிறேன். அதைத்தான் என் ரிப்போர்ட்டிலேகூட நான் கொடுத்திருக்கிறேன். இது எப்படி இருக்கிறது என்றால், ஆஸ்த்துமாக்காரன் மாதிரி, இறுதிவரையில் இழுத்துக்கொண்டு அவதிப்பட்டுக் கொண்டிருப்பான். இம்சைப்பட்டுக் கொண்டிருப் பான். ஹார்ட் அட்டாக் என்றால் உடனேயே போய்விடும். பர வாயில்லை. ஆனால் இது ஆஸ்த்துமாக்காரன் மாதிரி இழுத்துக் கொண்டிருக்கிறது. அப்படித்தான் இந்த புரோக்கிராமிலே இருக் கிறது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் புத்தகத்திலே 3வது பக்கத்திலே நாம் காட்டேஜ் இன் டஸ்ட்ரீஸ் டிரையினிங் மற்றும் எம்பிளாயின்ட்மென்ட் கொடுத் திருக்கிறோம். முதலிலே பட்ஜெட் எஸ்டிமேட் 1983-84, அதிலே 1325.64 லட்சம் செலவழித்திருக்கிறோம். ரிவைஸ்டு எஸ்டிமேட்டிலே 1325.54 லட்சம் செலவழித்திருக்கிறோம். இப்போதைய 1984–85 பட்ஜெட்டிலே 1324.85 லட்சம் என்று போட்டிருக்கிறோம். ஆகவே முதலிலே கொடுத்த எஸ்டிமேட்டை விட ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் இன்னும் குறைந்து போகிறது. அதற்கு என்ன காரணம் என்பதற்கு விளக்கம் இருந்தால் உண்மையில் வேறு ஏதாவது காரணம் இருந்தால் சொல்லலாம். சொல்லவில்லையே? பணம் கிடைக்கவில்லையா? பைனான்ஸ் டிப்பார்ட்மென்டு ஒத்துக் கொள்ளவில்லையா? அல்லது அந்த பணம் திருப்பி வந்ததா? என் பதை அந்த 3-வது பக்கத்தில் பார்த்தால் உங்களுக்குத் தெரியும். உச்ச வருமானத்தின் குறிப்பு இது போலவே இந்த பிள்ளை களுக்கு கொடுக்கின்ற பணம் மத்திய அரசு 12 ஆயிரம் கொடுக் கிறது. நீங்கள் 6 ஆயிரம் தான் கொடுக்கிறீர்கள் 2 பேருக்கும். அவர்கள் ஏழை தானே. ஏன் அந்த 12 ஆயிரத்தை நீங்கள் வைக் கக்கூடாது. ஒரு ஹையர்கிரேடு வாத்தியாரும் அவர் மனைவியும் வாத்தியாராக இருந்தால் இரண்டு பேருக்கும் சேர்த்து ஆயிரம் ரூபாய் சம்பளம் வரும். வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய் வரும். அவனுக்கு 5 பிள்ளைகள் 4 பிள்ளைகள் 2 பிள்ளைகள் என்று வைத் தால் கூட அவனுக்கு ஸ்காலர்ஷிப் இல்லை என்றால் பட்ட ணத்தில் கணவனும் மனைவியும் ஆயிரம் ரூபாய் வாங்கினால் கூட இந்தப் பிள்ளைகளை எப்படி கான்வெண்டில் படிக்க வைப்பான். வருங்கால சந்ததியினரை எப்படி காம்படெட்டிவ் எக்ஸாமி னேஷனுக்கு அனுப்பிவைப்பான். ஆகவே மத்திய அரசு 12 ஆயிரம் வைத்தால் உண்மையிலேயே அந்த கஷ்டத்தை புரிந்த நீங்கள் 18 ஆயிரம் என்று வைக்கவேண்டும். டெல்லியில் இருப்ப வர்கள் ரொம்ப தூரத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் கஷ்டம் தெரிகிறது. நீங்கள் கிட்டே இருக்கிறீர்கள். எங் கள் கஷ்டம் எல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆகவே, நீங்கள் 18 ஆயிரம் வைக்கவேண்டும். இல்லாவிட்டால் 18 ஆயிரமாவது வைக்கவேண்டும். ஏன் இந்த வித்தியாசம்.





அதேபோல் ஸ்காலர்சிப். போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்சிப் செலவழித்தது லட்சக் கணக்கில். அந்தப் பணத்திலே 75 சத வீதம் டெல்லி சர்க்கார் மூலம் தருகிறார்கள். உங்கள் பணம் காலணா கூட கொடுக்கவில்லை. அது மாத்திரம் இல்லை. இப் போது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். க்கு பின்தங்கிய சமுதாயத்திலே அந்த மக்களுக்கு என்ன எல்லாம் கொடுக்கிறீர்களோ அதை எல்லாம் எங்களுக்குக்கொடு என்று கேட்கிறார்கள்.

பிராமணனுக்கும் கொடுக்க வேண்டும் என்று அரசுக்கு நான் 1969-லே எழுதியிருக்கிறேன். நான் ஒன்றும் கம்யூனலாகச் சொல்ல வில்லை. ஆனால் ராவ் இன்ஸ்டிடியூட்டில் பி.சி. ஆண் பெண் ணுக்கு மாதம் 2 ஆயிரம், 3 ஆயிரம் செலவழித்து, ஐ.ஏ.எஸ். கோச்சிங் கொடுத்துவிட்டு, இந்த பிள்ளைகளுக்கு கான்ஸ்டி டியூஷனில் சேப்கார்ட் இருக்கிற பிள்ளைகளுக்கு ஏன் அந்த டெல்லிக்கு அனுப்ப தருகிற உதவியை கொடுக்கவில்லை. ஏன் அந்த நல்ல அறிவு உள்ள இடத்திலே இந்த பிள்ளைகளுக்கு ஐ.ஏ.எஸ். படிக்க வைக்கக்கூடாது, இங்கே சேர் கிடையாது, மேஜை கிடையாது, வேண்டிய வாத்தியார்கள் கிடையாது. டெம்பரரி யாக ஆக்டிங் புரப்பசர்கள்தான் உண்டு. பர்மனென்டு புரபசர்கள் வேண்டும் என்றால் பச்சையப்பன் கல்லூரியி லிருந்து வருவதாகச் சொல்கிறார்கள் அல்லது வேறு எங்காவது இருந்து வருவதாக சொல்கிறார்கள். வாத்தியார் இல்லை என றால் பிள்ளைகள் எங்கே எப்படி படிப்பார்கள் என்பதற்கு கிராமத்தில் பழமொழி சொல்வார்கள். அந்த மாதிரி புரபசர் சரியாக வரவில்லை என்றால் நிலைமை என்ன ஆகும். எப்படி கோச்சிங் கொடுக்க முடியும்? ஆகவே கோச்சிங் சென்டர் என்ற பெயரில் எங்களுக்கு வைத்து பெயில் ஆக்கக் கூடிய நிலைமை உண்டாக்கி நாங்கள் முட்டாள் என்று சொல்லி ஒரு பெயரைச் சொன்னால் இது பாவமான காரியம். இதை முதலமைச்சர் அவர்களுக்கு விளக்கி எடுத்துச் சொல்வார்களா னால் அவர்கள் எல்லோருக்கும் நியாயமாக எல்லோரும் மனித ராக வேண்டும் என்று எண்ணம் உள்ளவர். எனக்கு மத வெறி, மொழி வெறி கிடையாது என்று எல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அந்த பி.சி. பிள்ளைகளையும், எஸ். டி. பிள்ளைகளையும், எஸ். சி. பிள்ளைகளையும் இந்த 3 பிள்ளைகளையும் ஒரே பிள்ளைதான் என்று சொல்லி தமிழ்நாடு இல்லத்தில் இடம் கொடுத்து இருக்கிறார்கள் பாருங்கள் என்று சொல்லும் நிலை வேண்டும். அந்த இடத்தில் படித்தால் அதனுடைய என்வைர்ன்மெண்டு தான் அவனுக்கு அறிவை கொடுக்கிறது, அந்த என்வைர்ன்மெண்டை உருவாக்கித்தர வேண்டும். நாம் கொடுத்தோம், கொடுத்தோம் என்று சொல்லி வோட்டு வாங்கி இளையபெருமாள் உட்பட உங்களுக்குச் செய்வேன், உங்களுக்குச் செய்வேன் என்று சொன் னால், இது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் செயல், இது வருங்காலத்தில் எங்கேயோ ஒரு பெரிய பூகம்பத்தை உரு வாக்குகின்ற ஒரு நிலைமைக்கு நாம் போகக்கூடாது. என்று

உங்களுக்கு இதை நினைவுக்காக சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே அம்பேத்கார் அவர்கள் புத்தரைப் பற்றிய அந்த புத்தகத்தில் சொல்லியிருக்கிறார்கள். மதம் என்பது மனிதனுக்கு சமத்துவ வாழ்வையும், கூர்மையான அறிவையும் தெளிவான புத்தியையும் கொடுப்பதுதான் மதம் என்று நாம் நினைக்கும்படி எழுதியிருக்கிறார். புத்தர் பெருமான் அப்படி சொல்கிறார், ஏசு பெருமானும் அப்படித்தான் சொல்கிறார். ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ வேதங்களை ஒழுங்காக படிக்காத சந்நியாசிகள் ஏதோ இன்னும் இங்கே தீண்டாமை இருக்கிறது என்று சந்நியாசிகள் மடத்தில் இருந்து கொண்டு தீண்டாமை என்று சொல்கிறார்கள். வேதம் எந்த இடத்திலும் அப்படி சொல்லவில்லை. இதை எதற்கு சொல்கிறேன் என்றால் மதவாதி மக்களுக்கு இந்த அவல நிலை இருக்கிறபோது பம்பாயில் கொடுக்கிற உதவி மாதிரி ஏன் இங்கே கொடுக்கக்கூடாது. இதிலே கொடுத்ததைப் பற்றி கொஞ்சம் சொல்லியிருக்கிறார்கள். மாடு கொடுத்தோம், படிக்க பணம் கொடுத்தோம் என்று சொல்லுகிறார்கள். அது அல்ல. ஆறுமுகம் என்ற சகோதரனுக்கும், அந்தோணி என்ற கிருத்துவ சகோதரனுக்கும் அந்த கிராமத்தில் பொதுவாக அரிசன் இந்த கிருத்துவ அரிசன், இந்த இந்து அரிசன் இந்த இரண்டு பேரும் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் தேதி வரை இன்னும் கிராமத்தில் டீ கடையில் ஒன்றாக சேர்ந்து உட்கார முடியாது. இது எல்லோருக்கும் தெரியும். இந்த கொடுமை எல்லா அரசாங்கத்திலும் இருக்கிறது. ஏதோ அ.இ.அ.தி.மு.க. அரசை குறை கூறுவதாக, குறை கூறவேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. இந்த கொடுமை இருக்கிறபோது பின்தங்கிய சமுதாய லிஸ்டிலும் முன் தங்கிய சமுதாய லிஸ்டிலும் நான் குறை கூறவில்லை. அங்கேயும் ஏழைகள் உண்டு. நாடார் சமூகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் கிருத்துவ சகோதரனா, பார்வர்டு கம்யூனிட்டியிலிருந்து பேக்வர்டு கம்யூனிடிக்கு வரும் போது பேக்வர்டு கம்யூனிட்டியிலே இருக்கிறது, எஸ். சி., கன்வெர்ட்டு கிறித்துவனை ஏன் இந்து எஸ்.சி. லிஸ்டில் ஏன் சேர்க்கக் கூடாது. ஆனால் நீங்கள் செய்ய முடியாது. இது மத்திய அரசு செய்யவேண்டிய வேலை. ஏன் மத்திய அரசுக்கு எழுதவில்லை. இதை ஏன் இந்த அரசு செய்யவில்லை. இதை செய்ய வேண்டும்என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் 2 மாதத்திற்கு முன்பு நடந்தது. சர்க்கார் போட்ட ரோடு. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் விசயலட்சுமி அவர்கள் அந்தப் பாலத்தை திறந்து வைத்து இருக்கிறார்கள். ஜாதி இந்து தான் அந்த பாலத்தில் போகலாம். அரிசன் போகக்கூடாது. தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுக்கா, வேட்டமங்கலம் என்ற ஊரில் இது இருந்தது. அந்த ஊரில் ஒரு நல்ல சப்-கலெக்டர் இருக்கிறார். அவர் போய் உடனே இப்படி எல்லாம் சொல்லக்கூடாது 2 பேரும் பாலத்தில் போகவேண்டும் என்றார். ஆனால் கூடினார்கள் மோதலில் சடுபட்டார்கள், 2வது பிணத்தை தடுத்துவிட்டார்கள்





அடிக்கவந்தார்கள். ஏழை அவன் வீட்டிலேயே பிணத்தை புதைத்துவிட்டான். இது போல இந்த நிலையில் சென்னையில் என்னுடைய தொகுதியில் சேத்துப்பட்டு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கல்யாண மேஸ்த்திரி கார்டன், பெரிய மேடு. இந்த குறிப்பில் இருக்கிறது. 100 ஆண்டுகளாக வாழ்கின்றவர்களுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இவர்களும் 100 ஆண்டு காலமாக வாழ்கிறார்கள். சர்க்கார் பட்டாவும் கொடுக்கவில்லை. குடிசை மாற்று வாரியம் மூலமும் வீடுகள் கட்டிக்கொடுக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னபோது கட்டாயமாக இதை செய்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் யாரும் செய்யவுமில்லை. இப்படிப் பட்ட நிலைமைகள் இருப்பதால் நான் இந்த மானியத்தில் முன்னேற்றம் இருக்கிறது என்பதில் ஆட்சேபணை சொல்லவில்லை. ஆனால் காரியங்கள் ஒழுங்காக நடைபெறவில்லை. 1947க்கு முன்னும் பின்னும் என்றால் நாங்கள் முன்னேற்றம் அடைந்து இருக்கிறோம். மாநில அரசு, மத்திய அரசு உதவி செய்திருக்கிறது. ஆனால் செய்த பலன் ஒழுங்காக போய்ச் சேரவில்லை. பணம் ஒழுங்கான முறையில் செலவழிக்கப் படவில்லை. அதை யாரும் கண்காணிக்கவில்லை. ஆகவே, எங்களுடைய முன்னேற்றம் தடைப்பட்டிருக்கிறது. இந்த முன்னேற்றத்தை தடுக்காமல் செய்வதற்கு இரண்டு விஷயத்தைச் செய்யவேண்டும். ஒன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை நிர்வகிக்கின்ற பொறுப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1981 ஆம் ஆண்டு சொன்னது போல்—எடுத்து என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்க—அல்லது இந்த துறை அமைச்சர் அவர்கள் நேரிடையாக ஒரு குழுவை அமைத்து நல்ல முறையில் செயல்படவேண்டும். நான் சொன்னவைகள் தவறாக இருக்குமானால் அதற்குத் தண்டனை கொடுத்தால் கூட நான் ஏற்றுக்கொள்வேன் என்ற உறுதியைக் கொடுத்து இந்த நல்ல நேரத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-20)

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை மானிய கோரிக்கை எண். 31 மீதும் அது போலவே எழுதுபொருள்-அச்சுத்துறை மானிய கோரிக்கை எண். 44 மீதும் பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பு கொடுத்தமைக்கு முதற்கண் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன் இன்றைய தினம், இந்த மானிய கோரிக்கைகள் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு இளையபெருமாள் அவர்கள் தனக்கு இருக்கிற அனுபவத்தின் மூலமாகவும், கடந்த காலத்தில் ஏற்பட்ட நிலைமைகளை ஒட்டியும் பல்வேறு நல்ல கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்து இருக்கிறார்கள். அதை நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்து இருக்கிற

மானிய கோரிக்கையில் ஆதிதிராவிட நலத்துறை மாண்புமிகு
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி பீடத்திற்கு ஏறிய
தற்கு பின்னால் எப்படிப்பட்ட நல்ல காரியங்களை, அந்த
சமுதாயத்திற்கு தேவையான காரியங்களை செய்து இருக்
கிறது என்பதை மிகத் தெளிவாக அழகாக எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள். அவைகளையும் நான் வரவேற்க கடமைப்
பட்டிருக்கிறேன். இன்றைய தினம் தெரிந்தோ தெரியாமலோ
ஆதி திராவிட நலத்துறை பல்வேறு நல்ல காரியங்களில் ஈடு
படுகிறபோது இந்த அரசு அதற்கான முயற்சிகளை மேற்
கொள்ளுகிறபோது சில நேரங்களில் இந்தத்துறைக்கு சம்பந்தப்
படாதவர்கள் அதிகார பீடங்களில் அமர்ந்து விடுகிற காரணத்
தால் அவர்கள் அந்தத் துறையை சரியாக இயக்காத காரணத்
தால் எவ்வளவு செலவு செய்தாலும் அவர்களுக்கு போய் சேர
வேண்டிய உரிய பலன் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு
உறுப்பினர் திரு. இளையபெருளாள் அவர்கள் இங்கே எடுத்துச்
சொன்னார்கள். நான் அவைகளை வரவேற்க கடமைப்பட்டுள்
ளேன். காரணம் நாம் பல்வேறு துறைகளைப் பார்க்கிறபோது
இந்த ஆதி திராவிட நலத்துறையில் இந்த அரசு மிகுந்த அக்கறை
எடுத்துக்கொண்டு ஏராளமாக செலவு செய்கிறது. தமிழகத்தில்
இருக்கிற மக்கள் தொகை சுமார் 5 கோடி பேர் இருக்கிறார்கள்
என்று சொன்னால் அதில் ஆதி திராவிடர் பழங்குடி மக்கள்
ஏறத்தாழ 1 கோடி பேர் இருக்கிறார்கள் என்று இந்த குறிப்பில்
இருக்கிறது.

ஆகவே ஐந்தில் ஒரு பகுதி உள்ள இந்த சமுதாயத்திற்கு
தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு, ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்கு
வழிவகைகள் அளித்து இந்த சமுதாயத்தினர் இதனால் பயன
பெற வேண்டும் என்ற உணர்வோடு இந்த அரசு செயல்பட்டுக்
கொண்டு இருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்
டிருக்கிறேன். இந்த அரசு உருவான பிறகு தான் இந்த ஆதி
திராவிட நலத்துறையில் பல்வேறு பள்ளிக்கூடங்கள், உயர்
நிலைப் பள்ளிக்கூடங்கள், மேல்நிலைப் பள்ளிக்கூடங்கள் என்று
ஒரு புறத்தில் உருவாக்குகிறார்கள். மறுபுறத்தில் இந்த ஆதி
திராவிட பழங்குடி மக்கள் வறுமையில் வாடுகிற நேரத்தில்
அவர்களில் யாராவது இறந்துவிட்டால் இறந்த உடனேயே
அவர்களுடைய ஈமச்சடங்குகளைச் செய்வதற்காக 50 ரூபாய்
நிதி வழங்கப்படுகிறது. அதைப்போலவே, அவர்களுக்கு
மேம்படுத்தப்பட்ட இடங்கள் குடியிருப்பு விடுகள் வழங்கப்
பட்டிருக்கின்றன. ஏழாண்டுக் காலத்தில் ஏறக்குறைய 6,000
ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதப்படுத்தி வழங்கப்பட்டிருக்கிறது. பல்
வேறு நல்ல திட்டங்கள் இந்த அரசாங்கத்தின் மூலம் செய்யப்
பட்டிருக்கின்றன. இதையெல்லாம் உள்ளபடியே நான்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி ஆதிதிராவிடர் நலத்துறை பல்வேறு முயற்சிகளிலே
ஈடுபட்டு அவர்களை மேம்படுத்த வேண்டுமென்று பாடுபட்டாலும்
கூட அதன் பலன் உருப்படியாக அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த





வர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்று கேட்டால்
இல்லை என்பதை நாம் அத்தனை பேர்களும் ஏற்றுக் கொள்ளத்
தான் வேண்டும். இதற்குக் காரணம் அந்தத் துறையை எடுத்துச்
செயல்படுகின்றவர்கள் ஆதிதிராவிட மக்கள் மீது அக்கறை
கொண்டிருந்தால் தான் செலவு, செய்யப்படும் பணத்திற்கான
பலன்கள் உரியவர்களுக்கு உரிய அளவில் கிடைக்கும் வகையில்
இருக்கும். அதைத் தான் எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்
குரிய இளையபெருமாள் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்
என்று கருதுகிறேன். அவர்கள் அப்படித் தெரிவிக்கின்றபொழுது
ஆரம்பத்திலேயே ஒன்றைச் சொன்னார்கள். அம்பேத்கார்,
மதங்கள் எப்படியிருக்க வேண்டுமென்று கூறினார்கள் என்பதைப்
பற்றிச் சொன்னார்கள். சமத்துவ நோக்கம் உடையதாக மதம்
இருக்க வேண்டுமென்று அம்பேத்கார் சொன்னதாகச் சொன்னார்
கள். அப்படிச் சொல்லிவிட்டு, இந்து மதத்தின் மிகப் பழைய
தலைவர் சங்கராச்சாரியார் ஒரிசாவில் சொல்லும்பொழுது தீண்
டாமை இருந்துதான் தீர வேண்டும் என்று சொன்னதாகச்
சொல்லியிருக்கிறார்கள். அதையும் சொல்லிவிட்டு, ஐ.டி.ஐ.
நிறுவனத்தின் இயக்குநர் ஜனாதிபதியை வைத்துக் கொண்டு,
தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு
பொறுப்புகளில் வருவதால்தான் திறமை குறைந்து விட்டது
என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள் என்ற அந்த
விவரத்தையும் சொன்னார்கள்.

நான் அவர்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள்
காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்; நீண்ட காலமாக அந்தக்
கட்சியில் இருப்பவர். நானெல்லாம் ஆரம்பப்பள்ளியில் படித்
துக் கொண்டிருந்த பொழுது அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக
இருந்திருக்கிறார்கள். நானும் பார்த்திருக்கிறேன். பாராளுமன்றத்
தில் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள் என்பதையும் பார்த்
திருக்கிறேன். அவர்களை கேட்டுக் கொள்கிறேன். தயவு
செய்து குற்றச்சாட்டை யார் மீது கொண்டுவருகிறார்கள்
என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆதி திராவிடர்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்
கள் என்று சொல்லும் பொழுது, இதற்குக் காரணமாக முதல்
குற்றச்சாட்டை, முக்கியமான குற்றச்சாட்டை, இன்னும் சொல்
லப்போனால் அத்தனை குற்றச்சாட்டுக்களையும் ஓரிடத்தில்
சொல்ல வேண்டுமென்றால் இந்து மதத்தின் மீதுதான் சொல்ல
வேண்டும். ஏதோ இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்தான்
எங்களுக்கு எல்லாம் செய்தார்கள்; தமிழகத்தில் இருப்பவர்கள்
ஏதும் செய்யவில்லை என்ற உணர்வினை உருவாக்குகின்ற முறை
யில் மதிப்பிற்குரிய பெரியவர் இளையபெருமாள் அவர்கள் பேசி
னால், அவர்கள் தன்னுடைய ஆத்ம திருப்திக்காகவாவது வீட்
டிலே உட்கார்ந்திருக்கின்றபொழுது இந்து மதத்தைப் பற்றிச்
சிந்தனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதத்
தின் குறியை உங்கள் நெற்றியில் வைத்திருக்கின்றீர்கள்; அதை
அணிந்து கொண்டிருக்கின்றீர்கள். உங்களைப் பற்றி நீங்கள்
எண்ணிப் பார்க்க வேண்டும்.

[1984 மார்ச் 22

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவரவர்
களே, அவர் இளைஞர், நல்ல விஷயத்தைச் சொன்னார்.
அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன். நான் சொல்லியது. மத்திய அரசு? மாநில
அரசு என்று இரண்டையும் பற்றித்தான். அம்பேத்கார் பெயரை
யும் சொன்னேன். பெரியார் பெயரையும் சொன்னேன்.

ரிக்வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம்
ஆகிய நான்கு வேதங்களிலும் ஓரிடத்தில் கூட தீண்டாமை இல்லை.
நான் அதிகம் அதைப்பற்றியெல்லாம் படிக்காதவனாகக் கூட
இருக்கலாம். ஆனால் சுவாமி சகஜானந்தா அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். நான் நந்தனாரைப் பார்க்கவில்லை. ஆனால்
என்னுடைய கண்கண்ட தெய்வமாக இருந்த சுவாமி சக
ஜானந்தா அவர்களுடைய சமய பள்ளியில் படித்தவன். அவர்
சமஸ்கிருதத்தில் பெரிய ஸ்காலர். இந்து மதத்தை விட்டு அம்
பேத்கார் போக முற்பட்டபொழுது, இப்பொழுது போக வேண்
டாம் ; இந்து மதத்தில் அப்படியில்லை ; ஆனால் இந்து மதத்தின்
பெயரால்தான் கொடுமைகள் நடக்கின்றன என்று சொன்னார்
கள். எப்படி ஏகபிரான் சொன்னதை கிறித்தவர்கள் கேட்க
வில்லையோ, எப்படி முகமது நபி சொன்னதை முஸ்லீம்கள்
கேட்கவில்லையோ, எப்படி புத்தபிரான் சொன்னதை பௌத்தர்
கள் கேட்கவில்லையோ-சிலோனின் பௌத்தர்கள் என்ன செய்
தார்கள் என்பது நமக்குத் தெரியும்-அதைப் போலவே தான் இந்து
மதத்திலும் இருக்கிறது. நான் இதையெல்லாம் எதற்காகச்
சொல்கிறேன் என்றால் இந்து மதத்திலே அப்படி இல்லை.
வேதத்திலே அப்படி இல்லை; ஆனால் இந்து மதத்தின் பெயரால்
தான் கொடுமைகள் நடக்கின்றன என்று சொல்லிக்கொள்கிறேன்.

இவற்றையெல்லாம் நான் வாதத்திற்காகச் சொல்லவில்லை
மாண்புமிகு உறுப்பினரவர்கள் இளைஞராக இருப்பதால்தான்
சொல்கிறேன். அன்னை இந்திரா காந்தி அவர்கள் எதனால்
தோற்கடிக்கப்பட்டார்கள்? காந்தியடிகள் ஏன் கொலை செய்யப்
பட்டார்? இதற்கு மூன்று காரணங்கள்தான் இருக்கின்றன. அதில்
ஒன்று, இந்து முஸ்லீம்கள் சமத்துவமாக, ஒற்றுமையாக இருக்க
வேண்டும் என்று சொன்னது. அரிஜனங்களுக்கும், தாழ்த்தப்
பட்ட மக்களுக்கும் இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கு முடிவு
கட்ட வேண்டும் என்று சொன்னது. அவர்களுக்கு எவ்வளவு
காலத்திற்கு கொடுமைகள் இழைக்கப்படுகின்றனவோ அவ்வளவு
காலத்திற்கு அவர்களுக்கு உதவி செய்வோம் என்று சொன்னது.
இந்திராகாந்தியின் மகனாக இருந்தாலும் இந்தக் கொடுமைகளை
எதிர்த்தே தீருவேன் என்று சொன்னதாலே எலக்‌ஷனிலே அவர்
தோற்கடிக்கப்பட்டார்.

(முற்பகல் 11-30)

அதுபோல் உத்தமர் காந்தி அவர்கள் கொலை செய்யப்
பட்டார்கள். ஆகவே மத்திய சர்க்கார் தவறு செய்திருந்தால்
அதை நான் கண்டித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.



1984 மார்ச் 22]

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு உறுப்பினர் திரு.
இளையபெருமாள் அவர்கள் அந்த அரசாங்கத்திற்காக வக்கா
லத்து வாங்குவதை நான் குறை சொல்லவில்லை. ஆனால் தீண்
டாமை குறித்து, ஆதிதிராவிடர்களின் நலன் குறித்து நான் திரும்
பவும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தீண்டாமையைப்
பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் நினைத்திருந்தால் என்
றைக்கோ அதற்கு ஒரு முடிவு கட்டி இருக்க முடியும். ஆகவே இப்
படிப்பட்ட பிரச்சினைகளில் தயவு செய்து மதிப்பிற்குரிய சுவாமி
சகஜானந்தா ஆகியோர்களின் பெயரே இருக்க வேண்டாம் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி இழுத்தால் நந்தனாரைப்
பற்றியும் அவருடைய முடிவைப் பற்றியும் கலைவாணர் அவர்
களின் கருத்துக்களையும் நான் இங்கே சொல்ல வேண்டி இருக்கும்.
சுவாமி சகஜானந்தா அவர்களை நான் என்னுடைய 5 வயதி
லிருந்தே பார்த்தவன். அவர் எந்த குளக்கரையில் இருந்தாரோ
அந்தக் குளக்கரையிலே நான் வாழ்ந்தவன். ஆகவே பெரியவர்
திரு. இளையபெருமாள் அவர்கள் மறைந்து போனவர்களைப்
பற்றி தயவு செய்து இங்கே இழுக்க வேண்டாம் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து திட்டவட்டமாகச் சொல்கிறேன், இன்றைய தினம்
தீண்டாமை இருக்கின்றது என்று சொன்னால், அப்படிப்பட்ட
கொடுமைகள் இருக்கின்றன என்று சொன்னால் அவற்றைத் தடுப்
பதற்கு எது தடையாக இருக்கிறதோ அதைத் தூக்கி எறிந்து
விட்டு, தந்தை பெரியார் அவர்களுடைய வழியிலும், பேரறிஞர்
அண்ணா அவர்களுடைய வழியிலும் நம்முடைய மதிப்பிற்குரிய
திரு. இளையபெருமாள் அவர்கள் பாடுபடுவார்களேயானால் நிச்ச
யமாக இவ்வளவு காலத்தில் பெரிய வெற்றி கிட்டியிருக்கும்.
ஆனால் அவற்றுக்கெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் பதவியும்,
மற்ற பதவிகளும் அவர்களுக்குத் தடையாக பல நேரங்களில்
இருந்திருக்கின்றன. பாவம் பெரியவர் இளையபெருமாள் அவர்
களுடைய நிலைமை அப்படி என்பதை எடுத்துக் கூறி கொள்
கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவர் அவர்
களே, அன்புள்ள அருமைச் சகோதரர் அவர்கள் நல்ல இளைஞர்.
இப்படி ஒரு நல்ல சந்தர்ப்பத்தை உருவாக்கி கொடுத்ததற்காக
நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதும் சொல்
கிறேன். 1964-லே பண்டித நேரு அவர்களால் நியமிக்கப்பட்ட
குழுவிலே இந்த இளையபெருமாள் தான் தலைவராக இருந்து
பணிகளை ஆற்றி இருக்கிறேன். ஆகவே பண்டித நேரு அவர்
களின் காலமாக இருந்தாலும் சரி, அன்னை இந்திரா காந்தி
அவர்களுடைய காலமாக இருந்தாலும் சரி எந்தப் பட்டமும்,
பதவியும் இந்த இளையபெருமாளுக்குக் காரியங்களைச் செய்
வதற்கு தடையாக இருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். ஆகவே இப்போதும் சொல்கிறேன். பெரியார் வழி.
அண்ணா வழி என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பயன்

இல்லை. தற்போது ஐ. சி. எஃப். பக்கத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் சேர்ந்து பணிபுரியும் பட்டதாரி ஆதி திராவிடர் ஒருவரை பேண்டையும் சட்டையையும் கழற்றி அடித்திருக்கிறார்கள். இதை எல்லாம் சொல்லியும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஆகவே பெரியார் வழி, அண்ணா வழி என்று சொல்லி ஏமாற்றிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கொடுமைகள் எங்கெங்கு நடைபெற்றாலும் அதைக் கண்டு பிடித்து நடவடிக்கைகள் எடுக்கின்றபோது யாரும் குறுக்கே நிற்பதில்லை. ஆகவே எந்தக் கட்சியிலே யார் இருக்கிறார்கள், அவர்கள் என்ன தவறு செய்கிறார்கள் என்று பார்ப்பது சரியில்லை. ஆகவே தனிப்பட்டவர்கள் தவறுகள் ஏதேனும் செய்வார்களேயானால் அதற்கு கட்சி காரணம் அல்ல. கட்சி சொல்லிக் கொடுத்து அவர்கள் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதில்லை. கட்சிகளிலே ஆதிதிராவிடர் மக்களும், மற்றும் பல்வேறு மக்களும் இருக்கிறார்கள். எனவே தவறுகள் தனிப்பட்டவர்களால் நடக்கின்றபோது அதற்காகக் கட்சியையும் பெரியாரையும், அண்ணாவையும் சுட்டிக்காட்டுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எல். இளையபெருமாள்: மாற்றுத்தலைவர் அவர்களே, நான் கோபமாகச் சொல்லவில்லை. ஆத்திரப்பட்டும் சொல்லவில்லை. அருமைச் சகோதரர் திரு. ராஜூ அவர்களுக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அருமைச் சகோதரர் திரு. ரகுமான் கான் அவர்களுக்கும் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற்சங்கத் தலைவர் திரு. குப்புசாமி அவர்களிடத்திலேயும், ஆர். டி. பாலு தி.மு.க. செயலாளர் அவர்களிடத்திலேயும் இந்தச் சம்பவம் குறித்து நோட்டீஸ் பிரின்ட் பண்ணி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே பெரியார் வழியையும், அண்ணா வழியையும் நான் குறை கூறவில்லை. சம்பவம் நடந்திருக்கின்றது என்பதைச் சொல்கிறேன். அப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றன என்கின்றபோது உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய இளையபெருமாள் அவர்கள் நல்ல முறையிலே அரசியல் விளக்கங்கள் எல்லாம் தெரிந்தவர்கள். ஆதி திராவிடர்களைப் பொறுத்தமட்டில் அண்ணா வழியில், ஐயா வழியில் வந்தவர்கள், நாங்கள். அந்த மக்கள் பேரில் எப்பொழுதும் அனுதாபம் உடையவர்கள். அந்தச் சமுதாயத்தின்மீது பற்றும் பாசமும் உடைவயவர்கள். சில தனி நபர்கள், இதுபோன்று மனோபாவம் உடையவர்கள் இருந்தால், யாராக இருந்தாலும் கண்டிக்கத்தக்கவர்கள்



ஆனால், அதற்காக இயக்கத்தையே ஆதி திராவிடர்களுக்கு விரோதமான இயக்கம்—திரு. இளையபெருமாள் அவர்கள் மட்டும்தான் ஆதி திராவிடர்களுக்காக இருப்பது என்ற உணர்வை ஏற்படுத்துவது தப்பாகும்.

திரு. கே. சௌந்திரராசன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே, குறிப்பிட்டார்கள், இந்திரா காந்தி அம்மையார் இந்த ஆதி திராவிடர்களுக்காக பல்வேறு வசதிகளைச் செய்து தந்தார்கள் என்று. நான் குறிப்பிட விரும்புவது, இந்திரா காந்தி அம்மையார் 1977-ஆம் ஆண்டு தோற்றார்கள். தோற்றதற்குப் பின்னால், திரும்ப 1980-லே வெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்றதற்குப் பின்னாலே இன்றைய தினம் வரை இந்தியாவினுடைய பிரதமராக இருக்கிறார்கள். இப்பொழுதாவது, திட்டவட்டமாக, இந்தச் சமுதாயத்தை மேம்படுத்துவதற்கு உரிய முறையிலே ஏன் ஒரு சட்டத்தைக் கொண்டு வரக் கூடாது? இங்கே சொன்னார்கள். 18% தாழ்த்தப் பட்ட மக்களுக்கு உரிமை தரப்படுகிறது என்று. 18% அவர்களுக்கு வேலை வாய்ப்பு உரிமை தரப்படுகிறது என்று சொன்னார்கள். 18% அவர்களுக்குக் கல்வி துறையிலே வசதிகள் செய்யப்படுகின்றன என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புவதெலலாம் 3,000 ஆண்டுகளாக வஞ்சிக்கப்பட்ட, ஒரு சமுதாயம், 3,000 ஆண்டுகளாக எந்தவிதமான வசதியும் பெறாத ஒரு சமுதாயம்— அவர்களுக்கு இன்றையதினம் கொடுத்திருப்பது கூட—10% தான் என்று சொன்னால், இன்றையதினம் உள்ள அந்த மக்களுடைய எண்ணிக்கை அடிப்படையிலேதான் அந்த 18% தரப்படுகிறதே தவிர, 3,000 ஆண்டுகளாக வஞ்சிக்கப்பட்ட அந்த சமுதாயத் தினருக்கு நிரந்தரமான பரிகாரம் தரும் வகையிலே ஏன் இந்திரா காந்தி அம்மையார் ஒரு சட்டத்தைக்கொண்டு வந்து ஒரு பத்தாண்டு களுக்கு எல்லா துறையிலும் 40% அவர்களுக்குத்தான் முன் சலுகை என்று சொல்லக்கூடாது? இன்றையதினம் சொன் னார்களே, ஐ.டி.ஐ. டைரக்டர், தாழ்த்தப்பட்டவர்கள் பதவிக்கு வருகிற காரணத்தால், திறமை குறைந்து விட்டது என்று சொன்னார்கள் இந்த நிலைமை 3,000 ஆண்டுகளாக வஞ்சிக்கப்பட்டதன் விளைவாக உருவானது. இந்த வஞ்சகத்தைப் போக்குகின்ற வகையிலே, அவர்களுக்கு மேலும் அதிகச் சலுகையைத் தந்து 40%, 50% என்று ஏற்படுத்தி இருந்தால் நிச்சயமாக இன்றையதினம் இந்த ஆதி திராவிடர்கள் இந்த அளவுக்கு அழுத்தப்பட்டிருக்க மாட்டார்கள்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன், இன்றைய தினம் படிக்க வருகின்றவர்களுக்கு இட வசதி வேண்டும் என்று சொன்னார்கள். படிக்க வேண்டுமென்ற உணர்வையே அங்கே ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு ஏதாவது Guides வழிகாட்டும் அமைப்புகள் இந்திய பேரரசு உருவாக்கி இருக்கிறதா? யாராவது தன்னிச்சையாகவந்து படிக்க வசதி யில்லாதவர்களுக்கு சலுகை என்று சொல்கிறோமே தவிர, இங்கே

இருக்கிற ஆதி திராவிடர்கள் எந்த இடத்திலும் போய்
வாழ்வதற்கு, சமுதாயத்திலே மற்ற மக்களோடு உரிய நியாயம்
பெறுவதற்கு, அந்த உரிய நியாயம்பெறுவதன் மூலமாக, மற்ற
மக்களோடு போட்டியிடுகின்ற அளவுக்கு அந்தச் சமுதாயம்
உயர்வதற்கு ஏதாவது செய்திருக்கிறார்களா என்று கேட்டால்,
மற்றவர்களுக்கு உள்ளதைப் போலச் செய்திருக்கிறார்களே தவிர,
அவர்களுக்காக என்று எதுவும் செய்யவில்லை மத்திய அரசு
என்பதை இந்த நேரத்திலே நாம் குறிப்பிட விரும்புகிறேன்.

அதையும் தவிர, இந்த நாட்டிலே அவர்களுக்கு நிரந்தரமாக
படுகுழி தோண்டி வைத்துக் கொண்டிருக்கிற பெரிய ஜாதிக்காரர்
கள், உயர்ந்த ஜாதிக்காரர்கள், இன்னும் சொல்லப்போனால்,
மதத்தின் பேராலே தீண்டாமை இருக்கவேண்டுமென்று சொல்லக்
கூடியவர்கள் எல்லாம் இன்றையதினம் அனுபவித்து இருக்கிறார்கள்
என்று சொன்னால், இவற்றிற்கெல்லாம் ஒட்டுமொத்தமான
குற்றத்தை நான் மத்திய சர்க்காரைத்தான் சாட்ட முடியுமே
தவிர அதற்கு மாநில சர்க்கார் எந்த வகையிலேயும் பொறுப்பல்ல.

மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் நீண்ட நாள்
உறுப்பினர், ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக
சட்டமன்றத்திலேயும் பாராளுமன்றத்திலேயும் இருக்கிறார்.
இனிமேலாவது அப்படிப்பட்ட காரியத்திற்குத் தன்னை
அர்ப்பணித்துக்கொண்டு, சமுதாயத்திற்கு பாடுபட வேண்டும்
என்றால், இந்தச் சட்டமன்றப் பதவி, பாராளுமன்ற பதவி
யும் அதற்குத் தடைக் கல்லாக இருக்கிறது என்று தூக்கி
எறிந்து சகஜானந்தா வழியிலே வருவார்களா என்று நான்
அறிய விரும்புகிறேன்.

அடுத்து நான் கூற விரும்புவது எல்லாம், இப்படிப்பட்ட
சமுதாயம் வளர வேண்டுமானால், வாழ வேண்டுமானால்,
நிச்சயமாக இந்த அரசாங்கம் அவர்களுடைய முன்னேற்றத்தை
மனதிலே கொண்டு அவர்களுக்குப் பல்வேறு வகையிலே
சலுகைகள் தருவதோடு அவர்களுக்கு அந்தச் சலுகை
களுடைய பலன்கள் போய் சேருகின்ற அளவுக்கு அந்த
நிர்வாகத்தை நடத்துகின்றவர்களை உருவாக்க வேண்டும்.
அப்படி உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் அந்தப் பலன்
கிடைத்ததா என்பதைக் கணக்கிட்டுப் பார்க்கின்ற வகையிலே
நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றை நான் கேட்க விரும்புகிறேன், இன்று
பல்வேறு மாவட்டங்களிலே பிற்படுத்தப்பட்ட மாணவர்
களுச்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் பல்வேறு
தடைகள் இருக்கின்றன. பள்ளி, கல்லூரி விடுதிகளில் மனு
செய்கின்ற மாணவர் அத்தனை பேருக்கும் இடம் கிடைக்
கின்ற நிலைமை கிடையாது. அதை நான் இங்கே குறிப்பிடு
கின்றபொழுது, குறிப்பாக, திருச்சியிலே கூட பல்வேறு



கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரியிலே பயில்வதற்கு
ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் வருகிறார்
கள், மனுச் செய்கிறார்கள். மனு செய்பவர்களிலே ஏறக்
குறைய 20 சதவீதம் மாணவர்களுக்குகூட இடம் கிடைக்காத
நிலைமை இருக்கிறது. ஆகவே, அவைகளை எல்லாம் நம்
முடைய ஆதி திராவிடர் நலத் துறையினுடைய அமைச்சர்
அவர்கள் மனதிலே கொண்டு, அவர்கள் எவ்வளவு பேர்கள்
மனு செய்கிறார்களோ, அவ்வளவு பேர்களுக்கும் இடம்
கிடைக்கிற வகையிலே எதிர்காலத்திலே திட்டம் தீட்டி
விடுதிகள் திறக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11–40.)

அடுத்து அச்சகத் துறைக்கு செல்லலாமென்று நினைக்கி
றேன். அச்சகத்துறையில் பல்வேறு நன்மைகளைச் செய்திருக்
கிறார்கள். பொதுவாக அச்சகத்துறையில் பணியாற்றுகிற
தோழர்கள் குடும்பத்தில் 31 வயதிற்கு மேற்பட்டவர்
களானாலும் 41 வயது வரையில் அவர்களுக்கு வேலை
கிடைக்கவேண்டுமென்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.
அதை நான் பாராட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அச்சகத்துறையில் பணியாற்றுகிறவர்கள் இன்றைய
தினம் வேலை செய்கிறபோது இறந்துவிட்டால் இறந்து
விட்ட உடனே அந்தக் குடும்பத்திலே இருக்கிறவர்களுக்கு
வேலை என்கிற நிலைமையை மாற்றி இறந்து விடுபவர்
களுடைய குடும்பத்திலே வயதடையாத தோழர்கள் இருந்தாலும்
அவர்கள் வயதடைகிறபோது வேலை கிடைக்கும் என்ற
வாய்ப்பை உருவாக்கி இருக்கிறார்கள். அதை நான்
பாராட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அச்சகத்துறையை நவீனப்படுத்துகிற முறையிலே
நம்முடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைத்
தீட்டி 50 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கி இருக்கிறார்கள்.
அதையும் நான் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.
அப்படி பாராட்டுகிறபோது என்னுடைய வேண்டுகோளையும்
வைக்க ஆசைப்படுகிறேன். அச்சகத்துறையில் பணியாற்று
கிறவர்கள் அரசு ஊழியர்கள் என்று சொல்லப்படுகிறது.
அதே நேரத்தில் வேறொரு இடத்தில் கேட்கிறபோது
அவர்கள் பணியாளர்கள் என்று சொல்லப்படுகிறது. நான்
கேட்க விரும்புவதெல்லாம் அரசு ஊழியர்களுக்கு 18
மாதம் மருத்துவ ஓய்வு தரப்படுகிறது. ஆனால் அச்சகத்
துறையில் இருப்பவர்களுக்கு 12 மாதம் மருத்துவ ஓய்வுதான்
தரப்படுகிறது. அச்சகத்துறையில் பணியாற்றுகிறவர்கள்
நச்சுத்தன்மைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். பலநேரங்களில்
முடவாதத்திற்கு ஆளாகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு

பரிகாரம் கிடைக்கிற வகையில், 12 மாதம் மருத்துவ ஓய்வு என்று இருப்பதை, அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதைப் போல 18 மாதமாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்தத் துறையில் இயந்திரத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு ரிஸ்க் (Risk) அலவன்ஸ் கொடுப்பதுபோல உடனடியாக தருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே இரவு நேரங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு 1½ ரூபாய் டீ, பன் சாப்பிடுவதற்காகக் கொடுக்கிறார்கள். 1½ ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் நிர்ணயித்திருப்பது மிகவும் குறைந்தத் தொகையாக இருக்கிறது. அந்த 1½ ரூபாயில் ஒரு டீ கூட சாப்பிடமுடியாது. அதை ஐந்து ரூபாயாக கொடுத்தால் ஓரளவிற்கு வசதியாக இருக்கும். அதை இன்றையதினம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று பெரிதும் நம்புகிறேன். அமைச்சர் அவர்கள் சிரிப்பதிலேயிருந்து என்னுடைய நம்பிக்கை மேலும் உறுதியாகிறது என்று நினைக்கிறேன்.

10 தொழிலாளர்களைக் கொண்டு 151 ஆண்டுகளுக்கு முன்னால் அச்சகப்பிரிவு உருவானது. அதிலே இன்றைய தினம் 6,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்கிறவர்களுக்கு 300 வீடுகள் தான் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. சென்னை ஒரு வளர்ந்து வருகிற நகரம். இப்பொது அவர்கள் தங்கசாலையில் வேலை செய்கிறார்கள். அங்கே வேலை செய்கிறவர்களுக்கு நிரந்தரமாக வீடு கட்டிக் கொடுக்கிற வகையில் 232 வீடுகள் கட்டுவதற்கு அறிவித்திருக்கிறார்கள். இதை அதிகப்படுத்தி அங்கே வேலை செய்கிற அத்தனைப் பேர்களுக்கும் வீடு கிடைப்பதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அங்கே சீருடைகள் வழங்கப்படுகின்றன. அவை ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் வழங்கப்படுகிறது. அதை மாற்றி அங்கே பணியாற்றுகிற அத்தனை பேருக்கும் சீருடை கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அந்த அச்சகத்தினுடைய இயக்குநர் அண்ணாசாலையில் போய் இருக்கிறார். அவர் அங்கே இருக்கிறபோது இங்கே தங்கசாலையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்தால், அவர்கள் அதைப்பற்றி இவருக்கு எழுதுவது,





இவர் பதில் அவர்களுக்கு எழுதுவது என்று ஒரு நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையினால் தேவையில்லாமல் 3 மாதம், 6 மாதம் காலதாமதம் ஆகிறது. ஆகவே டைரக்டர் அவர்களை அச்சகத்திற்கே மாற்ற வேண்டும். அல்லது எல்லோரும் சேர்ந்து இருக்கின்ற வகையில், அச்சகத்தை வேறொரு விரிவான இடத்தில் மாற்றி, அங்கே அந்த அதிகாரி இருக்கிற நிலைமையை உருவாக்கினால், அந்த அச்சகத்துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு ஒரு இரட்டை ஆட்சி முறை என்பது இல்லாமல் ஒரே சூழ்நிலையில் அவர்கள் விரைந்து வேலைகளை முடிப்பதற்கு உதவியாக இருக்கும்.

அடுத்து அங்கே வேலை செய்கிறவர்கள் சீனியாரிட்டி அடிப்படையில் வெளியூர்களுக்கு மாற்றப்படுகிறார்கள். மாற்றியதற்கு பிறகு அங்கே இருக்கிற அதிகாரிகள் தங்களுடைய திறமையை இதிலே பயன்படுத்தி, அங்கேயிருந்து சீனியாரிட்டியிலே வெளியே சென்றவர்களை விட்டுவிட்டு, அங்கே இருக்கிறவர்களிடத்தில் இருக்கிற சீனியாரிட்டி எனற அடிப்படையில், வெளியே போனவர்கள் வரமாட்டார்கள் என்ற அடிப்படையில் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு பணி உயர்வு கொடுக்கிற நிலைமை அங்கே இருக்கிறது. இதற்கு நல்ல வகையிலே பரிகாரம் காண வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அச்சுத் தொழில் என்றால் நச்சுத் தொழில் என்று சொல்வார்கள். அங்கே அவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கிற வகையில் தனியாக டாக்டர்கள் நியமித்து இரத்தப் பரிசோதனை, மற்ற பரிசோதனைக் கூடங்கள் அங்கே இருக்க வேண்டும். அங்கே இருக்கிற வசதிகளை சரியான முறையில் பயன்படுத்துகிற நிலைமை இல்லை. ஏதோ பெயருக்கு அந்த வசதியை கொடுத்தோம் என்ற அளவிற்கு இல்லாமல் தொழிலாளர்களுக்கு பயன்படுகிற வகையில் அவைகளை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில், நிர்வாகத்திற்கும் பணியாளர்களுக்குமிடையே உள்ள உறவு எப்பொழுதும் போல் சுமுகமாக இருந்து வருகின்றது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நான அங்கே சென்றபோது என்னிடம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் '' போராட்டத்திற்கு காரணம் நிர்வாகம் தான் '' என்று அந்தத் தொழிலாளர்கள் சொன்னார்கள். ஆகவே நிர்வாகத்தின் இந்த நிலையில் மாற்றத்தை உருவாக்குகிற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் கோரிக்கைகள் தீர்க்காத நிலை அங்கே இருப்பதாக சொல்லப்படுகிறது. அவர்களுடைய தலைவராக முன்னாள் ஜனாதிபதி கிரி அவர்கள் இருந்திருக்கிறார்கள். ராஜாஜி இருந்து இருக்கிறார்கள். வேறு பல தலைவர்கள் இருந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையில் இருந்தும் அந்தத்

தொழிலாளர்கள் இன்றைக்கு மனக் குறையோடு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இளைஞர், ஆர்வம் மிக்கவர், முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர், அந்த வகையிலே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத்துறையைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். அவர்களுக்கு வீட்டுமனை கொடுப்பதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுகிறது. ஒரு நிலத்தை எடுத்துக் கொள்வதற்கு அதிகாரி ஒருவர் நோட்டீஸ் கொடுத்தால், கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவர் மாற்றப்படுகிறார். வேறு அதிகாரி வருகிறார். ஏற்கனவே போட்ட நோட்டீஸ் போய் விடுகிறது. அல்லது அவர் கைவிட்டு விடுகிறார். இதனால் நிலங்கள் கையகப் படுத்துவது தாமதமாவதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதிலும் தாமதம் ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, அவர்களுக்கு நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுக்க விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டு, அந்த மக்களுக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டித் தந்து இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டி, அமைச்சர் அவர்களையும் பாராட்டி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு சகோதரர் சௌந்தரராஜன் அவர்கள் பேசுகிறபோது இரண்டு விஷயங்களைச் சொன்னார் கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி என்பது ஸ்டேட் சப்ஜக்ட், அதைப் போலவே, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியிருந்தாலும், அதை அமல்படுத்துகிற பொறுப்பு ஸ்டேட்டுக்குத்தான் இருக் கிறது. அதாவது சிவில் ரைட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட் என்று மத்திய அரசு நிறைவேற்றியிருந்தாலும் மாநில அரசுதான் அந்த ஆக்ட்டை அமல்படுத்தும் உரிமை பெற்று இருக்கிறது. ஆகவே, இவற்றைச் செய்ய வேண்டியது மாநில அரசின் கடமையாகத் தான் இருக்கிறது என்பதை அவருக்கு நான் நினைவூட்ட விரும்பு கிறேன்.

அவர் இன்னொன்றைச் சொன்னார்கள். நான் பதவியைத் துறந்து விட்டு வரவேண்டும், அந்த மக்களுக்கு சேவை செய் வதற்கு கட்சி குறுக்கே இருந்தால், பதவியை விட்டு வரவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். சந்தர்ப்பம் வந்தால் அவசியம் செய்வேன்.

பெரியார், அண்ணா போன்றவர்கள் கொள்கையை நான் தவறு என்று சொல்பவன் அல்ல. விபூதி பற்றிச் சொன்னார்கள். நாங்கள் கடவுள் என்று சொல்கிறோம். நீங்கள் இயற்கை என்று





சொல்கிறீர்கள். உங்கள் வீட்டிலே இருக்கும் தாய்மார்கள இன்றைக்கும் கோவிலுக்குப் போய்க் கொண்டு தான் இருக்கிறார் கள். ஆகவே நான் யாரையும் இதற்காகக் குறை சொல்லவில்லை.

மத்திய அரசு செய்யவில்லை என்று சொன்னார்கள். இந்த மக்களுக்கு அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டு இருந்த சலுகை 1980 ஆம் ஆண்டிலே முடிவு அடைய இருந்ததை மேலும் 10 ஆண்டு காலத்திற்கு இந்திரா காந்தி அவர்கள் நீட்டித்துத் தந்து இருக்கிறார்கள் என்பதை திரு. சௌந்திரராஜன் மறந்து விட வேண்டாம்.

மாநில அரசுக்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது. ஆனால் எடுக்கவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக் காட்டி னேன். நான், இளையபெருமாள் உண்ணாவிரதம் இருந்தேன் அந்த மத்திய அரசு டைரக்டரைக் கண்டித்தது என்று சொன்னால் எந்தக் கட்சி சார்பிலும் நான் அதைச் செய்யவில்லை. அந்த மக்களுக்கு நன்மை செய்யப்பட வேண்டும் என்பதற்காகத்தான் செய்தேன்..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : திரு. வே. இரா. ஜெயராமன் : ஒரு உறுப்பினர் பேசியதற்கெல்லாம் திரும்பவும் பதில் சொல்லிக் கொண்டிருப்பது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. (குறுக்கீடு).

திரு. கே. சௌந்திரராசன் : மாநில சர்க்கார் செய்யவில்லை என்று சொன்னார்கள். மத்திய சர்க்கார் நினைத்தால் எதையும் செய்ய முடியும். மாநில சர்க்கார் கொண்டு வரும் பல்வேறு மக்கள் நலச் சட்டங்கள் சுப்ரீம்கோர்ட் தடை கொடுத்து தடுத்து வருகிறது. அதை மாற்றுவதற்கு அரசியல் சட்டத்தினைத் திருத்துவதற்கு மத்திய அரசு சட்டம் கொண்டு வருவதன் மூலம் இந்த நிலைமையைத் தவிர்க்க முடியும். அந்த வகையில் இந்திய சர்க்கார் ஏன் செய்யவில்லை? (குறுக்கீடு).

(முற்பகல் 11--50)

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதில் முக்கியமான விஷயம் மத்திய சர்க்கார் பற்றியது. மற்றொன்று இளைய பெருமாள் பதவியை விட்டு வெளியே வரவேண்டுமென்று நல்ல எண்ணத்தோடு சொல்லியிருப்பது. மூன்றாவதாக எஜுகேஷன், லா அண்ட் ஆர்டர் எல்லாம் ஸ்டேட் சப்ஜெக்ட். எல்லாக் குழந்தைகளும் கட்டாயமாகக் கல்வி பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி வருகிறார்கள்.

[திரு. எல். இளையபெருமாள்] [1984 மார்ச் 22

அதற்குக்காரணம் கல்வி ஸ்டேட் சப்ஜெக்ட் என்பதுதான். ஆகவே கல்வி அளிக்கும் திட்டத்தை நான் குறை சொல்லவில்லை; அதிலே இருக்கிற குறைகளை நீக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

மற்றொன்று...... ** ** **

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்) : உறுப்பினர் அவர்கள் இப்போது குறிப்பிட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : நீக்க வேண்டுமென்றால் நீங்கள் நீக்கி விடுங்கள். நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

இந்த சபையில்கூட பல்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள், மதத்தைச் சேர்ந்தவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ஜாதி பேரால் மாநாடு போடுகிறார்கள். ஜாதி பேரால் அமைச்சர்கள் கூட நியமிக்கப்படுகிறார்கள். இளையபெருமாளும் அப்படித்தான். இதை மறுத்துப் பயனில்லை. இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் எவ்வளவோ செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். ஏழை எளியவர்களுக்கு எல்லாம் உதவி செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். சமுதாயத்தில் பின் தங்கியவர்களுக்கு எல்லாம் நல்லது செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். அவர்கள் நல்லெண்ணத்தோடு இந்த மன்றத்திலே கொண்டு வந்த ஒரு சட்டத்தை அத்தனை பேரும் எதிர்த்ததை யாரும் மறந்துவிட வேண்டாம். அதே கதிதான் இந்திரா காந்தி அம்மையாருக்கும் அங்கே இருக்கிறது. அதையும் மீறித்தான் அவர்கள் சில நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாற்றுத் தலைவரவர்களே, இங்கே நடைபெறுகின்ற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்த கட்சியினுடைய கொள்கைகளைத் தெரிவிக்கும் வகையில் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் விவாதம் மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் நடைபெறுவது போல் இருக்கிறது. இந்த மன்றம் இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிற மானியத்தைப் பற்றிப் பேசாமல் இப்படியே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தால் எதிலே போய் முடியும் என்று தெரியவில்லை. ஆகவே மானியக் கோரிக்கைகள் மீது உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1984 மார்ச் 22]

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவரவர்களே, ஆதி திராவிட மக்களுக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பம், சூழ்நிலைகள் மிக மிகக் குறைவு. அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய முக்கியத்துவம் கிடைக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லும்போதுகூட ஒன்றைக் குறிப்பிட்டார்கள். வெள்ளைக்காரர்கள் 1920-ல் கொண்டு வந்த இந்தச் சமுதாய மக்களைப் பற்றிய......

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கார் ஆதி திராவிட மக்களுக்கு எந்த அரசும் செய்யாத அளவுக்கு செய்து கொண்டிருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் ஏற்கெனவே பல்வேறு வழி வகைகளை எல்லாம் சொன்னார்கள். நான் இனிமேல் சட்டமன்ற உறுப்பினராக வரப் போவதில்லை என்று ஒரு தடவை கூறினார். ஆகவே,

** ** **

இங்கே கருத்துக்கள் சொல்வது சரியல்ல.

திருமதி டி. யசோதா : இதை எப்படி நீங்கள் அலவ் பண்ணுகிறீர்கள்? அமைச்சர் இப்படிச் சொல்வது சரியல்ல,

திரு. என். எஸ். வி. சித்தன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். பிரச்சினை இப்போது ஆதி திராவிடர் நல மானியத்திலிருந்து வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ** என்று சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும். அவர்கள் அந்த சமுதாயத்திற்காக நீண்டநாள் உழைத்து வருகின்ற காரணத்தால், அந்த அனுபவத்தின் காரணமாக சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) : அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலன் பற்றிய விவாதம் நடக்கிறது. ஆதி திராவிடர் நலன் பற்றி பேசும்போது, அவர்களுக்கு கிடைக்கின்ற சலுகைகள், இன்னும் பல்வேறு நிலைகளைப் பற்றிப் பேசலாம். ஆனால் இங்கே உள்ள உறுப்பினர்கள், ஆதி திராவிடர்கள், ஆதி திராவிடர்கள் அல்லாதவர்கள் என்பது மாறி போய் விடாமல், எல்லோரும் சமத்துவமாக ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் இலட்சியம். குறிப்பாக ஆதி

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திராவிடர்களைப் பற்றிப் பேசும்போது, அந்த இனத்தைச் சார்ந்
தவர்கள் வாதாடுவதைவிட மற்றவர்கள்தான் நிறைய பேச
வேண்டும். அவர்கள் பேசுவதன் மூலம் தான் நாம் எதிர்பார்க்
கின்ற, நாம் விரும்புகின்ற அந்த முற்போக்கு சமுதாயத்தை
அமைக்க முடியும். சலுகைகளையும், வசதிகளையும் கேட்பது
ஒருபுறம் இருக்கட்டும். அதே நேரத்தில் எல்லா ஜாதிக்காரர்
களும் அல்லது ஆதி திராவிடர்கள் அல்லாதவர்களும், ஒன்றாக
இணைந்து, அவர்களை முன்னேற்ற வேண்டுமென்பது ஒன்று.
ஒன்றுக்கு வாதாடப் போய் இன்னொன்று என்றைக்குமே நிறை
வேறாத நிலைமையை உருவாக்குகிறோமோ என்ற ஐயம் ஏற்
படுகிறது. ஆகவே, ஆதி திராவிடர்கள் நலன் பற்றி ஆதி
திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் பேச வேண்டும்.
அவர்கள் தான் வாதாட வேண்டும் என்ற நிலைமை வரும்போது,
நாம் எதிர்பார்க்கின்ற நிலைமை வராது. எனவே மற்றவர்களும்
பேசவேண்டும். இடையிலே வாதங்களுக்கு நிச்சயமாக இடமே
யில்லை. நாம் எல்லோரும் அவர்களுடைய நலனுக்காகப்
பேச வேண்டும். அப்படிப் பேசும்போது நல்ல கருத்துக்கள்
இடம் பெற வாய்ப்பிருக்கிறது. எனவே ஆதி திராவிடர் நலன்
பற்றிய விவாதத்தில், சூடான விவாதத்திற்கு இடமேயில்லை
என்பது என் கருத்து. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் தங்கள்
மேலான கருத்துக்களை சூடான விவாதத்திற்கு இடம் இல்லாமல்
தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Thiru L. ILAYAPERUMAL: Sir, he has mentioned my name. I want to reply.

Mr. CHAIRMAN

(Thiru V. R. JAYARAMAN): You have already replied.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, நம்
முடைய கல்வியமைச்சர் அவர்கள் சொல்வது யதார்த்தமான
நிலை. அதிலே எனக்கு மாற்றம் இல்லை. அதை நான் வர
வேற்கிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்
கள் சொன்னபோது, * * என்று சொன்னார்கள். நான்
வருத்தப்படவில்லை. அவருக்குத் தெரிந்த தமிழ் அதுவாக இருக்
கலாம். என்னைப் பொறுத்த வரையில், வெள்ளைக்காரன் காலத்
தில் அடிபட்டு, அன்றிலிருந்து இன்று வரையில், * * ஏற்
படாமல் இருக்கிறேன். * * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், உண்மையான ஜன
நாயகம், நடைபெற்றுக் கொண்டிருக்கிற கட்சி, உலகத்திலேயே
இருக்கிறது என்று சொன்னால், அது அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். * * * *

---

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்
றப்பெற்றது.





மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெய
ராமன்) : திரு. எல். இளையபெருமாள் * என்று சொல்லி
யிருந்து ஏற்கெனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றதை
ஒட்டி குறிப்பிட்டதும், உள்ளாட்சித் துறை அமைச்சர் * *
என்ற சொல்லிலிருந்து குறிப்பிட்டதும், அவைக் குறிப்பிலிருந்து
நீக்குமாறு ஆணையிடுகிறேன்.

*திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை
மான்யத்தின் மீதும், அச்சகத்துறை மான்யத்தின் மீதும்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்
துக்களை உங்கள் முன் வைக்க இருக்கிறேன். இங்கே பல பேர்
பல சர்ச்சைகளில் ஈடுபட்டதால் நான் பேசுவதற்கு கொஞ்சம்
அதிக நேரத்தை ஒதுக்கித்தருமாறு முதலிலேயே கேட்டுக்கொள்
கிறேன்.

நலத்துறையின் மூலமாக இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்
கிற புத்தகத்தைப் பார்க்கிறபோது, 1974 ஆம் ஆண்டு பிப்ரவரித்
திங்களிலிருந்து, ரூ. 4,000-யில் ஹரிஜன மக்களுக்கு வீடு கட்டிக்
கொடுக்க அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக
சர்க்கார் திட்டம் உருவாக்கியிருந்ததை இங்கே எடுத்துக் காட்டி
யதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதற்கண்
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

இரண்டாவதாக, இந்தச் சர்க்கார் வந்ததற்குப் பின்னால்
4 ஆயிரம் ரூபாய் கடனாகவும், இதிலே 600 ரூபாயை மானியமாக
வும், எஞ்சிய 3,400 ரூபாயை வட்டியில்லாத கடனாகவும்
கொடுப்பதாக தெரிவித்து, மீண்டும் 1982-83 ஆம் ஆண்டும்,
அதற்குப் பின்னாலேயும் 4 ஆயிரம் ரூபாயிலிருந்து, 6 ஆயிரம்
ரூபாய் என்று ஆக்கப்பட்டதாக இங்கே சொல்லப்பட்டிருக்
கிறது. ஆனால் இந்த 6 ஆயிரம் ரூபாய் கொடுக்கின்ற நேரத்தில்
இந்த ஆண்டு அதை மானியமாகக் கொடுத்து வருகிறோம் என்று
அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சி.
ஆனால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட இந்தக் கடன், 1981-82,
மற்றும் 1982-83-ஆம் ஆண்டுகளிலே கொடுக்கப்பட்ட வட்டி
யில்லாத கடனையும் இந்தச் சர்க்கார் தள்ளுபடி செய்யுமா
என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய
பதில் உரையில் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். அப்படிக் கொடுக்கப்பட்ட இந்த ரூ.6 ஆயிரம் அவர்களுக்
குப் போதவில்லை. முன்பு இருந்ததைவிட உதாரணமாக 500
கோடி பட்ஜெட் இருந்தது என்றால் தற்போது நம்முடைய
தமிழகத்தின் நிதிநிலை 2,000 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்
திருக்கின்றதை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலையில்
நான்கு மடங்காக ஆனதற்குப் பின்னால், இந்த 4,000 ரூபாய்
என்பது குறைந்த பட்சம் 16,000 ரூபாயாக உயர்த்தித் தரப்பட
வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக்

கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், இன்றுள்ள விலைவாசியில் சிமெண்டை வைத்து அவர்களால் வீடு கட்ட முடிவதில்லை. கான்கிரீட் போட்டு கட்ட முடிவதில்லை. அதற்குப் பதிலாக, சேற்றாலே, சகதியினாலேதான் இந்த வீட்டைக் கட்டுகிறார்கள். அதே நேரத்தில் மேலே கான்கிரீட் போடாமல் ஓடு போடுகிறார்கள். அதை ஒட்டைப் போடுவதற்கு அவர்கள் பனைமரத்தில் இருந்து செய்யப்பட்ட துண்டுகளை பயன்படுத்துகிறார்கள். எனவே இப்போது கொடுக்கப்படும் 6 ஆயிரம் ரூபாயில் அவர்களால் சிமென்டை வைத்துக் கட்டமுடியவில்லை. எனவே இந்தத் தொகையை கூட்டித் தந்தால் அவர்கள் நிரந்தரமான முறையில் சிறப்பாக வீட்டைக் கட்டிக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு இந்தக் கழிப்பிடம் கட்டுகிற நேரத்தில் நாம் பார்க்கிறோம். அவைகளை இன்று நாம் கட்டுகின்றபோது எவ்வளவோ, பணத்தைச் செலவு செய்து நாம் கட்டுகின்றோம். அந்தக் கழிப்பிடங்கள் எல்லாம் சிமென்ட்டினாலே கட்ட வேண்டும். அதற்குக் காங்கிரீட் போட வேண்டும் என்று சொல்கிறார்கள் ஆனால் இந்த ஆதி திராவிடர்களுக்காக கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகள் சகதியிலும், சேற்றிலும்தான் கட்டப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. இது சரிதானா? முறைதானா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து அவர்கள் தொழில் செய்வதற்கு 2 ஆயிரம் ரூபாய் கடன் தருவதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் தங்களுடைய சொத்தை அடமானம் செய்து இதை வாங்க வேண்டியிருக்கிறது. எனவே இந்த 2 ஆயிரம் ரூபாயை தள்ளுபடி செய்வதன் மூலம், அவர்கள் தான் வைத்திருக்கிற வீட்டை அல்லது சொத்தை வேறு இடத்தில் அடமானம் செய்வதற்கு வசதியாக இருக்கும். எனவே அந்த அடிப்படையில் இந்த 2 ஆயிரம் ரூபாய் கடனை அமைச்சர் அவர்கள் நிச்சயமாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே ஆதி திராவிடர்களுக்கு சாண எரிவாயுத் திட்டம் என்ற பெயராலே முன்னாலே 75 சதவீதம் மானியம் வழங்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் 20 சதவீதம் மானியம் கொடுக்கக்கூடிய நிலையிருக்கிறது. அதை மாற்றி, முன்னாலே கொடுத்ததைப் போல் 75 சதவீதம் அந்த மக்களுக்கு கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஈமச் சடங்கிற்காக 50 ரூபாய் கொடுக்கிறார்கள். மகிழ்ச்சி, நன்றி. ஆனால் இன்றைய தினம் 50 ரூபாயிலே இதைச் செய்ய முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தத் தொகையை குறைந்த பட்சம் 100 ரூபாய் அளவிற்காவது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து இந்த மின் விளக்கு இருக்கிறதே இதை குடிசைக்கு ஒன்று போடப்பட்டிருக்கிறது. இதை வேகமாக நகரப் பகுதிகளுக்கும் போட்டால் சிறப்பாக இருக்கும். நகரியத்திலே, நகராட்சிகளிலே இந்த மாதிரி மின் விளக்கு போடுகின்ற திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். இதன் மூலம் அரிசன மக்களுக்கு நல்ல பயன் விளைவிக்கின்ற தன்மைகள் வரும், எனவே அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் மூலமாக இதை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய பூவிருந்தவல்லி தொகுதியில் அரிசன மாணவர், மாணவியர்களுக்கு என்று ஒரு விடுதி இருக்கிறது. அது எப்போதோ உருவாக்கப்பட்டது. 1975-ஆம் ஆண்டிலே அந்த தங்கும் விடுதி கட்டப்பட்டது. 1977-ஆம் ஆண்டிலே அது திறக்கப்பட்டது. அந்த விடுதியில் அதிகமான அளவில் பிள்ளைகளைச் சேர்க்கக்கூடிய வசதிகள் இருக்கின்றன. அங்கே அதிகமான மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்று தொடர்ந்து 6 ஆண்டுக்காலமாக வாதாடிக்கொண்டிருக்கிறோம். தற்போது 120 பேர்கள் படிக்கிறார்கள். அந்த எண்ணிக்கையை 200 ஆக ஆக்க வேண்டும். அதைப்போலவே மாணவிகள் 30 பேர்கள் தான் இருக்கிறார்கள். அதை 150 பேர் ஆக்க வேண்டும் என்றும், இதனால் என்னுடைய தொகுதியில் உள்ள மாணவர்கள், மாணவியர்களுக்கு படிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சௌந்திரராஜன் அவர்கள் சொன்ன போது, இரவிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு, அச்சுத் தொழிலிலே இருப்பவர்களுக்கு 1.50 பைசா கொடுக்கப்படுகிறது, அது போதாது, நிச்சயமாக 5 ரூபாயாக அதை ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த நிலையில் பார்க்கிறபோது, இன்றைக்கு விடுதியில் தங்கி படிக்கின்ற மாணவர்களுக்கு நபர் ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் மாதம் 60 ரூபாய்தான் உணவிற்காக வழங்கப்படுகிறது. அது போதுமா? அது போதுமா போதாதா என்பதை சிந்தித்துப் பார்த்து, இன்னும் கொஞ்சம் அதிகமாக தொகையை அதற்கு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் பிள்ளைகளுக்கு ஓரளவு நல்ல உணவு கிடைக்க ஏதுவாக அமையும். இல்லையென்றால் அந்த இரண்டு ரூபாயை வைத்துக்கொண்டு எதுவுமே செய்ய முடியாது. அதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள்.

அதேபோல அவர்களின் கைச் செலவிற்காக 2 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதன் மூலமாகத்தான் அவர்கள் சோப்போ எண்ணெயோ வாங்க வேண்டும். படிக்கக்கூடிய மாணவர்களாக இருந்தால், அதிலேயே சோப்பு எல்லாவற்றையும் வாங்கிக்

கொள்ள வேண்டும் என்பது சரியல்ல, அது அவர்களுக்குப் போதாது. அதையும் கொஞ்சம் அதிகமாக உயர்த்தித் தர வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் அரிசன பிள்ளைகள் சிறப்பாகப் படிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கம், முந்தைய சர்க்காருக்கு இருந்ததைப் போலவே, இந்த சர்க்காருக்கும் இருக்கிறது. எம்.ஏ. படித்தவர்கள்தாம் தனி வகுப்பு நடத்த அவர்களுக்கு போதகர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் அந்த ஆசிரியர்களுக்கு தமிழக அரசு 90 ரூபாய்தான் கொடுக்கிறது. அதனால் அந்த ஆசிரியர்கள் அரிசன மக்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க ஆயத்தமாக இல்லை. ஆகவே, அதையும் உயர்த்திக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கோவில்பதாகை என்ற பகுதியிலே எந்த பக்கத்திலேயும் மயான பூமிக்கு பாதை இல்லை. அதைப் பலமுறை வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், அதிகாரிகளிடத்திலும் சொல்லியும் கூட, எந்தவித நடவடிக்கையும் கிடையாது. உடனடியாக அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் இப்போது பல குழுக்கள் இருக்கின்றன. உறுதிமொழிக் குழு, மற்றும் ஏனைய குழுக்கள் இருப்பதைப் போல, ஆதி திராவிடர் நலனுக்காகவும் ஒரு குழுவை அமைத்து, அதன் மூலமாக அவர்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல பலன்கள் அவர்களை அடையச் செய்யவும், அவர்களுக்காக வகுக்கப்படும் திட்டங்கள் சிறப்பாக நடைபெறவும், இடையிலே ஏதாவது தில்லுமுல்லுகள், முறைகேடுகள் நடந்திருந்தால் அவற்றைக் கண்டுபிடிக்கவும் ஏதுவாக இருக்கும் வகையில் இந்தக் குழுவை அமைக்க வேண்டும். மற்ற மாநிலங்களில் ஏற்கனவே அப்படி ஒரு குழு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது போல நம்முடைய மாநிலத்திலும் செய்து தருமாறு கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக இருக்கிற 94 லட்சம் ஆதி திராவிட பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, ஆதி திராவிட பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1984-85-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையினை வரவேற்றுப் பேசுவதில் நான் பெருமை அடைகிறேன், பெரு மகிழ்ச்சியடைகிறேன்.



தமிழகத்தில் தீண்டாமை என்பது முழுக்க முழுக்க முடிந்து விட்டது அல்லது அகன்று விட்டது, என்பதை நான் முதலிலே தெளிவாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படியே ஒரு சில இடங்களில், தீண்டாமை என்பது மற்ற மாநிலங்களில் இருப்பது போல இருந்தாலும் கூட, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சத்துணவுத் திட்டம் இங்கே தமிழ்நாட்டில் செயல்படுவதை அனைவரும் அறிவார்கள் - சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு சாப்பிட வரும் குழந்தைகள் எல்லாம், உயர் ஜாதி இந்துக்களின் குழந்தைகளாக இருந்தாலும் சரி, அரிசன குழந்தைகளாக இருந்தாலும் சரி, அவர்கள் இரண்டறக் கலந்து பழகும் விதத்தில்தான் அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து அமர்ந்து சாப்பிடும் விதத்தில் தீண்டாமை இல்லை என்று விளங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், தீண்டாமையை ஒழிப்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள், இன்னும் பல நல்ல திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள்.

'பொருள் அல்லவரை பொருளாகச் செய்யும் பொருள்' என்றார் வள்ளுவப் பெருமான். அப்படிப்பட்ட பொருள் உடையவர்களாக தாழ்த்தப்பட்ட மக்களை உருவாக்கிவிட்டால் எல்லா ஏற்றத் தாழ்வுகளும் அகன்றுவிடும் என்ற வகையில் அந்த அடிப்படையில் பொருளும் பொருளோடு அறிவும் ஆதி திராவிட மக்கள் பெற்று பயனுறும் வகையில் நல்ல முன்னேற்றத் திட்டங்கள் பல கொண்டு வந்து இந்த அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அந்த வகையில் வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விரிவாக்க அதிகாரியை நியமித்து ஆதி திராவிடர்களின் மேம்பாட்டிற்கான வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கியுள்ளதை நான் பாராட்டுகிறேன். அரசுத் துறை, அரசுப் பொதுத் துறை, கல்வி நிறுவனங்களில் 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறதா என கண்காணிக்க உயர் மட்டக் குழுவை இந்த அரசு அமைத்திருப்பது, ஆதி திராவிட மக்களின் நலனில் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

(பிற்பகல் 12.10)

அதைப் போலவே, மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையைத் தவிர மூலதனச் செலவு என்ற வகையில் 540.01 இலட்சம் கடன்கள், முன் பணங்கள் என்ற வகையில் 70.70 இலட்சம், கொத்தடிமை புதுவாழ்வு அளித்தல் என்ற வகையில் 15.02 இலட்சம் ஒதுக்கியுள்ளது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு ஆதி திராவிடர்-பழங்குடியினர் நல மேம்பாட்டில் எந்த அளவு கண்ணும் கருத்துமாக உள்ளது என்பதற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டாகும்.

1977 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரை, 21,848 வீடுகளும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் மூலமாக 94,526 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டதோடு, ஆறே ஆண்டுகளில் 1,28,203 மனைப் பட்டாக்கள் வழங்கியுள்ளது ஆதி திராவிடர் நலனில் அதிக அக்கறை செலுத்துகிற இந்த அரசு என்பதை விளக்குகிறது. இதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். நல்லவர்கள் பாராட்டுகிறார்கள். எல்லோரும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆதி திராவிடர்களுக்கு மேலும் சிறு தொழில் கடன் வசதி, ஆடு வளர்ப்பு, குடிசைத் தொழில், பால் உற்பத்தி சங்கங்கள் அமைப்பு, உழவு மாடு வாங்கக் கடன், மானிய வசதியில் பாசனக் கிணறு, சமுதாயக் கூடங்கள் அமைப்பு, குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு இது போன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நிறைவேற்றி வருகிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், மாணவ, மாணவிகளுக்கு உடை வழங்கல், கல்விச் சுற்றுலா, மாணவர்களுக்குப் பாட நூல் வழங்கல், ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள், குழந்தைகள் காப்பகம், தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி, சட்டப் பட்டதாரிகளுக்கு நிதியுதவி, கல்லூரி மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சித் திட்டம் போன்ற காரியங்களை நிறைவேற்றி வருகிறது மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு.

சத்துணவுத் திட்டத்தின் கீழ் பல ஆயிரக்கணக்கான ஆதி திராவிடப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது பாராட்டுக்குரிய செயலாகும். மேல்நிலைக் கல்வித் தேர்வில் மாணவர்களுக்கு 'காந்தி நினைவு பரிசுத் தொகை' வழங்கப் படுகிறது. இந்தத் திட்டம் அண்ணல் காந்தி அடிகளின் மேல் இந்த அரசுக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் விளக்குவதாக உள்ளது.

அடுத்து, ஆதி திராவிடர்களுக்கு வழங்கியுள்ள கடன்கள் முழுமையும் அரசு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பெற்று இருக்கிற கடன்கள் 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை தான் இருக்கிறது. அவர்கள் இந்தக் கடனைப் பெற்று 10, 15 ஆண்டுக் காலமாகிற காரணத்தால் அவர்கள் வேறு எந்தக் கடனையும் பெற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோலவே பாசனக் கிணறுகளுக்காக என்று 5 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்படுகிறது. அது போதுமானதல்ல, ஆகவே, அதை அதிகமாக ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தலைவர் தேர்தலில் 18 சதவீதம் இடம் ஒதுக்கிய செயல் ஆதி திராவிட மக்களின் முன்னேற்றப் பாதையில் ஒரு மைல் கல் ஆகும். அது மட்டுமா? அருந்ததியர் சமுதாயத்தைச் சார்ந்த எவராவது இதுவரை தமிழகத்தில் அமைச்சரானதுண்டா? ஏன் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலாவது ஆனதுண்டா? ஆதி திராவிடர் சமுதாயத்திலே ஒரு ஆதி திராவிட சமுதாயம் இந்த அருந்ததியர் சமுதாயம். அப்படிப்பட்ட அந்த சமுதாயத்திற்கு அரசியல் அந்தஸ்தை தேடித் தந்தவர் ஏழை பங்காளன் டாக்டர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். இன்று இங்கே ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மூன்று பேர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். தமிழகம் இதுவரை எத்தனையோ ஆட்சிகளைக் கண்டு இருக்கிறது. ஆனால், ஆதிதிராவிட மக்களுக்கு அதிக சலுகைகளை, உரிமைகளை அளித்திருக்கிற அரசு, ஒரே ஒரு அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆதிதிராவிட மக்களின் உருயிர் அண்ணனாய் திகழ்கிறார்கள். அருமைத் தோழராய் விளங்குகிறார்கள். என்பதைப்பெருமையோடு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் ஆதி திராவிட மக்களுக்கு ஓர் அற்புத வரப்பிரசாதம். அருகிலே அமர முடியாத கிராமச் சூழ்நிலையில் அனைத்துக் குழந்தைகளோடும் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்தும் காட்சி எங்களுக்கெல்லாம் அது ஒரு இந்திரலோக காட்சியாகும். புராணங்களில் வர்ணிக்கிறபடி அது ஒரு தெய்வீக காட்சியாகும். தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் பெருந்தலைவர் காமராசரும் கண்ட கனவுகள் நினைவுகளாக அமர்ந்துள்ள காட்சி கண்கொள்ளாக்காட்சி, அன்னை தெரசா அவர்களை இன்பத்தில் ஆழ்த்திய காட்சி என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏழ்மையிலே பிறந்து ஏழ்மையிலே வளர்ந்து இரந்து பிச்சையெடுத்து மடியும் அந்த ஏளனத்திற்குரிய ஏழைச் சமுதாயத்தை ஏற்றம் பெற இன்ப புரிக்கு அழைத்துச் செல்கிறார் இயேசு பெருமானின் மறு பிறவியாக எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த ஏழைக் குழந்தைகள் இன்று இன்ப கீதம் பாடுகிறார்கள். அந்த ஏழைக் குழந்தைகள் இப்படி அடி மட்டத்திலே இருந்து அல்லலுறும் ஆதி திராவிட மக்களை கரையேற்றிக்கொண்டிருப்பவர்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள். நிற வெறி பிடித்த வெள்ளையரின் துப்பாக்கிக் குண்டிலிருந்து அண்ணல் காந்தியடிகளின் உயிரைக் காத்தவர் ஒரு ஆதி திராவிடப் பெண். இந்த நினைவு டாக்டர் புரட்சித் தலைவருக்கு வருகிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணத்திலே புதிய மாவட்டங்கள் உதயமாகின்றன. வான் புகழ் வள்ளுவர் வருகிறார். தமிழ்த் தாயின்

தவப்புதல்வன் பேரறிஞர் அண்ணா வருகிறார். கூடவே வரலாற்றின் தெரு ஓரத்துப் புழுதியிலே மங்கிக் கிடந்த தில்லையாடி வள்ளியம்மையும் வருகிறாள். இதுவரை யாருக்காவது இந்த எண்ணம் ஏற்பட்டதுண்டா? மறைந்து கிடந்த அந்த மரகதத்தை மாணிக்கத்தை வைரத்தை பட்டை தீட்டி தமிழ்த் தாயின் மாவட்டத் தலைநகர் என்னும் பதக்கத்திலே பதித்து விட்ட அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி. கனவிலும் காணமுடியாத நிகழ்ச்சி நம் கண் முன்னே நிகழ்ந்திருக்கிறது. இதை எண்ணுகிறபோது எங்கள் உடம்பு எல்லாம் புல்லரிக்கிறது இதயம் பூரிப்பு அடைகிறது. அண்ணனே எங்கள் இதய மன்னனே ஆதி திராவிடர்களின் உயிரே, உயிரின் மூச்சே, உணர்வே, நீர் வாழ்க நின் கொற்றம் வாழ்க, வாழ்க வாழ்க என ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் வாழ்த்துகிறார்கள். வணங்குகிறார்கள், போற்றுகிறார்கள். ஆதி திராவிடப் பெருங்குடி மக்களின் மீது அன்பு கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய சாதனை மேலும் தொடர்கிறது. தி.மு.க. ஆட்சியிலே பதவி பறிக்கப்பட்டு பரிதாபத்துக்குள்ளான சத்தியவாணிமுத்து அம்மையாருக்கு மத்திய ஆட்சியிலே மணி மகுடம் சூட்டி பெருமைப்படுத்தியவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர், டாக்டர் பொன்மனச் செம்மல் அவர்கள், அது மட்டுமா, ஆதி திராவிடர் குடிமகனை துணை வேந்தராக்கி புதிய இலக்கியம் படைத்தவர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள். புதிய இலக்கியமும் புதிய வரலாறும் படைத்து புத்துலகம் நோக்கி பயணம் செய்யும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், ஆதி திராவிட சமுதாயத்தின் கலங்கரை விளக்கு. வழி காட்டும் ஒப்பற்ற ஒளி விளக்கு. இந்த நல்ல செய்தியோடு நான் இன்னொரு செய்தியையும் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு ஆதி திராவிட அமைச்சர் எழுதிய கடிதம் என்று ஒரு கடிதத்தை இந்த சபையில் வெளியிட்டு அந்தக் கடிதம் போலியானது என்றும், போட்டிருப்பது பொய் கையெழுத்து என்றும் நிருபிக்கப்பட்ட செய்தியை இந்த மன்றமும் நாடும் அறியும். அந்த நல்ல காரியத்தை செய்த நல்ல மனிதனின் வீர காவியம் இதோ

" கொக்கு மீனை கொத்தாது இருந்தால்

பாம்பு தவளையை விழுங்காது இருந்தால்

புலி ஆட்டைக் கொல்லாது இருந்தால் நானும்

கொள்ளையடிக்காமல் இருப்பேன்

கொள்ளையடிப்பது ஒரு கலையப்பா கலை . . .

என்று கொலைக்கும் கொள்ளைக்கும் புதிய விளக்கம் தந்த அந்த காவிய நாயகனை ஆதி திராவிட மக்கள் அடையாளம் கண்டு கொண்டு விட்டார்கள். அதன் விளைவுதான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் கையிலே தமிழகத்தின் புதிய செங்கோல், புத்தர் பிரானின் புனித ஆட்சி நடக்கும்





தங்கத் தமிழகத்தில் ஆதி திராவிட மக்கள் ஆனந்தப் பள்ளு பாடுகிறார்கள். அந்த ஆதி திராவிட மக்களின் முன்னேற்றத்திற்கு இந்த மானியக் கோரிக்கை வழி வகுக்கும் என்பதால் இதை வரவேற்று இதைத்தயாரித்த ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டி மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களைப் போற்றி வணங்கி பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் அவர்கள் சொன்னார்கள். ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்ததை வரவேற்று இருக்கிறார்கள். மற்றவர்கள் செய்ததைவிட அதிகமாக செய்து இருப்பார். அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. திரு. சாந்தப்பா அவர்களை பற்றிச் சொன்னார்கள். திரு சாந்தப்பா அவர்கள் நிரபராதியாக வேலை செய்தார்கள். அவர்கள் மேல் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் வந்த போது நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்ன போது உதவி செய்கிறேன் என்று சொன்னார்கள். ஆகவே திரு. சாந்தப்பா அவர்களை சரியாக நடத்தவில்லை. மற்றும் ஒன்று, ஐ.ஏ.எஸ்., ஆபீஸர் திரு. சித்தாராம்தாஸ், மற்றவர்களுக்கு இன்று நல்ல பணி கொடுக்காமல் இருப்பதற்கான காரணத்தை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்வார்கள் என்று அதை விட்டுவிடுகிறேன். 20-அம்சத் திட்டத்திலே இராமநாதபுரம் மாவட்டத்தில் பூவந்தி கிராமத்தில் பி. காம் படித்த ராமகிருஷ்ணன் என்ற பையன் ஜாதி வித்தியாசத்தால் அடிக்கப்பட்டு . . . . . (கூச்சல்-குழப்பம்) பணி நீக்கம் செய்த காரணம் யாது?

திரு. ஜே. எஸ். ராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர் மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் தன்னுடைய பேச்சில் கொக்கு மீனை கொத்தாமல் இருந்தால் நானும் கொள்ளை அடிக்காமல் இருப்பேன் என்று மந்திரி குமாரி சினிமாவில் வருகிற வசனத்தைப் பற்றி பேசி அந்த வசனம் கலைஞருக்கு பொருந்தும் என்ற அர்த்தத்திலே பேசி முடித்து இருக்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்) இதைப் பற்றி ஏற்கனவே இந்த வசனத்தை எழுதிய கழகத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தெளிவாக நிறைய விளக்கம் அளித்து இருக்கிறார்கள். மந்திரி குமாரி சினிமாவில் வருகிற பார்த்திபன் என்ற காரக்டர் பேசியதாக அந்த வசனம் வருகிறதே தவிர வசனம் எழுதியவர்கள் எல்லோரும் அதே குணத்தை கொண்டவர்கள் அல்ல என்பதை பல முறை விளக்கியிருக்கிறார்கள். எனவே, அதைப் புரிந்து கொள்ள முடியாமல் மீண்டும் இங்கே அதைப்பற்றிப் பேசுவது நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1984 மார்ச் 22

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இப்பொழுது எடுத்திருக்கின்ற விவாதத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவது நல்லது என்று கருது கிறேன். நாம் எடுத்துக் கொண்டிருக்கின்ற விவாதப் பொருள் முக்கியமானது என்ற நினைவில் கருத்துக்களைச் சொல்ல ஆரம்பித்தால் நல்லது. இப்படி இடையே வேறு கருத்துக் களைப் பற்றி விவாதிக்கத் தொடங்கினால் எடுத்துக் கொண் டிருக்கின்ற பொருளைப் பற்றிப் பேசுவதற்கான வாய்ப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் இழக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து எல்லா உறுப்பினர்களும் இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கின்ற மானியத்தைப் பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ரா. கிருஷ்ணன் : பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

அரசு அச்சகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் டோக்கன் போட்டு பணியாற்றும் தொழிலாளிகள். அவர்கள் போனஸ் வேண்டும் என்று கேட்கின்றபொழுது, நீங்கள் அரசு ஊழியர்கள் என்றும், பண்டிகை முன்பணம் கேட்கிறபொழுது தொழி லாளிகள் என்றும் கூறி சட்டப்படி வழங்கப்பட வேண்டிய சலுகைகளை மறுக்கும்படியான நிலைமை உருவாக்கப் பட்டிருக்கிறது.

மேனுவல் அடிப்படையில் உரிமை கோரியதால் அரசு அச்ச கத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர், அமைப்புச் செயலாளர், பொருளாளர், நிர்வாகக் குழு உறுப்பினர் போன்ற வர்களைப் பழி வாங்கும் நோக்கத்துடன் நீண்ட காலமாக சஸ்பெண்ட் செய்துள்ளனர். பலர் ஊர் மாற்றம் செய்யப் பட்டிருக்கிறார்கள் என்றும் அறிகிறேன். இப்படிப்பட்ட பழி வாங்கும் நோக்கத்தை நீங்கள் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்ட தற்காக பார்வையிழந்த மற்றும் ஊனமுற்ற தொழிலாளர் களின் இன்கிரிமெண்ட் பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் 4 கோடியே 84 இலட்சம் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 19.4 சதமானம், அதாவது சுமார் 94 இலட்சம் ஆதி திராவிடர் பழங்குடியினர் ஆகும். வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள 61 சதமான தமிழ் மக்களின் பெரும்பகுதி தாழ்த்தப் பட்ட மக்கள்.



1984 மார்ச் 22] [திரு. ரா. கிருஷ்ணன்]

இந்த நிலையில் 2065 கோடி தமிழ்நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் 48 கோடி ரூபாய் இத்துறைக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. இது போதாது என்பது என் கருத்து. 1974–75 முதல் 1981–82 வரையில் ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 20.646 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் முழுமையாகச் செலவு செய்யப்படவில்லை என்பதும், செலவானதும் முறை யாக இல்லை என்பதும் என் கருத்து. அதைக் கண்காணி பதற்கான ஏற்பாடும் இல்லை என்பதுதான் பெரும் குறைபாடு.

மேம்பாட்டு நிதி ஒதுக்கீடுகள் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் செயல்படுகிறது. சிறப்பு உள்ளடக்கத் திட்டம் செயல்பட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் விரிவாக்க அலுவலர் நிய மிக்கப்படவில்லை. அவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை இருந்தும் பல ஊராட்சி ஒன்றியங்களில் அவ்வாறு நியமிக்கப்படவில்லை.

திட்ட மேம்பாட்டையும் நிதி மேம்பாட்டையும் கோட்ட அளவில் ஒரு குழு கண்காணிப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஏன் அதிகாரி மட்டும் இருக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் மக்கள் பிரதிநிதிகள் ஏன் இல்லை என்பதுதான் என் கேள்வி.

அதுமட்டுமல்ல, ஆதி திராவிடர்நலத்துறை இயக்குநரைச் செய லாளராகக் கொண்டு 18 சதவீதம் ஒதுக்கீடு பற்றி கண்காணிக்க பொறுப்பு கொடுக்கப்பட்டதால் ஆதி திராவிடர் பழங்குடியி னர் சமூக பொருளாதார வளர்ச்சி வேகம் பெற்றுள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைக்கு ஏதாவது அர்த்தம் உண்டா ?

டிரைபல் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி என்று முதலமைச் சர் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டு அந்தக் குழு திருத்தி அமைக்கப்பட்டது. ஆனால் 1982 ஜூன் மாதம் வரையில் அந்தக் குழு ஒரே ஒரு முறைதான் கூடிய தாகக் கூறப்படுகிறது. ஆகவே இதிலிருந்து இந்த அரசுக்குப் பழங்குடி மக்கள் மீது இருக்கின்ற அக்கறை மிகத் தெளிவாகத் தெரிகிறது.

பழங்குடியினர் மேம்பாடு என்பது ஒரு அரசின் மிகப் பெரும் கடமை. ஆனால், பழங்குடியினர் ஆராய்ச்சிப் பிரிவு என்பது செயல்படவே இல்லை. தகுதியில்லாத சிலர் அதில் செயல்படு வதாகக் கூறப்படுகிறது. பழங்குடியினருக்குக் கிணறுகள் தோண்ட, பம்பு செட்டு வைத்து தோட்டக் கலையை அபிவிருத்தி

செய்ய 1980–82 வரையில் ஒதுக்கப்பட்ட 11 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாயில் 28,000 ரூபாய் மட்டும் செலவாகியுள்ளது. ஏனென்றால் நிலத்தடி நீர் சான்று கிடைக்க தாமதம் என்று சொல்லப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

1977 முதல் 1982 வரை பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 75 சதவீதம் மானியமாகவும், 25 சதவீதம் மின்சார வாரியத்தின் பொறுப்பிலும் 141 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக 42 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு மின்சார வாரியத்தால் மானியத் தொகை ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இதுவரை 46 குக்கிராமங்களிலும், 16 கிராமங்களிலும் மட்டுமே மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் குறைபாடு ஏன் என்று நாடாளுமன்ற பொதுகணக்குக் குழு இங்கே வந்து விசாரித்தார்கள். அப்போது இங்குள்ள அதிகாரிகள் சொன்ன பதில் என்னவென்றால், ஏற்கனவே தமிழ்நாட்டில் 2 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது. என்பதுதான். அப்படி என்றால் இங்கே ஒப்படைக்கப்பட்ட அந்த மானியம் என்ன ஆயிற்று. அதற்கு என்ன செலவு என்பதைக் கேட்க நான் விரும்புகிறேன். ஆகவே ஒதுக்கப்படுகின்ற பணம் முறையாகவும், முழுமையாகவும் பயன்படுத்தப்படவில்லை என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரு பெரிய குறைபாடாகும். அதைச் சரிபார்ப்பதற்கு இந்த மாநிலத்திலே எந்த ஏற்பாடும் இல்லை. அந்தப் பணிகளைச் செய்ய, அதாவது, சரிபார்க்க மாநிலத்திலேயே இரண்டு அதிகாரிகள் மட்டும் இருக்கிறார்கள். அவர்கள் சென்னையிலேதான் பணியாற்றுகிறார்கள். மற்ற மாவட்டங்களுக்கு அவர்கள் போக மாட்டார்கள். இதுதான் நிலைமை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நிதி ஒதுக்கப்பட்டு பயன்பெற்றவர்களில் 3198 பேர்களை ஆய்வு செய்ததில் 126 பேர்கள் தகுதியில்லாதவர்கள் பயன் பெற்றுள்ளனர் என்று ஆய்விலே இருநது தெரிந்திருக்கின்றது.

அடுத்து பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்கள் சரியாக வினியோகம் செய்யப்படவில்லை என்பது ஒரு குறைபாடாகும். அதைக் கண்காணிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. 5 மாவட்டங்களில் 216 பள்ளிகளை ஆய்வு செய்த போது அடிப்படை ரிஜிஸ்டர்களே இல்லை. இருக்கின்ற கணக்கைப் பார்த்தால் 39 ஆயிரம் ரூபாய் பெறுமான புத்தகங்கள் வழங்கப்படவே இல்லை. மேலும் சிறுபான்மை மொழியான மலையாளம், தெலுங்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்ற குறைபாடும் இருக்கின்றது. 1980–81, 1981–82-ல் 1 இலட்சத்து 74 ஆயிரம் பெறுமான பயிற்சி நோட்டுகள் அதாவது எக்ஸர்சைஸ் நோட்புக்ஸ் வினியோகம் செய்யப்படவில்லை.





நகரசுத்தி தொழிலாளர்கள் மற்ற அடிப்படைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 6-வது வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள கல்விக்காக மத்திய அரசு ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு 145 ரூபாய் வீதம் 60 பேருக்கு வழங்க அனுமதியளித்துள்ளது. ஆனால் 1977–78 லிருந்து 1981–82 வரை உள்ள ஐந்தாண்டுகளில் 300 குழந்தைகள் அந்த வகையில் பயன்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு மாறாக 50 குழந்தைகளே பயன் பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடும் இருக்கின்றது.

சென்னையில் உள்ள ப்ரீ எக்ஸாமினேஷன் சென்டர் என்ற அதாவது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுக்காக ட்ரெயினிங் கொடுப்பதற்காக உள்ள நிலையத்தின் கட்டிடம் மோசமான நிலைமையில் இருப்பதால் அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் எனறு 1973-லேயே அதன் முதல்வர் கோரி இருக்கிறார்கள். அரசாங்கத்தின் மேற்பார்வைப் பொறியாளரும் அது ஆபத்தான நிலைமையில், இடிந்துவிழும் நிலைமையில் இருக்கின்றது என்று கூறி இருக்கிறார்கள். 1973-லிருந்து இதுவரையில் அந்தக் கட்டிடம் மாற்றப்படவில்லை.

மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு மத்திய அரசுத் திட்டத்தின் மூலமாகப் புத்தகங்கள் வாங்கி சுற்றுக்கு விடவேண்டும் என்பது ஒரு திட்டம். அந்தத் திட்டத்தின் மூலம் புத்தகங்கள் வாங்குவதற்கு பணம் ஒதுக்கப்பட்டு புத்தகங்கள் வாங்கப்பட்டன. ஆனால் அந்தந்த கல்லூரி நிறுவனங்களின் மூலம் அடையாள அட்டைகள், வழங்கப்படவில்லை என்பதால் அந்தத் திட்டமே இப்போது பயனற்றதாக ஆகிவிட்டிருக்கின்றது.

ஆதிதிராவிடர் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகின்றது. அதற்கான நிதிகள் ஒதுக்கப்பட்டும் அவை முறையாகச் செய்யப்படவில்லை. மீனம்பாக்கம் பள்ளியின் சோதனைக் கூடம் கட்ட நிதி ஒதுக்கியும 6 ஆண்டுகளாகியும் கட்டப்படவில்லை. சிதம்பரம் நந்தனார் பள்ளியின் குடிநீர் இணைப்புக்காக 1976–ல் நிதி ஒதுக்கியும், 1982 ஆம் ஆண்டு வரை அந்தப் பணி செய்து முடிக்கப்படவில்லை.

மாணவிகள் விடுதிகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டும், இடம் தேர்வு செய்யப்படாமலும், மதிப்பீடுகள் இல்லாமலும் பல இலட்சம் ரூபாய் முடக்கம் செய்யப்பட்டுள்ளது. 1982–ல் கட்டிடம் கட்ட ஒதுக்கப்பட்ட நிதி 2 கோடியில் 5,61,000 ரூபாய்தான். அதாவது கிட்டத்தட்ட 3 சதமானம்தான் செலவு செய்யப்பட்டுள்ளது.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1984 மார்ச் 22

அடுத்து வீட்டுமனைப்பட்டா, உறுப்பினர்கள் கொடுத்துள்ள 70 வெட்டுத் தீர்மானங்களில் 19 வீட்டுமனைப் பட்டாக்கள் வேண்டும் என்று கேட்கின்ற வெட்டுத் தீர்மானங்களாக இருக்கின்றன. ஆகவே அதன் முக்கியத்துவம் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே வீட்டுமனைப் பட்டாவின் தேவை அதிகமாக இருக்கின்றது என்பதை நாம் புரிந்த கொள்ள முடியும். தமிழ் நாட்டிலுள்ள 14 இலட்சத்து 97 ஆயிரம் ஆதிதிராவிடர் பழங்குடியினர் குடும்பத்தில் 7 இலட்சத்து 18 ஆயிரம் அதாவது 48 சதவீதம் வீட்டுமனை பெறத் தகுதி இல்லாதவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. 1949 முதல் 1982 வரை உள்ள 33 ஆண்டுகளில் 3 இலட்சத்து 94 ஆயிரம் பட்டாக்கள் மட்டுமே வழங்கப்பட்டன அதிகம் தகுதியில்லாத பலருக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது. தூத்துக்குடி அருகில் மாப்பிள்ளையூரணி என்ற கிராமத்தில் மனுச் செய்தவர்களில் பலருக்கு பட்டா வழங்காமல் மனுச் செய்யாத, தகுதியில்லாதவர்கள் பலருக்கு வழங்கப்பட்டு விட்டது. அவ்வாறு பட்டா வழங்கப்பட்ட அந்த நிலங்களை, வழங்கப்பட்ட மறு ஆண்டிலேயே விற்பனை செய்து விட்டார்கள்.

(பிற்பகல் 12-30.)

சப் ரிஜிஸ்திரார் ஆபீசினுடைய நம்பர் முதற்கொண்டு அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதோ, ஊழியர்கள் மீதோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தூத்துக்குடி ஆதி திரா.விட நலத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஒரு கிளார்க், பல தவறுகளைச் செய்வதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தாலுங்கூட, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்பது தான் பெரிய குறைபாடாக அந்தப் பகுதியில் சொல்லப்படுகிறது.

அதே போன்று வீட்டுமனைகள் ஒதுக்கப்பட்டிருந்தாலுங்கூட, ¾ பங்கு மனைகளில் வீடுகள் கட்ட முடியவில்லை. 1980-82 ஆகிய இரண்டு ஆண்டுகளில் வீடு கட்டுவதற்காக ரூ. 3·70 கோடி தாட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பயன்படவே இல்லை. கொள்கை முடிவெடுக்கப்போகிறோம், ரூ. 4,000-லிருந்து ரூ. 6,000 அல்லது கூடுதலாகத் தொகை தீர்மானிக்க வேண்டுமென்று அரசு அதிலே தீர்மானிப்பதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணமாக, ஒதுக்கப்பட்ட அந்த ரூ.3.70 கோடி வீணாக அங்கே முடக்கப்பட்டிருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டு கூட ரூ. 2 கோடி அரசு வெளியிடவே இல்லை. வீடு ஒன்றுக்கு ரூ. 6,000 ஒதுக்கப்பட்டு பயன் அளிக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. அரசாங்கமே சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகள் மூலம் சம்பந்தப்பட்ட பயனடைவோர்களுக்கு நேரடியாகக் கொடுத்து விடலாம். இதற்கு தாட்கோ மூலமாக ஏன் வரவேண்டும்? என்ற ஒரு கழகம் எதற்காக? தயவு செய்து அதை ஒழிப்பது நல்லது என்பதே என்னுடைய கருத்து.



1984 மார்ச் 22] [திரு. ரா. கிருஷ்ணன்]

அதே போன்று கவர்னர் உரையிலேயும் நிதிநிலை அறிக்கையிலும் கூட, 1 இலட்சம் வீடுகள் நாங்கள் கட்டப் போகிறோம் என்று பிரமாதமான வாக்குறுதிகள்—அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் இது வரை இந்த ஆட்சியில் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

ஒன்றை நான் தயவு செய்து அறிய முற்படுகிறேன். ரூ. 2 கோடி இயக்குநருடைய சொந்தக் கணக்கில் பாங்கில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறதே அதனுடைய இரகசியம் என்ன?

அது போன்று அனைத்து ஆதி திராவிடர் பழங்குடியினரை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சேர்ப்போம் என்பது அரசாங்கத்தினுடைய அறிவிப்பு. ஆனால் நிலைமை என்ன? ஆதி திராவிடர்களுடைய பால் உற்பத்திச் சங்கம், கிட்டத்தட்ட 375-லே 264 சங்கங்கள் செயலற்றுப் போய்விட்டன. கிட்டத்தட்ட 1 வருஷத்திலிருந்து 19 ஆண்டுக் காலமாகவே செயலற்று இருக்கிறது. 1982 ஆம் வருஷம் செயலற்றுப் போனவை பற்றி பால் வளத் துறையினுடைய ஆணையருக்கு அரசு பரிந்துரை செய்துங்கூட இதுவரை பதில் இல்லை.

அதைப் போலவே தொழில் கருவிகள் வழங்க இயக்குநர் அவர்கள் தேர்வு செய்து, அந்தக் கருவிகளை டெண்டர் மூலமாக விலைக்கு வாங்கி விநியோகம் செய்வது வழக்கம். 1979-80லும், 1980-81லும் மிகவும் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. 1981-ல் 5 மாவட்டங்களில் மட்டும் ஆய்வு செய்தால், ரூ. 2.36 இலட்சம் பெறுமான கருவிகள் மூலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கருவிகளை வழங்க கால தாமதம் ஆகியிருக்கிறது. மதுரை குப்தா ஏஜென்ஸீஸ், சென்னையில் இருக்கிற ஹசன் அலி, அலி அன்ட் மொகமது என்ற நிறுவனங்கள் அவற்றை விநியோகம் செய்தன. அந்த நிறுவனங்கள் விநியோகம் செய்ததில் பல குறைபாடுகள், குற்றச்சாட்டுகள் உள்ளன. ஏற்கனவே, டிபால்ட்டர் என்ற வகையில், தவறு செய்து விட்டால், மறு ஆண்டு அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்பது நியதி. ஆனால், அவர்களுக்கே மீண்டும் டெண்டர் கொடுக்கப்பட்டது. மீண்டும் அவர்களிடம் டெண்டர் கொடுப்பதன் இரகசியம் என்ன என்பதைப் பற்றியும் நான் அறிய விரும்புகிறேன்.

கொடுக்கின்ற கடன் தொகை மிகவும் குறைவு. 1974 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்கள் சங்கங்கள் மூலம் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி, பஸ் விட வழி செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. அது கிடப்பிலே இருக்கிறதே, அதைப் புதுப்பிக்க வேண்டாமா என்று இங்கே கேட்க விரும்புகிறேன்.

வட்டியில்லாமல் கடன் என்ற ஒரு தலைப்பிலே 31 வகையில் கடன் விநியோகிக்கப்படுகிறது. பிரிண்டிங் பிரசுக்கு ரூ. 15,000; தனி நபர் கேட்டால் ரூ. 10,000; ஆனால் பிரிண்டிங் பிரசினுடைய விலையோ மிக அதிகம்.

அதே போன்று சென்னையிலே இருக்கக் கூடிய ஒருவர் சைக்கிள் கடை வைக்க வேண்டுமென்று கோரினால் ரூ. 1,000; மாவட்டத் தலைநகரங்களிலே இருப்பவர்கள் கோரினால் ரூ. 750; கிராமத்திலே இருக்கக்கூடிய ஒருவர் கோரினால் ரூ. 500: ரூ. 500-க்கு ஒரு சைக்கிள் வாங்கப் போதுமா ? அதைக் கொண்டு எப்படி ஒரு சைக்கிள் கடை வைப்பார் ? 1978-82 வரையில் 14,951 கடன்கள் ரூ. 1.30 கோடிக்கு விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் 62 சதமானம் தகுதியானவர்களுக்கு வழங்கப்பட வில்லை என்பதுதான் ஆய்வு அறிக்கை முடிவு. எனவே, இந்த ஆண்டு ரூ. 11½ இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், இந்தத் தொழில் நிதி வேண்டுமென்று கோரினால் சான்றிதழை வருவாய் அலுவலரிடமிருந்து வாங்க வேண்டுமென்று உள்ளது. எவ்வளவு வருவாய் என்ற சான்றிதழை வருவாய் இன்ஸ்பெக்டரிடமிருந்து வாங்க வேண்டும். அவர்களுக்கு பணம் கொடுத்தால் தான் சான்றுகள் பெற முடியும் என்ற அளவிற்கு தான் இந்தத் திட்டமே மிக மோசமான நிலையில் இருக்கிறது. அதைப் போல 18 சதவீதம் வேலை வாய்ப்பு என்பது அரசியல் சட்டத்தின் கட்டளை. ஆனால் எந்தத் துறையிலும் அந்தக் கட்டளை நிறைவேற்றப்படவில்லை. நகரசுத்தி தொழிலாளர்களுக்கு மட்டும் தான் அது நிரப்பப்பட்டு இருக்கும். அதே போல ஏ. பி. சி. டி. என்று இருக்கிற நான்கு பிரிவிலும் 18 சதவீதம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது என்னுடைய வலுவான கருத்து. பொதுத் துறையிலும் இது நிறைவேற்றப்படவில்லை. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிற போது 8 சதவீதம் தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைக் கேட்கிறபோது தகுதியானவர்கள் வரவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். இப்படிச் சொல்வது ஒரு பேஷனாக போய்விட்டது. 1976ஆம் ஆண்டு எம்.பி.பி.எஸ். டாக்டர் பட்டம் பெற்றவர்கள் நேர்முகத் தேர்வின்போது சர்வீஸ் கமிஷனில் நிராகரிக்கப்பட்டார்கள் என்று ஆய்வு அறிக்கையில் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைக்குத் தொடர்ந்து இருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் மோசடிச் சான்றுகளைப் பெற்று பல விதமான மோசடிகளைச் செய்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்திலே கூட ஒரு உறுப்பினர் மோசடியாக சான்று வாங்கி அவர் தகுதியிழந்து சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் அவர்கள் வெளியே போய் விட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கொண்டாரெட்டி, காட்டுநாயக்கன் போன்று போலிச் சான்றிதழ்களை வாங்கி பலவிதமான வேலை வாய்ப்புகளை மோசடியாகப் பெறுகிறார்கள். எம்.பி.பி.எஸ். கோர்சிலும், என்ஜினியரிங் கோர்சிலும் சேர்கிறார்கள். அந்த நிலைமைகளை கண்காணிப்பதற்கோ, தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கோ அரசாங்கம் தயாராக இல்லை. இது போன்று போர்ஜரி





செய்பவர்கள் கிரிமினல் குற்றவாளிகள். சான்றிதழ்களை மோசடியாக வாங்கியவர்களையும், வழங்கியவர்களையும் தண்டனைக்குட்படுத்த வேண்டும்.

இதற்காக சுப்ரீம் கோர்ட்டின் கட்டளை ஒன்று இருக்கிறது. தலைமைச் செயலாளரின் தலைமையில் ஒரு குழுவை நியமித்து அந்த மாநிலத்திலே எத்தனை பேர்கள் போலி சான்றிதழ்கள் வாங்கி பலன் அடைந்திருக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்து, அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இது சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பிலே இருக்கக் கூடிய சாராம்சம். இந்த அரசு இது வரையில் இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

ஆதி திராவிடர் இயக்குநர் அலுவலகத்தில் இரண்டு ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரையில் தினக் கூலியாக 6 ரூபாய் பெற்றுக் கொண்டு எழுத்தர்களாக பணியாற்றுகிறார்கள். இப்படி 17 பேர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். சொல்லப் போனால் இது ஒரு சட்டவிரோதம். ஆகவே அரசாங்கமே இப்படிப்பட்ட காரியத்தை செய்யலாமா என்பது தான் என்னுடைய கேள்வி. அதைப் போல ட்ரைபல் ரிசர்ச் செல் ஏற்படுத்தி தகுதியானவர்கள் பணியாற்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித்துறை இயக்குநர், ஆதி திராவிடர் நலத்துறை இயக்குநர், நிதித்துறை செயலாளர் போன்ற முக்கியமான உயர்மட்ட அதிகாரிகள் 5-7-83ஆம் தேதி ஆதி திராவிடர் பள்ளிகளின் தரத்தை உயர்த்த வேண்டாமென்று முடிவு செய்திருப்பதாக எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அதனுடைய நிலைமை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல ஆதி திராவிடர்-பழங்குடி, நாடாளுமன்ற குழுவினுடைய தலைவர் திரு. ஏ. ஜி. தாஸ் அவர்கள் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் முறையாக செயல்படவில்லையென்றும், 1980-ல் 13,746-ஆக இருந்த குற்றங்கள் 1981-ல் 16,184 ஆக உயர்ந்து உள்ளதாக சொல்லி இருக்கிறார்கள். புகார் கொடுத்தால் கூட காவல் துறையில் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர்கள் ரெபர் செய்யக் கூடிய அளவிற்கு இன்றைக்கு பல வழக்குகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து மாணவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு வழங்கக் கூடிய ஸ்காலர்ஷிப் என்பது போதாது. விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில் விலைவாசி ஏற்றத்தின் அடிப்படையில் பஞ்சப்படி உயர்த்தப்படுகிறது. அதைப் போலவே இந்த மாணவர்களுடைய ஸ்காலர்ஷிப்பையும் விலைவாசியேற்றத்தின் அடிப்படையில் உயர்த்திக் கொடுக்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல நாடாளுமன்ற பொதுக் கணக்கு குழு 29–6–83 ஆம் தேதி தமிழ் நாட்டின் அதிகாரிகளை சந்தித்து விசாரித்திருக்கிறார்கள். அப்போது மத்திய சர்க்கார் வழங்கக் கூடிய மாணவர்களுடைய உதவித் தொகை, முழுமையாக பயன் படுத்தப்படவில்லை என்று சொன்னபோது, இங்கே இருக்கிற அதி காரிகள் 6 வயது முதல் 9 வயது வரையில் இருக்கிற மாணவர்கள் பெற்றோர்களிடம் தான் இருக்க விரும்புகிறார்கள்: அவர்கள் விடுதியில் இருக்க விரும்பவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் உண்மை என்ன? அந்த விடுதிகளுக்கு மாணவர் களிடத்திலிருந்து ஏராளமான மனுக்கள் வருகின்றன. அந்தப் பள்ளி விடுதிகளில் சேர்வதற்கு அந்த மனுக்களைச் செய்து இருக்கிற மாணவர்களை சேர்த்துக்கொள்ள அங்கே இடவசதி கொடுக்க முடியவில்லை என்பது தான் உண்மை.

(பிற்பகல் 12-40)

ஆகவே, உண்மை இப்படி இருக்கும் போது அந்த அதிகாரிகள் இப்படி உண்மைக்குப் புறம்பான வகையில் சொல்கிறார்கள். ஆகவே, இதைப் பற்றி அரசாங்கம் என்ன பதில் சொல்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இந்தத் துறை செயல்படுவதே இல்லை, அப்படியே செயல் பட்டால் கூட தவறு செய்கிறது. இதைப் போன்ற தவறுகளை கண்காணிக்கின்ற மாநில குழு கிடையாது. இந்த அமைச்சரவை வந்த பின்பு அப்படிப்பட்ட குழு அமைக்கப்படவில்லை. இதனால் தவறு செய்கிற அதிகாரிகளை தண்டிக்க ஒரு முறை இல்லை. இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்காக அரசாணை எண். 962 சோஷியல் வெல்பேர், 26–5–79-ல் இந்தத் துறை தனியாக அமைக்கப்பட்டு காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று இருந்தும், இது வரையில் அது பின்பற்றப்படவில்லை. அமலாக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

வாசுதேவநல்லூர் தொகுதியில் சிவகிரி, கரிவலம்வந்தநல்லூர் ஆகிய இடங்களில் மாணவர்கள் விடுதிகள் கட்டித்தரவேண்டும் என்று கேட்டு, உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம்: துணைத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலன் மானியக் கோரிக்கையை வெற்றிகரமாக இந்த அவையில் வைத்துள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, புரட்சித் தலை வரின் அரசு என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி பல ஆண்டுகாலமாக நிறை வேற்றமுடியாமல் இருந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி வைத்துள்ளதற்காக என்னுடைய தொகுதி வாழ் மக்களின் சார்பாக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களைப் பொறுத்த வரைக்கும் இன்றைக்கு அவர்களைச் சிந்திக்கிறபோது நமக்கு முதலில் தோன்றும் பிரச்னை வீட்டு மனைப் பிரச்னைதான் என்று சொல்லிக்கொள்கிறேன். அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என்று பல்வேறு ஆண்டுகளாக முயற்சிகளை எடுத்து வந்தபோதிலும், அந்தப் பிரச்னை தீராத பிரச்னையாக இருந்து கொண்டு இருக்கிறது. பல்லாண்டுகாலமாக மக்கள் ஒரு இடத்தில் குடியிருந்த போதிலும், அது நத்தம் புறம்போக்கு என்ற நிலைமையில் இருந்தபோதிலும், அதை மாற்றி அவர் களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்படவில்லை. அப்படிச் செய்து கொடுப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும், அதை ஒரு காலகட்டத்திற்குள் முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அப்படிச் செய்வதன் மூலம் அனைத்து ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கும் வீட்டு மனை வழங்க உத்தரவிடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நில ஆர்ஜிதத்தைப் பொறுத்தவரையில், பொதுமக்கள் பிரதிநிதிகள் உயர்மட்ட அதிகாரிகள் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் மூலம் நில ஆர்ஜிதம் செய்யப் படவேண்டும். அந்த மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கு வதற்காக தகுதியான நிலங்களை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நில ஆர்ஜித நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில், ஹைகோர்ட், சுப்ரீம்கோர்ட் ஆகியவற்றில் பல்லாண்டுகாலமாக வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அந்த வழக்குகளை விரைவாக முடித்துக்கொடுப்பதற்கு ஒரு குழுவை ஏற்படுத்தி அதற்காக விரைவான முயற்சி எடுத்து அந்த வழக்கு களை முடித்துக்கொடுத்து, அந்த வீட்டுமனை வழங்கும் முயற்சி களை விரைவில் நடைமுறைப் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையில், பல பகுதிகளிலே நல்ல முறையில் புரட்சி தலைவர் அரசு ஆழ்குழாய் கிணறுகளைப் போட்டு உயர்மட்ட டாங்குகளைக் கட்டிக் கொடுத்து இருக் கிறது. பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழங் குடியினர் வாழும் பகுதிகளில் தண்ணீர் வசதி செய்வதற்காக தனியாக தண்ணீர் திட்டத்தைத் தீட்டி, குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செய்வதற்காக ரூ.9 கோடி அளவிற்கு திட்டங்கள் உள்ளன. ஆனால் அந்தத் திட்டங்கள் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. அதை விரைவில் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

கல்விப் பிரச்னையைப் பொறுத்தவரையில், பல்வேறு கல்விச் சாலைகளில் மாணவர்கள் பயின்று வந்தாலும் அவர்கள் தங்கியுள்ள உணவு விடுதிகளில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு பொதுமக்கள், பெற்றோர், ஆசிரியர் குழு அமைத்து, அந்த மாணவர்களுக்கு ஏற்படும் குறைகளை போக்கி மற்றும் அவர்களுக்குத்தேவையான வசதிகளை செய்து கொடுத்து, அவர்களுடைய பிரச்னைகளைப் போக்கி வந்தால், பல்வேறு உணவு விடுதிகளில் நடைபெறும் போராட்டங்களைத் தவிர்க்க ஏதுவாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு குழுவினை அமைத்து உணவுச் சாலைகளில் ஏற்படுகிற போராட்டங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பழங்குடி மக்கள் கல்வி வசதி பெறுவதற்காக எனது தொகுதியில் புகளூர் ரோட்டில் பள்ளக்குடியிலும், அரியலூர் ரோட்டில் புதுப்பள்ளியிலும் இரண்டு உயர்நிலைப்பள்ளிகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டிருந்தோம். மாண்புமிகு அமைச்சவரவர்கள் அந்த இடங்களில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை அமைத்துக் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் சேந்தமங்கலம் பகுதி எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தத் திட்டம் முதல் கட்டமாக எடுக்கப்பட்ட காரணத்தால் அதை சிறப்பாக செயல்படுத்த தேவையான அதிகாரிகள் இல்லாத காரணத்தால் அதைச் சரியாகச் செயல்படுத்த முடியவில்லை. அந்தத் திட்டத்திற்கு இன்னும் அதிகமான அதிகாரிகளை நியமிக்க வேண்டும். ஏனென்றால் 60 இலட்சம் ரூபாய் திட்டத்தை தமிழக அரசு பழங்குடி மக்கள் நலனுக்காகக் கொண்டு வருகிறபோது, அதைச் செயல்படுத்தபோதுமான அளவுக்கு அதிகாரிகள் இல்லாத காரணத்தால் பாதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது; பாதி நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்ற ஒரு குழுவை அமைத்து அல்லது அதிகமான அதிகாரிகளை நியமித்து சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு கடன் வசதியைப் பொறுத்த வரையில், இன்றைக்கு பல்வேறு திட்டங்களுக்கு கடன் வசதி அளிக்கப்படுகிறது. இந்தக் கடன் வசதி அளிக்கப்பட்ட பின் அவர்கள் இதனால் முழுமையாகப் பயனடைந்திருக்கிறார்களா, அவர்களுடைய வாழ்க்கையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய ஒரு ஆய்வினை நடத்த குழு அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தர விட்டு, குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.





ஆதிதிராவிட மக்கள் தொழில்கள் தொடங்க அரசு பல நடவடிக்கைகளை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும் அந்தத் தொழில்களை நல்லமுறையில் உருவாக்க ஆதிதிராவிட நலத்துறை நிதி உதவி அளித்து செயல்படுத்த வேண்டும்.

வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், ஊட்டியில் நடைபெற்ற பழங்குடி மக்கள் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களும், அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள். அப்போது அங்கே அந்த பழங்குடி மக்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். அதாவது ஆதிதிராவிட நலத்துறையிலிருந்து பழங்குடி மக்கள் நலத்துறை என்று தனியாக பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு 18 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. அந்த 18 சதவீதமும் ஆதிதிராவிட மக்களுக்கே போய்விடுகிறது, பழங்குடி மக்களுக்கு கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். போலி சான்றிதழ்களைப் பெற்றும் மற்றவர்கள் அந்தப் பயனைப் பெற்றுவிடுகிறார்கள். அங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் பழங்குடி மக்களுக்கு ஒரு சதவீதம் ஒதுக்குவதாகச் சொன்னார்கள். அதை நல்லமுறையில் ஆராய்ந்து வேலைவாய்ப்பில் ஒரு சதவீதம் கண்டிப்பாக ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி மக்கள் வாழுகின்ற பகுதிகளில் இன்றைக்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக 'லாம்ப்' சங்கம் ஏற்படுத்தப்பட்டு, அந்தச் சங்கத்தின் மூலமாக பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் அந்த லாம்ப் சங்கத்திற்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் அவர்களால் சிறப்பாக திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை. எனவே நல்ல போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து, அதன் மூலம் அவர்கள் பழங்குடி மக்களுக்கு நல்ல சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 4 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் செலவில் என்னுடைய தொகுதியிலும், மற்ற மலைப் பகுதிகளிலும் சாலை அமைக்கும் பணிகளை சிறப்பாகச் செய்துகொண்டு வருகிறார்கள். அதைப் பார்த்து என்னுடைய தொகுதியிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களே பாராட்டுகிறார்கள். இதற்கு முன்னால் இதைப் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்று கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் பொதுக் கூட்டங்களிலே கூட சொல்லி பாராட்டுகிறார்கள். அந்த அளவுக்கு சிறப்பாக அந்தப்பணி நடைபெறுகிறது. ஆகவே, அமைச்சரவர்களுக்கு அந்த மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தோட்டக்கலை செயல்பட்டு வருகிறது. இந்த தோட்டக் கலைக்கு நிதி உதவி அளிக்கும்போது செடி, விதைகள், உரம் போன்றவை குறிப்பிட்ட காலத்தில் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மின் இணைப்புக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. அதாவது ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் திட்டத்தின் மூலம் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக சுமார் 60 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அது இன்றைக்கு மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த அனுமதியைப் பெற்று, பழங்குடி மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் மின்சார இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–50]

கடைசியாக என்னுடைய தொகுதியிலுள்ள ஒரு சில பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தின்கீழ், நிதியுதவி கொடுத்து, வேலைவாய்ப்பு துறையின் மூலம் கொல்லிமலையில் ஒரு தொழில் பயிற்சி பள்ளியையும், பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தில் நிதியுதவி அளித்து, 'கல்வித்துறை மூலம்' மலை வாழ் மக்கள், மாணவர்கள் தொழில் நுட்ப அறிவு பெற தொழில் நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக்) ஒன்று ஏற்படுத்தவேண்டுகிறேன்.

மத்திய சிறப்பு நிதிஉதவி திட்டத்தின்கீழ் என்னுடைய தொகுதியிலுள்ள நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தையாவது அல்லது புதுச்சத்திரம் ஒன்றியத்தையாவது எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

அடுத்து கொல்லிமலையிலுள்ள ஆதிதிராவிட கல்வித்துறை மூலம் மேலும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை, சேளூர்நாடு பள்ளக்குழியிலும், பைல்நாடு புங்கம்பட்டியிலும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுத்துறையின் மூலம் பல ஆண்டுகளாகப் போராடி வந்து, என்.சி.டி.சி. மூலம் கொல்லிமலையில் ரூ. 9 இலட்சம் மதிப்பில் ப்ரூட் பிராசசிங் தொழிற்கூடம் ஆரம்பிக்க உத்தரவிட்டுள்ளதைப் பாராட்டுகிறேன்.

அடுத்ததாக கொல்லிமலை லேம்ப் சங்கம் பெரிய அளவில் உள்ளதால், இதை மூன்று கிளைப் பிரிவுகளாக பிரித்து, இதை இயங்கச் செய்ய மேனேஜரியல் உதவித்தொகை வழங்க பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தில் உதவித் தொகை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து கொல்லிமலை லேம்ப் சங்கத்திற்கு கொடுக்கப்பட்ட ஜீப் 7 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தால், முழு நிதி உதவியுடன், அதை புதிய ஜீப்பாக மாற்றித் தரவேண்டுமென்றும் அத்துடன் லாரி ஒன்றும் வாங்க பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தில் நிதியுதவி கொடுக்க வேண்டுகிறேன்.

தொழிற்துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள கொல்லிமலை ஒன்றியத்திலுள்ள இராசிபுரம் தாலுக்கா பகுதிகளில் ஆதி திராவிடர் பழங்குடியினர் தொழில் தொடங்க, சிறப்பு நிதியுதவியும், ஆலோசனையும் வழங்கவேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின் நிதியுதவி கொடுத்து, பழங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்ற கொல்லிமலை பகுதியில் கைத்தறி துறை மூலம் விசைத்தறி கூடம் ஒன்று ஏற்படுத்த கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டத்தில் சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, சேந்தமங்கலம் ஒன்றியத்தில் வாழவந்திகோம்பை, நடுக்கோம்பை, நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில், கார்கூடல்பட்டி, 'முள்ளுக் குறிச்சி, பெரப்பன்கோம்பை, ஊனந்தாங்கல், 'மூலக்குறிச்சி, பெரிய குறிச்சி, நாரைகிணறு போன்ற இடங்களில் மலை வாழ் மக்கள் 50 சதவீதத்திற்கு மேல் வாழ்கின்ற காரணத்தால், அவைகளைப்பழங்குடி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்ப்பதாகக் கூறினார். ஆனால் இதுவரையில் செயல்படவில்லை. அதை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தை சமர்ப்பித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டி விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடி நலத்துறை மான்யக் கோரிக்கை மீது எங்களுடைய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களையொட்டி, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

இந்த அறிக்கையிலே பல விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு தொடர்ந்து நம்முடைய தமிழ்நாட்டிலே கிராமப்பகுதியிலே வசிக்கின்ற ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் இன்னமும் பலவிதமான கொடுமைகளுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும் ஆளாகிக்கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. இதைப் போக்குவதற்கு பலவிதமான நடவடிக்கைகள் எடுத்து வந்தாலும் கூட, அந்த நடவடிக்கைகள் அவர்கள் போதுமான அளவிற்கு வாழ்க்கையில் முன்னேறுவதற்கும், அவர்கள் சுதந்திரமாக

வாழ்க்கையை நடத்துவதற்கும் அல்லது சுதந்திரமாக வாழ்கி
றோம் என்ற எண்ணத்தை ஊட்டக் கூடிய அளவிலும் இல்லை
என்பதையும் அனைவரும் ஒத்துக்கொள்ளவேண்டும். இப்போது
கொடுத்த இந்தப் புள்ளிவிவரப்படி, தமிழ்நாட்டிலே கல்வியறிவு
பெற்றவர்கள் ஆதிதிராவிடர்கள் 29.67 சதவீதம், பழங்குடி
யினர் 20.45 சதவீதம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு
அடுத்தபடியாக உங்கள் கணக்கிலே எல்லா நிறுவனங்களிலும் 18
சதவீதம் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டும் என்று
இருந்தாலும் கூட, அரசுத் துறையிலே 11.27 சதவீதமும், அரசு
பொதுத் துறையிலே 12.43 சதவீதமும் என்ற அளவில் அமர்த்
தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மீதியுள்ள அந்த 6
சதவீதத்திற்கு ஆட்கள் கிடைக்கவில்லையா? அல்லது ஆட்கள்
கிடைத்தும், எங்களுக்கு வேலை வேண்டாம் என்று அவர்கள்
சென்றுவிட்டார்களா என்பதும் தெரிய வேண்டும் அதற்கு
அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும். இன்றைக்கு
முக்கியமாக தாழ்த்தப்பட்ட அந்த மக்கள் சுதந்திரமாக வாழ
வதற்கு வாய்ப்பு வசதிகள் வேண்டும். கிராமப்புற மக்களுக்கு
½ ஏக்கர், 1 ஏக்கர், 2 ஏக்கர் சொந்த நிலம் வேண்டும். அதற்காக
நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் மூலமாகவோ, அல்லது நில உச்ச
வரம்புச் சட்டத்தின் மூலமாகவோ, அவர்களுக்கு நிலம் வழங்கக்
கூடிய திட்டம் செம்மையாக, கடந்த காலத்திலும் நடக்கவில்லை,
இப்போதும் நடக்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சொந்தமாக வீட்டு மனைகள்
கொடுக்கப்பட வேண்டும். அதுதான் மெயினான விஷயம்.
இதைப்பற்றி இந்த அவையிலே நம்முடைய எதிர்கட்சியிலே இருப்
பவர்கள் எல்லாம் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களிலே இது
தான் பிரதானமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வீட்டு
மனைப்பட்டா சம்பந்தமாக சரியான நடவடிக்கை எடுக்கவேண்
டும். மனை இல்லாத அத்தனை மக்களுக்கும் கொடுக்கவேண்டும்
என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி நானும் தொடர்ந்து
சொல்லிக் கொண்டு வருகிறேன். சந்தர்ப்பம் கிடைக்
கும்போதெல்லாம் சொல்லிக்கொண்டு வருகிறேன். ஆங்காங்
குள்ள அதிகாரிகள் இடத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
இடத்திலே சொல்லுகிறோம். அவர்களும் முயற்சிக்கிறார்கள்.
ஆனால் அந்த முயற்சி ஈடேறுகிறதா? ஈடேறுவதற்கு வேண்டிய
காரியங்களை நீங்கள் செய்கிறீர்களா, என்பதுதான் கேள்வி. வீட்டு
மனைப் பட்டா சம்பந்தமாக 1949 முதல் 1983 டிசம்பர் வரை,
4,23,255 மனைப்பட்டா வழங்குவதற்காக திட்டமிட்டு, 26,493
ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டது என்றும், அதிலே
3,78,619 மனைப்பட்டா வழங்கப்பட்டது என்றும், மீதி 44
ஆயிரம் சொச்சம் பேர்களுக்கு வழங்கவில்லை என்றும் சொல்
கிறார்கள். இன்னும் பல இடங்களில் நாம் பார்த்தோம் என்
றால்; பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பட்டா வழங்கப்
பட்டிருக்கிறதே தவிர, அந்த நிலம் எங்கேயிருக்கிறது என்று
அவர்களுக்கு அளந்து கொடுக்காமல் இருக்கிறது. எந்த இடத்
திலே நிலம் இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.



இதைத் தொடர்ந்து முயற்சி செய்தாலும் அளந்து கொடுக்கப்
படாமல் இருக்கிறது. அதிகாரிகளுக்கு பல இடங்களிலே ஜீப்
வசதிகள் கிடையாது. ஜீப் இல்லையென்றால் அவர்கள் எப்படிப்
போகமுடியும்? 4 தாலுக்காவிற்கும் சேர்ந்து ஒரு தாசில்தார்.
4 வட்டங்களுக்கு ஒருவர் என்று இருக்கும்போது எங்கே போய்,
அப்படிப் பார்த்து எப்போது அளந்து முடிப்பார்கள்? ஆகவே
அவர்களுக்கு எந்தவிதமான வாகன வசதியும் இல்லை என்பது
தான் நான் அறிந்தமட்டிலும் தெரிகிறது. ஆகவே துரிதமான
நடவடிக்கையில்லை. இப்போது நான் என்ன சொல்கிறேன்
என்றால், இந்த வீட்டு மனைப் பட்டாவையாவது, எனக்கு ஒரு
5 சென்ட் நிலம் சொந்தமாக இருக்கிறது என்று சொல்லக்
கூடிய அளவிற்கு, இதிலே ஏற்பாடுகள் இருக்கிறதா? இன்னும்
எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள்.
ஆலோசனைக் குழு என்று ஒன்று முன்னாலே தொடர்ந்து
செயல்பட்டுக் கொண்டு வந்தது. இப்போது ஏன் இல்லை.
அந்தக் குழு 4 வருடங்களாக இல்லாமல் போனதற்குக் காரணம்
என்ன? இது இருந்தாலாவது இதைச் செய்யவேண்டும், அதைச்
செய்யவேண்டும் என்று சொல்வார்கள். சில காரியங்களைச்
சொல்வதற்கும், அல்லது செம்மைப் படுத்துவதற்கும் அது உதவி
யாக இருக்கும். மாவட்டத்திலேயும் கமிட்டி கிடையாது. மா
நிலத்திலேயும் கமிட்டி கிடையாது. ஏன் குழு அமைக்கப்பட
வில்லை என்பதற்கு எனக்கு விளக்கம சொல்லவேண்டும்.

அது மட்டுமல்ல, இந்த ஆதி திராவிடர்கள் சம்பந்தப்பட்ட
வரையில் வீட்டு மனைப் பட்டாவிற்காக தொடர்ந்து மனுப்
போட்டு வருகிறார்கள். இன்றைக்கு வரையிலும் மனுக்கள்
வந்துகொண்டிருக்கின்றன. எனக்கு அந்த மனுக்கள் ஒரு பண்
டிலே இருக்கும், எல்லா ஊர்களிலேயிருந்தும் வந்துகொண்டிருக்
கின்றது. நாங்கள் 10 வருடங்களாக முயற்சி செய்கிறோம்.
ஒரு இடத்தில் வீட்டு மனைப் பட்டா கொடுக்க நிலத்தை ஆர்
ஜிதம் செய்ய ஏற்பாடு செய்தால், யாரோ சிலர் செல்வாக்கு
உள்ளவர்கள் அதை தடுத்துவிடுகிறார்கள். கோர்ட்டுக்குபோ
கிறார்கள். கோர்ட்டுக்குப் போவது என்பது கடைசியில்தான். நம்
மைப் போன்றவர்கள், எம்.எல்.ஏக்கள் போய்ப் பார்க்கிறார்கள்.
ஆனால் ஆதி திராவிடர்கள் போய்ப் பார்க்கமுடியாது. இவர்
களுடைய செல்வாக்கை அவர்கள் மீது பிரயோகிக்க முடியாது.
ஆகவே மேலே உள்ளவர்கள் இந்த இடத்தைக் கொடுக்கக்கூடாது
என்பதற்காகவோ, அல்லது அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்யக்
கூடாது என்பதற்காகவோ, ஏதாவது ஒரு செல்வாக்கைப் பயன்
படுத்தி அந்த மனைகளைக் கொடுக்க முடியாத அளவிலே தடுத்து
வருகிறார்கள், என்ற உண்மையை அரசு உணரவேண்டும். ஆகவே
இதற்குத் தகுந்த ஒரு சட்டத்தை இயற்றி, 2 ஆண்டுகளுக்குள்
ளாகவோ, அல்லது 3 ஆண்டுகளுக்குள்ளாகவோ, அத்தனை பேர்
களுக்கும் மனைகள் கொடுக்கப்படும் என்று சொல்லுங்கள்.
யாருக்கெல்லாம் மனைகள் இல்லையோ அதைச் சர்வே செய்யச்
சொல்லுங்கள், அதற்கு தனிதனியாக ஒரு அதிகாரியைப் போட்டு

ஒவ்வொரு வட்டத்திலேயும் சர்வே செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது நீங்கள் பார்த்தால், ஒரு வீட்டிலே 4 குடும்பங்கள் இருக்கின்றன. 10 அடி நீளம் 10 அடி அகலம் உள்ள வீட்டிலே 4 குடும்பங்கள் இருக்கின்றன. வேறு மனைகள் கொடுக்கப்பட்டதா என்றால், இல்லை. முயற்சி செய்தாலும் அவர்களுக்கு மனை கிடையாது. மனை கொடுத்தால் பிறகு வீடு வேண்டும். வீடு கட்டுவதைப் பற்றி நான் பின்னாலே சொல்கிறேன்.

கரூரிலேயிருந்து இப்போதுகூட ஒரு மனு வந்திருக்கிறது. வெங்கமேடு என்ற கிராமத்திலே தொடர்ந்து 7, 8 ஆண்டுக்காலமாக முயற்சி செய்தும் அவர்களுக்கு மனைகள் கிடைக்கவில்லை. இப்போது வீடுகள் பூராவும் தீக்கு இறையாகிவிட்டது. இப்போதாவது கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே இதுமாதிரி தொடர்ந்து எல்லா இடத்திலேயும் கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. . அதைக் கொடுப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து பெரியகுளம் வட்டாரத்தில் 500 ஏக்கர் நிலத்தை ஆதிதிராவிடர்களுக்கென ஒதுக்கினாலும, இதுவரையிலும் அவர்கள் கைக்குப் போய்ச் சேரவில்லை. இதிலேயும் வேறு பலர் ஆதிக்க எண்ணம் உள்ளவர்கள் அல்லது செல்வாக்கு உள்ளவர்கள், அதை அபகரித்து வைத்திருக்கிறார்கள். இந்த ஆதி திராவிட மக்களுக்குப் போய்ச்சேரவில்லை. எனவே அந்த இடம் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை நீங்கள் செய்ய வேண்டும்.

(பிற்பகல் 1-00)

இன்னொன்று, இப்பொழுதும்கூட இந்த மக்களுக்கு நடக்கிற கொடுமைக்கு ஒரு உதாரணம் சொன்னால் போதும் என எண்ணுகிறேன். அதிகமாகக் கூட வேண்டாம். ஒன்றே ஒன்று. அதுவும் லேட்டஸ்ட்டாக நடந்ததை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கோவை மாவட்டம், அவினாசி தாலுக்காவில், அல்லூர் ஒன்றியத்தில், ரங்க சமுத்திரம் என்ற கிராமத்தில் 14—1—1984 அன்று மாடு மேய்த்துக்கொண்டிருந்த ஆதி திராவிடப் பையன் ஒருவன், பக்கத்திலிருந்த தென்னை மரத்திலிருந்து விழுந்த தேங்காயை எடுத்து, அந்த தேங்காய் தண்ணீரைக் குடிக்க வேண்டும் என்ற ஆசையிலே எடுத்து, அந்த இளநீரைக் குடித்துவிட்டான். அந்த மரத்திற்குச் சொந்தக்காரன் அவனை நன்றாக அடித்து, பூச்சிக் கொல்லி மருந்து, பாலிடாலை ஊற்றிக் கொலை செய்துவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

இந்தக் கொலையைப் பற்றி புகார் செய்வதற்காக அந்தப் பையனின் பெற்றோர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனால், போலீசார் என்ன செய்யவேண்டும். கேசை பதிவு





செய்ய வேண்டுமா, வேண்டாமா? ஆனால் அவர்கள் கேஸை பதிவு செய்யாமல் புகார் சொன்ன அந்த ஆதிதிராவிட பையனின் பெற்றோர்களை மிரட்டி, அதட்டி சும்மா இரு என்று சொல்லி இருக்கிறார்கள். கேஸையும் பதிவு செய்யவில்லை.

பிறகு எங்களுடைய கட்சி தலையிட்டு அங்கேயுள்ள சில அனுதாபம் கொண்ட பிரமுகர்கள் தலையிட்டு முயற்சி செய்த பிறகுதான், அந்த நபர் கொலை—செய்த நபர் பெயர் சுந்தர மூர்த்தி. அவர்மீது வழக்கு தொடரப்பட்டு அவர் இப்போது விசாரணையில் இருக்கிறார். வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது. ஆனாலும் அந்தப் பகுதியிலே இப்போது நிலைமை எப்படி இருக்கிறது என்றால் அந்த பகுதியிலுள்ள ஆதிதிராவிட மக்களை வேலைக்கு கூப்பிடக்கூடாது. குடி தண்ணீர் பிடிக்கக் கூடாது என்று பகிஷ்காரம் செய்யப்பட்டு, கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

இவைகளையெல்லாம் போக்க என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க வேண்டாமா? போலீஸ் அதிகாரிகளுக்கோ, மற்ற அதிகாரிகளுக்கோ இப்படிப்பட்ட மன வேறுபாடுகள் இருந்தால், அவர்களுக்கு அந்த மக்களுக்கு உதவி செய்வதற்கு மனம் வருமா, இப்படி அந்த மக்களுக்கு கொடுக்கின்ற சலுகைகளைகூட அவர்கள் பெறுவதற்கு முடியாமல், அதிகாரிகள் உதவி செய்வதற்கு மனம் வராமல் இருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறதே. அதை எப்படி களையப் போகிறீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீடு கட்டும் திட்டம். அரிசனங்களுக்காக வீட்டு வளர்ச்சிக் கழகம் என்று ஒன்று இருக்கிறது. நமது மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் சொன்னது போல் நானும் இந்த ' தாட்கோ ' வே வேண்டாம் என்றுதான் சொல்கிறேன். முன்னாலேயாவது அவர்கள் சில வீடுகளை கட்டிக் கொண்டிருந்தார்கள். இப்போது அதுவும் கிடையாது. முன்பு இனாமாகவே வீடு கட்டிக் கொடுத்தார்கள். இப்போது அதை கைவிட்டுவிட்டு, வீடு கட்ட 4,000 ரூபாய் பணத்தில், 3,250 ரூபாய் அரசு மானியம், மீதி 750 ரூபாய் நீங்கள் கொடுங்கள், பணமாகவோ உழைப்பாகவோ என்று சொல்லுகிறீர்கள். ஆனால் இந்த திட்டம் சரியாகவே செயல்படவில்லை. 10 ஆயிரம் வீடுகள் கட்டப்படவேண்டும் என்று திட்டமிட்டிருப்பதாக சொன்னீர்கள். அதிலே 562 வீடுகள் கட்டியாகிவிட்டது என்றும், 5,290 வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும் சொல்கிறீர்கள். ஆனால் மீதி 4,148 வீடுகள் என்ன ஆயிற்று என்றே சொல்லவில்லை. இப்படி வீடுகள் கட்டுவது பற்றி அறிக்கையிலே வருகிறது.

அடுத்து கிராமப்புற வீட்டு வசதி திட்டம். இதற்கு 10 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். வட்டியின்றி கடன் கொடுத்து, அதில் வீடு கட்டிக் கொள்ளும் திட்டம் இது. இந்த கடன் கொடுக்கும் ஏற்பாடுகளை அந்தந்த தாலுக்காக்

களில் கிராம வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். 6,000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லுகிறீர்கள். அவர்கள் அதில் 1,500 ரூபாய் உழைப்பாகவோ பணமாகவோ கொடுக்க வேண்டும் (குறுக்கீடு) இன்னும் 6,000 ரூபாய் கொடுக்கப்படும் என்ற அந்த உத்தரவுகூட பிறப்பிக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அந்த 6,000 யாருக்கும் கிடைக்கவில்லை. கேட்டால், ஹட்கோவிற்கு எழுதியிருக்கிறோம். எல்.ஐ.சி.க்கு எழுதியிருக்கிறோம், அரசுக்கு எழுதியிருக்கின்றோம். இன்னும் பணம் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, வீட்டு மனைகள் கிடைக்கின்ற இடத்திலாவது அவர்களுக்கு சொந்தமாக வீடு கட்டிக் கொள்வதற்கு வேண்டிய வகையில், இந்த ரூ. 6,000 வீதம் கொடுக்கும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

சமீபத்தில் பெய்த வெள்ளம் மழையால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? இந்த ஆதிதிராவிட மக்கள்தான். அதிகமான தொகையில் இருப்பவர்கள் இந்த தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள்தான். விவசாயத் தொழிலாளர்களில் 100-க்கு 70 பேர்கள் ஆதிதிராவிடர்கள். மீதம் 30 மற்ற சாதியைச் சார்ந்தவர்கள். இந்த மழை வெள்ளத்தில் இறந்தவர்கள் குடிசைகள் பூராவும் அடித்துச் செல்லப்பட்டவர்கள் எல்லாம் இந்த ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களும் மற்ற சாதி விவசாய தொழிலாளர்களும்தான். அந்த மழையால் 4,000-மே அவர்களுக்கு இன்னும் ஒழுங்காக கிடைக்காத நிலையில் இப்போது அதை 6,000 ஆக ஆக்கியிருக்கிறீர்கள். அவர்களுக்கு அந்த 6,000 ரூபாயை ஒழுங்காக, எல்லோருக்கும் முறையாக கொடுங்கள் போதும். வீட்டு மனைகள் கிடைக்கும் இடத்தில், மனைகளை கொடுத்து விடுங்கள். அவர்கள் தங்கள் உழைப்பால் இந்த ரூ. 6,000-ல் வீடு கட்டிக்கொள்வார்கள்.

அடுத்து என்.ஆர்.இ.பி. ஸ்கீம். இது நல்ல திட்டம் தான். போன வருஷம் 10,000 வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 1984-85-க்கு [illegible] இந்த திட்டத்தில் வீடு கட்ட எதுவுமே சொல்லவில்லை. போன வருஷம் ஆணையிட்டதற்கு இணங்க பல இடங்களில் வீடுகள் கட்டிக் கொண்டிருப்பதாக [illegible] நினைக்கிறேன். இந்த தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டம் நல்ல திட்டம், மத்திய அரசோடு, மாநில அரசு இணைந்து, 50 சதவீதம், 50 சதவீதம் என்று போட்டு [illegible] நல்லது. அதுவும் மண் வீடாகக் கட்டியிருப்பதை மாற்றி, [illegible] கட்டிக் கொடுப்பது மிகவும் நல்ல திட்டம். போன வருஷம் 10,000 வீடுகள் கட்டியதாக சொன்னீர்களே, அதில் எத்தனை [illegible]? இந்த வருஷம் 1984-85-க்கு இந்த திட்டத்தின் [illegible] வீடுகள் கட்டப்படுவதாக இருக்கிறீர்கள் என்று சொல்லவில்லை.





அதே மாதிரி இன்னும் சில திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய சிறப்பு உதவி பெற்று தமிழ்நாட்டில் குழாய் கிணறு நிறுவனம் என்று ஆரம்பித்தார்கள். ரொம்ப சந்தோஷம் என்று சொன்னோம் எங்கள் பகுதியிலே ஜமீன் ஒழிப்புச் சட்டப்படி ஒரு ஏக்கர், 2 ஏக்கர் நிலம் என்று ஆதிதிராவிடர்களுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அப்படிப் பட்டவர்களுக்கு இந்த நிறுவனத்திலிருந்து உதவி பெற்று குழாய்க் கிணறு போட்டுக் கொடுக்கலாம் என்று மனுப் போட்டு முயற்சியெல்லாம் செய்தேன். ஆனால் உங்களுக்குக் கிடையாது. தென் ஆற்காடு, இராமநாதபுரம், திருச்சி போன்ற மாவட்டங்களுக்குத்தான் உண்டு என்று சொல்லிவிட்டார்கள். இன்னொன்று என்னவென்றால் அதிலே பணமே கிடையாது. சென்னையிலே ஒரு ஆபீஸ் வைத்திருக்கிறார்கள். அவ்வளவு தானே தவிர பணமே கிடையாது என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்காரிடம் கேளுங்கள் பணம் கொடுக்கவேண்டுமென்று இல்லையென்றால் நீங்களே பணத்தை ஒதுக்கி— ஏனென்றால், அவர்கள் எல்லாம் சொந்தமாக குழாய் கிணறு போட முடியாது, வசதியில்லாதவர்கள்— அந்தக் குழாய்க் கிணறுகளை அமைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் கடன் கொடுக்கிறார்கள். மொத்தம் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறீர்கள்? 10 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். இதிலே எவ்வளவு பேர்கள் பயன்பெற முடியும்? கடன் கொடுப்பதிலே கூட இவ்வளவு கஞ்சத்தனம் கூடாது. 10 இலட்சம் ரூபாய் என்றால் ஒரு தொழில் முதலாளிக்கு கொடுக்கும் கடன்தான். ஆதிதிராவிட மக்கள் எல்லாம் இது வரைக்கும் கூலி வேலைதான் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் [illegible]க்கு வேலைக்குப் போகவில்லை உத்தியோகத்திற்கு சில பேர்கள் போயிருக்கிறார்கள் அவ்வளவுதான். அதிலே கூட 18 சதவீதம் பூர்த்தியாகவில்லை. அரசாங்கமானாலும் சரி, வேறு எந்த தனியார் நிறுவனமானாலும் சரி 18 சதவீதம் வேலை ஆதிதிராவிடர்களுக்கு கொடுத்தேயாக வேண்டுமென்ற முறையிலே ஏற்பாடுசெய்து, ஆங்காங்கு உள்ளவர்களுக்கு அதைப் பெற்றுத் தரவேண்டியது அரசாங்கத்தினுடைய கடமையாகும். வேலை கிடைத்தால்தான் அவர்கள் சுதந்திரமாக இருக்க முடியும்.

அடுத்தபடியாக ஆதிதிராவிடர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் என்று ஆரம்பித்தீர்கள். தீப்பெட்டி தயாரிக்கும் சங்கம், பால் பண்ணை என்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அவையெல்லாம் அப்படியே இருக்கிறது. அவைகளுக்கு மேற்கொண்டு எந்த உதவியும் செய்யவில்லை, எனக்குத் தெரிந்தவரையில் பல இடங்களிலே மூலதன வசதியும் இல்லை. துவங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. ஆகவே அவைகளுக்கு உதவி செய்து வேலை தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1984 மார்ச் 22

கல்விக்கு உதவித் தொகை என்று வருகிறபோது பெற்றோர் வருமானம் ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் என்று நீங்கள் சொல்கிறீர்கள்: ஆனால் மத்திய சர்க்கார் உதவிப் பணம் பெற 12 ஆயிரம் ரூபாய் என்று ஆக்கியிருக்கிறார்கள். ஆண்டுக்கு 6 ஆயிரம் என்று நீங்கள் சொல்வதை வைத்துப் பார்க்கிறபோது மாதம் 500 ரூபாய் வருகிறது ஒரு குடும்பத்திலே தாய், தந்தை, அண்ணன் என்று 3 பேர்கள் இருந்தாலும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 7 ரூபாய் என்றால் 21 ரூபாய் வீதம் மாதத்திற்கு 600 ரூபாய்க்கு மேல் வந்துவிடுகிறது. அப்படியிருக்கிறபோது ஆண்டுக்கு 6,000 ரூபாய் என்றால் அவர்களுக்கு எல்லாம் அந்த உதவித் தொகை கிடைக்காமலே போய்விடுகிறது. ஆகவே 6,000 ரூபாய் என்பதை நீங்களும் மத்திய சர்க்கார் மாதிரி 12 ஆயிரமாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு சலுகைகள் இல்லாமல் போய்விடுகிறது. உங்களுக்கு அதற்கு அதிகாரம் இருக்கிறதா அல்லது மத்திய அரசாங்கம் அதைச் செய்யவேண்டுமா என்று தெரியாது. நீங்கள் அதற்காக முயற்சி செய்யவேண்டும். கிறித்துவ நாடார்கள் பேக்வர்டாக மாற்றப்பட்டுவிட்டார்கள். ரொம்ப சந்தோஷம். ஒரு ஜாதியிலே இருந்து—மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு போய்விட்டால் மேலே போய் விட்டதாக அர்த்தம் கிடையாது. எந்த ஜாதிக்கு மதத்திற்குப் போனாலும் அந்த ஜாதியிலேதான் கல்யாணம் கட்டுகிறார்கள். எல்லாம் செய்கிறார்கள். அதையெல்லாம் மீறிச் செய்வதற்கு இன்னும் கொஞ்ச நாளாகும். மதம் மாறியதற்காக உரிமைகள் பறிக்கப்படக்கூடாது. எந்த மதமாக இருந்தாலும் அந்த சலுகைகள் அரிசனங்களுக்கு இருக்கவேண்டும். கிறித்துவ நாடார் பார்வர்டு ஆக இருந்தது இப்போது பேக்வர்டு ஆக்கப் பட்டுவிட்டது. அதே மாதிரி கிறித்துவ ஆதிதிராவிடர்கள் இருந் தால் அவர்களை எஸ். சி. ஆக்கவேண்டும். அப்படி ஆக்காததால் பல பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள். பாலிடெக்னிக்கிற்கு மனுப்போட்ட ஒரு பெண் கிறிஸ்துவர், ஆகவே கிடையாது என்று சொல்கிறார்கள். அந்தப் பெண்ணிற்கு இடம் கிடைக்காமல் போய்விட்டது. மதம் மாறிய அரிசனங்களையும் எஸ். சி. பட்டியலில் சேர்க்க கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் கட்டிக்கொடுத்த காலனி வீடுகள் இந்த வெள்ளத்தின் காரணமாக இடிந்து விட்டன. குடிசைகள் அடித்துச் செல்லப்படுவது மாதிரி. அது மட்டுமல்ல, சில இடங்களில் ஒரு சுவர் இடிந்து போகிறது என்ற நிலைமை இருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அவர்களுக்கு அரிசி கிடையாது. வெள்ளம் கிடையாது என்று சொல்கிறார்கள். காரணம் ... வீடாம். அவர்களுக்கு அந்த வீடுகளை ரிப்பேர் செய்வதற்கு வழியில்லை. வெள்ளத்தாலே ஏற்பட்ட சேதத்தினால் பாதிக்கப்பட்ட அவர்களுக்கு நிவாரணமோ கிடைக்கவில்லை. அந்த ஆதிதிராவிட மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே இவர்களுக்கும் நிவாரணம் ... வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 22] [திரு. சோ. அழகர்சாமி]

இந்த ஆதிதிராவிடர்கள் சம்பந்தமாக இன்னொரு முக்கியமான விஷயம்: மதுராந்தகம் பகுதியிலே ஜோஹிரி என்ற பெயரிலே சிலர் இருக்கிறார்கள். அவர்கள் அந்தக் காலத்திலே ஆந்திராவிலே இருந்து வந்தவர்கள் அவர்கள், ஜாதி பி.சி. லிஸ்டிலேதான் இருக்கிறது. அவர்கள் தோட்டி வேலை தான் ... செய்கிறார்கள். அவர்களுக்கு வேறு எந்த வேலையும் கிடைக்காமல் பாம்பு பிடிக்கிற வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எஸ். சி. லிஸ்டிலே சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். காட்டுநாயக்கன் என்று சொல்லக்கூடிய மலைவாழ் மக்கள் பட்டியலில் இருக்கக் கூடியவர்கள் 9வது இலக்கத்திலே இருக்கிறார்கள் அவர்களோடு இவர்கள் சம்பந்தம்பண்ணிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். வேறு மாவட்டங்களிலே இருக்கிறவர்கள் எல்லாம் அப்படி சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த மதுராந்தகம் பகுதியிலே இருக்கிற இவர்கள் மட்டும்தான் இப்படி பி. சி. லிஸ்டில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேக்வர்ட் லிஸ்டிலே தான் இருக்கிறார்களே தவிர மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. இவர்களை பி. சி. லிஸ்டிலிருந்து நீக்கி எஸ். டி. லிஸ்டில் சேர்க்கவேண்டும்.

(பிற்பகல் 1-10)

தர்மபுரி மாவட்டத்தில் குறும்பர் என்று இருக்கிறார்கள். அவர்கள் பேக்வர்ட் லிஸ்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களையும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மலைவாழ் மக்களுக்கு என்று தனியாக இயக்குநரகம் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படி கேரளாவிலே ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுடைய மேம்பாட்டிற்காக, வாழ்க்கையில் அவர்களை முன்னேற்றுவதற்காக திட்டங்களைத் தீட்டுவதற்கு தனியாக இயக்குநரகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் சின்னக்கல்ராயன் மலைப்பகுதியிலே 23,270 பேர்கள் வாழ்கிறார்கள், அதைப் போலவே ஆத்தூருக்கு பக்கத்திலே பெரிய கல்ராயன் மலைப் பகுதியிலே 1,200 பேர்கள் குடியிருக்கிறார்கள். ஆரம்பக் காலம் முதல் அவர்கள் பாரம்பரையாக அந்த இடங்களிலே குடி இருந்து வருகிறார்கள். அந்த நிலங்கள் பூராவும 5 ஜாகிர்தார்களுக்கு சொந்தமாக இருந்தன. அவர்களிடம் இவர்கள் எல்லாம் அடிமைகளாக வேலைபார்த்து வந்தனர். ஒவ்வொருவரும் 2, 3 ஏக்கர் என்று சாகுபடி செய்து வந்தனர். 1963-ஆம் ஆண்டு இனாம் ஒழிப்புச் சட்டப்படி அது 1976இல் தான் அமுலாக்கப்பட்டது. அந்த சாகுபடி செய்யப்படுகின்ற நிலங்கள் அவர்களுக்கு சொந்தம் ஆக்கப்படவேண்டும். ஆனால் அதை காடு என்று சொல்லி காடு

என்றால் பாரஸ்ட் என்று அர்த்தம் எடுத்துக்கொண்டு அந்தக் காடு பூராவும் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்று எடுத்துக் கொண்டு அவர்களையெல்லாம் நிலத்திலிருந்து வெளியேற்றி இருக்கிறார் கள். அங்கே பழங்குடி மக்கள், ஆதிதிராவிடர்கள் தான் பரம் பரையாக சாகுபடி செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயில்பட்டியில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்ட வேண்டுமென்று சொல்லி, 7, 8 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இடம் வாங்கப்பட்டு அந்த இடம் இப்போதும் அப்படியே இருக் கிறது. விடுதி இன்னும் கட்டப்படவில்லை. உடனடியாக அவர் களுக்கு விடுதி கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

கடைசியாக அச்சகம் சம்பந்தமாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசாங்கத்தினுடைய அச்சகமாக இருந்தாலும் கூட முழுமையாக சரியாகச் செயல்படாமல் வெளியே கான்ட்ராக்ட் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அது மட்டு மல்ல. தொழிலாளர்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. மத்திய சர்க்கார் திட்டப்படி கண்பார்வையற்றவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு புரமோஷன் சிலருக்கு கிடையாது. இன்கிரிமென்ட் கிடையாது என்று சொல்கிறார்கள். கொடுமைகள் நடக்கின்றன. இரவு நேரபடி கிடையாது, லீவு கொடுக்கப்படவில்லை அர சாங்கம் நடத்துகின்ற இந்த நிர்வாகத்திலே கூட இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே சட்ட ரீதியாக அவர் களுக்கு என்ன என்ன கிடைக்க வேண்டுமோ அவைகளைக் கிடைக்க செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு, மாறி மாறி ஆட்சிகள் வந்திருக்கின்றன. என்றாலும் இன்றைக்கும் அவர் களுக்கு சுடுகாட்டிற்கு பாதை கிடையாது. ரோடுகள் போட வில்லை, லைட் கிடையாது, குடிநீர் கிடையாது என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே தீவிரமாக அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி எதிர்காலத்திலே இப்படிப்பேசாமல் இருக்கும்படி தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. பெரியசாமி : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரி வித்துக் கொண்டு என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.





1984–85 ஆம் ஆண்டுக்கு 4,803.21 இலட்சம் ரூபாய் ஒதுக்கி யுள்ளதை வரவேற்கிறேன். தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் ஆதிதிராவிட மக்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. வேறு எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு பல்வேறு புதிய திட்டங்கள் ஆதிதிராவிட மக்களுக் காகத் தீட்டப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் டாக்டர் புரட்சித் தலைவர் இதய தெய்வம் ஆட்சியில்தான் வேளாண்மை, மருத்துக் கல்வி, பொறியியல் கல்வி ஆகிய கல்விச் சாலைகளில் சரியான இட ஒதுக்கீடு கொடுக்கப் பட்டுள்ளது. ஆதிதிராவிட மாணவ மாணவியர் கல்விக்காகப் புரட்சித் தலைவர் அரசு அதிக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன்.

ஆதி திராவிட மாணவ, மாணவியர் இல்லங்களுக்குப் பல்லாண் டுக் காலமாக நிரந்தரக் கட்டிட வசதி இல்லாமல் இருந்தது. இதை விரைவாக நிறைவேற்றும் பொருட்டு பல்வேறு இடங் களில் புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு. வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு தனியார் தொழிற்சாலைகளில் 18 சதவீத இட ஒதுக்கீடு செய் துள்ளதைப் பாராட்டுகின்றேன்.

பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை அதிகப்படுத்தியுள்ளதைப் பாராட்டுகின்றேன்.

மத்திய சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் என்னுடைய தொகுதியிலுள்ள தாராபுரம் ஒன்றியத்தை எடுத்து அங்குள்ள ஆதி திராவிட மக்களுக்குச் சுய வேலைவாய்ப்பு கிடைக்கப் பல் வேறு நலத் திட்டங்களை செயல் படுத்த வேண்டுகிறேன்.

பால்வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு உழவு மாடுகள், கறவை மாடுகள், ஆடுகள் போன்றவை வாங்க பாதித் தொகை கடனாகவும், பாதித் தொகை மானிய மாகவும் வழங்கப்படுவதைப் பாராட்டுகின்றேன்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களுக்குப் பேருந்து உரிமம் வழங்குவதில் முன்னுரிமை வழங்க 18 சதவீதம் ஒதுக்கி யுள்ளதை வரவேற்கின்றேன்.

என்னுடைய தாராபுரம் தொகுதியிலுள்ள தாராபுரம் வட தாரை, தென்தாரை, உப்புதுன்றபாளையம், பொன்னாவரம், நாரணவரம், கோவிந்தவரம், புத்தூர், தாசர் பட்டி, அலங்கியம், குளவாய்ப்பட்டணம், செல்லாம்பாளையம், காங்கியம்பாளையம்,

[திரு. ஏ. பெரியசாமி] [1984 மார்ச் 22

வீராஜிமங்கலம், மணக்கடவு, மங்களாம்பாளையம் ஆகிய கிராமங்
களில் ஆதி திராவிட நலத்துறை மூலம் இலவச வீடு கட்டிக்
கொடுக்கவும், லோன் வழங்கவும், வீட்டுமனைப் பட்டா வழங்க
வும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை நிலம் ஆர்ஜிதம் செய்ய
கால தாமதம் ஆகின்றது. அதைத் துரிதப்படுத்த புதிய சட்டம்
இயற்றக் கேட்டுக்கொள்கிறேன்.

தாட்கோ திட்டத்தில் பத்தாயிரம் வீடுகள் கட்டுகின்ற திட்
டம். அதில் ஒன்பதாயிரம் வீடுகள் ஆதி திராவிடர்களுக்குக்
கட்டுதல் சிறப்பான திட்டமாகும். இதைப் பாராட்டுகிறேன்.

ஆதி திராவிட மக்களுக்காக என்னுடைய தொகுதியான
தாராபுரத்தில் விசைத்தறி நூற்பாலை ஒன்று அமைத்துக்
கொடுக்க வேண்டுகிறேன்.

பாலிடெக்னிக் ஒன்றும், காலேஜ் ஒன்றும் எற்படுத்தி தர
வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி தாராபுரத்தைப் பின் தங்கிய தாலுக்கா
வாக அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை
பெறுகிறேன்.

*திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத்
தலைவரவர்களே, மாண்புமிகு ஆதி, திராவிடர் நலத் துறை
அமைச்சரவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கின்ற மானியக் கோரிக்
கைகளின் மீது என்னுடைய சில கருத்துக்களை இங்கே கூற
விரும்புகிறேன்.

1984—85-ம் ஆண்டிற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடிகள்
நல்வாழ்வுத் திட்டங்களுக்கு ரூ. 48 கோடி ஒதுக்கப்
பட்டிருப்பதை குறித்து நான் இங்கே பாராட்ட விரும்புகிறேன்.

இம்மாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய மக்களைப்
போல் ஆதி திராவிடர் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தையும்
உயர்த்த டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சி அமுல்படுத்தும் திட்
டங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமானால் கல்வி எவ்வளவு
முக்கியமானது என்பதை உணர்ந்துதான், எந்த மாநிலத்திலும்
இல்லாத அளவிற்கு, தமிழகத்திலேதான், எந்தக் கட்சியின் ஆட்சி
யிலும் இல்லாத அளவிற்கு ஒரே ஆண்டில் 26 மாணவர் இல்லங்
கள் திறக்கப்படவிருப்பதைக் குறித்து நான் பெரு மகிழ்ச்சி அடை
கிறேன். வரவேற்கிறேன்.



1984 மார்ச் 22] [திரு. பி. துரைராஜ்]

நடப்பு ஆண்டில் 8 கல்லூரி மாணவியர் விடுதிகளும், 6 உயர்
நிலைப் பள்ளி மாணவர் விடுதிகளும், 12 உயர்நிலைப் பள்ளி
மாணவியர் விடுதிகளும் ஆக மொத்தம் 26 விடுதிகள் திறக்கப்பட
விருப்பதைக் குறித்து நான் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 1—20)

ஏனென்றால் சமுதாயத்தில் பிற இனத்தவர்களுக்கொப்ப
சமமான வாழ்வை எய்துவதற்கு கல்வி வளர்ச்சிதான்
முக்கியம் என்பதை உணர்ந்து 26 விடுதிகளைத் திறக்க
விருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர்கள் இல்லங்களுக்கு நிரந்தரமாகக் கட்டிடம் கட்டித்
தருவதற்காக இந்த ஆண்டு 240 இலட்சம் ரூபாய்.
ஒதுக்கியுள்ளதையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்
காக விளையாட்டுப் பொருட்கள் வழங்கவும் இந்த நிதி
நிலையறிக்கையில் வழிவகை செய்திருப்பதை நான் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்.,
ஐ.பி.எஸ்., பயிற்சி பள்ளிகளையும், தட்டெழுத்து, சுருக்
கெழுத்து பயிற்சி பெற வசதிகளையும் ஏற்படுத்தி நடைமுறைப்
படுத்தி வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டப்படிப்பு படித்து தொழில் தொடங்க வாய்ப்புள்ள
ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் மானிய
மாகவும், கடனாகவும் ரூபாய் 1,500 வழங்கி அவர்களை
உற்சாகமூட்ட வாய்ப்பு அளித்திருப்பதையும் பாராட்டுகிறேன்.

ஆதிதிராவிடர், பழங்குடி மக்களின் பொருளாதாரத்தை
மேம்படுத்துவதற்காக, உழவுமாடுகள் வாங்கிக் கொடுத்தல்,
பாசனக் கிணறுகள் ஏற்படுத்த நிதி உதவி அளித்தல், பால்
கறவை மாடுகளை வாங்க உதவிப்பணமளித்தல், சிறுதொழில்
கள் நடத்துவதற்கு வட்டி இல்லாக்கடன்கள் வழங்குதல்,
இலவச தொழில் கருவிகள் வழங்குதல், ஈமச் சடங்கு
களுக்காக உதவிப்பணம் வழங்கி உதவி செய்தல் முதலான
அனைத்து உதவிகளுக்காக புரட்சித் தலைவர் ஆட்சியைப்
பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்படிப்பட்ட நல்ல
திட்டங்களை இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில்
நடைமுறைப்படுத்தியதற்காக நான் மிகவும் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து எனது தொகுதியைப் பொறுத்தவரையில் ஒருசில
வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். இந்த ஆண்டு திறக்கப்பட இருக்கக்கூடிய 26
மாணவர்கள் இல்லங்களைப் பொறுத்தவரையில் என்னுடைய

[திரு. பி. துரைராஜ்] [1984 மார்ச் 22

தொகுதியிலே கரிவலம் வந்தநல்லூர், வீரசிகாமணி ஆகிய இரு கிராமங்களில் உள்ள பள்ளிகளில் இரண்டு மாணவியர் ஹாஸ்டலைத் திறக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்கரன்கோவில் நகரில் ஒரு கூட்டுறவு நூற்பாலை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிறுவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். சங்கரன்கோயில் ஒன்றியத்தில் குவளைக்கன்னி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டித்தர வேண்டும் என்று கடந்த 4 ஆண்டுகளாக நான் கேட்டுக்கொண்டு வருகிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தச் சமுதாயக் கூடத்தைக் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தீண்டாமை ஒழிப்புப் பணிகளை மேலும் தீவிரமாக செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு அரசு உத்தியோகம் கொடுப்பதில் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

வேலைவாய்ப்புத் துறையில் 18 சதவீதம் அளிப்பது என்பது பூரணமாக நிறைவேற்றப்படவில்லை என்று இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற குறிப்புகளும் அப்படித் தான் இருக்கின்றது. ஆகவே அந்த நிலைமையைப் பூர்த்தி செய்வதற்கு முக்கியமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல வழிகளிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று மத்திய அரசின் பல பொது நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் 18 சதவீதம் ஒதுக்கவேண்டும் என்றும் அந்த வகையில் ஆணை யிடவேண்டும் என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டதாக சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இங்கே தாழ்த்தப் பட்டவர்களுக்காக அக்கறையும் ஆர்வமும் கொண்டு பல கருத்துக்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. இளைய பெருமாள் அவர்கள் புரட்சித்தலைவர் அவர்களின் அந்தக் கோரிக்கை பற்றி மத்திய அரசிடத்திலே சொல்லி மத்திய அரசின் பொது நிறுவனங் களிலும் 18 சதவீதம் கண்டிப்பாக ஒதுக்கித் தருவதற்குரிய வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிப்பட்ட ஆணையை மத்திய அரசு இடுகின்ற வகையில் கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் தன்னுடைய செல் வாக்கைப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கும் சலுகைகள் பல வழங்கவேண்டும் என்று 1967 முதல் இந்த மன்றத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆதிதிராவிட கிருஸ்துவர்களுக்கு



1984 மார்ச் 22] [திரு. பி. துரைராஜ்]

ஓரளவுக்கு இந்த மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்ட வகையில் சலுகைகள் பல கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் முழுவதுமாக மற்ற ஆதிதிராவிடர்களுக்குக் கிடைப்பது போன்ற அத்தனை சலுகைகளையும் கிருத்துவ ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றால் அதற்காக மத்திய அரசுதான் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்ற நிலைமை இருப்பது குறித்து நான் இந்த நேரத்தில் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இங்குள்ள மத்திய அரசின் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் மத்திய அரசிடம் சொல்லி அந்த அரசியல் சட்டத்தைத் திருத்தி மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்களுக்கும் அனைத்து சலுகைகளும் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலைவாய்ப்பு சம்மந்தமாக பல சலுகைகளை நாம் கட்டாயமாக சட்டத்தின் மூலம் நிலைநிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நெல்லை மாவட்டத்தில் நல்லம்மாள் புரம் என்ற கிராமத்திலுள்ள மேல்நிலைப்பள்ளியில் போதுமான போஸ்ட் கிராஜுவேட் டீச்சர்ஸ் நியமிக்கப்பட வேண்டும் என்று அனுமதிக்கப்பட்டும் போதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாத நிலைமை இருக்கின்றது. ஆகவே அதிகாரிகள் உடனடியாகக் கவனம் செலுத்தி அங்கே ஆசிரியர்களை நியமிக்கின்ற நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கே உள்ள ஆசிரியர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல சலுகைகளை நாம் வெளியிட்டுள்ள போதிலும் 'சமுதாயத்தில் நாங்களும் மற்றவர்களுக்குச் சமமாக பல பொறுப்புகளை ஏற்று நிர்வகிக்க முடியும் என்று சொல்லுகின்ற அளவுக்கு அவர்களின் திறமைகளைக் காட்டுவதற்கேற்ற வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் இந்த மாநிலத்தில் ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் ஆகிய நிறுவனங் களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 18 சதவீதம் இடத்தை ஒதுக்கி சட்டம் இயற்றினார்கள். நாங்களும் மற்றவர்களைப் போல், அந்த நிர்வாகத்தைத் திறமையாக நடத்த, வேண்டும், நாங்களும் மனிதர்கள்தான் என்ற உண்மை நிலையை உணர்ந்து, இந்திய துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, இதுவரை தமிழகத்தில் ஆண்ட எந்தக் கட்சியும் செய்யாத காரியத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் வந்த புரட்சித் தலைவர் அவர்கள்தான் மிகவும் துணிச்சலாக, சமுதாயத்தில் மேல் மட்டத்தில் உள்ளவர்களும், மற்றவர்களும் எதிர்த்து நின்றாலும்கூட, இந்தச் சட்டப்பிரகாரம்

[திரு. பி. துரைராஜ்] [1984 மார்ச் 22

நடத்துகின்ற நிலைமையில்தான் இந்தத்தேர்தலே நடத்துவேன் என்று ஆணித்தரமாக புரட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சட்டத்தை இயற்றி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற அங்கத்தினர்கள் பேசும் போது இந்தச் சட்டம் குறித்து ஒருவராவது பாராட்டிப் பேசாதது கண்டு நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

திரு. இளையபெருமாள் அவர்கள் செய்ததைப் பற்றிச் சொன்னார்கள். நான் ஒன்று சொல்கிறேன். இந்தச் சமுதாய மக்களுடைய நல்வாழ்வுக்காக, மாநில அரசு மட்டும் செய்து விட முடியாது. ஆனால் மத்திய அரசாங்கத்திலே இருந்து பல சட்டங்களைப் போட வேண்டியிருக்கிறது. ஆகவே, காங்கிரஸ் நண்பர்கள் முழு மனது வைத்து, இந்திரா காந்தியிடம் அவர்களுக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி, பல சட்டங்களை நிறைவேற்றினாலொழிய மாநிலங்கள் தங்களுக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு இந்த மக்களை ஒரேயடியாக உயர்த்திட முடியாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது குறித்து இந்த உச்ச வரம்பு ரூ. 6,000 இருப்பதை ரூ. 12,000 ஆக உயர்த்த வேண்டுமென்று பல அங்கத்தினர்கள் கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கோரிக்கையை நானும் ஏற்றுக் கொள்கிறேன். 1947 ஆம் ஆண்டுக்குப் பிறகு 20 ஆண்டுக் காலம், அந்த உச்ச வரம்பு ரூ. 1,500 ஆக இருந்தது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, அதை ரூ. 3,000 ஆக உயர்த்தினோம். ஆனால், இன்றைக்குப் புரட்சித் தலைவர் ஆட்சியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அது ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனாலும் இன்றைக் குள்ள விலைவாசிக்கு ஏற்றவாறு இந்த உச்ச வரம்பை ரூ. 12,000 ஆக உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவரிடத்தில் எடுத்துக் கூறி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் சிறு தொழில் செய்வதற்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றையதினம் ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 10 இலட்சம். அது போதாது என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். நானும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறேன். அதைச் சற்று உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர வேண்டுமென்றால், சில நிலைமைகளுக் கேற்றவாறு சில தொழில்களைச் செய்து, அவர்கள் முன்னேற முடியும். அப்படியிருந்தால்தான் அவர்கள் தொழில் செய்து தங்களுடைய பொருளாதாரத்தை உயர்த்தமுடியும்.



1984 மார்ச் 22] [திரு. பி. துரைராஜ்]

ஆகவே, ஏறத்தாழ ரூ. 50 இலட்சமாவது ஒதுக்கி, அவர்கள் சிறு தொழில் செய்ய கடன் பெற ஆவன செய்ய வேண்டு மென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், இன்றையதினம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடு களைக்கட்ட, வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுப்பதற்காக, இந்த ஆட்சி பல நல்ல சட்டங்களையெல்லாம் போட்டாலுங்கூட, இன் றைக்கு ஏராளமான நிலச்சுவான்தார்கள், அந்த வீட்டுமனைகளை எடுத்து, ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்காத வகையிலே உயர்நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கிக்கொள் கிறார்கள். ஆகவே, தடைச் சட்டத்தை நீக்குவதற்காக மத்திய அரசாங்கத்திடம் கலந்து பேசி ஒரு நல்ல சட்டத்தை இந்த அரசாங் கம் போட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்க ளுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொள்வோமானால், ஏராள மான மக்களுக்கு நிலப்பட்டா, வீட்டுமனைப்பட்டா கூட கொடுக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த அரசு ஏற்பட்டபிறகு ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 4 இலட்சம், ரூ. 5 இலட்சம் என்று ஒதுக்கி, வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க ஏற்பாடு செய்து வருகிறார் கள் என்பதை நான் பெருமையுடன் கூறமுடியும். கடந்த 15 ஆண்டுகளாகப் பல சட்டமன்ற நடவடிக்கைகளிலே பல ஆட்சி களுடைய நிலவரத்தை அறிந்ததாலே சொல்கிறேன். ஆகவே, இப்பேர்ப்பட்ட ஒரு உயர்ந்த பலவிதமான நல்ல சலுகைகளை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்த புரட்சித் தலை வர் ஆட்சியை நான் மிகவும் பாராட்டி வரவேற்று முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

(ஆ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள்— அச்சுத்துறை.

[1984 மார்ச் 22

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறை மானியத்தின்மீது பேசுகிற வாய்ப்பு தந்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்து இங்கே அவையில் வைக்கப்பட்டிருக்கிற எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு ஒட்டுமொத்தமான முடிவைக் காணவேண்டி இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முதற்கண் நான் கேட்டுக்கொள்கிறேன். ஆண்டுதோறும் நடைபெற்றுவருகிற இந்த நிதிநிலை அறிக்கையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற பணமும் அந்தப் பணத்தின் மூலம் போடப்பட்டிருக்கிற திட்டங்களும் இந்தச் சமுதாய மக்களுடைய சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்திருக்கிறதா என்பதைப் பார்த்து அறிந்து குறைகளை உடனடியாகக் களைந்தெறிய இந்த அரசு தன்னை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

வீட்டுமனைப் பிரச்சினையில் தாழ்த்தப்பட்ட மக்களுடைய சமூக பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்பானதொரு முன்னேற்றத்தைக் காண வேண்டும் என்பதற்காகத்தான் தமிழக அரசு இந்தத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் சுதந்திரம் பெற்று இந்த நாள் வரையில் ஆதி திராவிடர் பகுதிகளில் வாழ்கிற மக்கள் தங்களுக்கு வீட்டுமனைகள் இன்னும் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். நாம் கொடுத்திருக்கிறோம், ஆனால், அவை போதாத நிலையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த வீட்டுமனைப் பிரச்சினையில் அரசாங்கம் உடனடியாகத் தன்னுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏறத்தாழ 30, 35 ஆண்டுக்காலத்தில் இந்த மக்களுக்கு இருக்கிற பிரச்சினைகளில் இவ்வளவு சீர்திருத்தங்கள் செய்தும் ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் அளவிற்கு செலவு செய்தும், இந்த அரசு எவ்வளவோ உழைத்திருந்தாலும் நாம் எதிர்பார்க்கிற ஒரு முன்னேற்றம் அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இல்லை. இந்த மக்களுடைய சமூக பொருளாதார முன்னேற்றம் அரசாங்கம் விரும்புகிற அளவிலோ அல்லது இந்த நாடு எதிர்பார்க்கிற அளவிலோ முன்னேற முடியாது போய் விட்டதற்கு மிகப் பெரிய காரணங்கள் உண்டு. எனவேதான், தமிழக அரசை நான் மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன், இந்த அரசு தன்னிறைவுத் திட்டத்தை அறிவித்தது போல், குறிப்பிட்ட ஆண்டுக் காலத்தைக் குறிப்பிட்டு பல கோடி ரூபாய் ஒதுக்கி தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக கிராமங்களில் இருக்கிற பிரச்சினைகளைத் தீர்க்க எப்படி அணுகினார்களோ, அதற்காக பல கோடி ரூபாய் மானியமாகவும் கடனாகவும் வழங்கினார்களோ, அதேபோன்று ஒரு திட்டத்தை ஒரு காலக்கெடு கொடுத்து ஒரு பத்து ஆண்டுக் காலத்தில், 1985 இல் இருந்து 1995-க்குள்ளாக "தாழ்த்தப்பட்ட மக்கள் மேம்பாடு பெறும் ஆண்டுகள்" என்றளவிலே



1984 மார்ச் 22] [திரு. ஜி. மூர்த்தி]

ப்ரோக்ராமை "— இந்த அரசு
ஒரு " டைம் பௌண்ட் கேட்டுக் கொள்கிறேன். குறைந்த
கையாள வேண்டும் என்று போக்கிவிடமுடியுமா
பட்ச காலக்கட்டத்தில் இவ்வளவையும் இருக்கக்கூடும்.
என்பது அரசாங்கத்தினுடைய கேள்வியாக இந்த வீட்டுமனைப்
ஆனாலும், ஏறத்தாழ 35 ஆண்டுக்காலமாக வருகிறோம்.
பிரச்சினையில் நாம் சங்கடத்தை அனுபவித்து இந்த வீட்டுமனை
இதற்கு மிக முக்கியமான காரணம் அரசாங்கம் மிகப்பெரிய
ஆர்ஜிதத்திலே வைத்திருக்கிற கொள்கை ஒரு உணர்ந்திருப்
பலவீனம் என்பதை அமைச்சர் அவர்கள் நன்றாக ஆர்ஜிதம் செய்
பார்கள் என்று கருதுகிறேன். நாம் நிலம் சென்று தடை
கிறபோது தனியார் ஒருவர் வழக்குமன்றத்திற்குச் இன்று சந்தித்துக்
வாங்குகிற ஒரு பரிதாபகரமான சூழ்நிலையை தடை வாங்க
கொண்டு இருக்கிறோம். எனவே, அப்படி அவர்கள் என்பதைக்
முடியாத அளவிற்கு அல்லது கட்டாய நில ஆர்ஜிதம் பிரச்சினையை
கொண்டுவந்து இந்த மக்களுடைய வீட்டுமனைப் ஸ்லம் க்ளியரன்ஸ்
உடனடியாகத் தீர்த்தாக வேண்டும். இன்று வாரியம் இருக்
போர்ட் இருக்கிறது, அதே போன்று வீட்டுவசதி வீடுகள் கட்டு
கிறது. அவர்கள் எல்லாம் நிலம் எடுக்கிறார்கள். வழக்கு மன்
வதற்கு நிலம் கையகப்படுத்துகிறார்கள். ஆனால், வழக்கு
றத்திற்கு அவர்கள் சென்றதாக வரலாறே இல்லை. எடுக்கக்
மன்றத்திற்குச் சென்று தடை வாங்கி அந்த இடத்தை உருவாக்கியது
கூடாது என்ற நிலையை யாரும் தமிழகத்தில் நிலத்தை
கிடையாது. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சென்று
ஆர்ஜிதம் செய்கிறபோது தனியார் வழக்குமன்றத்திற்குச் கட்டாயமாக
தடை வாங்குகிறார்கள். அந்த முறையை மாற்றி அல்லது
ஆர்ஜிதம் செய்யவோ அல்லது வீட்டுவசதி வாரியம் செய்ய
ஸ்லம் க்ளியரன்ஸ் போர்ட்-க்காக நாம் நில ஆர்ஜிதம் மக்களுக்காக
வைத்திருக்கிற கொள்கையை இந்த தாழ்த்தப்பட்ட வேண்டுமென்று
நில ஆர்ஜிதம் செய்வதிலும் விரிவுபடுத்த தாழ்த்தப்பட்ட
கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்றுதான், சுடுகாட்டுப்பிரச்சினை;
மக்களுடைய குடி தண்ணீர்ப் பிரச்சினை; கிராமங்களிலே
சுடுகாட்டு வழிப் பிரச்சினை. இன்னும் இப்படி அடிப்படைப் பிரச்சினை
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டிய இருக்கிறது. சுடுகாட்
கள் கூட தீர்க்க முடியாத நிலைமை சுடுகாட்ட இல்
டிற்குப் போவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. செய்வதற்கு அர
லாத கிராமம் இருக்கிறது. நில ஆர்ஜிதம் தனியார் அதைத்
சாங்கம் முனைப்போடு வேலை செய்யும்போது, ஆகவே, குறைந்த
தடுத்து நிறுத்துகின்ற சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்
பட்ச காலக்கட்டத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுடைய குறைந்தபட்சம்
பட்ட சிறிய பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, வேண்டு
10 ஆண்டு காலத்தில், அவைகளைத் தீர்த்துவிட வேண்டு
மென்கிற ஒரு முனைப்போடு இந்த அரசு செயல்பட
மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் கடனுதவி வழங்கப்படு
கின்றது. மானியமும் வழங்குகிறார்கள். அதேபோல், எல்லாத்
துறைகளிலும் கடனுதவி கொடுக்கப்பட்டு, அதற்கு வட்டியும்

[திரு. ஜி. மூர்த்தி] [1984 மார்ச் 22

வாங்குகிறார்கள். இன்றைக்கு பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்
திற்குக்கூட "பைனான்ஷியல் கார்ப்பரேஷன்" அதாவது
பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்று
அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு
என்று அப்படி ஒரு நிதிக் கழகம் இன்றைக்கு வரை கிடையாது.
"தாட்கோ" மூலமாக இப்படிப்பட்ட திட்டங்கள் செயல்
படுத்தப்பட்டு வருகின்றது என்று சொன்னாலும்கூட, தனியான
முறையிலே இப்படிப்பட்ட பொருளாதார மேம்பாட்டுக் கழகம்
இருந்தால், அதன்மூலம் அவர்கள் கடன்பெற்று, தாங்களும் பொரு
ளாதார மேம்பாடு அடையலாம் என்ற உணர்வு ஏற்படுவதற்கு
தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று ஒரு தனி கழகத்தை அமைத்துத்
தரவேண்டும் என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு வேலைவாய்ப்புப் பிரச்சினையிலே
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மத்திய சர்க்கார் 18 சதவீதம் தர
வேண்டுமென்று சட்டத்திலே ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்ற
அந்த அடிப்படையிலே, வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.
மாநில சர்க்காரும் அதை இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறது.
ஆனால், உத்தியோக உயர்வில் ரிசர்வேஷனைக் கடைப்பிடிக்கி
றார்களா என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அந்த நிலைமை
இல்லை, இன்றைக்கு ரெவின்யூ பிரிவில் இதை அமுல்படுத்து
கிறார்கள். ஆனால், உள்ளாட்சித் துறையில் அது முழுமையாக
அமுல்படுத்தப்படவில்லை என்ற விவரம் இன்றைக்குத் தெளி
வாகத் தெரிந்திருக்கிறது. ஆகவே, எல்லாத் துறைகளிலும்,
பிரமோஷனிலும் ரிசர்வேஷனைக் கட்டாயம் அமுல்படுத்திட
வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்கு
கொண்டுவர விரும்புகிறேன். இதற்கு ஒரு மிகப் பெரிய காரணம்
உண்டு. அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள் 18 சதவீதம் வேலைக்கு
வருவது சிரமமாக இருக்கிறது. அப்படி வந்த பின்பு, அவர்
களுடைய தகுதியின் அடிப்படையிலே, சர்வீசின் அடிப்படையிலே
உத்தியோக உயர்வில் ரிசர்வேஷன் கொடுப்பதில்லை.
உத்தியோக உயர்வை வாங்க முடியாதது மட்டுமல்ல; அப்படி
அரசு ஊழியர்கள் அதைத் தடுத்து நிறுத்தி வருகிறார்கள். இந்த
மங்களிலே மட்டும் தீண்டாமை இல்லை; நகரத்திலும் கிரா
குச் சமமாக இருக்கிறது. படித்தவர்கள் மத்தியிலே அதற்
இருக்கிறது. விவரங்கள் தெரிந்தவர்கள் மத்தியில் தீண்டாமை
இருக்கிறது. படித்தவர்கள் வெளியில் தீண்டாமை
ஆனால், வேலைக்கு வருகிறபோது, உத்தியோக காட்டுவதில்லை.
போது, இருக்கின்ற துறையின் மூலமாக— உயர்வு வருகிற
அன்டச்சபிலிடி" அதாவது புத்திசாலித்தனமான "இன்டலக்சுவல்
தாழ்த்தப்பட்ட மக்கள்மீது அரசுப் பணியிலே தீண்டாமை
கடைப்பிடித்து வருகிறார்கள். ஆகவே, இருக்கிறவர்கள்
உயர்வு கொடுப்பதில் ஒதுக்கீட்டைக் கட்டாயம் அவர்களுக்கு பதவி
டும் என்பதை நான் இந்த நேரத்தில் செய்தாக வேண்
கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 22] [திரு ஜி. மூர்த்தி]

இப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஆராய, எனக்கு முன்னால்
காலையில் பேசிய மாண்புமிகு தலைவர் இளையபெருமாள் அவர்
கள் பேசுகிறபோது, குறிப்பிட்டபடி ஒரு குழுவை அமைத்தாக
வேண்டும். இதற்கென சட்டமன்றத்தின் ஒரு ஸ்டாண்டிங்
கமிட்டி தாழ்த்தப்பட்ட மக்களுக்கென அமைக்க வேண்டுமென்று
மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல்வர் அவர்களோடு கலந்து,
இந்தப் பிரச்சினையில் ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று
நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி வளர்ச்சியிலேகூட இன்றைக்கு பள்ளிக்கூடங்களை நாம்
ஆங்காங்கே திறந்து கொண்டிருக்கிறோம் என்றாலும், துர்ப்பாக்
கியமான நிலைமை என்னவென்றால், தாழ்த்தப்பட்ட மக்களுக்
கென்று கட்டப் படுகின்ற பள்ளிக்கூடங்களை "அப்-கிரேட்"
செய்வதை நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறோம். பல ஆண்டுக்
காலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் பள்ளிக்கூடத்திற்கே செல்லாத
நிலையில், இன்றைக்கு பள்ளிக்கூடத்திற்குச் சென்று கொண்டிருக்
கின்ற நிலைமை இருந்தும், என்னுடைய தொகுதியில் நலங்கா
நல்லூரில் 700, 800 மாணவர்கள் படிக்கின்ற நிலைமையிருந்தும்,
அவர்கள் 5-ஆவது வகுப்பிற்கு மேல் 6-ஆவது வகுப்பு படிக்க
வேண்டுமென்றால், 8-ஆவது வகுப்புபடிக்க வேண்டுமென்றால்
அங்கே பள்ளிக்கூடமே இல்லை. தமிழகத்தில் இன்றைக்குப்
பள்ளிக்கூடமே இல்லாத ஒரு அது ஊராக இருக்கிறது. ஆதி திரா
விட நலத் துறையிலே இருந்து, அங்கே ஒரு பள்ளிக்கூடம் அமைக்க
வேண்டுமென்று அரசாங்கத்திற்கு ஒரு கோரிக்கை அனுப்பப்பட்
டிருக்கிறது. மேலும், மற்றொரு பள்ளிக்கூடத்தை அப்-கிரேட்
செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டு
இருந்து, அது நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

(மாலை 4-10)

எல்லாத் துறைகளிலும் வயது வரம்பைத் தளர்த்துவதுபோல்,
உத்தியோகத்தில் ரிசர்வேஷன் தருவதுபோல், இந்த கல்வித் துறை
யிலும், விதி விலக்கு அளித்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக,
அந்த வெல்பேர் பள்ளியை பிளஸ் 2 வரையிலும், கல்லூரி வரை
யிலும் உயர்த்தித் தரவேண்டுமென்று, மாண்புமிகு அமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஸ்காலர்ஷிப் வழங்குகிறபோது,
பெற்றோர்களுடைய வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்
கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.
பெற்றோருடைய வருமானத்தின் அடிப்படையிலே அவர்க
ளுடைய மொத்த சம்பளத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்
டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அடிப்படைச் சம்பளத்தை
மாத்திரம் எடுத்து, டி.ஏ., ஹெச். ஆர். ஏ., போன்றவைகளை
கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாம். அதையெல்லாம் சேர்த்
தால், வருட வருமானம் ரூ. 9,000-ஐயும் மிஞ்சுகிறபோது அவர்

[திரு. ஜி. மூர்த்தி] [1984 மார்ச் 22

களுக்கு உதவியில்லை என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்கார் பேசிக் பே மாத்திரம் எடுத்துக்கொள்ளும் ''டைரக்ஷன்ஸ்'' இருக்கக்கூடிய நேரத்தில், மாநில அரசு டி.ஏ., ஹெச்.ஆர்.ஏ., போன்றவைகளையெல்லாம் சேர்த்துக்கொள்கிறார்கள். இதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்த வரையில் தாழ்த்தப்பட்ட மக்கள் பணக்காரர்களாக இருந்தாலும் சரி, ஏழைகளாக இருந் தாலும் சரி, வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், உதவிப் பணத்தை வழங்க வேண்டும். வருமானத்தின் அடிப் படையிலே உச்சகட்டமாக வைத்து சலுகைகள் தருவது என்பது, அவர்கள் எவ்வளவு முன்னேறியிருக்கிறார்கள் என்பதற்கான அளவு கோலாகிறது. அந்த மக்களின் சமுதாய அடிப்படையிலே சலுகைகள் தரவேண்டுமே தவிர, எந்த அளவிற்கு அவர்கள் சம்பளம் வாங்குகிறார்கள் என்கிற அடிப்படையை வைத்து, இப்போது உதவி தருவது நியாயம் அல்ல. எனவே, வருமானத் தைக் கணக்கில் கொள்வதை ரத்து செய்துவிட்டு, தாழ்த்தப் பட்ட சமுதாயம் என்ற ''க்வாலிபிகேஷனை'' மட்டும் வைத்து, வழங்கவேண்டும். இதற்கு ஒரு வேளை அரசாங்கத் திற்கு அதிகமான செலவு ஏற்படுமேயானால், ரூ. 9,000 என்று இருப்பதை ரூ. 12,000, ரூ. 20,000 என்று ஆக்குங்கள். ஆனால் ரூ. 20,000 வாங்குகிற அதிகாரி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் நிச்சயமாக இருக்க முடியாது. எனவே, அப்படிப்பட்ட ஒரு நிலையை நாம் வகுத்துக் கொண்டு, மொத்த சம்பளத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, இப்போது உதவியை கட்டுப்படுத்திக் கொண்டுவருகிறோம். அவர்களுக்கு இதை கணக்கில் எடுத்துக் கொள்கிறபோது பேசிக் பே மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண் டும். மற்றவைகளை கழிக்க வேண்டும். இதுதான் மத்திய சர்க் கார் நடைமுறையாக இருக்கிறது. மாநில சர்க்காரும் இதைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், 90 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள், கல் லூரிக்குச் சென்றால்தான் உதவி கிடைக்கும். அப்படிச் சென் றால் தான் அவர்கள் பரீட்சை எழுத முடியும் என்ற ஆணை போடப்பட்டிருக்கிறது. அவர்கள் 90 சதவீதம் பள்ளிக்கு வர வேண்டுமென்பது அல்லாமல், அவர்கள் 100-க்கு 100 சதவீதம் வரவேண்டுமென்று தான் விரும்புகிறோம். தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்கூட, 70, 80 சதவீதம் பள்ளிக்கு வருவதில்லை. ஆனால், தாழ்த்தப்பட்ட மாணவர் கள் 90 சதவீதம் வந்தால்தான் உதவித் தொகை வழங்கப்படும், பரிட்சை எழுத அனுமதி என்று சொல்கிறார்கள். அந்த சமு தாயத்தின் நிலையைப் பார்க்க வேண்டும். விடுதியிலே படிக்கும் மாணவர்கள் தங்கள் வீட்டிற்குப் போகும்பொழுது, அங்கே அறு வடைக் காலத்தில், தகப்பனாருடன் 3 நாட்கள் களத்தில் வேலை செய்தால், 10 படி அரிசி கிடைக்கும் என்பதால் அங்கே தங்கிவிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த சமுதாயத்தின் நிலையைக் கணக்கில் கொண்டு, 90 சதவீதம் என்பதை மாற்றி,



1984 மார்ச் 22] [திரு. ஜி. மூர்த்தி]

60 அல்லது 75 சதவீதமாகக் குறைக்க வேண்டும். இதை ஒவ் வொரு ஆண்டும் இந்த அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொண்டு விதிவிலக்கு அளித்துக்கொண்டு வருகிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் விதிவிலக்கு அளிப்பதை மாற்றி நிரந்தரமாக, 'இந்த மாணவர்கள் 60 சதவீதம் பள்ளிக்கு வந்தால் போதும் என்ற நிலைமையைக் கொண்டுவர வேண்டும். அதை அமைச்சர் அவர் கள் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார மேம்பாட்டைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு கிராமங்களிலே முழுமையாக உழைத்து சம்பாதிக்கும் அளவில் நிலங்களைத் தந்தாக வேண்டும். இன்றைக்கு நிலத்திற்கு உச்சவரம்பைக் கொண்டு வந்திருக்கி றோம். அந்த உச்சவரம்பின் கீழ் கையகப்படுத்தும் நிலங்களை முழுமையாக இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் 70, 80 சத வீதமாவது இந்த நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தர வேண்டும்.

அதேபோல 2 சி புறம்போக்கு நிலம் இருக்கிறது. சட்டத் திலே டாக்டர் அம்பேத்கார் அவர்கள் உறுதி கொடுத்திருக்கிறார், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாத்திரம் தரவேண்டுமென்று. அதைக் கையகப்படுத்தியாக வேண்டும். முன்பிருந்த கணக்குப் பிள்ளை, மணியக்காரர்கள் எல்லாம் ஜனாதிபதியைவிட அதிக மான அதிகாரங்களை வைத்திருந்தார்கள். அவர்கள் எல்லாம் இருக்கிற நிலத்தை இல்லாமல் செய்தவர்கள். இருக்கிற இடத்தை மற்ற தாழ்த்தப்பட்டோர் அல்லாத மக்களுக்கு மானிய மாகத்தந்து அவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு, அந்த நிலத்தை எல்லாம் கணக்கிலே காட்டாமல் இருந்த புண்ணியவான் கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு ஒழிக்கப்பட்டு, இன்றைக்கு ஓரத்திலே உட்கார்ந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவருடைய புனித ஆட்சி இந்தமாதிரியான ஒரு சிறப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தது. இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் இன்றைக்கு மணியக்காரர்களாக வரக்கூடிய நிலைமைகள் எல் லாம் இருக்கின்றன. எனவே, அந்த நிலங்களை எல்லாம் கண் டறிந்து, அந்த 2 சி. புறம்போக்கு நிலத்தை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு இது ஒரு மிகப் பெரிய சிறந்த வழியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே நாம் அவர்களுக்கு கடன் கொடுத்திருக்கிறோம். 125 ரூபாயிலேயிருந்து 1.5 ஆயிரம் வரையிலும், அவர்களுக்கு கடன் கொடுத்து இருக்கிறோம். 125 ரூபாய், 500 ரூபாய் என்று தருகிறோம். அதை வாங்கி தாழ்த்தப்பட்ட மகன் யாரும் வறுமைக் கோட்டை தாண்டியதாக வரலாறே கிடையாது. அவன் 500 ரூபாய் வாங்கி வறுமைக் கோட்டை தாண்டிவிட

முடியாது. ஆயிரம் ரூபாய் வாங்கி அதைத் தாண்டிவிட முடியாது. எனவே, இந்தக் கடன்களை எல்லாம் ரத்து செய்ய வேண்டும். தேவையில்லை. 500 ரூபாய் வாங்கி அவனுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாது. ஒரு முறை கடன் வாங்கிவிட்டால் வாழ்க்கை முழுவதும் இந்த வெல்ஃபேர் டிபார்ட்மெண்ட்டிலே அவனால் கடன் வாங்க முடிவதில்லை. அப்படி அவன் 500 ரூபாய் கடன் வாங்கிவிட்டால், அவன் வங்கியிலே 5 ஆயிரம் கடன் வாங்க முடிவதில்லை. இதைக் காரணம் காட்டி தள்ளிவிடுகிறார்கள். ஆகவே, இந்தச் சிறு கடன்களை முழுமையாக ரத்து செய்துவிட்டு, இனிமேல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்தக் கடன்களைத் தராதீர்கள். அதற்கு மாறாக இந்த நிதிக் கழகத்தின் மூலம் பல இலட்ச ரூபாயை நீங்கள் டெபாசிட் செய்து, தொழில் தொடங்குகிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, கூட்டுறவு முறையிலே தொழில் தொடங்குகிறவர்களுக்கு நீங்கள் 50 ஆயிரம், 1 இலட்சம் என்று அதிகமான தொகையைத் தந்து, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை ஊக்குவித்தால், அவர்கள் முதல் மாதம் சம்பளத்திலே அந்த வறுமைக் கோட்டைத் தாண்டிவிடுவார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை அரசாங்கம் கொண்டுவர வேண்டும். இந்த பெட்டி லோன்ஸ் எல்லாம் தள்ளிவிடுங்கள். தமிழகத்திலே இத்தனை ஆண்டுகாலமாகக் கொடுத்த இந்தக் கடன்களை எல்லாம் மொத்தமாகச் சேர்த்தால் கூட இலட்சக்கணக்கிலேதான் அவைகள் இருக்கும். 168 கோடி ரூபாயை விவசாயிகளுக்காக ரத்து செய்திருக்கிறோம். இந்த ஆட்சியில். அதுமாத்திரம் அல்ல. சிறு விவசாயிகளுக்கு முழுமையாகவே ரத்து செய்திருக்கிறோம் கோடிக்கணக்கிலே. ஆனால், சுதந்திரம் பெற்று இந்த ஆண்டு வரையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கொடுக்கப்பட்ட இந்தக் கடன்கள் மிகவும் குறைவு. எனவே, அதை முழுமையாக அரசாங்கம் ரத்து செய்ய வேண்டும்; அவர்கள் கட்ட முடியாமல் இருக்கிறார்கள்; அதை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்சினை இருக்கிறது. அதைப்பற்றி மட்டும் பேசிவிடுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நாம் எவ்வளவுதான் சிறப்பான திட்டங்களைக் கொண்டுவந்தாலும், அரசாங்கம் விரும்புகிற அளவிற்கு அவர்கள் முன்னேற்றம் அடைய முடிவதில்லை. அவர்கள் மிகப் பெரிய உத்தியோகத்திலே இருந்துவிடுவதாலே அவர்களுக்கு மரியாதை கிடைத்துவிடுவதில்லை. அல்லது அவர்கள் 1 கோடி ரூபாய் கையிலே வைத்துக்கொண்டு இருப்பதாலே மாத்திரம் அவர்களுக்கு சமுதாயத்திலே அந்தஸ்து கிடைத்துவிடுவதில்லை. காரணம் இன்றைக்கு சாதி என்று ஒன்று இருக்கிற வரையிலே, இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை ஒரு அடிமைத்தனத்தோடு, பார்க்கிற எண்ணம் இந்த நாட்டிலே இருப்பவர்களுக்கு இருந்துகொண்டிருக்கிறது. இதை மாற்ற வேண்டும் என்று சொன்னால்,



சாதி ஒழிப்பு என்பது இன்றைக்கு இருக்கும், நாளைக்கு ஒழித்துவிட முடியாது என்றாலும், சாதி ஒழிப்பு என்பது சட்டத்தின் மூலமாக வரப்போவதில்லை. அல்லது சர்வாதிகார ஆட்சியைக் கொண்டு வந்து சாதி உணர்வை வைத்திருப்பவர்களை தண்டிப்பதாலே வந்துவிடப்போவதில்லை. சாதி ஒழிப்பு என்பது ஒரு நிரந்தரமான உண்மை. தாழ்த்தப்பட்டோர் அல்லாத மக்கள் மனம் திருந்துவார்கள் என்ற நம்பிக்கை இந்த நாட்டிலே யாருக்கும் வரமுடியாது. ஆகவே, சாதி ஒழிப்பு என்பது தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திலேதான் இருக்கிறது. எந்தக் காரணங்களுக்காக இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை மிகவும் இழிவாக நினைக்கிறார்களோ, அந்தக் காரணங்களை எல்லாம் அறிந்து அந்த மக்களை அதிலிருந்து விடுவிக்க வேண்டும். கல்வி இல்லாததால் தாழ்ந்து போகிறார்கள் என்றால், அவர்களுக்கு கல்வியைக் கொடுக்க வேண்டும். நிலம் இல்லாததால் அவர்கள் தாழ்ந்து போகிறார்கள் என்றால், அவன் வறுமைக் கோட்டிலே வாழ்கிறான் என்றால், அவனுக்கு நிலம் கொடுக்க வேண்டும். வேலையில்லாமல் குடும்பத்தை நடுத்தெருவிலே விடுகிறான் என்றால், அவனுக்கு வேலைகிடைக்கச் செய்ய வேண்டும். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்தினால்தான் சாதியை ஒழிக்க முடியுமே தவிர, தாழ்த்தப்பட்டோர் அல்லாத மக்கள் மனம் திருந்துவதாலே சாதி ஒழிந்துவிடும் என்று இந்த நாட்டிலே உள்ள நம்மால் நிச்சயமாக ஒப்புக்கொள்ளமுடியாது. ஆகவே, சாதியை ஒழிக்கின்ற வகையிலே தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக புதிய திட்டங்களை இந்த அரசு வகுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தாழ்த்தப்பட்ட மக்களுடைய குற்றம் குறைகளை தீர்க்க அவர்களை யாராவது சாதியைச் சொல்லி திட்டிவிட்டால் அதற்கு என்று நாம் போலீஸ் துறையை வைத்திருக்கிறோம். அந்தப் போலீஸ் துறையிலே இன்றைக்கு ஒரு விசித்திரமான விவகாரம் நடக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மற்றவர்களுக்கும் உண்மையாக அடிதடி சண்டை வந்தால், இந்த போலீஸ் துறை உங்களுக்கு எல்லாம் தனியாக போலீசார் இருக்கிறார்கள் அங்கே போங்கள் என்று சொல்கிறார்கள். பி.சி.ஆர். யூனிட்டுக்குச் சென்றால், இங்கே சாதியைச் சொல்லித் திட்டினால், தான், கேஸ், அடி தடி உதை என்றால், ரெகுலர் போலீஸ் என்று சொல்கிறார்கள். ஆக, இந்த பி.சி.ஆர். யூனிட்டிலே இருக்கின்ற போலீஸ்காரர்கள் எதற்கு இருக்கிறார்கள் என்பதைக் கூட உணராமல், இந்த புரட்டக்சன் ஆஃப் சிவில் ரைட்ஸ் பற்றி தெளிவான எண்ணம் கூட இல்லாமல் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ஜீப்பைக் கூட நாம் வழங்கியிருக்கிறோம். ஆனால், அவர்கள் இந்த தாழ்த்தப்பட்ட மக்களை அங்குமிங்குமாக அலையவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. அந்த வழக்குகளை விசாரிக்க, மாவட்டந்தோறும் நிச்சயமாக தனி வழக்குமன்றங்களை வைத்தாக வேண்டும். தற்போது 5 மாவட்டங்களில் நாம் வைத்திருக்கிறோம். ஆகவே,

இதை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் அரசாங்கம் கணக்கிலே எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4-20]

மின்சாரத் துறையிலே இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைகள் தரப்பட்டிருக்கின்றன. அஸெஸ்ஸர் வேலையை தந்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களை கேஷியர் வேலைகளுக்கும், கிளார்க் வேலைகளுக்கும் எடுத்துக்கொள்வதற்காக இன்டர்வியூ நடத்தப்பட்டது. ஆனால் அவர்கள் அத்தனை பேரையும் எடுத்துக் கொண்டு, அவர்களை அஸெஸ்ஸராக அமர்த்தியிருக்கிறார்கள். அதிலே 90 சதவீதம் பெண்களாக இருக்கிறார்கள். அதிலே ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் 75 சதவீதத்தினர். வீட்டோடு இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களின் பெண்களுக்கே எவ்வளவோ பிரச்னைகள் வருகிறபோது, வெளியிலே கிராமங்களில் வயல்காட்டிலும், வீடுகளிலும் சென்று மீட்டர் ரீடிங் எடுக்கிற பணியிலே அந்த ஆதித்திராவிட சமூகத்தைச் சேர்ந்த சகோதரிகள் என்னென்ன சங்கடங்களுக்கு உள்ளாவார்களோ என்று தெரியவில்லை. ஆகவே, அவர்களை ஆபிசிலேயே வைத்து வேலை செய்கிற அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அந்தத்துறையில் சம்பந்தம் இல்லை என்றாலும், இந்த சமுதாய மக்களின் பிரச்னை என்ற வகையில் சொல்கிறேன், அமைச்சர் அவர்கள் மின்சாரத் துறை அமைச்சரோடு கலந்து உரையாடி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிணறு வெட்டுவதற்காக, பாலார் பேஸின் லைசன்ஸ் வாங்க வேண்டும் என்று சொல்கிறார்களே, அதை எல்லோரும் வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன் உரிமை அளித்தாக வேண்டும். எத்தனையோ ஆயிரக்கணக்கில் விவசாயிகள், பம்பு செட் வைத்திருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள், மின் இணைப்பு இல்லாமல் சங்கடப்படுகிறார்கள். ஆகவே பாலார் பேசின் லைசன்ஸ் இல்லாமலேயே, அவர்களுக்கு அதில் விதிவிலக்கு கொடுத்து மின் இணைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

ஓரே ஒரு பாயின்ட், தயவுசெய்து அனுமதிக்க வேண்டும். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சாதி சர்டிபிகேட் வாங்குகிறபோது, இன்றைக்கு பலபேர் தங்களுடைய சாதியை மாற்றி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்றும், மலைவாழ் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்றும் போலி சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கிறார்கள். திருப்பதூரிலே குறும்பர்கள், குறும்பன் என்று ஷெட்யூல்ட் காஸ்ட் சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கிறார்கள். கொண்டா ரெட்டிகள். கொண்டான்





என்று சர்டிபிகேட் வாங்கி கொடுக்கிறார்கள். இப்படி போலி சர்டிபிகேட்டுகள் வாங்கிக் கொடுப்பதால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சலுகைகளை இவர்கள் தட்டிப் பறித்துச் செல்கிறார்கள். அதனால் இவைகளை அரசாங்கம் கண்டு ஆராய தனிப்பட்ட முறையிலே குழு அமைக்க வேண்டும், ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்து, ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் ஈரோட்டிலே ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது, மாவட்டங்களைப் பிரிப்பதிலே டாக்டர் அம்பேத்கார் பெயரால் ஒரு மாவட்டம் அமைக்கின்ற வாய்ப்பு போய்விட்டது என்று வருத்தப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்காக, நான் நிச்சயமாக டாக்டர் அம்பேத்கார் பெயரிலே ஒரு மாவட்டத்தை வைக்கிறேன் என்று அறிவித்தார்கள். அந்த சமுதாயத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலே, இந்த அரசுக்கும் தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்தப் பெயரை வட ஆற்காடு மாவட்டத்திற்கு சம்புவராய மாவட்டம் என்று இருப்பதை எடுத்துவிட்டு வைக்கலாம் அல்லது, வேலூரை தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம் என்று பெயர் வைக்கலாம் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

**திரு. ஆர். சக்கரபாணி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து, ஒரு சில கருத்துக்களை முன் வைக்கலாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றியதற்கு பின்னால், பல நல்ல காரியங்களை ஆதித்திராவிட மக்களுக்கு செய்து கொண்டிருக்கிறார்கள். எந்த மாநிலத்திலும் இல்லாத சில நன்மைகளை இன்றைக்கு அந்த மக்களுக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், குடிசைகளுக்கு மின் விளக்கு திட்டம். 'இந்த குடிசைகளுக்கு மின் விளக்கு திட்டத்'தின் மூலம்தான் ஒவ்வொரு ஆதி திராவிட குடிமகனின் வீட்டிலும் மின் விளக்கை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். இல்லை என்று சொன்னால், என்றைக்கும் மண்ணெண்ணெய் விளக்கையே எரித்துக்கொண்டு, அவன் படுகின்ற கஷ்டங்கள் போதாது என்று, பிள்ளைகள் படிப்பதற்கும் வசதி இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருப்பான். அந்த நிலையை மாற்றியவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள்தாம் என்பதை நினைத்துப் பார்த்து, அவர்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே எங்குமே இல்லாத ஒரு திட்டத்தை, இந்திய திருநாட்டிலேயே இல்லாத ஒரு திட்டத்தை நமது புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம். இந்த சத்துணவு திட்டத்திலே வந்து சாப்பிடுகிற பிள்ளைகள் எல்லாம் ஆதித்திராவிட வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள்தாம். அப்படிப் பார்க்கிறபோது, இந்த மானியத்திலே நாம் பார்க்கிற தொகையை விட, அந்த செலவிலிருந்து 120 கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாக சேர்த்துக்கொண்டாலும், இந்த மாநிலத்தின் ஆதித்திராவிட மக்கள் எவ்வளவோ பயன்பெற்றிருக்கிறார்கள், என்பதைச் சொல்லி பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். ஐ.ஆர்.டி.பி. மூலமாக கடன் வழங்கியிருக்கிறார்கள். ஐ.ஆர்.டி.பி. என்று சொல்லுகின்றபோது சிலர் கருதக்கூடும். இது மத்திய அரசுத் திட்டம். இதை ஏன் அவர்கள் பாராட்டி பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று கூட கருதக்கூடும். அவர்களுக்கெல்லாம் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு திட்டத்தினை இந்திய திருநாட்டில் வெகு வேகமாக அமுல்படுத்துகின்ற நாடு, தமிழ்நாடு என்பதை மத்திய குழுக்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டு இருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு மானியத்தை தாராள மனத்தோடு கொடுத்திருக்கிறார், எந்த நேரத்திலும், எப்போதும் ஆதி திராவிட மக்களுக்கு கொடுப்பதற்கு தயக்கம் காட்டியது இல்லை. கொடுத்துக்கொண்டிருகிறார்கள். இன்றைக்கு ஆதிதிராவிட மக்கள் தங்கள் வாழ்க்கையில் பொருளாதார ஏற்றத்தை பெறவேண்டுமென்று கருதுகிறார்கள். உழவு மாட்டை வாங்குகிறார்கள். கறவை மாட்டை வாங்குகிறார்கள். கறவை மாட்டை பெற்ற பிறகு ஆட்டை வாங்குகிறார்கள். பிறகு கோழி வாங்குகிறார்கள் என்று சொன்னால் இந்தத் திட்டம் இன்றைக்கு ஆதி திராவிட மக்களுக்கு நேரடியாக சென்று அடைகிறது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு திட்டத்தை குறிப்பிட விரும்புகிறேன். முதியோர் கல்வித் திட்டம். இந்தக் கல்வி திட்டத்தில் பயன் பெறுகிறவர்கள் யார் என்று. எண்ணிப் பார்த்தாக வேண்டும். முதியோர் கல்வித் திட்டத்தில் இந்திய திருநாட்டில் மத்திய உதவியை அதிகமாக பெற்ற நாடு தமிழ்நாடு என்றும், இத்திட்டத்தில் இது இரண்டாவது இடம் வகிக்கிறது என்றும் அகில இந்தியாவே பாராட்டிக்கொண்டிருக்கிறது. இந்த அடித்தளத்திலே ஏர் உழுதுகொண்டிருக்கிற, மாட்டுச் சாணத்தை வாரிக்கொண்டிருக்கிற ஏழை எளிய குடிமகன், பெற்றவன் பிள்ளைகளை கேட்டு ஊருக்கு வழி தேடுகின்ற நிலைமை மாறி அவனே வழியைத் தேடுகின்ற, கல்வி அறிவை பெறுகின்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறான் என்று சொன்னால், அது புரட்சித் தலைவர் அவர்களால்தான் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, ஆதிதிராவிட மக்களுக்கு நிதி உதவி சிறப்புத் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.



மேலும், என்னுடைய தொகுதியிலே இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. அதிலே மீஞ்சூர் ஒன்றியத்தை புரட்சித் தலைவர் அவர்களின் ஆதரவின் பெயராலே, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களின் ஆதரவின் பெயராலே எடுத்திருக்கிறார்கள். இது குறித்து மீஞ்சூர் ஒன்றியத்தில் இருக்கின்ற அந்த மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் அவர்களுக்கு கட்டிடம். எங்கு பார்த்தாலும் அவர்களுக்கு கல்விக் கூடங்கள் என்று அவர்கள்வாழ்க்கையில் ஏற்றம் பெறுகின்ற சூழ்நிலையை பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த அரசு, அவர்களுக்கு திட்டங்களை செயல்படுத்துகின்ற புரட்சித் தலைவர் அரசு, மற்றொன்றையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது கலப்புத் திருமணம். என்னவோ தெரியவில்லை. நாம் ஏறத்தாழ 8 ஆண்டுகளாக இதனை மறந்திருக்கிறோம். என்று கருதுகிறேன். கலப்பு திருமணத்தை ஊக்குவிப்போம் என்று சொன்னால், கலப்பு திருமணத்தை செய்துகொண்ட அந்த ஆதி திராவிட பெண்ணை மணந்துகொண்ட ஜாதி இந்துக்களை சேர்ந்தவர்களுக்கு நிதியுதவி அளிப்பதிலே பல தயக்கங்கள் காட்டப்பட்டு இருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதனை அரசு அதிகாரிகள் உடனடியாக கவனிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, வேறொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கு அரசுத் துறையில் இன்றைக்கு இருக்கின்ற வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு கொடுப்பதனால் இந்த மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொண்டு, கலப்பு திருமணம் செய்துகொண்ட ஒருவன் வாழ்க்கையில், அவன் சந்ததி உயர்கின்ற அளவில் அவர்களுக்கு ஒரு சிறப்பு நிதியினை கொடுத்து வேலையில் முன்னுரிமையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4.30)

மற்றொன்றையும் குறிப்பிடுகிறேன். இன்றைக்கு, ஆதி திராவிட மக்களுக்கு ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை, நலத்துறையின் மூலமாக பள்ளி நடந்துகொண்டு இருக்கிறது. நலத்துறையின் மூலமாக பள்ளிகள் மட்டுமல்லாமல், கல்லூரிகளையும் நடத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், இன்றைக்கு நாட்டிலேயே பார்க்கிறோம். ஜாதி பெயரிலேயே கல்லூரி, சமுதாயத்தின் பெயரிலேயே கல்லூரிகள். கல்லூரிகளை திறந்ததற்கு பின்னால் அந்த கல்லூரிகளில் ஜாதியைச் சார்ந்தவர்கள், சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், மதத்தைச் சார்ந்தவர்கள் போன்றவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்கிறார்கள். தனியார் கல்லூரிகளில், அரசாங்கக் கல்லூரிகளில் முறைப்படி ஆதிதிராவிட மக்களுக்கு 18 சதவீதம் கொடுத்

தார்களா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. அரசுடைமையாக்கப்பட்ட பள்ளிகளில், அரசுடைமையாக்கப்பட்ட கல்லூரிகளில், அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களில், அரசுடைமையாக்கப்பட்ட பயிற்சி பள்ளிகளில், அரசுடைமையாக்கப்பட்ட தொழிற் கல்விக்கூடங்களில் தான் இன்றைக்கு 18 சதவீதம் கல்வி அறிவு பெறுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் ஆதிதிராவிட மக்களுக்கு தனியார் பள்ளிகளில் இடமில்லை என்ற காரணத்தினால் அந்த மக்கள் கல்வி கற்கவேண்டுமானால் அவர்களுக்குத் தனியாக, கல்லூரி, உயர்நிலைப் பள்ளி அரசு மூலமாக அமைத்துத்தர வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். நானும் அவைகளிலே பங்கேற்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஆகவே, விரைவில் முடித்துக் கொள்கிறேன். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடிகளான ஆதிதிராவிட மக்கள் அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையிலும் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த இடங்களுக்குப் பட்டாக்கள் கிடைக்காத நிலைமை இருந்து வந்தது. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்த பிறகு தான் அவர்களுக்கு லட்சோப லட்சம் பட்டாக்கள் கிடைத்திருக்கிறது. இன்னும் ஒரு கோடிக்குப் பக்கத்தில் இருக்கும் அந்த மக்களுக்கு— நிலங்கள் எத்தனை சென்ட் ஆகவும் இருக்கலாம், 5 சென்ட்டாக இருக்கலாம், 2 சென்ட்டாக இருக்கலாம்—எவ்வளவு இடமாக இருந்தாலும், 10 சென்ட்டாக இருந்தாலும், 5 சென்ட்டாக இருந்தாலும் சரி பார்த்து உடனடியாகப் பட்டா கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலேதான் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுடைய வீட்டுப் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வது மட்டுமல்ல, பயிற்சியும் பெறுகிறார்கள். நான் முன்பே குறிப்பிட்டேன். தொழிற் பயிற்சியும் அவர்கள் பெறுகிறார்கள். தொழிற் பயிற்சி என்று சொன்னால் அவர்களுக்குக் கொடுக்கிற உதவித் தொகையை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமெனபது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும்.

புரட்சித் தலைவர் அவர்கள் ஆதிதிராவிட மக்களுக்கு உதவிகள் செய்து அவர்கள் வாழ வேண்டுமென்ற உள்ளம் படைத்தவர்கள். ஏனோ தெரியவில்லை, இங்கே உள்ள சிலர் பாராட்டத் தயங்குகிறார்கள். இங்கே நாம் சட்டமன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறோம், டெல்லியிலே பாராளுமன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறோம், உள்ளாட்சித் துறையிலேயும் அவர்களுக்கு வாய்ப்பை உருவாக்கித் தந்தவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள்; பேரூராட்சிகளிலும் அவர்களுக்கு அத்தகைய வாய்ப்பை உருவாக்கித் தந்தவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள். பெண்களுக்கும் அத்தகைய வாய்ப்பை உருவாக்கித் தந்தவர்கள் புரட்சி தலைவர் அவர்கள். தேர்தல் வருகிறதோ இல்லையோ இதை





நிறைவேற்றியே தீருவேன் என்று வாக்குறுதியை புரட்சித் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள். 100க்கு 18 பேர்கள் ஊராட்சி மன்றங்களிலே நகராட்சி மன்றங்களிலே ஊராட்சி ஒன்றியங்களிலே, பேரூராட்சிகளிலே எல்லா இடங்களிலேயும் ஆதிதிராவிட மக்கள் வருகிறார்கள் என்றால் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் பொருளாதார ஏற்றம் மட்டுமல்ல, கல்வியிலும் ஏற்றத்தைப் பெற வேண்டுமென்பது தான் எங்களுடைய ஆசை. ஆதிதிராவிட மக்களுடைய இதய சிம்மாசனத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் வந்து சொல்கிற இடத்திலே வாக்களிக்க அந்த ஆதி திராவிட மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் காலையிலே பேசிய திரு. அழகர்சாமி அவர்கள் வெள்ளத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் ஆதி திராவிட மக்கள் தான் என்று சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் புடவை வேட்டி கொடுத்தார் புரட்சித் தலைவர். யாருக்கு கொடுக்கப்பட்டது. ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. 8 கோடி, 10 கோடி ரூபாய்க்கு புடவை வேட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஏனோ தெரியவில்லை அவர்களுக்கு பாராட்ட மனம் இல்லை.

புரட்சித் தலைவர் அவர்கள் அந்த மக்களுக்காக இப்படி மறைமுகமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கிற கூலி விவசாயிகளில் 80 சதவீதம் பேர்கள் ஆதிதிராவிட மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேட்டி, புடவை கொடுக்கப்படுகிறது. இதயக் கனி என்று சொன்னபோது அதை வண்டு துளைத்து விட்டது என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் உள்ளத்திலே இருக்கிற இதயக்கனி இன்றைக்கு வளர்ந்து பெரிய கனியாக செங்கனியாகிக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விட வேண்டாமென்பதை நான் இந்த நாட்டிலே உள்ள சமூக விரோதிகளுக்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்தப் பள்ளிக்கு உயர் நிலைப்பள்ளி நிலையில் உயர்வைக் கொடுக்க வேண்டும் எனபது என்னுடைய பணிவான வேண்டுகோள் ஆகும். பெண்களுக்கு என்று ஒரு விடுதியைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன். பல திட்டங்கள் வருகின்றன என்று சொன்னாலும் அமைச்சர் அவர்கள் எனக்கு ஒரு நல்ல உதவியைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதால் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு வகையில் ஆதிதிராவிட மக்களுக்குப் பணியாற்றுகின்ற இந்த ஆட்சியை வரவேற்று. புரட்சித் தலைவர் அவர்களுக்கு அந்த மக்கள் மேலும் ஏற்றத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதைச் சொல்லி விடை பெறுகிறேன்.

திரு. எஸ். பழனிவேல் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய அருமை உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் பேசும்போது ஆதிதிராவிட மக்களுக்கு குறிப்பாக தாய் மார்களுக்கு ஊராட்சி நகராட்சிகளுக்கு இட ஒதுக்கீடு செய்து கொடுத்ததைப் பற்றி சொல்லும்போது தேர்தல் வருகிறதோ இல்லையோ என்ற ஒரு சந்தேகத்தைச் சொன்னார்கள். அரசு அதிகார பூர்வமாக தேர்தலை அறிவித்து தேதியையும் அறிவித்து இருக்கிறார்கள். இந்த நிலையில் இப்படி ஒரு சந்தேகத்தை ஆளும் கட்சி உறுப்பினர் சொல்கிறார்கள். அதை சற்று விளக்குமாறு உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. ஆர். சக்கரபாணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் வருகிறது என்று சொன்னால் நாம் 5 ஆண்டுகளுக்கு வாக்குப் பெற்று வந்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 6 ஆண்டுகள் என்று கருதிக்கொண்டு இருக்கிறார்களா என்று தெரியவில்லை. நடப்பு ஆண்டில் வரும் என்ற எண்ணத்தில் குறிப்பிட்டேன் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. தனுக்கோடித் தேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இப்போது ஆதி திராவிட மக்களுடைய மேம்பாடு, ஆண்டுக்கு ஆண்டு எவ்வளவு வறட்சி இருந்தாலும் வளர்ந்து வருகிறது. என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் காலத் தில் இவர்களுக்கு கட்டப்பட்ட வீடுகள் மிகவும பாழடைந்து இருக்கிறது. அந்த வீடுகளை அவர்கள் ரிப்பேர் செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அப்படி இடிந்த வீடுகளை ரிப்பேர் செய்து கொடுத்து அந்த ஆதிதிராவிட மக்களை இந்த அரசு முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்று என் தொகுதி யின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் கல்வித் தரத்தில் ஓரளவுக்கு எங்கள் பகுதி முன்னணியில் இருக்கிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தஇந்த 4 ஆண்டு காலத்தில் நமது அரசு மிக விரிவாக அந்த மக்களுக்கு பணியாற்றி யிருக்கிறது. என்னுடைய தொகுதியில் போன ஆண்டு பேரையூர் பகுதியில் ஒரு மாணவ விடுதி தருவதாக சொன்னார்கள். அது இன்னும் அங்கே துவக்கப்படவில்லை. அதை இந்த ஆண்டு துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். காரணம் போன ஆண்டே அதை எடுத்துக் கொண்டு ஆரம்பிப்பதாக சொன்னார்கள். இது



வரையில் ஆரம்பிக்கவில்லை. காரணம் தெரியவில்லை. அந்த மாணவ விடுதியை இந்த ஆண்டு கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் கல்வியில் அதிக மாணவர்கள் ஈடுபடுவதால் கல்வித்தரம் உயர்ந்து இருப்பதால் அவர்கள் விடுதியில் அதிக அளவில் தங்கி படிக்க வேண்டிய காரணத்தால் அங்கே இன்னும் 2 விடுதிகள் அந்த ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு அரசு கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் மிகவும் பின்தங்கிய தொகுதியான முதுகுளத் தூரைப் பொறுத்த வரையில் பெரும்பாலான மக்கள் விவசா யத்தை நம்பி வாழ்கிற மக்கள். இந்த மக்களுக்கு 6 மாத காலம் விவசாயத் தொழில் என்றால் மீதி 6 மாத காலம் அவர் களுக்கு வேறு தொழில் இல்லாத காரணத்தால் அங்கே அந்த ஆதிதிராவிட விவசாயபழங்குடி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர் களுக்கு அங்கே, ஆடு வளர்ப்பு, பால் பண்ணை போன்ற கைத் தொழில்களை கூட்டுறவு மூலமாக நீங்கள் செய்து கொடுத்தால் அந்தப் பகுதியில் அந்த மக்கள் வாழ்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற எந்த தொழிலும் செய்ய முடியாமல் இருக்கின்ற. மக்களுக்கு ஆடு வளர்ப்பு, பால் பண்ணை, கோழிப் பண்ணை போன்ற தொழிலை அங்கு கிராமத்தில் ஏற்படுத்தினால் நல்ல திட்டமாக இருக்கும். அந்த மக்களுக்கு அது பயனுள்ள திட்டமாக இருக் கும். ஆகவே, ஆதி திராவிட மக்களுக்கு என்னுடைய தொகுதியில் முழு கவனம் செலுத்தி அந்த மக்களுக்குச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கிற காரணத்தால் அவர்கள் சில பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள். அவர்கள் பொருளாதாரம் வளம் பெறுமானால் அந்த பகுதியில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. கல்வியை கற்க அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் வருகிற காரணத்தால் அவர்கள் தங்கிப் படிப்பதற்கு அங்கே 2 ஆஸ்டல்களை ஆதி திராவிட மக்களுக்காகவும், பழங்குடி மக்களுக்காகவும், பெண் கள் இப்போது பள்ளிக்கு அதிகமாக வருகின்ற காரணத்தால் அவர்களுக்காகவும் அமைத்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில், பெண்கள் தங்கிப் படிக்கத் தக்க வகையில்ஒரு ஹாஸ்டலை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4.40)

இதைப் போலவே, அங்கேயிருக்கின்ற மக்களுக்கு உண்மை யாகவே அரசு நல்ல காரியம் செய்ய வேண்டுமென்றால் பால் பண்ணை, ஆடு வளர்ப்பு போன்ற இம்மாதிரி ஒரு திட்டத்தைக் கொடுத்தால் ஓரளவுக்கு அந்த மக்கள் முன்னுக்கு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

என்னுடைய தொகுதியில் நல்ல காரியங்களெல்லாம் அரசால் செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போல இன்னும் தொழில் துறையிலேயும் கூட்டுறவு மூலம் முழுமையான அளவிற்கு நிதி தரும் அளவிற்குச் செய்ய அரசு முன்னின்று ஏற்பாடு செய்தால் அந்தப் பகுதியில் மேலும் பிரச்னைகள் இல்லாத நிலையில், பொருளாதாரம் வளருகின்ற நேரத்தில், அவர்கள் மற்ற எண்ணங்களை மறந்து வாழ்க்கைத் தரத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டிய நிலைமையில் தங்களை அமைத்துக் கொள்வார்கள். அம்மாதிரி நிலையில் இந்த ஆண்டு முழுக்கவனம் செலுத்தி அந்தப் பகுதி மக்களுக்கு ஆடு வளர்ப்பு, பால் பண்ணை போன்ற கூட்டுறவு நிலையங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசிலே ஆதிதிராவிடர் நலத் துறையை ஏற்றிருக்கிற நம்முடைய ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கை எண் 31 மற்றும் 44 ஆகியவைகளை வரவேற்று என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகப் பேச விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களின் அரசு வந்த பிறகுதான் குறிப்பாக ஆதி திராவிட மக்களும் மற்றும் மலைவாழ் மக்களும் மிகவும் பயன் அடைகிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், கல்ராயன் மலையில் சுமார் 105 கிராமங்கள் மலைவாழ் மக்கள் வாழ்ந்த கிராமங்களாக இருக்கின்றன. நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்து இவ்வளவு ஆண்டுகள் கழிந்தபிறகும்கூட, ஜாகிர்தார்களிடமிருந்து அந்தக் கிராமங்களை எடுத்திருந்தோம், அந்தக் கிராமங்கள் இப்பொழுதுதான் புரட்சித் தலைவரவர்களின் அரசில்தான் மிகவும் பயனடைகின்றன. குறிப்பாக அவர்கள் கிணற்றில் கிடப்பதைப் போன்ற ஒரு நிலைமையில் இருந்தார்கள். நம்முடைய புரட்சித் தலைவரவர்களின் அரசு வந்தபிறகுதான் அவர்களுக்கு சுமார் 5 கோடி ரூபாய் செலவில் பெரும் சாலைத் திட்டத்தினை ஏற்படுத்தியிருக்கிறோம். இதற்கு முன்பு எந்தவொரு சட்டமன்ற உறுப்பினரும் அந்தப் பகுதிக்குச் சென்றிருக்க முடியாது; அதிகாரிகளும் செல்ல முடியாமல் இருந்த நிலை மாறியிருக்கிறது. இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் கூட அங்கே சென்று ஒரு ஓர் மகிழ்ச்சி இருப்பதைப் பார்த்து அதைச் சுற்றுலா மையமாக ஆக்கலாமா என்று சொல்லக் கூடிய நிலைமைகள் இன்றைக்கு உருவாகியிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் என்று சொல்லும்பொழுது அவர் ஆணாக இருந்தால் செல்வது எளிதான காரியம் என்று சொல்லி விடலாம். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வந்த





பிறகுதான் எங்கள் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி. கே. கரியாலி அவர்கள் ஏழெட்டு கிலோ மீட்டர் மலைப் பாதையிலே நடந்தே சென்று பார்த்திருக்கிறார்கள் என்றால் உண்மையிலேயே புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியிலேதான் இதுபோன்ற காரியங்களெல்லாம் செயல்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தந்தை பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் விரும்பியபடி சமுதாயத்தில் சீர்திருத்தம் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தை டாக்டர் புரட்சித் தலைவரவர்களின் அரசுதான் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது.

குறிப்பாக, முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் மற்ற இந்துக்களும், ஆதி திராவிட மக்களும், மலைவாழ் மக்களும் ஒன்றாக, ஒரே வேளையிலே, ஒரேயிடத்திலே உட்கார்ந்து உண்ணுகின்றபொழுது அந்த மனிதத் தன்மை அந்தக் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றது. சமுதாயத்திலே ஏற்றத் தாழ்வற்ற நிலைமை உருவாகின்றது. அந்த முறையை ஏற்படுத்திக் கொடுத்தது நம்முடைய புரட்சித் தலைவரவர்களின் அரசு தான் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மலைவாழ் மக்கள் கல்வியறிவு ஏதுமில்லாமல் இருந்தார்கள். அந்தப் பகுதியிலே 105 கிராமங்கள் இருக்கின்றன. அவற்றில் 59 இடங்களிலே மலைவாழ் மக்கள் உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு, அந்த மாணவர்கள் கல்வியறிவு பெறுகின்ற நிலைமைகளைப் புரட்சித் தலைவரவர்களின் அரசு செய்து வருகிறது. மற்றும் பாக்கியிருக்கும் அனைத்துக் கிராமங்களிலும் இதுபோன்ற உறைவிடப் பள்ளிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் அங்கே வாழ்கின்ற மக்கள் ஜாகிர்தாரிடத்திலே இருந்து விடுதலை பெற்று நம்முடைய அரசுக்கு வந்த பிறகு இதுவரையிலும், இன்னும் அவர்களுக்கு நிலப்பட்டா கொடுக்கப்படவில்லை. ஆனால் அதற்காக சர்வே செய்தார்கள். அப்படி சர்வே செய்து செட்டில்மென்ட் செய்து விட்டார்கள். அப்படிச் செய்து அதனை வன இலாக்காவிடம் கொடுத்துவிட்ட காரணத்தால் அந்த மக்களின் கையில் பட்டா இல்லாத காரணத்தால் வன இலாக்காவிற்கும், மலைவாழ் மக்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படுகின்றன. இதனால் அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அந்த இன்னல்களை நீக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் படிக்கத் தெரியாதவர்கள். ஆகவே என்கொயரி போட்டு நோட்டீஸ் கொடுக்கும்போது அதைப் பட்டா என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். அதை வாங்கி வைத்துக் கொண்டு பட்டா

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1984 மார்ச் 22

என்று எண்ணி ஏமாந்து இருந்துவிட்டார்கள். ஆகவே அவர்கள் அனுபவித்து வருகின்ற நிலங்களுக்குப் பட்டா இல்லாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருந்தார்கள். நான் ஞாபகப்படுத்தலாம் என்று எண்ணியிருந்தேன். ஆகவே ஒரு சர்வே செய்து அவர்கள் அனுபவித்து வருகின்ற நிலங்களை அவர்களுக்கு உரியதாக்கிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த மக்களுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை. ஆகவே அங்கே இருக்கின்ற நிலங்களை வைத்துக் கடன் பெற வேண்டும் என்றால் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றில் கடன் கிடைப்பதில்லை. அவர்களுக்குப் பட்டா இல்லாதநிலைமை இருப்பதன் காரணத்தால் கிணறு வெட்டுவதற்கும், ஆயில் என்ஜின் போடுவதற்கும், மோட்டார் பம்ப்செட் வைப்பதற்கும், ஆழ்துளைகிணறு போடுவதற்கும் வேண்டிய வழிமுறைகள் இல்லை. ஆகவே அவற்றை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். மேலும் அங்கே சர்வே செய்து கொடுத்து பட்டா கொடுப்பதற்கு காலதாமதம் ஏற்படுகின்ற நிலைமை இருந்தாலும் அந்த மக்கள் அனுபவித்து வருகின்ற நிலங்களில் அங்கே உள்ள தனி அதிகாரிகள் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மூலமாக ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுத்து அந்த மக்கள் பயனடையக்கூடிய வழிமுறைகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரையில் யாரும் செய்யாத அளவில், மலைவாழ் மக்களுக்காக எந்த ஒரு திட்டமும் யாரும் செய்யாத நிலைமையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசிலேதான் 15 இலட்சம் ரூபாய்க்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தனியாக ஒதுக்கிக் கொடுத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் இணைப்புச் சாலைகள் அமைக்கவேண்டும் என்ற வகையில் 22 கிராமங்களுக்கு இதுபோன்ற இணைப்புச்சாலைகள் போடுகின்ற திட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை, எளிய மக்களின்பால் கொண்டிருக்கின்ற பாசத்தையும் அன்பையும் காட்டுகின்றது.

அந்தப் பகுதியிலே சுமார் 105 கிராமங்கள் இருக்கின்றன. இப்போது ஏறத்தாழ 50 கிராமங்களில் தெரு விளக்கு போட்டு, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து, மின்சார இணைப்பு கொடுத்து இன்றைக்கு விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றன. அதுபோல் மீதியுள்ள கிராமங்களுக்கும் உடனடியாகச் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோமுகி அணையில் உள்ள அரசினர் மலைவாழ் மாணவர்கள் உயர்நிலை உறைவிடப்பள்ளி பொதுப்பணித் துறை கட்டிடத்திலே நடைபெறுகின்றன. அந்தக் கட்டிடம் பழுதடைந்து தற்போது படிக்கக்கூடிய நிலைமையில் இல்லை.



1984 மார்ச் 22] [திரு. சோ. கலிதீர்த்தான்]

இதுபற்றி நான் சென்ற முறை பேசி இருக்கிறேன்; அதற்கு முன்பும் பேசி இருக்கிறேன். அந்த மக்களுக்காக இருக்கக் கூடிய ஒரே பள்ளிக்கூடம் அதுதான். ஆகவே மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்த மக்கள் வாழ நல்ல முறையில் மாணவர்கள் கல்வி பயில வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

பெண்களுக்காக ஒரு உறைவிட உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தப்பட வேண்டும். இப்போதுதான் அந்த மக்களே கல்வி கற்றுக்கொள்ள ஆரம்பித்து இருக்கிறார்கள். அவர்கள் பிற்காலத்தில் நல்ல வளர்ச்சி அடையவேண்டும் என்றால் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், தேவபாண்டலம் ஆகிய இடங்களில் ஆதி திராவிட மாணவர்களுக்கு ஹாஸ்டல் தனியாகக் கட்டிக்கொடுத்து உதவ வேண்டும். அங்கே ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக ஹாஸ்டல் கட்டிக் கொடுக்கின்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

அடுத்து கல்ராயன்மலையில் ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் ஏதோ காரணத்தினால் அது செயல்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுவிட்டது. தற்போது ஒரு தனி அதிகாரியின் கீழ் செயல்பட்டு வருகின்றது. ஆகவே மீண்டும் இந்த ஆண்டிலேயிருந்து, இந்த நிதியாண்டிலே இருந்து டவுன்ஷிப் அல்லது ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்திக் கொடுத்து அந்த மக்களுக்கு வேண்டிய அவசியமான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அங்கே இதுவரையிலும் எந்தப் பணிகளும் சரியாகச் செய்யப்படக்கூடிய வாய்ப்புகள் இல்லை. அதற்கு இன்னொரு காரணமும் உண்டு.

(மாலை 4-50)

அங்கே எந்த ஒரு அதிகாரியைப் போட்டாலும் அவர்கள் அங்கே சென்று தங்க வசதி இல்லை. இரண்டு மூன்று இடங்களிலே அலுவலர்களுக்குக் கட்டிடங்கள் எல்லாம் கட்டித் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும்கூட அதிகாரிகள் போய் தங்கி பணி புரிய வேண்டிய கட்டிட வசதி கிடையாது. ஆகவே, அவைகளை நாம் அவசியம் செய்து கொடுக்க வேண்டும்.

அதே போல், அங்கு வாழ்கிற மலைவாழ் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய ஏற்பாடு செய்ய வேண்டும். கிராம வீட்டு வசதி சங்கங்களின் மூலமாக இதுவரையில் வீடு கட்டிக் கொடுக்கப்படவில்லை. இப்பொழுதுதான் தாட்கோ மூலமாக வீடு கட்டிக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. என். ஆர். பி. ஸ்கீமிலே 4 கிராமங்களிலே ஒரு கிராமத்திற்கு 5 என்று அரசாங்கமே இனாமாகக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மாற்று வழி கிடையாது.

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1984 மார்ச் 22

அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட வழி கிடையாது. முக்கிய மாகப் பட்டா கொடுக்க வேண்டிய ஏற்பாட்டை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும்.

அங்கே ஒரு பாலிடெக்னிக், தொழில் கல்வி நிலையம் ஏற் படுத்தித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அங்கே 105 கிராமங்கள் இருக்கின்றன. அவர்கள் இது வரையில் எந்தவிதத் தொழிலுக்கும் போவது கிடையாது. ஆகவே, அவர்களுக்கு ஒரு தொழில் கல்வி நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஒரு கிராமம் இருக்கின்றதுஎன்றால் அந்தச்சுற்றியுள்ள கிராமங் களுக்கு அந்தக் கிராமத்திலே இருக்கிற மக்கள் செல்ல வேண்டு மென்றால், இடையிலே இருக்கிற நிலம் பாரஸ்டைச் சேர்ந்தது என்று சொல்லி, கல்லு நட்டு விடுவதால், அந்த மக்கள் பக்கத்திலே உள்ள ஊர்களுக்குச் சென்று வருவது கூட கஷ்டமாக இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் இடத்தை ஒதுக்கித் தந்து, அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

பெரும்பகுதி கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்ய, கிணறுகள், ஆழ்த்துளைக் கிணறுகள் வெட்டிக் கொண்டிருக்கின் றோம். இன்னும் தண்ணீர் இல்லாத நிலங்களுக் குக் கண்மாய்கள் வெட்டிக் கொடுக்கவும், குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

சாலைப் பணிகளை எடுத்துக் கொண்டால், ரூபாய் 5 கோடிக்கு நல்ல முறையிலே சாலைகள் அமைக்கப்பட்டுவிட்டன. ஆனால் அந்த மக்கள் போக வர வசதி கிடையாது. போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு இருக்கிறார்கள். கள்ளக்குறிச்சியிலிருந்து வெள்ளிமலைக்கு ஒரு பேருந்து விட வேண்டும். அதேபோல் வெள்ளிமலையிலிருந்து சேரப்பட்டுக்குப் பேருந்து விட வேண்டும். அங்கு சாலைகளுக்கு ஒதுக்கிய நிதி போதாது. இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கவேண்டுமென்றும் சாலைப் பணிகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறையின் 1984-85 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை யின்கீழ் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் ஆதி திராவிடப் பழங்குடி மக்களுடைய சமூக, கல்வி நிலையை உயர்த்துவதற்கும், பொரு ளாதார நிலையை உயர்த்துவதற்கும் மேற்கொள்ளப்படுகின்ற



1984 மார்ச் 22] [திரு. க. பாரமலை]

நடவடிக்கைகளாகும். இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப் படுவது அரசியல் சட்டத்திற்கு ஒப்ப, அரசியல் சட்டம் சொல்லி யிருக்கின்ற குறிக்கோளை அடைவதற்குதான் என்பதை எல்லோ ரும் நன்றாக அறிவோம். அரசியல் சட்டப் பிரிவு 16(4)-ன்கீழ் மாநில அரசாங்கங்களின்கீழ் பதவிகளை அடைய முடியாத இனத் தவரும் பதவி அடைவதற்காக, மாநில அரசாங்கம் சட்டம் இயற்றலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்ற அந்த நிலையின்கீழ் மாநில அரசாங்கங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல்வேறு பதவிகளிலே, நியமனங்களிலே, ஒதுக்கீடுகள் செய்து கொடுக் கின்றன: அப்படி இருந்தாலும் அரசியல் சட்டத்தினுடைய நோக்கம் சரியாக நிறைவேற்றப்படாத காரணத்தால் முதலில் 1950 ஆம் ஆண்டு 10 ஆண்டுச் சலுகை என்று சொன்னது, 10, 10, 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடித்துக் கொண்டே வந்து இருக்கிறது. இப்படி பல்வேறு கால கட்டங் களிலே நீடிக்கப்பட்டே வந்தாலுங்கூட, அந்த நோக்கம் சரிவர நிறைவேற்றப்படவில்லையென்ற குறை இன்று நாடு முழுவதும் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட சலுகைகளை நீட்டித்துக் கொடுக்கக்கூடாது என்கின்ற ஒரு குரலும் இன்றைக்கு அங்கங்கே எழுந்து இருப்பதை நாம் பார்க்கிறோம். அப்படியிருந்தாலும்கூட அது எந்தப் பகுதியிலிருந்து வருகின்றது என்பதைப் பார்க்கின்ற போது நாம் அதுபற்றி அதிகம் கவலை கொள்ளாமல் இருந்தது உண்டு. * *

இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுககு 18 சதவீதம் நிய மனங்கள் வழங்கப்பட்டாலும் கூட அவை பல்வேறு துறைகளில் பூரணமாக அமல் செய்யப்படுவதில்லை. 1981ஆம் ஆண்டு ஜன கணக்கெடுப்பின்படி 19.42 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். ஏற்கெனவே உள்ள ஜன கணக்கெடுப்பின்படி 18 சதவீதம் என்ற அடிப்படையில் நாம் கொடுத்து வந்தோம். இப்போது அது உயர்ந்திருக்கின்ற காரணத்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குறைந்தபட்சம் 20 சதவீதம் அரசு நியமனங்களிலும், பப்ளிக் செக்டார் நியமனங்களிலும், ஒதுக்கீட்டைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு 18 சதவீதம் நியமனங்கள் எல்லா துறைகளிலும் இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் கொடுக்கின்ற சலுகைகளையும் சில பேர்கள் போலி சான்றிதழ் களைக் கொடுத்து தட்டிச் சென்று விடுகிறார்கள். முதன் முதலில் மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரி களிலும் போலி சான்றிதழ் கொடுத்து இடம் பெற்றவர்கள் இன்றைக்கு ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். போன்ற உத்தியோகங் களுக்குப் போலி சான்றிதழ் கொடுத்து உத்தியோகத்தைப் பெற முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே வெற்றியும் கண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் கூட மிகையாகாது.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிலை மீண்டும் வராமல் இருக்க் அரசாங்கம் முனைப்பான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, 1961-ஆம் ஆண்டு ஜனத்தொகை கணக்கின்படி கொண்டா ரெட்டி இனத்தைச் சேர்ந்தவர்கள் 8 பேர் இருந்தார்கள். 1971-ஆம் ஆண்டு 800 பேராக அது மாறியிருக்கின்றது. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஜனத்தொகையில் அது எத்தனை ஆயிரமாக மாறியிருக்கிறதோ தெரியாது. நம்முடைய நாட்டில் மக்கள் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். அதில் தமிழகம் முதல் இடத்தைப் பெற்றிருப்பதாக சொல்லிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் ஒவ்வொரு பத்து ஆண்டும் 100 மடங்காக ஒரு குறிப்பிட்ட இனம் வளர்ந்து வருகிறதென்றால் அது எப்படி வளர்ந்தது என்பதை தயதுசெய்து ஒரு விசாரணை மூலமாக கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் இந்த போலி சான்றிதழ் பெறுவது இன்றைக்கும் எங்கும் நடந்து கொண்டிருக்கின்றது. கல்லூரிகளில், மற்றும் வேலை வாங்குவதில் மட்டுமல்ல ஹவுசிங் போர்டு அலாட்மென்டிலும் கூட போலி சான்றிதழ் பெற்று அரிசன மக்கள் பெறக்கூடிய சலுகைகளைத் தட்டிச் சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருப்பதைப் போல, பெரிய அரசு ஸ்தாபனங்களில் இருப்பதைப்போல, அரிசன நலத்துறை இயக்குநர் அலுவலகத்திலும் Investigation and ProsecutionPolice Branch ஒன்றை அமைக்க வேண்டும். முழுக்க முழுக்க இந்த ஒரு வேலையை கவனிக்கக்கூடிய முயற்சியிலே அது ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல இன்றைக்கு பல இடங்களில் புகார்கள் வந்திருக்கின்றன. திண்டுக்கல் நகரிலே ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு அது விசாரணை இல்லாமல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. அந்த மாவட்டக் கல்வி அதிகாரி அதற்குச் சரியான சான்று இருக்கிறது, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி இருந்தும் கூட எந்த நடவடிக்கையும் இல்லையென்று தகவல் வந்திருக்கின்றது.. இதிலே, டி. சி. பி. மதுரை கிரைம் நம்பர் 16/81 பதிவு செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் கண்டறிவதற்கு நம்முடைய தமிழக அரசாங்கம், பிற்பட்டோர் நலக் கமிஷன் அமைப்பதுபோல், தாழ்த்தப்பட்டோர் நலக்கமிஷன் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கமிஷன் அரசுத்துறை, பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் 18 சதவீதம் நியமனம் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆராயவும், இல்லையென்றால் குறிப்பிட்ட ஒரு கால அளவிற்குள் அதை நிறைவேற்ற என்னென்ன வழிகளை கையாளலாம் என்கிற ஆலோசனையையும் அளிக்கும்படி கோரவேண்டும்.





(மாலை 5-00)

பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்தபோது தாழ்த்தப்பட்ட மக்கள் விவசாயம் செய்வதற்கு ஒப்படைப்பு செய்வதற்காக சில நிலங்களை ஒதுக்கி வைத்திருந்தார்கள். அந்த இடங்களில் தற்போது விவசாயம் செய்யப்படாமலும் வேறு யாருக்கும் ஒதுக்கீடு செய்யப்படாத நிலைமையும் இருக்கிறது. அதை வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒப்படைப்பு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களையும் இந்தக் கமிஷன் கண்டறிந்து அவற்றை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்குரிய ஆலோசனையைச் சொல்லவேண்டும். ஹரிசனங்கள் மீது வன்முறை, தாக்குதல் நடக்கும் இடங்களைப் பார்வையிட்டு அதற்கான காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிந்து அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கான மார்க்கங்களைக் கண்டறிவதற்கும் மத மாற்றங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் நல்ல நிரந்தரமான தீர்வு கண்டுபிடிப்பதற்கு அந்தத் தாழ்த்தப்பட்டோர் நலக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பி. சி. ஆர். ஆக்ட் இம்ப்ளிமென்டேஷனைப் பொறுத்தவரையில் இன்று ஒரு தகவல் வந்திருக்கிறது. சிவகங்கை கல்லூரியில் மாணவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவன் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மாணவர் தேர்தல்கள் நடைபெற்றால் வெற்றி பெற்றாலும் அடிக்கிறார்கள், தேர்தலில் நிற்கவில்லையென்றாலும், ஏன், ஓட்டுப் போடவில்லை எனறு அடிக்கிறார்கள். ஆகவே. தயவு செய்து இப்படிப்பட்ட இடங்களில் மாணவர் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்று கேட்டு ஒரு கடிதம் வந்திருக்கிறது. ஆகவே, பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், பள்ளிக்கூடங்களில் கல்லூரிகளில் ஜாதிவெறி தாண்டவமாடுவதை, தேர்தலில் இப்படி மாணவர்கள் தாக்கப்படுவதை எப்படியாவது தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆதிதிராவிடர் நல இலாகா பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அனைத்திந்திய அரசு பணியாளர்கள் தேர்வுகளுக்கு முன்பயிற்சி நிலையம் சென்னையில் இருக்கிறது. அந்த நிலையம் தற்போது இருக்கும் கட்டிடம் மிகவும் பழமையானதாக இடிந்து விழுந்து விடும் நிலையில் இருக்கிறது. ஆகவே, உடனடியாக, அந்த நிலையத்தை வேறு ஒரு இடத்திற்கு மாற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாணவர்களுக்குப் பயிற்சியின்போது உதவித்தொகை ரூ. 125 தான் கொடுக்கப்படுகிறது, சாப்பாடு கட்டணம் என்ற முறையில் இது மிகமிகக் குறைந்த தொகை, மத்திய அரசின் தேர்வுகளுக்கு, அதுவும், ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். போன்ற தேர்வுகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு இந்த அளவிற்குக் குறைந்த தொகை கொடுத்தால் அவர்கள் எப்படி சாப்பிட்டுவிட்டு பரீட்சையை நல்ல முறை

யில் எழுதமுடியும். ஆகவே, இன்ஜினியரிங் மற்றும் மருத்துவக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை அளவிற்கு இதை உயர்த்திக் கொடுக்க வேண்டும், குறைந்தபட்சம் ரூ. 200-வது தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம அதிகாரிகள், பஞ்சாயத்து தலைவர், பஞ்சாயத்து யூனியன் தலைவர் போன்ற பதவிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்காக சட்டத்தை ஏற்படுத்தி இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோருடைய பாராட்டுதல்களையும் இந்த அரசு பெற்று இருக்கிறது. சென்னை மாநகராட்சியில் ரொடேஷன் முறையில் மேயர்களாக தாழ்த்தப்பட்ட மக்களும் வருவதைப்போல, மதுரை மாநகராட்சியிலும் மேயராக தாழ்த்தப்பட்ட மக்கள் ரொடேஷன் முறையில் வருவதற்கு புதிய சட்டம் ஒன்றை அரசு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலத்துறையில் Evaluation and Research என்ற பிரிவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. இதற்கு சென்ற ஆண்டே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. இருந்தும் அந்தத் துறை செயல்படவேயில்லை. ஏன் அது செயல்படவில்லை என்று தெரியவில்லை. ஆகவே, இந்த ஆண்டிலேயே அதைச் செயல்படுத்துவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருமான வரம்பைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் ரூ.12,000 என்று வைத்து இருக்கிறபோது, தமிழக அரசாங்கம் மட்டும் ரூ. 6,000 என்று வைத்து இருப்பது என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். அதை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981–82 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு உணவுக் கட்டணத்தில் 10 ரூபாய் உயர்த்தினார்கள். நாங்கள் எல்லாம் அதைப் பாராட்டினோம். அதன் பிறகு அது அப்படியே கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது. மீண்டும் அதைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது * * * அது இந்த அவையின் மரபுக்கு உகந்ததல்ல. எனவே அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : மாற்றுத் தலைவரவர்களே, இந்த விவகாரம் அந்த மாநில சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. * * * அரசியல்

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சட்டம் 16 (4)-ன்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது. அதைப் பின்பற்றி நாம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அப்படி ஒதுக்கீடுகள் செய்தது தவறு என்று சொல்லியது இந்த அவையை அவமதிப்பதாக இருக்கிறது. ஆகவே, பெயர்களை மட்டும் வேண்டுமென்றால் நீக்கிவிட்டு, மற்றவைகளை நீக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் டாக்டர் கே. சமரசம் : நாம் கடைப்பிடிக்கின்ற அவை மரபுக்கு ஏற்பட நம்முடைய விவாதம் அமைய வேண்டும். ஒரு பொருள் இன்னொரு மாநில சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டாலும் அல்லது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டாலும் அதுபற்றி இங்கேயும் விவாதிக்க வேண்டுமென்றில்லை. இங்கே நம்முடைய கொள்கை எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னால் மட்டும் போதும். எனவே, கொள்கையாகக் கூறப்பட்டது தவிர மற்றபடி அவர்கள் குறிப்பிட்ட பெயர், வேண்டுகோள் எல்லாம், கோறடா அவர்கள் கூறியது உட்பட, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகின்றன.

திரு. க. பாரமலை : மாற்றுத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் கூறிவிட்டு அமர்கிறேன். 'என்னுடைய தொகுதியிலேயே உலுத்திமடை என்ற இடத்தில் ' தாட்கோ ' மூலம் வீடுகள் கட்ட டெண்டர் போடப்பட்டது. ஆனால் நிலச் சொந்தக் காரர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதால் அங்கே வீடு கட்ட முடியவில்லை. இன்றைக்கு நீதி மன்றம் அரசுக்குச் சாதகமாக தீர்ப்பு அளித்திருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டிலாவது அந்த இடத்திலே வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று சிவகாசியில் சர்வே எண் 1490, 1490/2 ஆகிய இடங்களிலுள்ள நிலங்களை எடுப்பது அரசின் நடவடிக்கையில் இருக்கிறது. இருந்தாலும் பெரும் பணக்காரர்கள் அதைப் பல நிலைகளில் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்கி, அந்த இடத்தைப் பெற்று, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(மாலை 5–10)

திரு. பெ. கலியமூர்த்தி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று இந்த ஆதிதிராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய தொகுயிலுள்ள சிறு குறைகளை எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கை மீது இன்று காலையிலிருந்து இந்த நேரம் வரை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவரவர்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்த அரசைக் குற்றம் சாட்ட வேண்டும் என்றோ அல்லது வேறு எந்த நோக்கத்தோடோ தெரியவில்லை, அரசு செய்யவில்லை செய்யவில்லை என்று இன்று காலையிலிருந்து பேசி வருகிறார்கள். எனக்குத் தெரிந்தவரை, என்னுடைய தொகுதியில், கடந்த 3 ஆண்டுக் காலமாக, ஆதிதிராவிட நலத்துறையின் மூலமாக 15 கிராமங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஆண்டுக்கு 5 கிராமம் விதமாக இந்த 3 ஆண்டுக் காலமாக 15 கிராமங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. காரணம் என்னவென்றால், நாம் அதிகாரிகளையும், அமைச்சர்களையும் இந்தக் காரியங்களை விரைவில் முடிப்பதற்கு, சந்திக்க வேண்டியிருக்கிறது. மக்கள் நம்மை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளார்கள். நாம் ஒரு கோரிக்கையை முதலில் வைத்துவிட்டு, பிறகு அந்த இடத்திற்குச் செல்லாமல் இருந்தால் நமக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அதிகாரிகளும் கொஞ்சம் தாமதமாகத்தான் செய்கிறார்கள்.

என்னுடைய தொகுதியைப் பற்றிய நடவடிக்கைகளை இங்கே சொல்லவேண்டுமென்றால், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரம் போதாது என்ற காரணத்தினால், ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி விடை பெறலாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதியில் சுற்றுப் பயணம் வந்த நேரங்களில் அவருடைய முன்னிலையிலேயே என்னுடைய தொகுதி மக்கள், அரசையும், அமைச்சரையும் பாராட்டியதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கண்டார், மகிழ்ந்துள்ளார். மேலும் இன்னும் பல காரியங்களைச் செய்வதற்கான கோரிக்கைகளை அமைச்சரிடம் கொடுத்துள்ளனர். அந்தக் கோரிக்கைகள் இப்போது தீவிரமாக முடிவடையக் கூடிய கூட்டத்தில் இருக்கின்றன. இன்னும் சில கிராமங்களுக்கு காலனிகள் வேண்டுமென்று 5 கிராம மக்கள் கோரிக்கைகளைக் . கொடுத்துள்ளார்கள். அதை நானும் அமைச்சரிடம் பலமுறை கூறியிருக்கிறேன். அதை வெகுவிரைவில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியிலுள்ள தொழுதூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நல விடுதியிருக்கிறது. அதில் பிள்ளைகள் தங்கிப் படிப்பதற்கான சொந்தக் கட்டிடங்கள் இல்லை. வாடகை கட்டிடங்களில் இருந்து வருகிறார்கள். அந்தக் கட்டிடம் கூட இப்போது பெய்த மழையினால் மூழ்கியிருக்கிறது. எனவே அமைச்சரவர்கள் வாடகைக் கட்டிடங்களிலிருந்து அகற்றி, அரசு மூலம் சொந்தக் கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதே நேரத்தில், அந்த விடுதியில் படிக்கும் பிள்ளைகள் ஒரு வருடத்திற்கு 30, 40 பேர்கள்தான் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. காரணம், அதற்குமேல் எங்களுக்கு அனுமதியில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். தொழுதூர் மையமாக இருக்கின்ற காரணத்தினாலும், சுமார் 50 கிராமங்களிலிருந்து பிள்ளைகள் வந்து படிக்கின்ற காரணத்தினாலும், அங்கு இன்னும் பல பிள்ளைகள் சேர்ந்து படிக்கக் கூடிய நிலைமைக்கு அனுமதி அளிக்க வேண்டும்மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் படித்த ஆதிதிராவிட மக்கள் நிறைந்து இருக்கின்ற காரணத்தால், அங்கு தொழிற் பயிற்சிக் கல்விக் கூடம் ஒன்றை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆதிதிராவிடர்கள் திருமணக் காலங்களில், திருமணம் செய்வதற்கு இடங்கள் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகின்ற காரணத்தினால், ஆதிதிராவிடர் நலத் திட்டத்தின் கீழ், ஒரு கல்யாண மண்டபத்தைக் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றிகூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஜே. எஸ். இராசு: மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற ஆதி திராவிடர் நலக் கொள்கை விளக்கக்குறிப்பு பற்றியும், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைப் பணி குறித்த கொள்கை குறிப்பு பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த 1980-ஆம் ஆண்டியிலேயிருந்து, இந்த 1984—85-ஆம் ஆண்டு வரை இந்த,45 ஆண்டுக் காலமாக அநேகமாக கூறப்பட்ட கருத்துக்களை இந்த அறிக்கையிலே விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு ஓய்வு இருக்குமானால் இந்த 5 புத்தகங்களையும் ஒரே நேரத்தில் வைத்துப் படித்துப் பார்த்தால், கமா, புல்ஸ்டாப் உட்பட அனைத்தும் ஒரேமாதிரியாக இருப்பதை அவர்கள் பார்க்கலாம். நான் பார்த்துவிட்டேன். சில முக்கிய விஷயங்களை ஆண்டுதோறும் நினைவுபடுபடுத்தி, அதனுடைய விரிவாக்கத்தைக் கூறுவதில் தவறு இல்லை. "பழைய படம், புதிய காப்பி" என்பதைப்போல், 'Almost' புதியதாக எதுவுமே இல்லாமல், பழைய செய்திகளை நாட்டு மக்களுக்கு இங்கே மன்றத்தின் மூலமாக அறிவித்திருக்கிறார்கள். 'கூறியது கூறல்' என்ற குற்ற கூட இதிலே வரும். இன்றைக்கு என்ன புதியதாக இதிலே செய்துவிட முடியும் என்று அமைச்சர் அவர்கள் யோசிக்கலாம். புதியதாக நாம் எழுதவேண்டியதில்லை. நாட்டிலே புதிய பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. அவைகளைப் பற்றி இதிலே ஏதேனும் குறிப்புகள் இருக்கின்றவா? என்றால் இல்லை. சான்றாக, மத மாற்றம் இப்போது ஒரு

பெரிய பிரச்சினை இது. இதைப்பற்றி அரசு என்ன கருதுகிறது? தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள், மிகப் பெரிய அளவிலே பல்வேறு இடங்களிலே கிளர்ச்சிகள் நடத்துகிறார்கள்; உரிமைக்காக. ஏன் நடத்துகிறார்கள்? என்ன காரணம்? இதைப்பற்றி 'Social Scientists' என்று சொல்லப்படுகிற மேதைகளிடம் நாம் விட்டு, அவர்களுடைய கருத்தை அறிந்து இருக்கிறோமா, அதற்கான ஒரு ஆழமான எண்ணம் இருக்கிறதா, என்பதைப் பற்றி எல்லாம் இதிலே சொல்லப்படவில்லை. அதைப் பற்றி கருத்துக்களைச் சொல்லியிருக்கலாம்.

மாணவர்கள் கிளர்ச்சி நடத்துகிறார்கள். பல்வேறு தரப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் கோரிக்கைகள் வைக்கிறார்கள். ஆண்டுதோறும் இந்த அறிக்கை வைக்கிறோம், இதனால் அவர்கள் பலன் அடையவில்லை, அதனால்தான் இந்தக் கிளர்ச்சிகள் எல்லாம் வருகின்றனவா? என்பதைப் பற்றி ஒரு R thinking இருப்பது அவசியம். அப்படிப்பட்ட ஒரு எண்ணம் இந்த அரசுக்கு ஏற்படவேயில்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் கூறும்போது முதல்வர் அவர்களே பொறுப்பு ஏற்கவேண்டும் என்று சொன்னார்கள். நான் அந்த அளவிற்குப் போகவில்லை. அமைச்சர்களை நியமிக்கும்போது இதற்கு முன்பும் சரி, பின்பும் சரி, அறிவாளிகளையும் உழைப்பாளிகளையும்தான் மந்திரிகளாக நியமிப்பேன் என்று சொன்னார் நமது முதல்வர் அவர்கள். நான் உங்களுடைய அளவிலே திறமையிலே எந்தவிதக் குறையும் காணவில்லை. ஆனால் நான் சொல்கிற கருத்து—நான் சொல்வதாக இருந்தாலும்—உறுப்பினர் திரு. இளையபெருமாள் சொல்வதாக இருந்தாலும்—நாங்கள் சொல்கிற கருத்து, இந்தத் துறையிலே இன்னும் சற்று வேகம் தேவை என்பதை தெளிவுபடுத்துவதற்காகதான் அவர்கள் கூறியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதுவும் இன்றைய சூழ்நிலையில் இப்படிப்பட்ட இலாக்காவில் மாற்றம் ஏற்படக்கூடாது என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள், உங்களுடைய இடத்தை நிச்சயமாக தக்க வைத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு ஆற்றல் உள்ளவர்கள் அதுவும் எனக்குத் தெரியும். ஆனாலும் நான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாற்றுத் தலைவர் அவர்களே அருமை சகோதரர் திரு.ராசு அவர்கள் நான் சொன்ன கருத்தை, சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்று அஞ்சுகிறேன். நான் சொன்னது உண்மை. நான் சொன்னதானது, முதல் அமைச்சர் அவர்கள், 1981 ஆம் வருஷத்திலே, நானே எடுத்து, இதை வேகமாக, துரிதமாக இந்த நல்ல மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் முறையிலே செய்வேன் என்று சொன்னார்கள். ஆகவே அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னேனே தவிர





தற்போது இருக்கிற அமைச்சர், செய்யவில்லை செய்யமுடியாமல் வேண்டுமென்றே இருக்கிறார்கள் என்ற அந்த அர்த்தத்திலே நான் சொல்லவில்லை என்பதை சகோதரர் திரு. ராசு அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்.

(மாலை 5-20)

திரு. ஜே. எஸ். இராசு : அடுத்து காலையிலே பேசும்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் அன்னை இந்திரா எந்த அளவுக்கு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஷெட்யூல்ட் வகுப்பினர்களுக்காக போராடினார்கள், எப்படி அதனால் அவர்கள் தேர்தலில் பாதிக்கப்பட்டார்கள் என்பதை விளக்கமாகச் சொன்னார்கள். அந்த அன்னையின் கருத்தை நான் இங்கே 'கோட்' செய்ய விரும்புகிறேன். 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி செங்கோட்டையில் இருந்து அன்னை பேசுகையில்—''அவர்கள் அனைவருமே தத்தம் துறைகளில் வியர்வையைச் சிந்தி உழைத்து நாட்டை ஒவ்வொரு அடியாக முன்னேற்றுகிறார்கள். அவர்கள் அனைவரையுமே நான் பாராட்டுகிறேன். நமக்கு அவர்கள் பெயர் தெரியாது. அவர்களை நாம் பார்த்தது இல்லை. நம்மால் அவர்களை அடையாளம் காட்ட முடியாது. ஆயினும் அவர்கள் ஷெட்யூல்ட் ஜாதியினர்கள், பழங்குடியினர்கள், மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர்கள். அவர்கள்தான் இந்தியாவின் அடிக்கல் ஆகும்'' என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு வகையில் அம்மையாருடைய கருத்தை நான் ஆதரிக்கிறேன். எதில் என்று சொன்னால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மலை வாழ் மக்களை இந்தியாவிலே கடந்த 40 ஆண்டுகளாக, அடையாளம் தெரியாமல்தான் வைத்திருக்கிறோம் என்பதாக நான் பிரதமருடைய கூற்றை அர்த்தம் பண்ணிக்கொள்கிறேன். அடிக்கல் அவர்கள்தாம், ஆனால் அடையாளம் தெரியவில்லை என்பது உண்மை. அந்தப் பின்னணியிலேதான் இந்தப் பிரச்சினையை நான் அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. Social unjustice என்று சொல்லக் கூடிய சமுதாய அநீதிகள் எவ்வளவோ இழைக்கப்படுகின்றன அதைத் தடுக்க, அகற்ற என்ன செய்திருக்கிறோம்?

அதே போல எக்ஸ்பிளாயிட்டேஷன், சுரண்டல்கள். இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுடைய உரிமையைப் பிறர் சுரண்டுகிறார்கள். அந்தச் சுரண்டலைத் தடுப்பதற்கு அரசாங்கம் தன்னுடைய நிர்வாக இயந்திரத்தைக் கொண்டு என்ன முறையை வகுத்திருக்கிறது? வகுக்கப் போகிறது? வகுக்க இருக்கிறது என்பதைப் பற்றி ஏதாவது பரிசீலனையாவது இருக்கிறதா? காலையிலே கூட பத்திரிகையிலே பார்த்தோம். வட நாட்டிலே,

ஈக்குவலாக டிரீட் பண்ணுங்கள் என்று கேட்ட தாழ்த்தப்பட்ட மக்களை நிரம்பவும் வதைத்திருக்கிறார்கள். This is naational problem (குறுக்கீடு). ஹோலி பண்டிகை கொண்டாடப் பட்டபோது ஈக்குவலாக டிரீட் பண்ணவில்லை, அப்படி டிரீட் பண்ண வேண்டும் என்று அவர்கள் கேட்டதற்காக, தாழ்த்தப்பட்ட மக்களை மற்றவர்கள் தாக்கியிருக்கிறார்கள். இது மாதிரி எவ்வளவு பிரச்னைகள் இருக்கின்றன? இவைகளை எல்லாம் யோசிக்க வேண்டும். சமூக இயல் படித்தவர்கள், சோஷியாலஜி படித்தவர்கள், சோஷியல் சர்வீஸ் செய்பவர்கள், இவர்களை எல்லாம் சேர்த்து ஒரு கமிட்டியைப் போட்டு, ஏன் தமிழ்நாட்டிலே, இந்தியாவிலே இப்படிப்பட்ட பிரச்னைகள் வருகின்றன, எப்படி இதைத் தடுக்க வேண்டும். என்பதைச் சிந்திக்க அரசு முனைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுதான் இப்போது செய்ய வேண்டிய முக்கியமான பிரச்னை. அதை விடுத்து, ஆடு கொடுத்தோம், கோழி கொடுத்தோம், இஸ்திரி பெட்டி கொடுத்தோம் என்று சொல்வது சரியல்ல. இவை எல்லாம் சின்ன சின்ன விஷயங்கள். இவைகளும் ஹெல்ப் தான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதை பெரிய சாதனையாக எந்த அரசாங்கமும் கருத முடியாது. அதன் மூலமாக இந்தச் சமுதாயத்திற்கு வளர்ச்சி வந்துவிடுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

அடுத்து திரு. பரமலை அவர்கள் பேசும்போது, பாப்புலேஷன் ஸ்டெரெங்க்த் அடிப்படையில் 18 சதவீதத்திற்கு மேலே அவர்களுக்குத் தர வேண்டும் என்று சொன்னார்கள். அது உண்மை. ஆனால் இப்போது, எஸ்.ஸி., எஸ்.டி. ஐ சேர்த்து 18 சதவீதம் தருகிறார்கள். பாப்புலேஷன் கணக்குப் பிரகாரம் 19 சதவீதம் எஸ். ஸி.க்கு மட்டுமே கொடுக்க வேண்டும். அரசாங்கம் மேலும் கொடுக்க வேண்டும் என்று நினைத்தால், 3 சதவீதம் அல்லது 5 சதவீதம் எஸ். டி.க்கு கொடுக்கலாம். இதைப் பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டுமே தவிர, பழைய கணக்கையே திருப்பித் திருப்பி படிப்பது சரியல்ல. (மணியடிக்கப் பெற்றது).

சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். நீங்கள் கொடுத்து இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே 3 விஷயங்களை முக்கியமாக கவனித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். முதலிலே கல்வி. அதிலே நிறைய பிரச்னை இருக்கிறது. ஆனால் ஒன்றிரண்டை மட்டும் உதாரணத்திற்காக சொல்கிறேன்.

மருத்துவத் துறையில், எம்.டி., எம்.எஸ். படித்த பிறகு, சூப்பர் ஸ்பெஷலிஸ்ட் படிப்பு இருக்கிறது. இது போன்ற ஹையர் ஸ்டடீஸுக்கு தாழ்த்தப்பட்ட மக்களை நம்முடைய தமிழ்நாட்டிலே எந்த வருஷமாவது, சேர்த்திருக்கிறீர்களா? கிடையாது. ரூல்ஸ்-லே என்ன போட்டிருக்கிறார்கள்? 4 சீட்டுகளுக்கு மேல் இருந்தால், அதிலே ஒன்று எஸ்.ஸி., எஸ்.டி.க்காக ரிசர்வேஷனாக வரும் என்று சொல்லிவிட்டார்கள். இலாவகமாக





ஆனால் கொடுக்கப்படும் சீட்டுகளோ 3 தான். அரசு பில் அப் பண்ணுகிற சீட்டுகளே 3 தான். 4 சீட்டுகள் இருந்தால் தானே ஒரு ரிசர்வேஷன் வரும். 4 சீட்டுகளே இல்லை. இப்படிச் சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன.

Nephrology கோர்ஸ் இருக்கிறது. அதிலே 2, 3 சீட்டுகள்தாம். அதிலே எங்கே ரிசர்வேஷன்? நோ ரிசர்வேஷன். அது போலத்தான் குடல் அழற்சி நோய்; அதிலேயும் ரிசர்வேஷன் இல்லை; அதே போல Gastro-entrology - பிரிவு; அதிலேயும் ரிசர்வேஷன் இல்லை. ஏன்? எஸ்.ஸி., எஸ்.டி. பாய்ஸ் எல்லாம் ஒன்றுமே தெரியாதவர்களா? அவர்கள் படித்தால் அவர்களுக்கு அந்தப் படிப்பு வராதா? ஆகவே, அவர்களுக்கு கோழி கொடுக்கிறோம், ஆடு கொடுக்கிறோம் என்று இல்லாமல், பெரிதாக, பெரிய விஷயங்களில் என்ன செய்திருக்கிறோம் அவர்களுக்கு என்று யோசித்துப் பார்க்க வேண்டும் அப்படி பெரிய படிப்புகளில் கொடுத்தால்தானே, அந்தச் சமுதாய மக்கள் பிற்காலத்தில் மெடிகல் காலேஜ் டீனாக வர முடியும. அவனுக்கு சான்ஸ் கொடுத்து, பெரிய அளவில் குவாலிபை செய்ய வைத்தால் தானே அது முடியும்? அதற்கு தகுந்த மாதிரி நடவடிக்கை எடுக்க முடியும். No suitabl. candidat, ஆகவே அவர்களை வைத்து பில் அப் பண்ணமுடியவில்லை, வேறு யாருக்கோ கொடுத்து விட்டோம் என்று சொல்வது சரியான வாதமாகாது.

எந்த வருஷமாவது மேல் படிப்புக்கு எம்.எஸ்., எம்.டி. படிப்புக்கு எஸ்.ஸி., எஸ்.டி. கான்டிடேட்டைச் சேர்ந்திருக்கிறீர்களா? தாழ்த்தப்பட்ட மக்களை, மலை வாழ் மக்களை அங்கே சேர்த்திருக்கிறீர்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த வகையில் அமைச்சர் அவர்கள் மிகப் பெரிய அளவில் சிந்தனைக்கு இடம் கொடுத்து, கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ட்ரல் கவர்ன்மென்டிலே உள்ள முறையைப் போல் நாம் வைத்துக் கொள்ளலாம். மருத்துவத் துறையிலே டெல்லி சென்ட்ரல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டில் 3 இடங்களில், ஒரு இடம் எஸ்.சி.க்கும், மற்றொரு இடம் பணியில் இருக்கிறவர்களுக்கும், மற்றொரு இடம் பணியில் இல்லாத விண்ணப்பதாரருக்கும் என்று கொடுக்கப்படுகிறது. அதைப் போல் கொடுக்கலாம்.

18 சதவீத ஒதுக்கீட்டைப் பற்றி பல உறுப்பினர்கள் நிறைய பேசினார்கள். சான்றாக ஒன்றைச் சொல்கிறேன். இந்த 18 சதவீத ''காலேஜ் அட்மிஷன், எட்ஸெட்டிரா'' என்றிருக்கிறதே தவிர—புரபஷனல் காலேஜிலே, மெடிகல் காலேஜிலே பேராசிரியர்கள் இருக்கிறார்கள்—அங்கே இந்த 18 சதவீதம கவராகி இருக்கிறதா? இது மாதிரி வேறு புல பள்ளிகளிலும், இன்ஸ்டிடியூஷன்களிலும் கவராக வில்லை. ஏன்? சரி அது போகட்டும்.

[திரு. ஜே.எஸ். இராசு] [1984 மார்ச் 22

பி.ஏ.விலும், எம்.ஏ.விலும் இந்த ஒதுக்கீட்டைக் கொடுக்கிறீர்கள். ஆனால் எம்.பி.ஏ.விலே கொடுக்கிறீர்களா ? ஈசியாக இவர்களுக்கு இதிலே இட ஒதுக்கீடு கிடைத்து விடுகிறதா ? 7, 8 ஆண்டுகளில் 2, 3 பேர்களுக்குச் சிரமப்பட்டு என்னால் வாங்கிக் கொடுக்க முடிந்ததே தவிர, இப்போது முடிகிறதா? இல்லை. அப்போதே மிகவும் கடினம். எம்.பி.ஏ. படிப்பதற்கு இவர்களை வெளி நாட்டுக்கு அனுப்பலாம் ; அரசாங்கச் செலவிலே இவர்களை அனுப்பலாம். சின்னச் சின்ன அதாவது ரூ. 250, ரூ. 1,000 என்று தான் கடன் கொடுக்கிறீர்கள். நான் ஒரு யோசனை சொல்கிறேன். அவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு— சிவில் இன்ஜினியரிங் படித்தவர்கள், அவர்களிலே நிறைய பேர்கள் இருக்கிறார்கள், வேலையில்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக்கு கான்ட்டிராக்ட் எடுப்பதற்கு முதலீடாக ரூ. 50,000 கொடுக்கலாமே. கான்ட்ராக்ட் செய்து அவர்கள் அதைத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். சிந்தனை இப்படி புதியதாக வரவேண்டும். அதை விடுத்து, ''பழைய குருடி, கதவைத் திறடி'' என்பது போல், சொல்லக் கூடாது.

அதேபோல், எம். எல். படிப்பில் எத்தனை எஸ். சி.க்களுக்கு இடம் கொடுத்திருக்கிறீர்கள் ? கொடுத்தது உண்டா? இல்லையே. ரிசர்ச் செய்து படித்தவர்கள் நிறைய பேர்கள் இருக் கிறார்கள். உதாரணமாக, மதராஸ் யூனிவர்சிடியிலே என் னுடைய நண்பர் பி. ஜகதீசன் என்பவர் இருக்கிறார். சுய மரி யாதைத் திருமணத்தைப் பற்றி ரிசர்ச் செய்து, அதிலே டாக்டரேட் வாங்கியிருக்கிறார், அண்மையில். அதைப் போல் இன்னும் பல ' ஜெம்ஸ் 'கள் இருக்கிறார்கள் ; இன்னும் பல ' பிரிலியன்ட் ' ஸ்டூடன்ட்ஸ் இருக்கிறார்கள். டீச்சர்களும், பேராசிரியர்களும் இருக்கிறார்கள். ' ஹியூமன் ரைட்ஸ் ' பற்றி ஆராய இவர்களை யு. கே. வுக்கு அனுப்பலாம், யு. எஸ். ஏ.-வுக்கு அனுப்பலாம், ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடிக்கு அனுப்பலாம், பர்மிங்ஹாம் யூனிவர் சிடிக்கு அனுப்பலாம்.

'Th: Gov rnm nt has to encourage such peopl to go abroad t g t Doctorates'

அதேபோல், பி. எல். படிப்புக்கு போன வருஷம் 18 சதவீதத் திற்குப் பதிலாக 17½ சதவீதம் கொடுத்திருக்கிறீர்கள். 18 சத வீதத்திலிருந்து 18½, அல்லது 19 சதவீதமாக ஆக்கியிருந்தால், அது 'வெல் அண்டு குட்'. ஆனால்; 18 சதவீதத்திலிருந்து 17½ சதவீதத்திற்கு போயிருக்கிர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் அதிக அளவுக்குத் தங்கள் உரிமைகளைத் தெரிந்துகொள்ள சட்டப் படிப்பு தேவை. சட்டம் படித்தால்தான் இன்னொரு வரிடம் சென்று வக்காலத்து கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

'H can arg i the Court' அதுமாதிரியான வாய்ப்பு இருக் கிறதா ? கிடையாது.



1984 மார்ச் 22] [திரு. ஜே. எஸ்.இராசு]

பம்பாயில். சித்தார்த்தா யூனிவர்சிடி இருக்கிறது. அதிலே 6, 7 லா காலேஜ்கள் இருக்கின்றன. அதிலே 2,3 காலேஜ்களிலே செடியூல் வகுப்பைச் சார்ந்தவர்கள் 5,000 பேர்களுக்குக் கொடுக் கிறார்கள். அதிலே எஸ். சி. யும், எஸ், டி. யும் படிக்கிறார்கள் மாக்சிமம் பேர்கள் படிக்கிறார்கள்.

அடுத்தாற்போல், கம்யூனல் ஜி. ஓ. வைப் பற்றி இங்கே பேசினார்கள். 18 சதவீதம் கொடுககிறார்களா என்றால், இல்லை, இன்றைக்கு இந்த இலாகாவிலே உள்ள டைரக்டருக்கு நிர்வாகத்திலே ஏகப்பட்ட வேலைகள். அதனால், அவரால் எல்லாவற்றையும் கவனிக்க முடியவில்லை. எனவே, இதற்காக தனி அமைப்பை ஏற்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு ஒன் றைச் சொல்கிறேன். இந்த கம்யூனல் ஜி. ஓ வை அமுல்படுத்த வேண்டிய இடங்கள் எத்தனையோ இருக்கின்றன. இதை அமுல் படுத்த முடியாத பல இன்ஸ்டிடியூஷன்கள் பப்ளிக் செக்டார் நிறு வனங்கள், அரசாங்க இலாகாக்கள், போன்றவைகள் இருக்கின்றன. 1977-லே இருந்து இந்த வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் தரப் படவில்லை. உதாரணமாக, தமிழ்நாடு ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் அதாவது டான்சியில். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீதம்—இருக்கவேண்டும்—இருக்கிறதா ? இல்லை. எஸ். சி. 18 சதவீதம் இருக்கவேண்டும் ; அதுவும் இல்லை. பி. சி.க்கு 50 சதவீதம் இருக்கவேண்டும் ; ஆனால் இருப்பதோ 25 சதவீதம் எஸ். சி. க்கு 18 சதவீதத்திற்குப் பதிலாக 5 சதவீதம்தான் இருக்கிறது. ஆனால், ஓபன் காம்படிஷன் என்று சொல்லி, 32 சதவீதம் இருப்பதற்குப் பதிலாக, 70 சதவீதம் இருக்கிறது. அந்த அளவுக்கு அங்கே வேலை செய்கிறார்கள். இதற்கும் உதாரணம் கேட்டால் சொல்கிறேன். இன்னும் எவ்வளவோ பிராப்ளம்கள் இருக்கின்றன. டைம் கொடுத்தால் சொல்கிறேன் (மணியடிக்கப்பெற்றது). எவ்வளவோ பேர்கள் பேசியிருக்கிறார் கள். இன்றைக்கு ஒரு நாள்தான் இதன்மீது பேசுகிறேன். எனவே, எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். ஒரு நிமி டத்திலே முடிக்க முடியாது.

டான்சி நிறுவனத்திலே 5 பேர்களுக்கு அப்பாயின்ட் மென்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள், (1) வி. எம். ஜெயந்தி, (2) ஆர். விஜயலட்சுமி, (3) ஜே.சி. சாந்தி, (4) சி. ரமணி, (5) எம். ஜெயா. இவர்களிலே யாரும் பி. சி. இல்லை ; எஸ். சி. இல்லை. ரோஸ்டர் முறை பயன்படுத்தப் படவில்லை.

அடுத்து, வீட்டு வசதி. இதைப் பற்றி பாலிசி நோட்டிலே 1979–80, 1980–81-ல் 10,000 வீடுகள் கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், 562 வீடுகள் தான் கட்டப்பட்டிருக்கின்றன. என்ன காரணம் ? அரசாங்க உத்தரவுதான்.

[திரு. ஜே. எஸ். இராசு] [1984 மார்ச் 22

'In the second order read above, the Government approved the list of villages for construction of 10,000 houses under the programmes for the years 1979–80 and 1910-81. The programmes for the years 1979-80 and 1980-81 could not be implemented for want of policy decision on type design to be adopted and the cost of the house. எந்த மாதிரி வீடு கட்டவேண்டுமென்று தெரிந்து கொள்வதற்கு ஒரு பாலிசியை வகுப்பதற்கு 2, 3. ஆண்டுகள் ஆகிறது என்றால் அதனால் தான் 526 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாலிசி டெஸிஷன் என்பது சீக்கிரமாக எடுக்க வேண்டிய விஷயம். அதே மாதிரி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி நிறைய செய்து கொடுக்கவேண்டும்.

(மாலை 5–30)

ரெவின்யூ மினிஸ்டர் இங்கே இல்லை. இருந்தாலும் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களிலே காவலர்கள்—வெட்டியான், தலையாரி என்று சொல்வார்கள் —என்று நவீனமாகச் சொல்கிறோம், அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 140 தான். அவர்கள் நாள் பூராவும் உழைக்கிறார்கள். வி. ஏ. ஓ.-க்கள பெர்மனன்ட். ஆனால் இவர்கள் டெம்பரரிதான். இவர்களைப பெர்மனன்ட் ஆக்க வேண்டும். இந்த வேலையிலே இருக்கிறவர்கள் அல்மோஸ்ட் எஸ். சி. தான், பகுதி நேர ஊழியர்களாக இருக்கிறார்கள், அவர்களுக்கு மாதச் சம்பளம் 300 ரூபாய் கொடுக்கவேண்டும். நான் இதைப் பற்றி திரு. எஸ். டி. எஸ். அவர்களிடம் மனு கொடுத்தேன். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு காவலர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்க அரசு பரிசீலிக்கிறது என்று சென்னையிலே பேசியிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றி அவர்களோடு கலந்து கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்கள் எல்லாம் போலீஸாரால் கெடுபிடி செய்யப்பட்டு மற்ற மக்களுடைய உதவிகளைப் பெற முடியாதபடி இராமநாதபுரம் மாவட்டத்திலே தடுக்கப்பட்டிருக்கிறார்கள். மதம் மாறுவதற்கு அரசியல் சட்டத்திலே உரிமை கொடுத்திருக்கிறார்கள். காவலர்களும் மற்றவர்களும் அதிலே அப்படி ஈடுபட்டால் அது தவறு. கண்டிக்க வேண்டும். ஏன் மதம் மாறினார்கள் என்பதை ஆராய்ச்சி செய்வதை விட்டுவிட்டு இப்படித் தடுப்பது சரியில்லை. நான் மதம் மாறுகிறேன், இந்துவாக இருக்கிறேன், மாறுகிறேன், யார் தடுக்கமுடியும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கின்ற பகுதிகளிலே குடிநீர் உப்பு நீராக இருக்கிறது. அதை நல்ல நீராகக் கொடுக்க வேண்டுமென்று பலமுறைகள் தெரிவித்திருக்கிறேன். வெல்பேர் ஆபீசரிடம் சொல்லி கேட்கவில்லை, வாட்டர் போர்டு அதிகாரியிடம் சொல்லிக் கேட்கவில்லை, நீங்கள் சொன்னால் கேட்பார்களோ



1984 மார்ச் 22] [திரு. ஜே. எஸ். இராசு]

என்னவோ, அவர்கள் எழுதிய பதில்களை எல்லாம் வாங்கி வைத்திருக்கிறேன். 2, 3 வருடங்கள் ஆகியும் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியிலே தொண்டமான் துறை, பில்லன்குளம், திம்மனூர் ஆகிய இடங்களிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எந்த எந்த இடங்களில் அப்படிக் குடிநீர் பிரச்சினை இருக்கிறது என்பதை அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுப்பார்களானால் அது கவனிக்கப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு : நன்றி. நந்தனார் மேல்நிலைப் பள்ளி கவர்ன்மென்ட் பள்ளி மாதிரி இருந்தது. இப்போது அந்தப் பள்ளிக்கூடத்திலே டோட்டலாக சீர்கேடு இருக்கிறது. அந்த நிர்வாகத்தை மாற்றியமைக்கவேண்டும். ஒரு பங்க்ஷனுக்காக பையன்களிடம் 30 ரூபாய் வாங்குகிறார்கள். சிறிய பையனிடம் 30 ரூபாய் வாங்குகிறார்கள். அப்படி வாங்கி யார் பங்க்ஷன் நடத்தச் சொன்னது? ஆஸ்டலில் உள்ள உப்பு, புளி, மிளகாய் எல்லாம் வெளியே விற்கப்படுகிறது. இன்னும் சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது. ஆகவே நிறுத்திக் கொள்கிறேன்.

இரண்டாயிரம் ரூபாய் வரை வட்டியில்லாத கடனைதள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாட்கோ திட்டத்தில்—பல கிராமங்கள் இருக்கின்றன—அதையெல்லாம் சேர்த்துக் கொள்ளவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் மீது போடப்பட்ட வழக்குகள் 2, 3 வருடங்களாக பெண்டிங் ஆக இருக்கின்றன, ஒன்று வித்ட்ரா செய்யுங்கள். அல்லது தாழ்த்தப்பட்ட மக்களை அடித்தவர்கள்மீது கேஸ் போடுங்கள். இரண்டும் இல்லை இராமநாதபுரம் மாவட்டத்திலே, கடைய நல்லூரிலே.

அச்சுத் துறையைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அச்சுத் துறையைப்பற்றி யாரும் அதிகமாகப் பேசுவதில்லை. அமைச்சர் அனுமதித்தால் பேசி முடித்துவிடுகிறேன். பதவி உயர்வு கொடுக்கிறபோதுதான் வெளி மாவட்டங்களிலே உள்ள கிளைகளுக்கு டிரான்ஸ்பர் செய்வார்கள். அண்மையிலே அம்மாதிரி இல்லாமல் டிரான்ஸ்பர் பண்ணிவிட்டார்கள். அதனால் குழந்தை குட்டிகள் தடுமாறுகிறார்கள். இரண்டு இடங்களிலே பேமிலி வைத்துக் கொள்ளமுடியாது ஆனால் கொஞ்சம் பேர்களை ரீடெய்ன் பண்ணி விட்டார்கள். நான் அந்தப் பெயர்களை வாசிக்க விரும்பவில்லை. அவர்கள் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களோ என்ற சந்தேகம் வருகிறது. இதிலே கட்சியெல்லாம் வேண்டியதில்லை. ஆகவே மற்றவர்களையும் ரீடெய்ன் செய்யவேண்டும்.

சில கோரிக்கைகளை வைத்து நான் முடித்துவிடுகிறேன். அரசு ஊழியர்கள் அனைவருக்கும் 1975 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுவரும் 18 மாத மருத்துவ விடுப்பை அச்சகத் தொழிலாளர்

களுக்கும் நீட்டித்துத் தரவேண்டும் தற்போது வழங்கப்பட்டு
வரும் இரவுநேரப் படி 1½ ரூபாய். இது போதாது. 5 ரூபாய்
கொடுக்கவேண்டும். தற்போது தினப் படியாக மாதா மாதம்
சம்பளத்தோடு 10 ரூபாய் கொடுக்கிறார்கள். இது போதாது.
ஒரு டீ 40 காசு, ஒரு பன் 60 காசு. ஆகவே நிறைய
பணம் கொடுக்கவேண்டும். அச்சகத்தில் பணிபுரியும் தொழி
லாளர்கள் நச்சுத் தன்மையால் பாதிக்கப்படுகிறார்கள். அதை
கிளியர் செய்வதற்கு மேற்கொண்டு நல்ல நடவடிக்கைகளை
எடுக்கவேண்டும். அரசு அச்சகத்தில் பார்வை இழந்த
ஊழியர்களிடம் டர்ன்ஓவர் கேட்கிறார்கள். அதை அவர்களால்
கொடுக்கமுடியாது. நன்றாக இருப்பவர்களே காப்பி சாப்பிடு
வதற்கு ½ மணி நேரம், கால் ஆறுவதற்கு ½ மணி நேரம் என்று
இருக்கும்போது பாவம் கண் இல்லாத ஏழைகளால் அந்த
அளவுக்கு உற்பத்தி செய்ய முடியாது. அதனால் அவர்கள் பாதிக்
கப்படாத அளவுக்கு அவர்களுக்கு நிறைய சம்பளம் கொடுக்க
வேண்டும். அனைத்து தொழிலாளர்களுக்கும் ஆண்டுக்கு
இரண்டு ஜோடி சீருடையும் சலவைப் படியும் மாதா மாதம் 30
ரூபாய் வழங்கவேண்டும். ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு
தரும் சலுகைகளை ஓய்வு பெறும் நாள் அன்றே வழங்கவேண்டும்.
மெடிக்கல் லீவ் 12 மாதம் என்று இருப்பதை 18 மாதமாகக்
கொடுக்க வேண்டும். ஏற்கனவே இந்த மன்றத்தில் போன
3 ஆண்டுகளாக பேசும்போது மாண்புமிகு அமைச்சருடைய
பெயர் திரு. விஜயசாரதி, விஜயம் என்றால் வெற்றி,
சாரதி என்றால் வண்டியை ஓட்டுகிறவர். ஆகவே வெற்றிகர
மாக அந்த வண்டியை ஓட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்
டேன். அந்த நம்பிக்கையை இன்னும் நான் இழக்கவில்லை.
இந்த ஆண்டு முடியப்போகிறது இன்னும் அரிசன் வெல்பர் ஸ்டேட்
கமிட்டி போடவில்லை நீங்கள். போன தடவை நீங்கள் பதில்
சொல்லும்போது இந்த டிமாண்டு முடிவதற்குள் அறிவிக்கிறேன்
என்று சொன்னீர்கள். சபை முடிவதற்குள் அறிவிக்கிறேன்
என்று சொன்னீர்கள். இந்தச் சபையின ஆயுளே முடியபோகிறது.
அதனால் அதை எல்லாம் கொஞ்சம் கவனித்து நல்ல முறையில்
இந்தத் துறையை பணியாற்றச் செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்
கிறேன். வணக்கம்.

திரு. செ. குப்புசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில்
கொண்டுவரப்பட்டுள்ள ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்
துறை மானிய கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களை
எடுத்து வைக்க முன் வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஆதி
திராவிட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் வாழ்க்கையில்
ஒரு மறு மலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை
இங்கே பேசிய மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் தவிர—ஏன்
அவர்கள் கூட அதை மறுக்க முடியவில்லை என்பது உண்மை





யாகிவிட்டது. அந்த நிலையில் நாம் இன்று அவர்களுடைய
வாழ்க்கையில் மிக முக்கியமான மறு மலர்ச்சியை நாம் பார்த்துக்
கொண்டிருக்கிறோம். இங்கே எனக்கு முன்னால் பேசிய
அண்ணன் இராசு அவர்கள்கூட கூறினார்கள் பெரிய திட்டங்கள்
கொண்டுவருவதற்கு தாமதம் காட்டுகிறது அரசு என்றும்
அதை கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். அதில்
எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆடு, மாடு மற்றும்
தொழில் கருவிகள் போன்றவைகள் கொடுத்து அதனால் ஏற்
படும் முன்னேற்றங்களில் பெரிய அளவுக்கு பொருளாதார
வளர்ச்சி ஏற்படுமா என்ற கேள்விக்கு நாம் பதில் சொல்லாமல்
இருந்துவிட முடியாது. ஆதி திராவிட குடும்பங்களில் அந்த
குழந்தைகளுக்கு கஞ்சி கூட இல்லாத ஒரு சூழ்நிலையில் இருக்
கிறார்கள் என்பது இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் அறிந்த
உண்மை. அந்த நிலையில் அந்த குடும்பங்களுக்கு ஆடு வளர்ப்பு
பசு மாடு வளர்ப்பு மற்றும் தொழில் கருவிகள் கொடுத்து பயிற்சி
கொடுத்து அந்த தொழில் கருவிகள் வாங்குவதற்கு மானிய
விலையில் கொடுத்து, கடன் கொடுத்து அந்தத் தொழில்களில்
அவர்களை முன்னேற்றத்திற்கு கொண்டு வருவது என்றால் அது
மிக சாதாரண காரியம் அல்ல. இது ஒரு புரட்சிகரமான
காரியம் என்பதை யாரும் மறந்து விட முடியாது. அந்த நிலை
யில் இன்று கிராமங்கள் தோறும் உள்ள சிறு சிறு குடும்பங்கள்
அப்படிப்பட்ட கருவிகளை மானிய விலையிலும் கடனிலும்
பெற்று பொருளாதார முன்னேற்றத்தில் முன்னுக்கு வந்து
கொண்டு இருக்கிறார்கள் என்பதை நாம் கிராமங்களில் கண்டு
கொண்டு வருகிறோம். அதே முறையில் இன்று கிராம மக்களுக்கு
அதிலும் குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு சாலை
களுக்கு அல்லது வீட்டு மனைகளுக்கு பட்டா கொடுக்க அரசு
முன் வருகின்ற நேரத்தில் ஒரு சில தாமதங்கள் ஏற்பட்டுக்
கொண்டு இருக்கின்றன என்பதை நானும் இங்கே சுட்டிக்
காட்ட கடமைப்பட்டுள்ளேன். அதை அரசு கவனித்து செயல்
படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில்
குறிப்பாக சாலை வசதி வேண்டும் என்றால் இப்போது மாண்பு
மிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் தமிழகத்தில் சாலை
இல்லாத கிராமங்கள் இல்லை என்ற ஒரு நிலை வந்த பிறகும்
ஆதிதிராவிட காலனி ஒரு சிலவற்றிற்கு இடம் தராமல் மற்ற
ஜாதி இந்துக்கள் அதை தடுத்து வருகிறார்கள் என்பதை நாம்
மறந்து விடக்கூடாது. அந்த நிலைமையில் ஒருசில ஆதி திராவிட
காலனிகளுக்கு இட ஒதுக்கீடு தந்து மாவட்ட ஆட்சித் தலைவர்
முதல் சட்டமன்ற உறுப்பினர் வரை அதிலே முயற்சி எடுத்துக்
கொண்டு கிராமங்களுக்குச் சென்று இட ஒதுக்கீடு செய்து டெம்
பரரியாக சாலை போட்டு அதை முடித்து விட்டு வந்த பிறகு ஒரு
சில ஊர்களில் மறுநாளோ ஒரு சில நாட்கள் கழித்து அங்குள்ள
ஜாதி இந்துக்கள் கலவரம் செய்து அந்த சாலையை அழித்து
விட்டு அந்தச் சாலை இல்லாத நிலைமை ஏற்படுத்துகின்ற சூழ்
நிலைகள் இருக்கிறது. அதற்கு உதாரணமாக மாவட்ட ஆட்சித்
தலைவரும், சட்டமன்ற உறுப்பினராகிய நானும் சென்று
எனது தொகுதியில் ஒரு சாலை அமைத்து விட்டு வந்த பிறகு அந்த

நிலச் சொந்தக்காரர்கள் 6 மாதத்திற்கு பிறகு அந்தச் சாலையை அழித்துவிட்டார்கள். இதை எடுத்துக்காட்டாக.... வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5—40)

அந்த கிராமம் கீழ்ச்சேந்தமங்கலம் என்னும் கிராமம் ஆகும். ஆதி திராவிட மக்கள் காலனிக்குச் செல்வதற்காக அமைக்கப்பட்ட சாலை எடுக்கப்படுகிறது. அந்தப் பாதைக்காக இந்தத் துறையின் மூலம் சீக்கிரமாக வாங்கிகொடுக்காத காரணத்தினால் தான், பாராமுகமாக இருந்துவிட்ட காரணத்தினால்தான், அங்கு போட்டு அனுப்புகிறார்கள், இங்கே வந்து திரும்பிச் செல்கிறது. அதற்கான நிலைமைகளைச் செய்வதில் கிட்டத்தட்ட ஒராண்டுக் காலம் தாமதம் ஆகின்ற காரணத்தினால்தான் போடப்பட்ட சாலை எடுக்கப்படுகின்ற ஒரு இழிநிலையைக் காண்கின்றோம்.

மங்கல மாமண்டூர் என்ற கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கான சாலையை அகலப்படுத்த வேண்டும், பாதையை விரிவுபடுத்த வேண்டும், என்று அந்தச் சாலைக்கும் இந்தச் சாலைக்குமாக ஒரே தேதியில் அனுப்பப்பட்ட மனுக்கள் மறுபடியும் மறுபடியும் சர்க்காரிலிருந்து திருப்பி அனுப்பப்படுகிறது. எனவே, அதற்கான காரியங்களைத் துறையில் இருப்பவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட தன்மைகள் இருப்பதால்தான், சர்க்காரால் அளிக்கப்படும் உதவிகளின் காரணமாக அவர்களுக்குச் சாதனைகளை செய்ய முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றது என்பதை இங்கே நான் எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வீடு கட்டுவதற்குக் கடன்களைத் தந்து கொண்டிருக்கிறோம். இந்த அரசு 6,000 ரூபாய் என்று உயர்ந்தியதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். என்றாலும்கூட, இப்பொழுது ஏறியுள்ள விலைவாசிகளின் காரணமாக அந்தத் தொகையை இன்னும் இரண்டு மடங்கு உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமுதாயக் கூடங்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன். மிகவும் இழிநிலையில் உள்ள, கீழ்ப்பட்ட நிலையில் உள்ள அந்த மக்களுக்குச் சமுதாயக் கூடங்கள் மிகமிகத் தேவை. சமுதாயக் கூடங்கள் அமைக்கப்பட்டால் தான், வீட்டு வசதியில்லாத குடிசையில் வாழ்கின்ற மக்கள் ஒரு கூடத்தை வைத்துக்கொண்டு அந்தயிடத்தில் திருமணம் போன்ற பெரிய பெரிய நிகழ்ச்சிகளை வைத்துக்கொள்ள முடியும் என்ற முறையில் சமுதாயக் கூடங்களை ஒவ்வொரு தொகுதியிலேயும் நான்கைந்து வைக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





குடிசைவாழ் மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில், இந்த அரசு குடிசைகளுக்கு விளக்குகளைத் தந்தது என்ற சாதனையை நாம் யாரும் மறந்து விட முடியாது. இங்கு பேசிய அங்கத்தினர்களும்கூட அதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். குடிசைவாழ் மக்கள் காடை விளக்குகளையும், கை விளக்குகளையும் வைத்துக்கொண்டு அதற்கான கெரசினைக் கூட விலைக்கு வாங்குவதற்கான பொருளாதார நிலைமை இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். அந்த எண்ணெய் எரிந்து முடிவதற்குள் அவர்கள் தங்கள் சாப்பாட்டை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருந்தது. ஏனென்றால் விளக்குகள் அணைந்தபிறகு சாப்பிடக் கூடாது என்பதால் அவ்வாறு செய்து கொண்டிருந்தார்கள். எனவே, கணவனுக்கு உணவு படைக்கும்பொழுதுகூட விளக்கு அணைந்துவிடும், சீக்கிரமாகச் சாப்பிட்டு விடுங்கள், உடனே சாப்பிட்டு விடுங்கள் என்று அந்தத் தாய் சொல்லுவாள். இப்படி அந்தக் கணவன் சாப்பிடுவதைக் கூட ரசித்துப் பார்க்க முடியாத நிலையில் அந்தத் தாய்மார்கள் இருந்தார்கள். தங்களுடைய குழந்தைகள் சாப்பிடுவதைக்கூடப் பார்த்து ரசிக்க முடியாத இழிநிலை இருந்தது. கணவனை மனைவி பார்க்க முடியாத நிலைமையும், மனைவியைக் கணவன் பார்க்க முடியாத நிலையும் இருந்தது. அந்த அளவிற்குக் காடை விளக்குகளையும் கை விளக்குகளையும் வைத்துக்கொண்டு குடிசைவாழ் மக்கள் கஷ்டப்பட்டார்கள். அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று எண்ணித்தான், கணவன் முகத்தை மனைவி பார்க்க வேண்டும், மனைவி முகத்தைக் கணவன் பார்க்கவேண்டும், கணவன் மனைவி இருவரும் சேர்ந்து குழந்தைகள் உண்ணும் காட்சியைப் பார்க்க வேண்டும், அந்தக் குழந்தைகள் கூட, நாங்கள் புதிய உணவு சாப்பிட்டு விட்டோம் என்று சொல்லி, தங்கள் தாய் தந்தையரைச் சாப்பிடச் சொல்லும் அந்தக் குளிர்ச்சியான வார்த்தைகளைத் தாயும் தந்தையும் கேட்க வேண்டும் என்ற அரிய வாய்ப்பைத் தந்து, ஒளி மயமான விளக்குகளை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் அரசு தந்திருக்கிறது.

இப்படி அந்த விளக்குகள் மட்டும் கொடுத்தால் போதாது. அந்தக் குடிசைகளையெல்லாம் கட்டிடங்களாக ஆக்கித் தர வேண்டும்; அது மட்டும் போதாது, அங்கே படிக்கின்ற மக்களுக்கு எட்டாவது வகுப்பு வரையில் சீருடைகளைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களைக் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு என்னுடைய தொகுதிக்கு அவர்கள் செய்திருக்கின்ற நன்மைகளைப் பற்றி நான் சொல்லாமல் இருந்துவிட்டேயானால் நான் நன்றி மறந்தவன் ஆகிவிடுவேன் என்று தெரிவித்து அவர்கள் ஆட்சியிலே என் தொகுதிக்குக் கிடைத்த நன்மைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. செ. குப்புசாமி] [1984 மார்ச் 22

என்னுடைய தொகுதியில் மங்கல மாமண்டூர் என்ற கிராமத்
தில் பனைத் தொழில் உற்பத்தி சம்பந்தமாக 500 தாழ்த்தப்
பட்ட மக்களைச் சேர்ந்த அந்தத் தாய்மார்கள் பயிற்சி பெறு
கின்ற நிலைமையைக் கொண்டுவந்து, அந்த மாதர்களுக்கு
வேலையில்லாத காலத்தில், விவசாயத்தில் வேலையில்லாத
காலத்தில் அந்தப் பொருட்களை உற்பத்தி செய்து பொருளா
தாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான நிலையை உருவாக்கிக்
கொடுத்ததை நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இந்தத் துறையின் மூலமாக கையால்
காகிதம் செய்கின்ற இரண்டு தொழிற்சாலைகளை எனது தொகு
தியில் வந்தவாசியிலும், அனுக்காவூரிலும் ஏற்படுத்தி ஏழை
எளிய மக்களுக்கு உதவியதால், இந்த அரசை வாழ்த்திப்
பாராட்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மேல்நிமிலி கிராமத்தில் கோரைப்பாய் நெசவுத் தொழிலில்
அங்குள்ள மக்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட
மக்களுக்காக அங்கே சங்கங்களை ஏற்படுத்தி அந்தச் சங்கங்
களின் மூலமாக அவர்களுக்கு கடன் முதலியவற்றைச் செய்து
கொடுத்து உற்பத்திப் பொருட்களையும் அவர்களே பெற்றுக்
கொண்டு அதற்குரிய தொகை தருகின்ற வகையிலே ஏற்பாடு
செய்திருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.
இப்படிப்பட்ட சீரிய நல்ல காரியங்களைச் செய்து தருவதால்
அந்த ஏழை எளிய சமுதாயம் முன்னேறுகின்றது. அப்படி
பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேறி எழுந்து நிற்
கிறார்கள். அப்படி எழுந்து நின்று அவர்கள் மேலும் தங்க
ளுடைய உரிமைகளைக் கேட்கின்றபோதுதான் யாரால் அவர்கள்
நசுக்கப்படுகிறார்களோ அவர்களுக்கும், இவர்களுக்கும் சிக்கல்
கள் ஏற்படுகின்றன. ஆகவே அவர்களின் பொருளாதார
நிலைமையை மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் உயர்த்திய
தன் காரணத்தால்தான் இன்றைக்கு அவர்களால் எழுந்து நின்று
தங்களுடைய உரிமைகளைக் கேட்க முடிகின்றது. அவர்கள்
மற்ற சமுதாயத்தினரைப் பார்த்து நாங்கள் பொருளாதாரத்
துறையிலே முன்னேறிவிட்டோம், ஆகவே இனி அடுத்து எங்
களுக்கு வரவேண்டிய அனைத்து உரிமைகளும் வரவேண்டும்
என்று கேட்கிறபோதுதான் பல்வேறு பிரச்சினைகளும், கலவரங்
களும் ஏற்படுகின்றன. எனவே இந்த நாட்டிலே அவ்வாறு
அவர்கள் தங்களுடைய உரிமைகளைக் கேட்கின்ற அளவுக்கு
அவர்களுடைய பொருளாதார நிலைமைகளை உயர்த்தியது
அப்படிப்பட்ட ஒரு புரட்சியை ஏற்படுத்தியது மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிதான் என்பதை நான்
பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். இதை எல்லோரும்
மனதிலே ஒத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்; வெளியிலே
அவர்கள் எதிர்க்கட்சியினர் என்பதால் ஒருவேளை சொல்லாமல்



1984 மார்ச் 22] [திரு. செ. குப்புசாமி]

இருக்கக்கூடும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆக
மனதிற்குள்ளாக அவர்கள் இதனை ஒத்துக்கொண்டு தான்
இருக்கின்றார்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன் என்று
சொல்லி விடைபெறுகிறேன்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டப்
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்
அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியக்
கோரிக்கையில் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன்.

இந்த நாட்டிலே மகாத்மா காந்தி என்ற உத்தமர் பிறந்த
காரணத்தால் தான் என்னைப் போன்ற எங்கோ குப்பை மேட்
டிலே, குடிசை வீட்டிலே வசித்தவர்கள் எல்லாம் இந்த சட்டமன்
றத்திலே வந்து பேசுகின்ற வாய்ப்பை நாங்கள் பெற்றிருக்கிறோம்.
இந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு அரசு இயற்றிய சட்டத்தைப்
புறக்கணிக்கின்ற வகையில் மேதகு கவர்னர் அவர்கள் இந்த
ரிசர்வேஷன் தப்பு, அரிசன சமுதாயத்திற்காக ரிசர்வேஷன் என்று
வைத்து உத்தியோகம் கொடுக்கப்பட்டு, வருபவர்கள் எல்லாம்
டாக்டர்களாக வந்திருப்பதால்தான் பலபேர்கள் இறக்கிறார்கள்
என்று சொல்லி இருக்கிறார்கள். இது எவ்வளவு கொடூரமான
வார்த்தை என்பதை சுட்டிக் காட்ட வேண்டும் என்பதற்காகத்
தான் நான் சொல்கிறேன். இது மிகவும் கண்டிக்கப்படக்கூடிய
விஷயம். மிகப் பெரிய பொறுப்பிலே இருப்பவர்கள் இந்த
வார்த்தையைச் சொன்னார்கள் என்பதற்காக நாங்கள் மிகவும்
கண்டனம் தெரிவிக்கிறோம்.

ஒவ்வொரு துறையிலும் 18 சதவீதம் என்று வைத்திருக்
கிறோம். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு அங்கத்தி
னர்கள் எல்லாம் அதை 20 ஆக்குங்கள், 25 ஆக்குங்கள்
என்றெல்லாம் சொன்னார்கள். நான் அந்த அளவுக்குச் செல்ல
வில்லை. இந்த 18 சதவீதத்தையாவது எல்லா துறைகளிலும்
அமல்படுத்தப்படுகின்றதா என்பதை தயவுசெய்து நீங்கள் கண்
காணிக்கவேண்டும். அவ்வாறு கண்காணிக்கின்ற வகையிலே
ஸ்டேட் வெல்ஃபேர் கமிட்டி இந்தச் சட்டமன்றம் முடிவதற்குள்
ளாக அறிவிக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
சொல்லி ஓராண்டுக்காலம் முடிந்துவிட்டது.

ஆகவே அந்தக் கமிட்டி பற்றி இப்போது அறிவித்தாலும் ஒன்று
தான் அறிவிக்காமல் இருந்தாலும் ஒன்றுதான். பேக்வர்ட்
க்ளாஸ்-க்காக ஒரு கமிஷன் போட்டு அதிலே ஒரு ஐ.ஏ.எஸ்.
அதிகாரியைப் போட்டு அவர்கள் மூலமாக பேக்வர்ட் க்ளாஸ்
மக்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றதோ அவற்றை
எல்லாம் ஆராய்வதற்காக எப்படி ஒரு கமிஷன் போடப்பட்
டிருக்கிறதோ அதைப்போன்று இந்தப் 18 சதவீதம் என்பது
சரியாக அமல் நடத்தப்படுகின்றதா, அவர்களுக்காகச் செய்யப்

படுகின்ற நல்ல காரியங்கள் அவர்களுக்கு உண்மையிலேயே சென்று சேர்கின்றதா என்பதை எல்லாம் ஆராய்வதற்கு ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்து பரிசிலனைக்கு எடுத்துக்கொண்டால் நான் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 5-50)

இந்த 18 சதவீதம் அரிசன நலத்துறையிலாவது இருக்கின்றதா என்றால் இல்லை. அதேபோன்று ரெவின்யூ துறையிலும் இல்லை; சோஷியல் வெல் பேர் துறையிலும் இல்லை; இப்படி எல்லாத் துறைகளிலும் முழுமையாக இல்லாத நிலைமைதான் இருக்கின்றது. பல்கலைக் கழகத்திலே பார்த்தாலும் ஒன்றிரண்டு கூட இல்லாமல் இன்றைக்கு இருக்கின்றது. இதையாவது நாம் செய்து கொடுப்போமானால் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும். இங்கே பலமுறை இந்தத் துறை அமைச்சர் அல்ல — மற்ற அமைச்சர்கள், இந்தப் பிரிவினரை வேலையில் அமர்த்த அப்ளிகேஷன் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஏதாவது அப்ளிகேஷன் வந்து போட்டிருந்தால் கூட தகுதியானவர்கள் இல்லை என்று தள்ளக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய அமைச்சர், முதல்வர் அவர்கள், எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்கிறார்கள், பாராட்டுகிறேன். ஆனால், அரிசன வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகள் எத்தனையோ இடங்களில் அவதிப்படக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தை எடுத்துக் கொள்வோமானால் திரு. சாந்தப்பா எவ்வளவு பெரிய அறிவாளி; அவர் ஒரு சிறந்த மேதை. அவரோடு ஒப்பிடக் கூடிய பதவியிலே இருக்கக்கூடியவர்களைக் கொண்டு ஒரு கமிஷன் போட்டு அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் விஷயத்தை விசாரிப்பது என்றால், அவருடைய திறமையைக் குறைக்கக்கூடிய அளவுக்கு அது இருக்கிறது என்பதை நொந்து, மன வருத்தத்துடன் தெரித்துக் கொள்கிறேன்.

எத்தனையோ ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் இன்றைக்கு இருக்கிற இடம் தெரியாமல் எங்கெங்கேயோ மூலையில் இருக்கும் வகையில் கொண்டு போய் வைத்திருப்போமானால் அவர்களுடைய அறிவையும் திறமையையும் பயன்படுத்த முடியாமல் நாம் இருப்போமானால் அது நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நல்லதல்ல. அரிசன மக்களுக்கு இவ்வளவு திட்டங்களையும் போட்டு — இவ்வளவும் நிறைவேறி விட்டால் அரிசன மக்கள் உண்மையிலேயே இந்த ஆட்சியின்பொழுது முன்னுக்கு வந்துவிடுவோம் என்று மகிழ்ச்சி அடையும் அளவுக்குப் பெருமை அளிக்கத்தக்க திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் நடைமுறையில் சரியாக இல்லையென்றுதான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





சென்ற முறை ஒரு கேள்வி போட்டேன். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு எழுத படிக்கக் கூடியவர்களுக்கு ஒரு கோர்ஸ் நடத்துகிறோம். வேறு வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு டெல்லியிலே இனமாக நடத்துகிறோம். ஆனால், அரிசன் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வகுப்புகளை சென்னையிலே வைத்திருக்கிறார்கள். டெல்லிக்குச் சென்றால்தானே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பரிட்சை எழுதுபவர்கள் பலரோடு கலந்து பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கும். எனவே, இதர வகுப்பு மாணவர்களுக்கு எப்படி செய்கிறோமோ அதைப் போல் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதுவரைக்கும் அதைச் செய்யவில்லை.

ஒவ்வொரு மாநிலத்திலும் கிளஸ்டர் புரொகிராம் என்று எடுத்திருக்கிறோம், ஆயிரம் குடும்பங்களை உயர்த்த வேண்டுமென்று, நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால், இதை நடைமுறைப்படுத்துவதில்லை. கிட்டத்தட்ட ரூ. 1 கோடி அதற்கு செலவு செய்யப்படுகிறது. என்னுடைய தொகுதியில் நிலக்கோட்டையை எடுத்துக் கொண்டீர்கள், ரொம்ப நன்றி. அமைச்சருக்கும், முதல் அமைச்சருக்கும், அமைச்சரவைக்கும் நன்றி, பாராட்டுதல். ஆனால் அங்கே ஏதாவது தொழில் செய்ய வேண்டுமென்றால், ரூ. 3 கோடி, ரூ. 4 கோடி ஒதுக்கி, 500 பேர்களுக்கு நிரந்தரமான வேலை கொடுத்தோம் என்ற நிலைமை இல்லை. அங்கே, என்ன என்ன தொழில் செய்ய இருக்கிறது என்றால் — நான் அங்கே ஒரு கூட்டம் போட்ட போது போய்ப் பார்த்தேன்—கூடை முடைதல் பாய் முடைதல், தறி போடுவது போன்ற இந்த வேலைகளைத் தவிர வேறு வேலை வைக்க வாய்ப்பு இல்லை. அதெல்லாம் டெம்பரரியாக இருக்கின்ற வேலைகள். இது பிரயோஜனமில்லாத வேலை, பயனற்ற ஒரு வேலை என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் அழுத்தந்திருத்தமாக சொல்லிக்கொள்கிறேன். எனவே, எங்கேயெல்லாம் கிளஸ்டர் புரோகிராம் என்று நடக்கிறதோ, அங்கே எல்லாம், 100 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று திட்டம் வைத்திருக்கிறோமோ, எங்கேயெல்லாம் அவர்களுடைய குடும்பங்களை முன்னேற்ற வேண்டுமென்று வைத்திருக்றோமோ, அங்கே நிரந்தரத் தொழில் அமைத்து வேலை வாய்ப்பு கொடுக்க நல்ல செட்அப் வைத்திருக்கிறார்கள்; நல்ல நிர்வாகத் திறமை கொண்ட செக்கரட்டரியை வைத்திருக்கிறோம். எப்படி வழி வகை கொடுக்கவேண்டுமென்று சொல்லக்கூடிய நிர்வாக அனுபவசாலியை வைத்திருக்கிறோம்.— எனவே, அவரை வைத்துக் கொண்டு ஒவ்வொரு கிளஸ்டர் புரோகிராம் வரக்கூடிய-அரிசனங்கள் இருக்கக்கூடிய தொகுதிகளிலே, கிளஸ்டர் புரோகிராம் அமுலாக்கினால் —அங்கெல்லாம் ஒரு கூட்டுறவு நூற்பாலையை நிறுவுங்கள். 300 பேர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு கொடுங்கள். 300 பேர்களுக்காவது வேலை வாய்ப்பு கொடுத்தால்தான் அது சாலச் சிறந்ததாக இருக்கும்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1984 மார்ச் 22

இன்னொன்று இப்பொழுது கடந்த 10 வருஷங்களாக,
காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து சொல்லி, சொல்லி, நான்
இப்பொழுது கிழவியாகி விட்டேன். ஆனால் இன்னும் நடை
பெறவில்லை. அப்பொழுது ஆர். வி. அவர்கள் நல்ல திறமை
உள்ளவர்— எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்— சொல்வார்கள்,
அதை நடத்த முடியவில்லை என்று. ஆனால். உங்களுடைய
காலத்திலாவது, நீங்கள் புரட்சித் தலைவர் என்று சொல்கிறீர்
களே, அவருடைய காலத்திலாவது, தனியார்களுக்கு தொழில்
நடத்த லைசன்ஸ் கொடுப்பது நாம் தான், அவர்களுக்கு
லோன் கொடுப்பது நாம் தான். மத்திய மாநில அரசுகள்தான்
கொடுக்கின்றன. ஆகவே, தனியார் தொழிற்சாலைகளிலும்,
25 சதவீதம் அரிஜனங்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்க வகை
செய்து இந்த அரிசன மக்களுடைய வாழ்க்கையை உயர்த்துவது
சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்லாமல், இன்றைக்கு ஹாஸ்டல் கட்டுவதற்கு
மத்திய அரசு உதவி ரூ. 66.10 இலட்சம் கிடைக்கிறது. அது
எத்தனையோ காலமாகிப் போய் அப்படியே இருக்கிறது. என்
னுடைய தொகுதியில் வத்தலக்குண்டில் பெண்கள் ஹாஸ்டல்
சாங்க்ஷன் ஆயிற்று. நிலக்கோட்டையில் ஆண்கள் ஹாஸ்டல்
சாங்க்ஷன் ஆயிற்று. ஆனால் இதுவரைக்கும் வேலை ஆரம்பிக்க
வில்லை. இதுவரைக்கும் வேலை ஆரம்பிக்காததோடு மட்டுமல்லா
மல், அங்கே இடமில்லாத காரணத்தாலே எங்களுக்கு வேண்டிய
குடும்பத்தினரிடம் சொல்லி, நீங்கள் 50 சென்ட் நிலம் கொடுங்
கள் என்று ஒப்புதல் எழுதி வாங்கிக் கொடுத்து, இந்த இடத்
தினையும் ஹாஸ்டல் கட்டுவதற்காக நாங்கள் மனப்பூர்வமாகக்
கொடுத்திருக்கிறோம். மார்க்கெட் வேல்யூ என்னவோ அதைக்
கொடுக்கவேண்டுமென்று எழுதி கொடுத்தார்கள். அப்படி இட
மெல்லாம் கொடுத்த பிறகு கூட அவர்கள் என்ன செய்திருக்
கிறார்கள் ? நிலக்கோட்டையில் ஹாஸ்டல் கட்டுவதற்கு இடம்
இல்லை ; ஆகவே ஹாஸ்டல் கட்டுவதை இன்னொரு ஜில்லா
விற்கு மாற்றுகிறோம் என்ற அளவிற்கு தாட்கோ மூலமாக
செய்திருக்கிறார்கள் என்றால் இது எவ்வளவு கவனக்குறைவான
காரியம் என்பதை யோசிக்க வேண்டும்.

இன்றைக்குச் சிறிய தொழில், பெரிய தொழில் என்று உதவி
செய்கிறோம். சிறு தொழில் என்றால் 125 ரூபாயிலிருந்து
15 ஆயிரம் ரூபாய் வரையில் கொடுக்கிறோம். இதற்கு ஜில்லா
வாரியாக ஒரு லிஸ்ட்டை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். பல இடங்களில் லட்சக்கணக்கான ரூபாய்
கொடுத்ததாக இருக்கிறது. இது சரிவர நடக்கிறதா என்றால்
நடக்கவில்லை என்றே தெரிகிறது. இதற்கு மத்திய அரசு
உதவி 1981-82 ஆம் ஆண்டு 9.56 கோடி ரூபாய் கிடைத்திருக்
கிறது. அதற்கு பிறகு தொழில் நடத்துவதற்காக 37.20 கோடி
ரூபாய் கிடைத்திருக்கிறது. இதெல்லாம் நிச்சயமாக செலவு
செய்யப்பட்டிருக்கிறதா என்பதை பார்க்கவேண்டும். செலவு



1984 மார்ச் 22] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

செய்யாமல் திருப்பியனுப்புகிற நிலைமை இருக்கக்கூடாது.
ஆங்காங்கே தொழில்களை ஆரம்பித்து இவர்களுக்கு வேலை
வாய்ப்பை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. நிறைய அங்கத்
தினர்கள் இது பற்றி பேசியிருக்கிறார்கள். 10 ஆயிரம் வீடுகள்
எப்போது கட்டப்படும் ? ஒரு வீட்டிற்கு 6,000 ரூபாய் என்று
சொல்லி இருக்கிறீர்கள். இவைகள் எப்போது கட்டப்படும்?
1985 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்னாலே 10 ஆயிரம் வீட்டை
கட்டிக் கொடுத்தோம் என்ற பெயரை நீங்கள் வாங்கிக் கொள்ள
வேண்டும்

இன்றைக்குப் பட்டா கொடுக்கிறோம். அமைச்சர் வந்தால்
உடனே பட்டா கொடுத்து விடுகிறார்கள். இடத்தை பார்ப்ப
தில்லை ; அளப்பதில்லை. இந்த மாதிரி குறைபாடுகள் இருக்
கின்றன. இவைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென கேட்டுக்
கொள்கிறேன்.

1983-84-ல் மூன்றே மூன்று கல்யாண மண்டபம் கட்டுவதாக
இதில் இருக்கிறது. இந்த மாநிலத்தில் கிட்டத்தட்ட ஒரு கோடி
மக்கள் இருக்கிறார்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான
ஊர்கள் இருக்கின்றன. மூன்று இடங்கள் தான் என்று சொல்லி
இருப்பது கடலில் பெருங்காயம் கரைத்ததைப் போல இருக்கிறது.

அதைப்போல தாலுகாவிற்கு ஒரு ரேடியோ கொடுக்கிறீர்
கள். யார் கேட்டார்கள் ரேடியோ ? அதை நிறுத்திவிடுங்கள்.
அரிசன மக்களில் மூன்று பிரிவினர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்
அவர்களிடம் கூட எழுதிக் கொடுத்திருந்தேன். என்
னுடைய தொகுதியில் பழைய வத்தலக்குண்டில் இந்த மூன்று
பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் கிட்டத்தட்ட 10 ஆயிரம்
பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கல்யாண மண்டபம் கட்ட
வேண்டுமென்று சொல்லி இருந்தேன். அதை கூட அமைச்சர்
அவர்கள் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆகவே கொஞ்சம் ஜாஸ்தி
யாக பணம் ஒதுக்கி இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக மின்சாரத்தைப் பற்றி இங்கே சொன்னார்
கள். அதிலே 2,000 பேர்களை எடுத்தார்கள். அவர்களை
அசிஸ்டெண்ட் ஸ்டோர் கீப்பர், கேஷியர் என்ற அளவிலே
வேலைக்கு எடுத்தார்கள். அதிலே 612 பேர்கள் பெண்கள்.
அந்த 612 பெண்களையும் எங்கோ கிராமத்திலே போய்
மோட்டார் ரீடிங் எடு. அந்த வீட்டிற்கு போய் ரீடிங் எடு
என்றால் அந்த பெண்கள் கதி என்னவாகும் ?
அந்தப் பெண்களை அங்கே வீட்டிற்குள்ளேயே நுழைய விட
மாட்டார்கள். அந்த நிலை இருப்பதால், அவர்களுக்கு கிளர்க்

போஸ்ட் கொடுக்கவேண்டும். இப்போது அவர்கள் அசசர்களாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக நகரத்திற்குள்ளேயே வேலையில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஸ்பெஷல் சென்ட்ரல் ,அசிஸ்டென்ஸ் பார் தி டெவலப்மென்ட் ஆப் தி ஹிந்து அரிஜன் என்று ஒன்று இருக்கிறது ; அதாவது சிறப்பு மத்திய நிதியுதவி. இந்தத் திட்டத்தைச் சேலம், கோவை, தஞ்சாவூர் என்று இப்போது நான்கைந்து ஜில்லாக்களில் மட்டும் தான் செயல்படுத்துகிறோம். இந்தத் திட்டத்தை. மாநிலம் முழுவதிலும் அமல்படுத்தி பெண்களும், அரிசன மக்களும் பயன்படுகிற அளவிற்கு அவர்களுக்கு அதிகப்படியான தொழில் வாய்ப்புகளை உண்டாக்குகிற முறையை நாம் உருவாக்க வேண்டும்.

அடுத்து என் தொகுதிக்கு ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் வேண்டுமென்று நானும் விடாமல் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். எத்தனையோ முறை கேட்டும் அதை வழங்க இன்னும் அரசுக்கு மனம் வரவில்லை. படித்துவிட்டு அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும், வாழ்க்கையில் முன்னேற தயவு செய்து என்னுடைய தொகுதியில் பெண்கள் ஐ.டி.ஐ. ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று இருக்கும் நிலைமையில் நாம் கொடுக்கின்ற ஸ்காலர்ஷிப் பேக்வார்ட் மாணவனுக்கு ஒரே விகிதத்திலும் தாழ்ந்தப்பட்ட மாணவனுக்கு ஒரு விகிதத்திலும் கொடுக்கிறோம். ஏன் இப்படிப்பட்ட வித்தியாசமான நிலை இருக்க வேண்டும்? சாப்பாடு செலவு எல்லோருக்கும் ஒரே மாதிரிதான் ஆகும். எல்லோருக்கும் ஒரே மாதிரிதான் விலைவாசி இருக்கும், பேக்வார்ட் கிளாஸ் மாணவனுக்கு ஒரு விலை; தாழ்த்தப்பட்ட மாணவனுக்கு ஒரு விலை என்று இல்லை. ஆகவே, இதிலே எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல், ஒரே மாதிரியாக பின் தங்கிய மாணவர்களுக்கு அளிக்கப்படும் அதே ஸ்காலர்ஷிப் தொகையை அரிசன மாணவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 6-00).

துணிகள் கொடுக்கிறோம். அந்தத் துணிகள் சரிவர தைத்துக் கொடுப்பது இல்லை. போதுமான அளவிற்கும் துணி கொடுக்கப்படவில்லை. பாவாடைக்கு அதிகமான அளவிற்கு சுருக்கம் வைத்து தைக்க துணி இல்லாததால், சுருக்கம் இல்லாத பாவாடையாகத் தைக்க வேண்டியிருக்கிறது. போதுமான அளவு துணிகள் கொடுத்து தைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கிராமங்களில் தையல் பயிற்சி பெற்ற பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் இதைத் தைக்க வாய்ப்பு கேட்கிறார்கள். அவர்களிடத்தில் இதைக் கொடுத்து தைக்க வேண்டும். தரமான, சாயம்





போகாத துணி கொடுக்கப்பட்ட போதிலும், போதுமான அளவிற்குக் கொடுக்கப்படாததால் அரசு எண்ணம் சரியாக நிறைவேற்றப்படாத முறையில் இருக்கிறது. ஆகவே, அதை நல்ல முறையில் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. சி. சபாபதி : மாண்புமிகு மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதித்திராவிடர் பழங்குடியினர் நலமானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சுதந்திரம் பெற்று 37 ஆண்டுகள் ஆன பிறகும், கிராம அதிகாரிகளாக வருவதற்கு அரிசனங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் இருந்த நிலையைப் போக்கி, அதற்கு வழிவகை செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராகக் கூட வந்து விட முடியும், ஆனால் கிராம அதிகாரியாக வர முடியாது. இது ஒரு சரித்திர உண்மை. அதை மாற்றியமைத்த பெருமை எங்கள் புரட்சித் தலைவருக்குத்தான் உண்டு. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இளையபெருமாள் அவர்கள் கூட பேசினார்கள். அம்பேத்கார், நேரு, காந்தி ஆகியோரைப் பற்றிப் பேசினார்கள். டாக்டர் அம்பேத்கார் படம் காங்கிரஸ் ஆட்சியின் போது திறக்கப்படவில்லை. சுதந்திரம் அடைந்து 37 ஆண்டுகள் கழித்து, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பின்னாலேதான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னாலேதான், டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு இந்தச் சட்ட மன்றத்தில் திருவுருவப்படம் திறந்து வைத்து இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

ஏழை மக்களுக்கு உதவி செய்தோம், உதவி செய்தோம் என்று 20 ஆண்டுகாலமாக ஆண்டு வந்த காங்கிரஸ் ஆட்சியினர் சொல்லி வந்தார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வந்த பின்னாலேதான் அந்த ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டம் போட்டார்கள். பல்வேறு திட்டங்கள் மூலம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அந்தச் சமுதாய மக்கள் நிமிர்ந்து நிற்கும் அளவிற்கு செய்து இருக்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. அந்த ஏழை மக்கள் வயிறார உண்டு கல்வி பெற வேண்டும் என்பதற்காக சத்துணவுத் திட்டத்தை கொண்டு வந்து இருக்கிறார்கள். கல்விக் கண்ணைத் திறந்து வைத்தார் காமராஜர் என்று சொல்கிறார்கள். அவர்கள் காலத்தில் கூட இப்படித் திட்டம் கொண்டு வரப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பெரிய திட்டத்தைக் கொண்டுவந்ததற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்.

[திரு. கி. சபாபதி] [1984 மார்ச் 22

எங்கள் தொகுதியில் கிட்டதட்ட 7 கோடி ரூபாய் செலவில் ஒரு ஸ்பின்னிங் மில் கட்டப்படவிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 12 டேம்ஸ் கட்டப்பட்டிருக்கின்றன. இதைப் போன்று காங்கிரஸ் ஆட்சியில் செய்தார்களா? தி.மு. க. ஆட்சியில் செய்தார்களா? இல்லை. ஏன்? இந்த மக்களைப் பற்றி சிந்திக்கவில்லை?

அதைப் போன்று போக்குவரத்துத் துறையின் மூலமாக பஸ்கள் விட்டிருக்கிறார்கள் ; உள்ளாட்சித் துறையின் மூலமாக ரோடுகள் போட்டிருக்கிறார்கள், கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். அதைப் போன்று குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பிறகுதான் மலைமேலே இருக்கக்கூடியவர்கள் டவுனைப் பார்க்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அளவுக்கு சாலை வசதிகளை செய்து கொடுத்து, பஸ்கள் நிறைய விட்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் கோட்டப்பட்டியிலிருந்து சித்தேரி வரையில் சுமார் 40 கிராமங்கள் இருக்கின்றன. அவர்கள் பஸ்களைப் பார்த்ததில்லை. இப்போதுதான் ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் சாலை அமைத்துக் கொடுத்து, அந்த மக்கள் டவுனைப் பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விரைவிலே அந்தச் சாலையில் பேருந்துகளை விட்டு, அந்த மக்களை மகிழ்விக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிட்டத்தட்ட 62 இலட்சம் ரூபாய்ச் செலவில் அந்த மலைவாழ் மக்களுக்கு ரோடு போட்டிருக்கிறோம். ஆனால் பஸ் இல்லை. விரைவிலே பஸ்விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மேலும் இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையிலே திட்டங்கள் தீட்டி, நல்ல முறையிலே தொண்டாற்றி, நல்ல முறையிலே சேவை செய்து வருவதைப் பாராட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ஜனாதிபதியாக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் சிலை திறந்து வைத்திருக்கிறார்கள் என்பது தம்பி அவர்களுக்கு தெரியாது. இரண்டாவதாக நம்முடைய முதலமைச்சர் ஆட்சியில் ஆதிதிராவிட மக்களுக்கு நல்லது நடக்கவில்லை என்று சொல்லவில்லை; அதிகமாக நடந்துகொண்டிருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறேன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 மார்ச் 22]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்றைய தினம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் ; நானும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு என்று ஆழ்குழாய்க் கிணறுகள் போடும் ஸ்கீம் ஒன்று இருக்கிறது நம்முடைய அரசில். ஆனால் அந்த ஸ்கீம் எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று சொல்லி, சென்ற ஆண்டே கேள்வி போட்டோம் ; பேசினோம். வாரியத் தலைவர் அவர்களிடமும் சொன்னோம். ஆனால் இன்று வரையில் அந்த மக்களுக்கு, ஓரளவு நிலம் வைத்திருக்கக் கூடியவர்களுக்கு பயன் ஏற்படவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாவது அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நம்முடைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த சமுதாய மக்களுக்கு ஏதோ சிறு சிறு சலுகைகள் அவ்வப்போது செய்கிறோம் ; இல்லை என்று சொல்லவில்லை, ஏதோ பிச்சைப்போடுவது போல இரண்டு ஆடு, இரண்டு மாடு கோழிக்குஞ்சு 10, போய் இப்படி காலாகாலத்திற்கும் கொடுத்துக் கொண்டிருந்தால் இந்த சமுதாய மக்களின் பிரச்சினை தீர்ந்து விடாது. அடிப்படையான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. நீங்கள் ஏதோ அது கொடுக்கிறோம், இது கொடுக்கிறோம் என்று சொல்லலாம். அதனால் பிரச்சனை தீர்ந்துவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இப்போது இங்கே இருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கறாராக அமுல் படுத்தினால் உபரியாக வரும் நிலம் யாருக்குப் போகும்? ஆதிதிராவிட மக்களுக்குத்தான் போகும். உபரி நிலத்தை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தால் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலத்திற்கு அவர்கள் சொந்தக்காரர்களாக இருப்பார்கள். அதனால் வருமானம் பெருகும். அந்தப் பிள்ளைகள் ஒழுங்காகப் பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள். அவர்களை பள்ளிக்கு அனுப்ப முடியும். அது இல்லாமல் வேலை கொடுக்கிறோம், வேட்டி கொடுக்கிறோம் என்று சொல்வது அந்த மக்களை ஏமாற்றுவதாக இருக்கிறது. இது அடிப்படைப் பிரச்சினையை தீர்க்காது. ஆகவே, நிலச் சீர்திருத்தச் சட்டத்தை கராராக அமுல்படுத்தி, உபரி நிலங்களை எடுத்து நிலமற்ற ஆதிதிராவிட மக்களுக்கு என்றைக்கு கொடுக்கிறீர்களோ அன்றைக்குத்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் ஓரளவுக்கு சம நிலைக்கு வருவார்கள். அந்த முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். பழனிவேல்] [1984 மார்ச் 22

(இரவு 6-10)

அதோடு இன்றைக்கு இந்தத் துறைக்காக ஒதுக்கியிருக்கக் கூடிய தொகை சென்ற ஆண்டு ஒதுக்கியதை விட அதிகமல்ல. அந்த அளவிற்குத்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். இதில் விசேஷம் என்னவென்றால், ரூ. 1,09,00,000 இந்த நிதியிலிருந்து சத்துணவுத் திட்டத்திற்காக கொடுத்திருக்கிறீர்கள். இதன் அர்த்தம் என்ன? ஏற்கனவே அந்த மக்களுக்காக வீடுகள் வாங்கமுடியவில்லை. வீட்டு மனைகள் வாங்க முடியவில்லை. மற்ற காரியங்களையும் செய்யமுடியவில்லை. ஆனால் ஒரே சொல்லக்கூடிய இந்தச் சத்துணவுத் திட்டத்திற்காக, ரூ. 1,09,00,000-யை எடுத்துக்கொடுத்து இருப்பது சரியல்ல, நியாயமல்ல. இது அந்த மக்களைப் புறக்கணிக்கக் கூடிய நடவடிக்கை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களுக்காக கல்லூரியிலே விடுதி ஒன்று, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக என்று ஒரு விடுதி இருக்கிறது. நான் கேட்கிறேன் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப்பள்ளிகளில் இருக்கும் மாணவர்களுக்கு வேண்டுமானால், இந்த தனி விடுதிகள் இருக்கட்டும். ஆனால் இந்த கல்லூரிக்குப் போனபிறகு, தனி விடுதி இருப்பது என்பது அங்கே தான் இந்த சாதிச் சண்டை உருவாவதற்கு அடிப்படையே ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே கல்லூரிக்குச் சென்று விட்டால் அங்கே எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடுதி என்பதை வைத்து, அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். இந்த உதவித் தொகையை ஸ்காலர்ஷிப் தொகையை அதிகமாக்க வேண்டும் என்று கோருகிற நோக்கமே அதற்காகத்தான். ஆகவே கல்லூரியில் தனிவிடுதி என்பது இனிமேல இருக்கக்கூடாது. அந்த முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிராமப் பஞ்சாயத்திலே ஸ்வீப்பர்கள், தாழ்த்தப் பட்டவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 60. இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா? ஒரு மாதத்திற்கு ரூ. 60 தெருக் கூட்டுகிற தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்தால், அது எந்த தொழிலாளர் நலச் சட்டத்திற்கும் பொருந்தாது. நீங்கள் எல்லாம் தற்பெருமையாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே, புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் இந்த மக்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. இந்த ரூ. 60 சம்பளம் என்பது இந்த நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து இருக்கிறது. ஆகவே அவர்களுக்குச் சட்டப்படி கிடைக்கவேண்டிய ஊதியம் கிடைப்பதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 22] [திரு. என். பழனிவேல்]

அடுத்தபடியாக கன்னியாகுமரியிலே, தோழர் மணி அவருடைய தொகுதியில் பத்துகாணி என்ற இடத்தில் ஒரு உறைவிடப் பள்ளி இருக்கிறது. அதை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று நீண்டகாலமாக, பலமுறை இந்தச் சட்டசபையிலே பேசியிருக்கிறார்கள். எனவே அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூரில் தெற்கு பனையூர், வடக்குப் பனையூர் போன்ற இடங்களிலே மேடான பகுதிகளிலே குடி மனைகள் வழங்கவேண்டும். அவர்கள் இன்றைக்குப் பள்ளமான பகுதிகளிலே இருக்கிறார்கள். வெள்ளம் வருகின்றபோது வேதனையடைகிறார்கள். எனவே அவர்களுக்கு மேடான இடத்தில் பட்டாக்களை வழங்கவேண்டும். அவர்கள் குடியிருக்கக் கூடிய இடங்களை கிளாஸ் மாற்றம் செய்து பட்டா வழங்க வேண்டும். சுடுகாடு என்றும், வேறு பல காரணங்களைக் காட்டியும், பட்டா கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆனால் அங்கே இருப்பவர்களில் பலர் 10 ஆண்டுகளாக அங்கே குடியிருக்கிறார்கள். எனவே கிளாஸ் மாற்றம் செய்து பட்டாக்களை உடனடியாகக் கொடுக்கவேண்டும். மயான ரோடுகளே திருவாரூர் பகுதியில் பல இடங்களில் இல்லாமல் இருக்கிறது. எனவே அதற்கான ரோடுகளை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் விளக்குகளைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற தெருக்களில் மின் விளக்குகளே எரிவது கிடையாது. அதைப்பற்றி நாம் சீரியஸ்-ஆக கவனிக்க வேண்டும். அப்படியில்லாமல், ஆதிதிராவிடர் வாழ்கின்ற தெருக்களில் மின் விளக்குகளைப் போட்டு விட்டோம் ரோடுகளைப் போட்டு விட்டோம், கிணறுகளை எடுத்து விட்டோம், என்று சொல்லி, ரூ. 2 இலட்சம், ரூ. 4 இலட்சம் ரூ. 10,000, ரூ. 20,000 என்றுதான் சொல்கிறீர்கள். இதையெல்லாம் செய்தால் பிரச்சினைகள் தீராது. அந்த மக்கள் நாகரீகமாக இருக்க வேண்டுமென்றால், தெருக்களிலே மின் விளக்குகள் எரியவேண்டும். அப்போதுதான், பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் படிக்க முடியும். குடிசைகளில் லைட் போட்டுவிட்டோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் எல்லா குடிசைகளுக்கும் போடவில்லை. ஏதோ சில கிராமங்களுக்கு மட்டும் விளம்பரத்திற்காகப் போட்டிருக்கிறீர்கள். வேறு எந்த தெருக்களிலே லைட் எரிந்தாலும், எரியாவிட்டாலும், இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் தெருக்களிலே லைட் எரிந்தாகவேண்டும். அந்த வகையிலே நம்முடைய அமைச்சரவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த நம்முடைய தலைவருக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திருமதி டி. யசோதா : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடி நலத்துறையின் மீது மானியக் கோரிக்கை எண் 31-ன் கீழ், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே கருத்துக்களை உங்கள் முன்னே என் சார்பாக வைக்கலாம் என்று நினைக்கிறேன். 1984-85ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை 31-ன் கீழ், 4,803.21 லட்சம் ஒதுக்க அமைச்சர் அவர்கள் கோருகிறார்கள். கல்விக்காக மட்டும் 4,828.62 லட்சம் ஒதுக்கி இருப்பதாகவும் நான்காம் பக்கத்தில் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியிருக்கிறார்கள். அதிகபட்சம் 25.21 லட்சம் எப்படி வந்தது என்பது புரியவில்லை. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் முதலாவதாக விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

378 வளர்ச்சி வட்டாரங்களில் விரிவாக்க அதிகாரிகள் 1982-83 ல் நியமித்தக் குழுக்கள், இனி வருங்காலத்தில் மாதம் ஒரு முறை கூட இருக்கிறது; அதற்காக கோட்டாட்சியாளர் தலைவராக இருப்பார்கள், என்று சொல்லியிருப்பது அரிசன நலத்துறையினுடைய பணி எவ்வளவு தாமதமாக செயல்படுகிறது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1982-83ல் விரிவாக்க அதிகாரிகளை நியமித்து 1984-85 ல் தான் மாதம் ஒருமுறை இந்தக் குழு கூட இருக்கிறது,; அதற்கு கோட்டாச்சித் தலைவர் தலைவராக இருப்பார்கள் என்று சொல்கிறார்கள். இதிலேயிருந்து அரிசன நலத்துறையினுடைய வேகம், அதிலே அரசு எடுத்துக் கொள்ளுகின்ற அக்கறை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை இந்த மாமன்றம் உணராமல் இல்லை. 20 அம்சத் திட்டத்தில் குடியுரிமைப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தந்தது போல், தாங்களும் தந்திருக்கிறீர்கள். எந்த மாவட்டத்திலாவது தீண்டாமை ஒழிப்பு பற்றிய குற்றச்சாட்டு வந்திருக்கிறதா? அந்தக் குற்றச்சாட்டுக்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றி, இதுகாறும் இந்த மாமன்றத்திலே தெரிவித்தது உண்டா என்பதை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஹைபவர் கமிட்டிக்கு முதல்வர் தான் தலைவர். நான்மிக வருத்தத்தோடு சொல்லிக் கொள்வேன். அருமை அண்ணன் இளையபெருமாள் அவர்கள் கூடச் சொன்னார்கள். 1981 ஆம் ஆண்டிலே முதல்வர் அவர்கள் இந்தத் துறையை நானே ஏற்றுக் கொள்ளலாமா என்று கூட இருக்கிறேன் என்று சொன்னதாக, அவரே கூட இதை எடுத்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இந்த ஹைபவர் கமிட்டிக்கு முதல்வர் தலைவராக இருக்கின்ற காரணத்தாலே, அவருக்கும் நிறைய வேலைகள் இருக்கின்றன. அதனால் அந்தத் தலைமைப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டு, அந்தப் பணியை முழுமையாக்க நேரம் இல்லாத காரணத்தால், அதற்கு வேறு யாரையாவது நியமித்தால், நிச்சயமாக இந்த மன்றத்திலே எல்லோரும்





ஒருமித்துச் சொன்னார்களே, அந்த 18 சதவீதம் அனைத்து மட்டங்களிலும் நிறைவேறி இருக்கிறதா? என்பதை அறிந்து அறிக்கை வைப்பதற்காகவாவது வழி ஏற்படும் என்பதைத்தான் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

நில ஆர்ஜிதச் சட்டத்தை 1894 இல் இயற்றினார்கள். அதனுடைய அடிப்படையிலேதான் நாம் நிலங்களை ஆர்ஜிதம் செய்தோம். கோர்ட்டுக்குப் போனார்கள். இருந்தாலும் கூட நில ஆர்ஜிதம் தடைப்படவில்லை. 1978 இல் வந்த நில ஆர்ஜிதச் சட்டத்தை எதிர்த்து, நிலச் சொந்தக்காரர்கள் உயர் நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். சென்று வெற்றி பெற்றிருக்கிறார்கள். 1894 ஆம் ஆண்டிலேயிருந்து நில ஆர்ஜித சட்டம் இருந்தாலும், ஓரளவிற்கு அரிசன மக்களுக்கு பலன் கிட்டியிருக்குமோ என்று நான் நினைக்கிறேன். 1978 ஆம் ஆண்டிலே நீங்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தாலே, சட்டம் போடுகின்றபோதே ஒரு சிறப்பான சட்டமாக, கோர்ட்டுக்குப் போனால்கூட செல்லுபடியாகாத ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கி இருப்பீர்களேயானால் இன்றைக்கு உச்ச நீதி மன்றத்திலே போய் தூங்கிக் கொண்டு இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது என்பதைத்தான் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். 1978 ஆம் ஆண்டிலே நீங்கள் நில ஆர்ஜிதச் சட்டத்தைத் தோற்றுவித்தீர்கள். அதனுடைய பலன் இன்றைக்கு நில உடைமையாளர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று வெற்றி பெற்றதற்குப் பிறகு, அரசாங்கம் உச்ச நீதி மன்றத்திற்கு அந்தச் சட்டத்தைக் கொண்டு போய் ஆணைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அதற்காக நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? அதைத் துரிதப்படுத்துவதற்கு அதை வேகப்படுத்துவதற்கு நீங்கள் எடுத்து இருக்கிற நடவடிக்கை என்ன? அதனுடைய பலன் என்ன? என்று சொன்னால், நிலத்தை முன்னாலே கொடுத்தான் பாருங்கள் நிலச் சொந்தக்காரன், உயர்நீதி மன்றத் தீர்ப்பு வந்தவுடனே, கொடுத்த நிலத்தை எல்லாம் திரும்ப எடுத்துக் கொண்டான். பாவம், அந்த அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வெறும் பட்டா என்ற பேப்பரை வைத்துக் கொண்டு பரிதாபமாக விழித்துக் கொண்டிருக்கிற நிலைமைதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

(இரவு 6-20)

இன்னும் கூட சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஆதி திராவிட பழங்குடியினருக்கு நிலம் தந்து உதவும் எண்ணம் உண்மையிலேயே உங்களுக்கு இருக்குமானால், தமிழகத்தில் நிறைய அறக்கட்டளைகள் இருக்கின்றன. தனியான ஆதினங்கள், ஆதின கர்த்தாக்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். அப்படி இருக்கிற அந்த நிலங்களை எல்லாம் எடுத்து, ஒரு குடும்பத்திற்கு, ஒரு ஏக்கர் நிலம் வீதம் கொடுத்தால் கூட, அந்த அரிசன குடும்பங்கள், நிரந்தரமாக வறுமை கோட்டை விட்டு தாண்டக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தது வங்கிக் கடன். இந்த வங்கிக் கடன் என்பது அதிக
மாக ஆசையைத் தூண்டுகிற ஒரு வார்த்தை. எங்கே பார்த்தா
லும் அரிசனங்கள் மத்தியிலே, வங்கியிலே கடன் கொடுக்கப்படு
கிறது என்று சொல்லுகிறோம். அழுகிற பிள்ளைக்கு மிட்டாயைக்
காட்டினால், அந்தக் குழந்தை அழுவதை நிறுத்தும் என்று சொல்
வார்கள். அது போன்று எந்த வங்கியாக இருந்தாலும், அரிசன
மக்கள் என்று சொன்னால், 4 ஆயிரம் ரூபாய் வரையில், எந்த
வித ஜாமீனும் இல்லாமல் கடன் கொடுக்கப்படும் என்று சட்ட
மன்றத்திலேயேயும் சொல்கிறோம். பொது மேடையிலும் சொல்
கிறோம். அரசு விழாக்களிலும் சொல்கிறோம். அனைத்து இடங்
களிலும் விளம்பரப்படுத்துகிறோம்.

ஆனால் அரிசனங்கள் கடன் கேட்கச் செல்கிற போது, எந்த
வங்கியிலாவது முன் ஜாமீன் இல்லாமல் கடன் கொடுக்கிறார்களா
என்றால் இல்லை. அப்படி கடன் கொடுக்கத் தயாராக இல்லாத
வங்கிகளுக்கு அரசு பொறுப்பு ஏற்று, நாங்கள் அரிசனங்களுக்கு
முன் ஜாமீனாக இருக்கிறோம். அவர்களுக்குக் கடன் கொடுங்கள்
என்ற நிலைமையை தோற்றுவிக்க அரசு தயாராக இருக்கிறதா
என்று கேட்க ஆசைப்படுகிறேன். அரிசனங்களுக்கு இன்றைக்கு
வங்கிக் கடன்' கிடைக்கவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல
வேண்டும் என்று சொன்னால், அங்கே போய் அவர்கள் 200
ரூபாய், 300 ரூபாய் கடன் கேட்டாலும் கூட, யாராவது வேலை
செய்கிறவர்களுடைய சம்பள சர்டிபிகேட் வாங்கி வா, அதைக்
கொடுத்தால்தான் தரமுடியும் என்று சொல்லுகிறார்கள். கிரா
மங்களிலே எத்தனை பேர்கள் அரசு ஊழியத்திலே இருப்பார்கள்?
ஒட்டு மொத்தமாக ஒரு காலனிக்கே இரண்டு பேர்கள் தாம்
இருப்பார்கள். அந்த காலனிக்கே அந்த இரண்டு பேர்கள் சர்டிபி
கேட் கொடுக்க முடியுமா ? அந்த நிலைமைகளையெல்லாம் அரி
சனங்களுக்காக சுலபமாக்க இன்றைக்கு வழி என்ன என்பதை
யோசித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி. ஸ்கீம்கள். இவை
அனைத்துமே கிராமப்புறங்களிலே இருக்கிற வேலையற்ற இளை
ஞர்களுக்காகவும், அதே நேரத்தில் அரிசனங்களுடைய, பின் தங்
கிய மக்களுடைய, வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்க
ளுடைய வாழ்க்கையில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்
படுத்தவும் சிறு தொழில்களை தோற்றுவித்து அவர்களுக்கு
வேலை வாய்ப்பு தர கொண்டு வரப்பட்ட திட்டங்களாகும்.
இந்த என்.ஆர்.யி.பி. என்கிற தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு
திட்டத்தினுடைய அந்தப் பணிகள் காலனிகளை எட்டுவதே
இல்லை. இவைகளுக்கான உதவிகள் மத்திய அரசின் மூலமாகக்
கொடுக்கப்பட்டாலும் கூட, அந்தப் பணிகள் காலனிகளை
எட்டிப் பார்க்க மறுக்கிறது. என்.ஆர்.யி.பி. பணிகள் காலனி
களை தீண்டுவதற்கே அஞ்சுகிற மிகப் பெரிய கொடுமை இருக்
கிறது. அந்தத் தீண்டாமையை ஒழிப்பதற்கு போராட்டத்தை
நடத்தினால் கூட நன்றாக இருக்கும். அந்தப் பணிகள் காலனி



களுக்கு உள்ளேயும் செல்ல வேண்டும். அதே போல, ஐ.ஆர்.
டி.பி. லோன் என்று சொல்லுகிறார்கள். அந்த லோன் வாங்கி
னால், அதற்கு மானியம் கூட உண்டு. அது அரிசனங்களுக்குக்
கிடைக்கிறதா என்று சொன்னால், பரவலாக இல்லை என்று
சொன்னாலும், சில இடங்களிலே கொடுக்கப்படுகிறது. கொடுக்
கப்படுகின்ற இடங்களிலும் அவர்களுக்கு மானியத்தைக் கொடுக்
கிறார்களா என்று சொன்னால், ஒட்டு மொத்தமாக இந்த யூனி
யனுக்கு இவ்வளவு என்று ஒதுக்கி தருகிறார்கள். இந்த மானியம்
அரிசனங்களுக்கு கிடைப்பதே கிடையாது. ஆனால் அது யாருக்கு
கிடைக்கிறது என்று சொன்னால், நான் வருத்தத்தோடு சொல்
லிக் கொள்வேன், யார் அதிகமான அளவுக்கு அதிகாரிகளுக்கு
சலுகைகள் செய்கிறார்களோ, இன்னும் வேகமாக சொல்ல
வேண்டும் என்று சொன்னால், யார் அதிகாரிகளுக்கு 'சம்திங்'
கொடுக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் இந்த மானியம்
கொடுக்கப்படுகிறது என்று நான் நிச்சயமாக சொல்வேன்.

இது போன்ற சூழ்நிலைகளில் மானியம் இருக்கிறது என்று
சொன்னால், இது போன்ற சூழ்நிலைகளில் அரிசனங்களுக்கு உதவி
கள் மறுக்கப்படுகிறது என்று சொன்னால், இது தடுக்கப்பட
வேண்டுமா, வேண்டாமா என்று தான் கேட்க ஆசைப்படுகிறேன்.
அதேபோல, கறவை மாடு வாங்க நல்வாழ்வுத் துறையின் மூலமாக
1,500 ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த மாட்டினுடைய விலை
என்ன ? அந்த 1,500 ரூபாய்க்கு மாடு வாங்க முடியுமா ?
அப்படியே வாங்கினாலும் அது ஒரு லிட்டர் பால் கூட கொடுப்ப
தில்லை. அந்தப் பணம் தீனிக்குத் தானே சரியாக இருக்கும்.

குறைந்த பட்சம் ரூ. 3,000 மாவது கடன் கொடுத்து மாடு
வாங்கிக் கொள்ள அவர்களுக்கு உதவி செய்தால் அதை வைத்து
அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஓரளவிற்கு நடத்திக் கொள்ள
உதவியாக இருக்கும். எனவே அந்த ரூ. 1,500 என்பதை
ரூ. 3,000 என்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பால் விநியோகச் சங்கங்கள் அமைப்பது குறித்து உங்கள்
கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அத்
தகைய சங்கங்களில் பெரும்பாலும் அரிசனங்கள் சேர்த்துக்
கொள்ளப்படுவதில்லை. சேர்த்துக் கொள்வதில்லை என்று அதி
காரிகளிடம் சொன்னால் கம்ப்ளெயின்ட் கொடுங்கள் என்று
சொல்கிறார்கள். கம்ப்ளெயின்ட் கொடுத்தால் அவர்களிடம்
சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால்
அவர்கள் சேர்த்துக் கொள்வதில்லை. நான்கு வருடமாக நாங்கள்
கம்ப்ளெயின்ட் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், ஆனால்
எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

காஞ்சிபுரத்திலே ஒரு ஜாயின்ட் ரெஜிஸ்ட்ரார் இருக்கிறார்.
அவரிடம் ஒரு ஊர்க்காரர்கள் சென்று எங்கள் பகுதியிலே தனியா
அரிசன அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு சங்கம் வைத்துக்

[திருமதி டி. யசோதா] [1984 மார்ச் 22

கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ரிஜிஸ்டர் பண்ணிக் கொடுங்
கள் என்று சொன்னால், ஜாதியின் பேராலே சங்கத்தை நாங்கள்
ரிஜிஸ்டர் செய்ய மாட்டோம் என்று அவர் சொல்
கிறார். அரிசனங்களுக்கு தனியாக சங்கங்கள் வைத்துக்
கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று சட்டத்திலே இடம் இரு
கிறது என்று சொன்னாலும் கூட அவர் ரிஜிஸ்டர் பண்ணத்
தயாராக இல்லை. அரிசனங்களுக்கு உரிய நன்மைகளைச்
செய்யவேண்டுமென்ற எண்ணம் அதிகாரிகள் அளவிலே வளர
வில்லையென்று சொன்னால், அவற்றையெல்லாம் தெரிந்தும்,
நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் இந்த
அரிசனங்களின் நிலைமை என்ன ஆகும் என்று நீங்கள் சற்று
ஆழமாகக் கவனிக்க வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்பு
கிறேன்.

உழவு மாடுகளுக்கான கடன்—வங்கிகளிலே—ஜாமீன் இல்லை
யென்றால் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். கிராமப்
பகுதியிலே இருக்கிற மக்கள் 100 ரூபாய் நோட்டையே பலர்
பார்த்திருக்க மாட்டார்கள். அவர்களிடம் போய் ஜாமீனுக்கு
ஆள் கொண்டு வா, சொத்தைக் காட்டு என்று சொன்னால்,
உழவு மாடும் வேண்டாம், எதுவும் வேண்டாம் என்று சொல்
லக்கூடிய ஒரு விரக்தி நிலைக்குத்தான் அவர்கள் தள்ளப்பட்டு
கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க
முடியாது.

31 தொழில்கள் நடத்துவதற்கு ரூ. 125 முதல் ரூ. 15,000
வரை அரசு உதவி செய்வதாகவும், அதனால் 89 இலட்சம்
அரிசனங்கள் பயன் பெறுவார்கள் என்றும் நீங்கள் குறிப்பிட்
டிருக்கிறீர்கள். அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 11.50
இலட்சம் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆதி திராவிடர்களை
யும் பழங்குடியினரையும் சேர்த்து 89 இலட்சம் பேர்களுக்கு
நீங்கள் ரூ. 11.50 இலட்சம் நிதி ஒதுக்கினால், ஏதோ பொன்
வைக்கும் இடத்தில் பூ வைத்தது போல்தான் ஆகும்.

கருமார், தச்சர், தையல் தொழில்கள் ஏனைய 18 தொழில்
களில், தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர், பழங்
குடியினர் கிறிஸ்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகி
யவர்களுக்கு இலவசமாகக் கருவிகள் சாதனங்கள் வழங்கும் திட்
டம், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அதற்கு
9.40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் உங்கள் கொள்
கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறீர்கள். சலவைத் தொழிலாளர்
களுக்கு இஸ்திரிப் பெட்டி வழங்குவதாக சொல்லப்பட்டது. அத
னைப் பெற்றுத் தருவதற்கு எங்கள் பகுதியைச் சேர்ந்த ஒரு
வருக்காக நாங்கள் கலெக்டருக்கு எழுதினோம். மாவட்ட வெல்
பேர் ஆபீசருக்கு எழுதினோம். எத்தனையோ கடிதம் எழுதி
னோம். பதிலே இல்லை. இன்றைக்கெல்லாம் இருந்தால் ஒ
இஸ்திரிப் பெட்டியின் விலை ரூ. 100 இருக்குமா? அதைக்கூட



1984 மார்ச் 22] [திருமதி டி. யசோதா]

ஒருவருக்கு முறையாக வழங்க முடியவில்லை. நாங்கள் ரூ. 9.40
இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லி என்ன பயன்?
நாங்கள் இன்னும் தச்சர், கருமார் ஆகியவர்களுக்கு உதவிப்
பெறப் போகவில்லை.

பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சிக்கால உதவித்
தொகையை ரூ. 35லிருந்து ரூ. 55 ஆக உயர்த்தியிருப்பதாகச்
சொல்லியிருக்கிறீர்கள். இது ஆதி திராவிடர்களுக்கு என்றும்,
பழங்குடி மாணவர்களுக்கு ரூ. 82.50 பயிற்சி உதவித்தொகை
வழங்கப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறீர்கள் இந்த ரூ. 55
அவர்களுக்கு போக்குவரத்துச் செலவுக்குக் கூடக் காணாது.
பயிற்சி காலத்திலே ஒரு மாணவன் வீட்டிலேயிருந்து குறிப்பிட்ட
பயிற்சி நிலையத்திற்குச் செல்வதற்கு ஆகும் பஸ் ஃபேருக்குக்கூட
இந்த ரூ. 55 போதாது. இதை யோசித்துப்பார்க்க வேண்டும்.
இதனை உயர்த்தி, குறைந்த அளவு ஒரு பயிற்சியாளருக்கு ஒரு
மாதத்திற்கு ரூ. 150 ஆவது அளிப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.
அப்படிச் செய்தால்தான் ஆதி திராவிட மாணவர்களுக்கு தொழில்
நுட்பப் பயிற்சி பெற வேண்டும் என்ற உற்சாகம் ஏற்படும்
என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 6-30)

எல்லோரும் பேசியதை நானும் சொல்கிறேன். மின்சாரவாரி
யத்திலே 2 ஆயிரம் பேர்கள் அரிசனங்களை பணிக்குச் சேர்த்
திருக்கிறார்கள். இங்கே, அந்த அமைச்சர் இல்லாவிட்டாலுங்
கூட இந்த நேரத்திலே உண்மையிலேயே அதற்காக அவருக்கும்
தமிழக முதல் அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரி
விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஒரு சிறு விளக்கம்
என்னவென்றால் மீட்டர் ரீடிங் எடுப்பதற்கு பெண்களை
கள்ளுக்கடைகளுக்கு, சாராயக்கடைகளுக்கு அனுப்பினால் எப்படி
அது நல்லதாக இருக்கும்? வேறு இடங்களுக்கு அனுப்பினால்
பரவாயில்லை. பெண்களை கள்ளுக் கடைகளுக்கு, சாராய
கடைகளுக்கு, இன்டிரியர் ஏரியாக்களுக்கு பம்புசெட்டுக்கள் இருக்
கிற இடங்களுக்கு மீட்டர் ரீடிங் எடுக்கச் சொன்னால் அவர்கள்
கரெக்டாக கணக்கு எடுத்தால் எப்படி திரும்பி வரமுடியும்
என்பதைப் பார்க்க வேண்டும். கள்ளுக்கடைகளுக்கும், சாராயக்
கடைகளுக்கும் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களை
மீட்டர் ரீடிங்கிற்கு அனுப்பினால் சரியாக இருக்காது. அரிசனங்
கள் என்று இல்லாவிட்டாலும் பெண்கள் என்ற நிலையிலாவது
எண்ணிப்பார்த்து அந்த இடங்களுக்கு மீட்டர் ரீடிங் எடுப்ப
தைத் தவிர்ப்பதை ஆலோசித்து உடனடியாக நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்கள் வேலை செய்யும்போது இறந்து
விட்டால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ரொம்பப்
பெருந்தன்மையோடு இந்த அரசாங்கம் சொல்லியிருக்கிறது.
அதைப்போலவே விவசாயக் கூலிகள் பணியின்போது இறந்து

[திருமதி டி. யசோதா] [1984 மார்ச் 22

விட்டால் அவர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு
பெரிய மனதோடு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்
டுக்கொள்கிறேன். விவசாயக் கூலிகளாக பெரும்பகுதி ஆதி
திராவிட மக்களும் பின்தங்கிய மக்களும்தான் இருக்கிறார்கள்.
சட்டிடத் தொழிலாளர்களைப்போல் விவசாயக் கூலிகளையும்
கணக்கில் எடுத்து அவர்களுக்கும் அந்த உதவியைச் செய்ய
வேண்டும்.

குத்தகைதாரர் சட்டத்திலே அரிசனங்களுக்கு பயன் கிடைக்க
வில்லை. உபரி நிலங்களை நீங்கள் எடுத்து அரிசனங்களுக்கு
பரவலாக தருவதற்கு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும்.
வருமான வரம்பை அரிசனங்களுக்கு 3 ஆயிரத்தை 6 ஆயிரமாக
உயர்த்தியிருக்கிறார்கள். பின்தங்கியவர்களுக்கு 9 ஆயிரமாக
இருந்ததை 12 ஆயிரமாக கொண்டுபோயிருக்கிறீர்கள். அரிசனங்
களுக்கு இருக்கிற வருமான வரம்பையே எடுத்துவிடுங்கள். அதிலே
சங்கடம் வந்தால் பின்தங்கியவர்களுக்கு மாதிரி 12 ஆயிரமாக
அரிசனங்களுக்கு நீட்டிக் கொடுப்பதற்கு எந்தவிதமான சிரமமும்
இருக்காது.

அடுத்து, வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம், 1974-79 வரை
5 வருடத்திலே 41,625 வீடுகள் இலவசமாக கட்டித் தந்திருக்
கிறார்கள். 1979-80 மற்றும் 1980-81இல் 10 ஆயிரம் வீடுகள்
கட்ட ஒப்புதல் தந்து 562 வீடுகள் கட்டியிருக்கிறீர்கள். 5,290
வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 5,852 வீடுகள் கட்டியும் கட்
டப்படாமலும் பாதியிலே நின்றுகொண்டு இருக்கிற நிலைமை.
மீதியிருக்கிற 4,148 வீடுகளின் நிலைமை என்ன என்று தெரிய
வில்லை. பாலிசி மேட்டர் என்பதாலே அப்படியே இருக்கிறது.
1974 முதல் 1979 வரை 41,625 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.
1980 முதல் 1984 வரைக்கும் 5,852 வீடுகள்தான் என்று பார்க்
கிறபோது இன்னும் வேகமாகப் போனால்தான் உண்மையான
நிலையை அடைய முடியும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டு
மானால்—இங்கே பேசிய உறுப்பினர் சொன்னார்—அருந்ததி
யருக்கு நாங்கள் மந்திரி பதவி கொடுத்தோம். எங்கள் ஆட்சி
யில் அருந்ததியர் சமுதாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தோம்
என்று சொன்னார். அதை உண்மையிலேயே நாங்கள் பாராட்டு
கிறோம். அதே நேரத்திலே நீங்கள்தான் முதலில் கொடுத்தீர்
கள் என்று சொல்வது சரியல்ல. திரு. பாபு ஜகஜீவன்ராம்
அவர்களுக்கு மிகப் பெரிய அந்தஸ்த்தை காங்கிரஸ் பேரியக்கம்
தான் செய்து கொடுத்திருக்கிறது. ஆகவே, காங்கிரஸ் பேரியக்கம்
அருந்ததியர் சமுதாயத்திற்கு செய்து கொடுத்தவைகளை மறந்து
விடக்கூடாது. முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பது
நல்லது ஆகாது. நீங்கள் செய்ததை சொல்கிறபோது மற்றவர்
கள் செய்ததையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சென்
னையிலே மேட்டுப்பாளையம் சகோதரர் பாலன் இருக்கிற
தொகுதி. அமைச்சர் அவர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். முழுக்க
முழுக்க அருந்ததியர்கள் இருக்கிறார்கள். செருப்பு தைப்பது
அவர்களுடைய தொழில். ரொம்ப அருமையாக செருப்பு



1984 மார்ச் 22] [திருமதி டி. யசோதா]

தைப்பார்கள். பேட்டா கம்பெனி அவர்கள் கையிலே ஒரு சீலைக்
கொடுத்து இருக்கிறார்கள். 45, 50 ரூபாய்க்கு செருப்புகளை
தைத்துக் கொடுத்து சீலைக் குத்தி எடுத்துக்கொண்டுபோய்
அவர்கள் 75, 90 ரூபாய்க்கு விற்கிறார்கள்.

அந்த மக்கள் தனியார் நிலத்தில் 60 வருடங்களுக்கு முன்னால்
இருந்து 3 தலைமுறையை அவர்கள் பார்த்து இருக்கிறார்கள்.
அவர்கள் பாட்டன் பாட்டியர்கள் எல்லாம் அந்த இடத்தில்
இருந்து இருக்கிறார்கள். அந்த இடம் ஒரு தனியாருக்குச்
சொந்தமான இடம். 60 வருட காலமாக அங்கே இருக்கிறார்
கள். அங்கே அவர்களுக்கு சுகாதார வசதி இல்லை. ஆனால்
வோட்டு உண்டு அவர்களுக்கு. அவர்கள் பகுதிக்கு விளக்குகள்
இல்லை. அவர்கள் பகுதிக்கு டிரைனேஜ் வசதி இல்லை.
அத்தனை குளம் குப்பைகளுக்கு இடையில் அந்த மக்கள் வசித்து
கொண்டு இருக்கிறார்கள். தலைநகரில் அவர்கள் வசிக்கிறார்
கள். அந்த இடத்தை அரிசன நலத்துறை மூலமாக வாங்கிக்
கொடுத்து அந்த மக்களுக்கு ஒரு விமோசனம் கிடைப்பதற்கு
நீங்கள் நிச்சயமாக உதவி செய்யவேண்டும். நீங்கள் சொல்ல
லாம் அவர்கள் 60 வருடங்களாக இருக்கிறார்கள் என்றால்
வெள்ளைக்காரன் அப்போது இருந்து இருக்கிறான், காங்கிரஸ்
காரர்கள் ஆட்சி செய்து இருக்கிறார்கள், தி.மு.க. ஆட்சி செய்து
இருக்கிறது, இப்போது அ.இ.அ.தி.மு.க. 2 முறையாக தான்
வந்து இருக்கிறது. அப்போது எல்லாம் நீங்கள் அவர்களுக்கு
செய்யவில்லை. எங்களை மட்டும் கேட்கிறீர்களே என்று
நீங்கள் கேட்கலாம். அந்த நேரத்தில் உண்மையிலேயே நாங்கள
இருக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. இருந்து இருந்தால் நாங்களும்
கேட்டு இருப்போம். விடுபட்டு போனதால் உங்களை இப்போது
கேட்கிறோம். ஆகவே நீங்கள் அந்த சமுதாயத்திற்கு
நிரந்தரமாக அவர்கள் மேல் அதிகமாக அக்கறை எடுத்துக்
கொண்டு அவர்களுக்கு அந்த இடத்தை வாங்கித் தரவேண்டும்.
இது போன்று சில சில காரியங்களை நீங்கள் செய்ய வேண்டும்.
தலைவர் காமராசர் அவர்கள் காலத்திலே சேத்துப்பட்டில்
பிருந்தாவன் காலனியில் இதேபோல் அவர்கள் அந்த தனியார்
நிலத்தை வாங்கி அந்த மக்களுக்கு கொடுத்து இருக்கிறார்கள்.
இப்போது அந்த பகுதியில் உள்ள மக்கள் வெள்ளத்தினால் பாதிக்
கப்பட்டு இருக்கிறார்கள். அதை மாண்புமிகு அரிசன நலத்துறை
அமைச்சர் அவர்கள் கூட போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்
கள். அவர்கள் அத்தனை பேருக்கும் நிவாரணம் கொடுக்க
வில்லை. ஒரு சிலருக்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். மற்ற
வர்களுக்கு கொடுக்கவில்லை. மாண்புமிகு அரிசன நலத்துறை
அமைச்சர் அவர்கள் போய் பார்த்த பிறகு கூட, பாதிக்கப்பட்ட
இடம் என்று தெரிந்த பிறகு கூட வெள்ளநிவாரண உதவி அந்த
மக்களுக்கு கிடைக்கவில்லை. 99-வது வட்டம் திருவல்லிக்கேணி
தொகுதியில் துலுக்கானம் தோட்டத்தில் உள்ள மக்கள் முழுவ
தும் அரிசனங்கள். அவர்கள் 60 வருடமாக அங்கே இருக்கிறார்
கள். அங்கே அரிசன வீட்டு வசதி வாரியம் மூலமாக வீடுகட்ட
ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அதை இன்னும் கட்ட

வில்லை. ராகவாநாயக்கன் திட்டமும், கோகுலம் திட்
டமும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ஆனால் துலுக்கானம்
தோட்டம் திட்டத்தில் சேர்த்தும் வீடுகள் இதுவரையில் கட்ட
வில்லை. இந்த ஆண்டாவது அந்த திட்டத்தை அரசு எடுத்துக்
கொள்ள வேண்டும். ஏன் என்றால் அது ரொம்ப நெருக்கமான
பகுதி. அங்கே ஏதாவது ஒரு இடத்தில் தீ விபத்து ஏற்பட்டால்
நிச்சயமாக அதில் தப்ப முடியாது. பல உயிர்கள் போகக்கூடிய
நிலைமை இருக்கிறது என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை
எடுத்துக்கொண்டு அந்தப் பகுதியில் வீடுகள் கட்டுவதற்கு அரிசன
நலத்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சமுதாய கூடங்கள்—உண்மையில் சொல்ல வேண்
டும் என்றால், நான் மிகவும் வருத்தப்படுகிறேன்—ஏன் என்றால்
இதே சட்டமன்றத்தில் 4 பட்ஜெட் முடிந்துவிட்டது. 4 முறை
யில் 3 முறை இந்த மன்றத்தில் நான் பேசியிருக்கிறேன். ஒரு
முறை அண்ணன் திரு. இளையபெருமாள் அவர்களை விட்டு பேச
வைத்தேன். ஒரு முறை சகோதரர் திரு. அப்பாதுரை அவர்
களை வைத்துப் பேச வைத்தேன். அவர்கள் பேசும்போது கூட
அரிசன நலத்துறை அமைச்சர் அங்கிருந்தே கேட்டார்.
உங்கள் சப்ஜெக்ட் தானே நீங்கள் சொல்லிக் கொடுத்துப் பேசுகி
றாராஎன்று கேட்டார். ஏன் என்றால் நான் பேசியும் நடக்க
வில்லை. ஆகவே மற்றவர்களை வைத்துப் பேசுகிறேன் என்று
சொன்னேன்.

என்னுடைய தொகுதியான ஸ்ரீபெரும்பதூரில் 42 சத்திரங்கள்
இருக்கின்றன. அவைகள் ஜாதியின் பெயரால் இருக்கின்றன.
அதுவும் டவுனில் இருக்கின்றன. அந்த சத்திரங்கள் கிட்டே
அரிசனங்கள் நெருங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.
அரிசன மக்கள் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டும்
என்றால் அவர்கள் போய் கேட்டால் அவர்களுக்குச் சத்திரம்
கொடுப்பது இல்லை.

அதேபோல் வட்டார காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஒரு
அரிசன். அவர் பெயர் திரு. சண்முகம், அவர் பெண்ணுக்கும்
எங்கள் மாவட்ட காங்கிரஸ் தலைவராக இருக்கின்ற திரு.
சடகோபன் அவர்கள் பையனுக்கு திருமணம் செய்யும்போது
அவர்கள் அங்குள்ள ஜாதியின் பெயரில் உள்ள நாயுடு சத்திரத்தை
வாங்கி திருமணம் நடத்தி முடித்தார்கள். ஒரே ஒரு வாரம்
கழித்த பிறகு மாப்பிள்ளையும் பெண்ணும் சினிமாவுக்குப்
போனார்கள். அவர்கள் திரும்பி வரும்போது மாப்பிள்
ளையைத் தனியாக அழைத்துச் சென்று போய் அடி அடி என்று
அடித்து நொறுக்கி முள் புதரில் தூக்கி போட்டுவிட்டார்கள்

[இரவு 6-40]

உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தால், நீ ஒரு நகரத்தில்
இருக்கின்ற சாதிச் சத்திரத்தில் கல்யாணம் நடத்துவாய் என்று
கேட்டிருக்கிறார்கள். அன்றைய தினத்திலிருந்து இன்றுவரையில





பல உறுப்பினர்களை வைத்துப் பேசியும், நானும் பேசியும்
பிரச்னை தீரவில்லை. வந்தவாசி தொகுதி எம்.எல்.ஏ. அவர்
களுக்குக் கொடுத்த சலுகையைப் போல், பெரிய அளவிற்கு
தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்று
அவர்கள் பெருமையோடு கூறி, நன்றி சொல்கிறார்கள். இங்கே
பேசிய திரு. சபாபதி அவர்கள் ஏழு கோடி ரூபாய் செலவில்
நூற்பாலையைப் பற்றிப் பேசினார்கள். அவைகளைப் பார்த்து
நாங்கள் பொறாமைப்படுகிறோம். அதே நேரத்தில் அப்படிப்
பட்ட திட்டங்களெல்லாம் எங்களுக்குக் கிடைக்கவில்லையென்
றாலும், இந்த அரிசன சமுதாய மக்கள் தங்களுக்கு திருமணம்
போன்ற நல்ல காரியங்களைச் செய்து கொள்வதற்கு அரிசன
நலத்துறை மூலமாகத் தயவு செய்து சமூக நலக் கூடம் வேண்
டும் என்று கேட்காத நாள் இல்லை. ஆனால் நிலைமை என்ன ?
கடைசிவரையில் பேப்பர் அங்கே போகிறது, இங்கே போகிறது
என்று சொல்கிறார்கள்.

அரிசன நலத்துறை இயக்குநராக உயர்திரு பொன்னுசாமி
அவர்கள் இருந்தார்கள் என்று கருதுகிறேன். அந்த நேரத்தில்
அப்படி நின்றது. அதற்குப் பிறகு மத்தியிலேயிருந்து அங்கே
யிருக்கின்ற அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் மலை சாதியினர்
சமூகத்தைச் சேர்ந்த கமிஷன் தலைவியாக இருக்கக்கூடிய
திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்களும், டி.ஐ.ஜி. மிஸ்டர்
குப்தா அவர்களும், உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. வகாப்
என்று நினைக்கிறேன் — காஷ்மீர் மெம்பர் என்று நினைக்
கிறேன் — ஆகியவர்கள் அந்தப் பகுதிக்கு வந்தபொழுது அந்தப்
பகுதியில் உள்ளவர்கள் சொன்னார்கள். அந்தக் கமிஷன்
அடுத்த நாள் தலைமைச் செயலாளரைச் சந்தித்தது. அப்
பொழுது இதைச் சொன்னார்கள். அரிசன நலத்துறை
இயக்குநரும் உடன் இருந்தார். நிச்சயமாகக் கொடுக்கிறோம்
என்று வாக்குறுதி கொடுத்தார்கள். 50,000 ரூபாயில் நிச்சய
மாகக் குதிரை இலாயம் கூட இன்றைக்கு இருக்கின்ற விலைவாசி
உயர்வில் கட்ட முடியாது. எனவே, இதற்கான தொகையை
அதிகப்படுத்த வேண்டும். ஸ்ரீபெரும்பூதூர் தொகுதியில் சமூக
நலக் கூடத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்கூட, அரிசன நலத்துறையால்
கட்டுவதற்கு முடியவில்லை என்றால், என்.ஆர்.இ.பி., தேசிய
கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்
கிறோம் என்று கேட்ட நேரத்தில், நல இயக்குநர் அவர்கள்
சொன்னார்கள்........

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாற்றுத் தலை
வர் அவர்களே, சாதியின் பெயரால் கல்யாண மண்டபம் கட்டிக்
கொண்டு, ஆதி திராவிடர்களுக்கு அதை வாடகைக்குக் கொடுக்க
வில்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள்.
குறிப்பிட்ட ஒரு ஊரைப்பற்றிச் சொன்னார்கள். அதை நிச்சய
மாக இந்த அரசு கவனிக்கும் என்பது மட்டுமல்லாமல், நான்
குறுக்கிடுவதற்குக் காரணம், அப்படி மாநிலம் பூராவும்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 மார்ச் 22

எந்தெந்த ஊர்களில் சாதியின் பெயரால் கல்யாண மண்டபம் கட்டிக்கொண்டு, ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கவில்லை என்று இங்கேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எல்லாப் பாகங்களிலேயும் உள்ள அந்த நிலைமைகளைப் பற்றிக் கொடுத்தால் அவர்கள் எப்படியாவது அதை ஆதி திராவிடர் களுக்குக் கொடுக்க வேண்டும் ; இல்லாவிட்டால் அதற்கு வரியை அதிகமாகப் போடவேண்டும் என்று இந்த அரசு அதற்கான முயற்சிகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாற்றுத் தலைவரவர்களே, தனியாக வரி போட முடியாது. எல்லோருக்கும் இருப்பதைப்போலத்தான் போடலாம். இதற்காக வரி போட முடியாது. எனவே, அந்தச் சமுதாயத்திற்கு என்று சமூகக் கூடம் கட்டினால்தான் அவர்களுக்கு வசதியாக இருக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு மாற்றுத் தலை வர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் நல்லெண்ணத் தோடுதான் சொன்னார்கள். அதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. நாங்கள் கேட்பதெல்லாம், இதைப் போன்ற அவல நிலை ஏன் இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்தின் மூலமாகக் கல்யாணக் கூடம் என்று கட்டிக் கொடுத்துவிட்டால், ஆதி திராவிடர்கள் மட்டுமல்ல, பின் தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும் பயன்படும் என்பதற்காகத்தான் சொல்கிறோம். கிராமங்களில் நடக்கின்ற கொடுமைகளின் காரணமாக, அதைத் தவிர்ப்பதற்காக அவர்களுக்கு என்று கல்யாண மண்டபம் வேண்டு மென்று கேட்கிறோமே தவிர, சட்டத்திற்குப் புறம்பாகச் சொல் வில்லை. உதாரணத்திற்கு....

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் இதைச் சொல்வதன் காரண மாக, அரசாங்கத்தின் சார்பில் கல்யாண மண்டபம் கட்டுவதைத் தடுப்பதற்காகவோ அல்லது தேவையில்லை என்று சொல் வதற்காகவோ தெரிவிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திருமதி டி. யசோதா : ஆக இந்த ஆண்டு மூன்று இடங்களில் சமூக நலக்கூடம் அமைப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே பார்த் தேன். அதிலே ஒன்று பம்மலிலே ; இரண்டாவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதியான தக்கோலத்திலே; மற்றொன்று அமைச்சரவர்கள் சார்ந்திருக்கின்ற களத்தூர் என்ற இடத்திலே ; இப்படி மூன்று ஒதுக்கீடு செய்திருக்கிறார் கள். இதைச் செய்கின்றபோது மாண்புமிகு மரியாதைக்குரிய அரிசன நல இயக்குநர் அவர்களிடத்திலே இது குறித்து நான் மிகப் பெரிய போராட்டமே நடத்திக் கொண்டிருக்கிறேன்



1984 மார்ச் 22] [திருமதி டி. யசோதா]

எங்கள் தொகுதியில் ஏன் வராமல் போய்விட்டது என்று. ஆகவே ஏன் எங்கள் தொகுதியிலே வராமல் போனது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். பட்டாவைப் பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். நான் கிட்டத்தட்ட 4 முறை அரிசன நலத் துறையிலே இது குறித்து பேசி இருக்கிறேன். நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர் கள் வீட்டிற்கு எதிரிலே இருந்து என்னுடைய தொகுதி ஆரம்பம். அது மணப்பாக்கம். அங்கே மூன்று பெரிய காலனிகள் இருக் கின்றன. அந்த 3 காலனிகளும்—நிச்சயமாக நான் சொல்வேன்— காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தான் தோற்றுவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு இரண்டு அரசாங்கங்கள் வந்திருக்கின்றன. ஆனாலும் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. 20 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. இன்னும் அவர்களுக்குப் பட்டா கொடுக்க வில்லை. இதுபற்றிப் பலமுறை பேசி இருக்கிறேன். அது நிறை வேற்றப்படாமலே போய் இருக்கின்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு பரிதாபத்திற்குரிய சூழ்நிலை இருக்கின்றது. பக்தவச்சலம் காலனி என்று ஸ்ரீபெரும்புதூர் நகரத்திலே இருக் கின்றது. இந்தக் காலனியில் உள்ள ஒரு வண்டிப் பாதை பற்றி அரசாங்கத்தினுடைய ப்ளூ பிரிண்டிலே இருக்கின்றது. ஆனால் அந்த வண்டிப் பாதையைத் தனிப்பட்ட ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டார். அப்படி ஆக்கிரமிப்பு செய்து கொண்டவர் கொஞ்சம் வசதியானவர். அவர் விவரம் தெரிந்தவர். அவர் அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அரிசனங்கள் போய் வந்துக் கொண்டிருந்த வழியை அடைத்துவிட்டார். ஆகவே, அது வரையிலும் அந்த வழியாகக் போய்க்கொண்டும், வந்து கொண்டும் இருந்த அரிசன மக்களால் இப்போது அந்த வழியாகப் போக முடியாமல் போய்விட்டது.

ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். பிரசவ காலங் களில் பெண்கள் மருத்துவ மனைக்குப் போக வேண்டும் என்றால் அதுதான் ஒரு சிறந்த வழியாகக் குறுக்கு வழியாக இருந்தது. இப்போது அந்த வழி அடைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் பெண் கள் மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டும் என்றால் சுற்றிக் கொண்டு போக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அங்கே எப்படி எடுத்துச் செல்கிறார்கள் என்று சொன்னால் கயிற்றுக் கட்டிலிலே கர்ப்பிணிப் பெண்களை வைத்து நான்கு பேர் தூக்கிக் கொண்டு செல்கின்ற பரிதாபமான நிலைமை ஏற் பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட கொடுமையான சூழ்நிலை இன்றைக்கு இருக்கின்றது. இதுபற்றி 1980-லே சொன்னேன் ; 1981-லே சொன்னேன் ; 1982-லே சொன்னேன் ; 1983-லே சொன்னேன். இப்படிப்பட்ட கொடுமையான சூழ்நிலை பற்றிப் பலமுறை சொல்லி இருக்கிறேன். அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலேயும் சொன்னேன். அவர்கள் உடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கலெக்டரிடத்திலே சொன்னார். ஆனால்,

புத்திசாலியான அந்த நிலச் சொந்தக்காரர் கோர்ட்டுக்குப் போனார். போய் என்ன ஆகி இருக்கின்றது? அவருக்கு அந்த நிலத்திலே எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று தீர்ப்பு ஆகி இருக்கின்றது. அப்படி என்றால் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்? உடனடியாக அந்தப் பகுதியை எடுத்துக் கொண்டு ரோடு போட வேண்டும். ஆனால் அரசாங்கத்திலே இருக்கின்ற கலெக்டர், ஸ்பெஷல் தாசில்தார் ஜனங்களிடம் என்ன சொல்கிறார் தெரியுமா? எப்படியாவது விலை கொடுத்து அவரிடமிருந்து அந்த நிலத்தை வாங்கி ரோடு போட்டுக் கொடுக்கிறேன் என்று சொல்கிறார். அவருக்குச் சொந்த மில்லாத நிலம்; அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம்; ப்ளூ பிரிண்டிலே இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்ற போது அந்த நிலத்தை தனிப்பட்டவரிடத்திலே இருந்து விலை கொடுத்து வாங்கித் தருகிறேன் என்று சொல்கிறார். ஏதாவது செய்து அந்தப் பகுதி மக்களுக்கு அந்தச் சாலை போட்டுக் கொடுப்போமேயானால் நிச்சயமாக அந்த ஏழை, எளிய மக்கள் வாழ்த்துவதற்குரிய ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதைநான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(இரவு 6–50)

அதே போல், அம்மரன்பேட்டுக் காலனி என்று குன்றத்தூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் — என்னுடைய தொகுதியிலே— மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அம்மரன்பேட்டிலிருந்து சென்னைக்கு பஸ் வருகிறது. ஆனால், காலனிக்குள்ளே அந்த பஸ் போக மறுக்கிறது. காலனிக்குள்ளேயும் போக வேண்டும். அங்கே ஒரு டிரைவர் வந்திருக்கிறார். அவர் சொல்கிறாராம். நான் இந்த பஸ் டிரைவராக இருக்கிற வரையில் காலனிக்குள்ளே பஸ் வராது அவர்கள் யாரிடத்திலே வேண்டுமானால் போய் சொல்லட்டும், எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லையென்று. இதையெல்லாம் சவாலாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே நீங்கள் நிச்சயமாக பரிதாப உணர்வோடாவது இதைக் கவனிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

அடுத்து, காலனிக்கு டி. வி. மினிஸ்டரே ஒரு முறை போன் பண்ணிச் சொன்னார், நீங்கள் உங்கள் தொகுதியிலே ஏதாவது ஒரு ஏரியாவைச் சொல்லுங்கள், ஒவ்வொரு ஏரியாவுக்கும் டி.வி. கொடுக்கும் போது உங்களுக்கும் கொடுக்கிறேன், என்று. நான் உண்மையிலேயே ரொம்ப சந்தோஷப்பட்டு ஊரை எல்லாம கூட்டி, ஆயிரம்கட்சிப்பட்டுக்குக் கொடுக்கலாமா, வெங்காட்டிலே வைக்கலாமா, என்று உடனே கொடுக்கலாம் என்று இருக்கும் போது, வேறு யாருக்கும் கொடுத்து விடுவார்களோ, என்று நினைத்து, அவசரம், அவசரமாக இரண்டு காலனிகளை எழுதிக் கொடுத்து கொடுங்கள் சார், என்றேன். இன்னும்





கொடுக்கவில்லை. அவரே கூப்பிட்டுச் சொன்னாலும், கொடுக்க வில்லை என்கிற பொழுது எங்களுடைய துரதிருஷ்டம் என்று தான் நான் நினைக்க வேண்டியதாக இருக்கிறது.

அடுத்து கலப்புத் திருமணம். கலப்புத் திருமணத் தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் தருகிறோம் என்றார்கள். வரவேற்கக் கூடியதுதான். பிறகு ரூ. 4,000-க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் கொடுக்கிறீர்கள், சரி. ஒரு அம்மாள், என்னிடம் பேப்பர் இல்லை. இருந்தால் அதை கரெக்டாகச் சொல்வேன், ஆலந்தூரிலே எஸ்.பி. ஆபிஸிலே கிளார்க்காக வேலை செய்கிறார்கள். கலப்புத் திருமணம் செய்து கொண்டார்கள். நீங்கள் கொடுக்க வேண்டிய ரூ. 4,000 அவர்களுக்குக் கிடைப்பதற்குள் அவர்கள் பிரிந்து விடுவார்கள் போல இருக்கிறது. அதை உடனடியாகக் கொடுத்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரூபாய்க்காகத் தான் கல்யாணம் செய்து கொண்டார்களா?

திருமதி டி. யசோதா : கலப்பு எப்படியோ வருகிறது. என்கரேஜ் பண்ணுவது எப்படி?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரூபாய்க்காக கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது.

திருமதி டி. யசோதா : நான் வேண்டுமென்றால் அந்த டீடெய்ல்ஸை மறுபடியும் கொடுக்கிறேன். ஆகவே, கலப்புத் திருமண உதவியை உடனடியாக முடிவு எடுத்துக் கொடுத்து விடுங்கள். யார் மனது எப்படி இருக்குமோ தெரியாது. ஆகவே, பத்திரத்தின் வாயிலாகவாவது அந்தக் கலப்புக் கொஞ்ச நாளைக்காவது நீடிக்க வேண்டும். அதிலே வேறு நீங்கள் போட்டிருக்கிறீர்கள் — 10 வருஷம் வரைக்கும் அவர்கள் எடுக்கக் கூடாது என்று இருப்பதாலே நிச்சயமாக 10 வருஷம் வரை அவர்கள் ஒற்றுமையாக இருப்பார்கள். அதற்குப் பிறகு அவர்களுடைய குழந்தைகளுக்குச் சொந்தம் என்ற நிலை வரும்போது, ஆசைப்பட்டு கல்யாணம் செய்து கொண்டவர்கள் கூட அதற்காகவே தொடர்ந்து வாழ்க்கை நடத்தக்கூடிய நிலைமை ஏற்படும். இல்லையென்றால் அரிசன பெண்கள் வாழாவெட்டியாக மாறக்கூடிய பரிதாபமான சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் வைன்டிங் அப் செய்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 40 நிமிஷம் பேசி இருக்கிறீர்கள். ஒயின்டிங் அப் என்றால் சபையையேவா முடிக்கப் போகிறோம்?

திருமதி டி. யசோதா : போளூரிலே இருக்கிற அரிசனங்கள் 4 நாட்களாகத் தொடர்ந்தாற்போல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். எம்.எல்.ஏ கூட உங்களுக்குப் பலமுறை கடிதம்

[திருமதி டி. யசோதா] [1984 மார்ச் 22

எழுதினார்களாம்—ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். உங்கள் மாவட்டத்திலே இதுமாதிரி உயிர்ச் சேதம் ஏற்படக் கூடாது. அவர்களுடைய பிரச்னை என்ன? தாட்கோ மூலம் 120 பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக் கோருதல், ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றும் அந்தப்பகுதியிலே அமைத்தல், புதிய காலனிக்கு சுடுகாட்டுக்குப் போகும் பாதை ஒன்றை அமைத்தல், 1974-ஆம் ஆண்டு முதியோர் ஊதிய உதவித் தொகை பெறும் பொருட்டு மனு அனுப்பப்பட்டு 10 ஆண்டுகளாகியும் இது வரையில் கொடுக்காததால், அமுல்படுத்தக் கோருதல், மேற்படி சிவராஜ் நகருக்கு கிணற்று நீர் குடிநீராக விநியோகிக்கப் படுகிறது. எனவே, நல்ல குடிநீருக்கு ஆற்று நீரையே விநியோகம் செய்யவேண்டுமென்று கோருதல். என்ன கேட்கிறார்கள்? குடிப்பதற்கு தண்ணீர் கேட்கிறார்கள்., நல்ல தண்ணீராக கொடுங்கள் என்று தான் கேட்கிறார்கள். அதைப்போல சுடு காட்டிற்கு போவதற்கு வழி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதை கொடுக்கக்கூடாதா? (குறுக்கீடு) ஆகவே இந்த வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து பெண்கள் கல்வியில் அவர்களுக்கு ரேடியோ, டி.வி. கொடுக்கிறீர்களோ இல்லையோ முக்கியமாக அந்தப் பள்ளிகளுக்கு காம்பவுண்ட் சுவர் கட்ட வேண்டும். நலத்துறைப் பள்ளிகளைப் பார்த்தாலே அவைகள் நலத்துறைப் பள்ளிகள் என்று நன்றாகத் தெரியும். அந்த மாதிரியான அப்பியரன்ஸ் அந்தப் பள்ளிகளுக்கு இருக்கிறது. அந்தப் பள்ளிகள் பாழடைந்த பங்களாவைப் போல, பூட் பங்களாவைப் போல இருக்கின்றன. அவைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பரிட்சை வருவதற்கு முன்பு பாடப் புத்தகங்களைக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். பள்ளிக்கூடம் திறக்கிற போதே அந்த மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களைக் கொடுக்க வேண்டும். உடைகளையும் அவர்களுக்கு அந்தச் சமயத்திலேயே கொடுக்க வேண்டும்.

கல்விச் சுற்றுலாவிற்கு 40 மாணவர்களை அனுப்புவதற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறீர்கள். 40 மாணவர்களை ஒரு நாளில் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கா? அல்லது ஒரு வாரம் அழைத்துச் செல்வதற்கா? ஒரு நாள் என்றால் எத்தனை இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்ல முடியும்? இது பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன மக்கள் அனைவரும் கட்டாயமாக படிக்கவேண்டுமென்று மத்திய அரசு ஒரு சட்டத்தை இயற்றுமா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு சொல்ல விரும்புவது, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காலத்தில் அரிசன மக்கள் மட்டுமல்லாமல் எல்லா சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகளும் கட்டாயமாகப் படிக்கவேண்டுமென்று திட்டம் கொண்டு



1984 மார்ச் 22] [திருமதி டி. யசோதா]

வந்தார். அதுதான் கட்டாயக் கல்வித் திட்டம். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன்களில் குழுக்கள் போடப்பட்டு எந்தெந்த ஏரியாவில் குழந்தைகள் படிக்கவில்லை? ஏன் படிக்கவில்லை? அப்படிப் படிக்காத குழந்தைகளுடைய தாய், தகப்பனாருக்கு அபராதம் விதிக்கலாமா? என்ற அளவிற்குக் கூட அந்தக் குழுவிலே நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு இந்திரா காந்தி என்ன செய்தார்கள்? மத்திய அரசாங்கம் என்ன செய்தது? என்றெல்லாம் கேட்பவர்களுக்கு நான் பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். 1955-ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது காங்கிரஸ் அரசாங்கம் தான். 1976-ஆம் ஆண்டு எமர்ஜென்சியில் குடியுரிமைச் சட்டம் கொண்டு வந்தது காங்கிரஸ் அரசாங்கம் தான்; இந்திரா காந்தி அம்மையார் தான். 1959-ல் உத்யோகமும், உத்யோக உயர்விற்குமான சட்டத்தை, பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது இந்திரா காந்தி தான். இவைகள் அனைத்தையும் உங்களிடம் மாநில அரசுகள் செயல்படுத்த கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் அவைகளை வைத்துக் கொண்டு பேசாமல் இருக்கிறீர்கள். அவைகளில் நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? இந்திரா காந்தி எதைச் செய்தாலும் அதை அமல்படுத்துகிற பொறுப்பு உங்களிடம் தான் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

அருந்ததி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு மூன்று மந்திரிப் பதவிகளைக் கொடுத்திருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். மூன்று மந்திரிகளுக்கு என்ன பொறுப்பு கொடுத்திருக்கிறீர்கள்? ஒருவருக்கு அரிசன நலத்துறை; இன்னொருவருக்கு சமூக நலத்துறை; அடுத்தவருக்கு ஊரக வளர்ச்சி; நாங்கள் காமராசர் காலத்தில் இரண்டு பேர்களுக்கு மந்திரி பதவிகளைக் கொடுத்தோம். இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற ஹோம் டிபார்ட்மென்ட் அன்றைக்கு கக்கன் அவர்கள் வைத்திருந்தார்கள். இன்றைக்கு ஹண்டே அவர்கள் வைத்திருக்கிற சுகாதார இலாக்காவை ஜோதி அம்மாள் அவர்கள் வைத்திருந்தார்கள். அதை யாரும் மறந்து விடக்கூடாது. எவ்வளவு பெரிய பவர்புல் போர்ட்போலியோக்களை அவர்களுக்கு நாங்கள் கொடுத்திருந்தோம் என்பதை யோசனை செய்து பார்க்க வேண் வேண்டும். அரிசன மக்களுக்கு காங்கிரஸ் கட்சி செய்ததை விட மற்றவர்கள் யாரும் அதிகமாகச்செய்வார்கள் என்று சொன்னால் அதை நாங்கள் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சி எதையும் அவர்களுக்குச் செய்யவில்லை என்பதை நிச்சயமாக எங்களால் ஒப்புக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இளையபெருமாள் அவர்களைப் பற்றிச் சொல்லும்போது அவர்கள் விரக்தியின் காரணமாக அப்படி இப்படி பேசிவிட்டார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார். அவருக்கு என்னவிரக்தி? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராக அவரை ஆக்கினோம். அதைவிட பெரிய பொறுப்பு இருக்க முடியுமா? அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்கு சஞ்சீவய்யா அவர்களை கொண்டு வந்தோம். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராக மரகதம் சந்திரசேகர் அவர்கள் இருக்கிறார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொருளாளராக மரகதம் அம்மையார் அவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய பார்லிமெண்டரி போஸ்ட் சூப்பர் போஸ்ட்; அதிலே மரகதம் சந்திரசேகர் அவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு பெரிய பதவிகளில் எல்லாம் இந்திரா காந்தி அவர்கள் டெல்லியில் அரிசன மக்களை வைத்திருக்கிறார்கள்.

(இரவு 7–00)

எங்கள் கட்சியில் இப்படி அரிசனங்களைத் தலைவர்களாக் கொண்டு வந்து இருக்கிறோம். உங்கள் கட்சியில் அப்படி ஒரு அரிசன வகுப்பைச் சேர்ந்தவரை தயார் செய்து இருக்கிறீர்களா? உங்கள் கட்சி பெரிய ஜனநாயக அமைப்பு என்று சொல்லிக் கொள்ளலாம்.

டாக்டர் கே. சமரசம் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கட்சி சமாசாரத்தைப் பற்றிப் பேசுவதற்கு பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்க முடியாது.

டாக்டர் கே. சமரசம் : எங்கள் கட்சியின் முதல் பொருளாளரே ஒரு அரிசன் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே, அமைப்புச் செயலாளர் திரு. ராஜாங்கம் அவர்களும் ஒரு அரிசன் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எங்கள் கட்சியிலும் அரிசனங்களுக்கு பொறுப்புகளைக் கொடுத்து இருக்கிறோம்.

திருமதி டி. யசோதா : சகோதரர் சமரசம் அவர்கள் திரு. ராஜாங்கம் அவர்களுக்கு அமைப்புச் செயலாளர் பதவி கொடுக்கப்பட்டதாக சொன்னார்கள். 3 நாளைக்கு முன்னால் அந்தப் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார் என்று தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் நீக்கப் படவில்லை, அவர் எம்.பி.யாக ராஜ்ய சபைக்கு நாமினேஷன் தாக்கல் செய்து இருக்கிறார்.





திருமதி டி. யசோதா : இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்கிறபோது, அதைப் படிக்கிறபோது, பூலோக சுவர்க்கம் என்று சொல்வார்களே அந்த அளவிற்கு ஆக்குவதற்கான வகையில் இங்கே எக்கச்சக்கமான திட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு நல்ல எண்ணம் இருக்கிறது என்பது உண்மையானால், உங்களுக்கு மேலே இருக்கிற மனது மாறாமல் இருந்தால் நிச்சயமாக அது நிறைவேறும்.

நான் இங்கே ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை, அவர்களைப் பந்து போல் அங்கும் இங்கும் தூக்கி எறிந்து கொண்டு இருக்கிறீர்கள். அவர்களுக்கு என்ன மற்ற அதிகாரிகளை விட திறமை குறைவா? ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று தெரியவில்லை. நல்ல திறமை படைத்த அதிகாரிகளையெல்லாம் எவ்வளவோ கௌரவம் கொடுத்து வைத்து வந்த நீங்கள், இன்றைக்கு அவர்களை அகௌரவப்படுத்துவதன் மூலம் அவர்கள் எல்லாம் ராஜினாமா செய்துவிட்டுப்போகும் நிலைக்குக் கொண்டுவந்து இருக்கிறீர்கள். திரு. சீதாராமதாஸ், ஐ.ஏ.எஸ். ரொம்ப நல்லவர், திறமையானவர், மதுரை கலெக்டராக இருந்தவர், அவருடைய பெயரில் ஒரு பெரிய நகரையே அங்கே பல மக்கள் சேர்ந்து உருவாக்கியிருக்கிறார்கள், அப்படிப்பட்ட ஒரு அதிகாரியைக் கொண்டு போய் லாட்டரி சீட்டுக்கு போட்டு இருக்கிறீர்கள். அவரைக் கொண்டு ஒரு பாழடைந்த மண்டபத்தில் உட்கார வைத்து இருக்கிறீர்கள். மற்ற அதிகாரிகளை விட இவருக்கு என்ன திறமை குறைவு இருக்கிறது என்று கண்டுவிட்டீர்கள்? இவர் என்ன செய்தார், அவர் செய்த தவறு என்ன? மத்திய அரசாங்கத்தின் திட்டங்களை அமல் படுத்தினார். இது தவறு என்று நீங்கள் நினைத்தால் என்ன செய்வது? அதைப் போலவே கங்கப்பா என்ன செய்தார்கள்? வேலூரில் சோழன் காலத்தில் இருந்த பெரிய கோயிலை புதுப்பித்துக் காட்டினார், அவரை எல்லோரும் பாராட்டினார்கள், நல்ல கலெக்டர் என்று சொன்னார்கள். ஆனால், நீங்கள் கொடுத்த தொல்லை தாங்காமல் அவர் ராஜினாமா செய்துவிட்டார். இப்போது கோர்ட்டில் அந்த ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளவேண்டும், அவர் மீது தவறு இல்லை என்று தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். அதே மாதிரி கோமேதகவேலு இன்றைக்கு ஜாயின்ட் செக்ரடரியாக அரிசன் வெல்பேர் துறையில் இருக்கிறார், ஒரு கிளார்க் மாதிரி அவரை வைத்து இருக்கிறார்கள். அவர் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கவர்மென்ட் பிரஸ்ஸில் டைரக்டராக இருந்தார், பல பொறுப்புகளில் இருந்து இருக்கிறார். இப்படி இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை எல்லாம் நீங்கள் என்ன இன்னல்களுக்கு உள்ளாக்கியிருக்கிறீர்கள்? அதைப்போலவே, சாந்தப்பா, அவர்களுக்கு நீங்களே கௌரவம் அளித்தீர்கள், வைஸ்-சான்சலர் பதவி கொடுத்தீர்கள்.

முதன் முதலாக ஒரு அரிசனுக்கு அந்தப் பதவி மெட்ராஸ் யூனிவர்
சிடியில் கொடுத்தீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். கௌரவம்
கொடுத்ததும் நீங்கள். இன்றைக்கு நீங்கள் தான் அவர் மீது ஒரு
விசாரணைக் குழுவைப் போட்டு, அவருக்குக் கீழே இருக்கும் அதி
காரியை வைத்து விசாரிக்கச் சொல்லியிருக்கிறீர்கள். இப்படி
நீங்கள் பெருமையைத் தந்து விட்டு, அவமானம் செய்வது சரியா
னதல்ல என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இந்த நிலை
மைகள் மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைக் கூறி முடித்துக்கொள்கிறேன். வட்டி
யில்லாக் கடன், வழக்கறிஞர்களுக்கு உதவி, ஆசிரியர்களுக்குக்
குடியிருப்பு, மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள், நோட்டுப்
புத்தகங்கள் அளித்தல், குழந்தைகள் காப்பகம், தட்டச்சு, சுருக்
கெழுத்துக் கல்வி பயில திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு சிறப்பு
பயிற்சித் திட்டம், செங்கல் உற்பத்தி தொழிற்சங்கங்கள், பாலிதீன்
பைகள் செய்யும் தொழில்கள், தீப்பெட்டி தொழில்கள், கயிறு
உற்பத்தி தொழில்கள் தொழில்கருவிகளை இலவசமாக வழங்குதல்
போன்ற பல்வேறு திட்டங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். உண்
மையிலேயே இந்தத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு
அந்த மக்களுக்குக் கிடைக்குமானால், பூலோக சுவர்க்கத்தை
உங்களால் நிச்சமாக உருவாக்கித்தரும் நிலைமை இருக்கும்
என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆனால் எப்படி இருக்
கிறது என்றால் 'பல கை மாறிய பனிக்கட்டி போல் இந்தத்
திட்டங்கள் இருக்கின்றன. நல்ல திட்டங்கள் அறிவிக்கப்
பட்டாலும் அவை இந்தச் சமுதாயமக்களுக்கு நல்ல முறை
யில் பயனளிப்பதாக இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாகச் சொல்கிறேன். 'முடவன்-கொம்புத்தேன் நிலைமை
யில்தான் இன்றைக்கும் இருக்கிறது. முடவனாக ஆதிதிராவிட
மக்களும், கொம்புதேனாக இந்த அரசின் திட்டமும் இருக்கிறது
என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு துணைத் தலை
வர் அவர்களே, நடைபெற்ற விவாதத்தில் இந்த இரண்டு மானிய
கோரிக்கைகள் மீதும் ஏறத்தாழ 21 மாண்புமிகு உறுப்பினர்கள்
தங்கள் மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்
தமிழகத்தில் இருக்கிற ஆதிதிராவிட பழங்குடி மக்களுடைய
நலனைக் குறித்தும், அச்சகத் துறையில் இருக்கிற பிரச்சனைகள்
குறித்தும் இந்த விவாதத்திலே பங்குகொண்டு நல்ல பல கருத்
துக்களை எடுத்துச் சொல்லி, தங்களுடைய எண்ணங்களை
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லி
யிருக்கிற அந்த எண்ணங்கள் அரசுக்கு மிகுந்த அளவிலே உதவி
கரமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அந்த
வகையிலே தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.
இந்த விவாதத்திலே கலந்துகொண்டு கருத்துக்களை எடுத்துச்
சொன்ன அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அரசின்
சார்பிலே என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.





தமிழக அரசைப் பொறுத்த மட்டில், இங்கே பேசிய மாண்பு
மிகு உறுப்பினர்கள் எந்த உணர்வைப் பெற்றிருக்கிறார்களோ அதே
உணர்வினைக் கொண்டு தமிழகத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட
பழங்குடி மக்கள் மேன்மை பெற்று, பொருளாதார ரீதியாக
முன்னேற்றம் அடைந்து, வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிற
அவர்களுடைய நிலைமை வறுமைக் கோட்டிற்கு மேலே வர
வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நாம்
எடுத்துக் கொண்டுவருகிறோம்.

அரசு எடுத்து இருக்கக்கூடிய நல்ல முயற்சிகளை அவையிலே
கொள்கை விளக்கக் குறிப்பாக அரசின் சார்பாக எடுத்து வைத்
திருக்கிறேன். இந்த விவாதத்தில் கலந்து கொண்டு மாண்பு
மிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிருக்கக்கூடிய உணர்வுகளை
மதிக்கக்கூடிய வகையிலும் உறுப்பினர்களுடைய எண்ணங்களை
மதித்து அவர்கள் சொல்லி இருக்கிற யோசனைகளைக் கருத்திற்
கொண்டு இந்த அரசு அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை
எடுக்கும் என்பதைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசும்போது மாண்பு
மிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் இந்த சமு
தாயத்தினுடைய முன்னேற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கும்
போது இந்த சமுதாயத்தில் இருக்கக்கூடிய இந்த மக்களுடைய
குழந்தைகள் நல்லமுறையில் கல்வி பெற கல்வியின் தரத்தை
நல்லமுறையிலே உருவாக்குவதோடு இந்தத் துறையின் மூலமாக
அளிக்கக்கூடிய கல்வியின் தரம் சிறந்து விளங்க வேண்டும் என்றும்
கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன அந்த
உணர்வின் அடிப்படையிலேதான் தமிழக அரசு இந்தத்
துறைக்கு என்று ஒதுக்குகிற மொத்த நிதியில் மூன்றில் இரண்டு
பங்கினை ஆதிதிராவிட நலத்துறை மூலமாக நடத்தப்படுகின்ற
பள்ளிகளைப் பராமரிக்கவும் விடுதிகளை நல்லமுறையில்
நடத்தவும், கல்வியின் தரத்தை உயர்த்தவும் ஒதுக்கி, அந்த
வகையில் நடவடிக்கை எடுத்துக் கெண்டிருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆதிதிராவிட நலத்துறை
மூலமாக தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 1102 பள்ளிகள் நடத்
தப்படுகின்றன. இந்த பள்ளிகளிலே எல்லாம் 2,14,000 ஆதி
திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் தங்கி,
கல்வி வசதி பெறுகின்றார்கள், என்பதை அவைக்கு எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன்.

(இரவு 7.10)

இதுதவிர, இந்த நலத்துறையின் மூலமாக ஏறத்தாழ
705 விடுதிகள், தமிழகத்திலே இருக்கின்ற ஆதிதிராவிட மக்களுக்
காக 685 விடுதிகளும், பழங்குடி மக்களுக்காக 20 விடுதிகளும்
மொத்தம் 705 விடுதிகளும் நடத்தப்பட்டு வருவதையும் இதிலே
ஏறத்தாழ 47,781 மாணவ மாணவியர்களும் தங்கி நல்ல முறை
யிலே கல்வி பெறுகின்ற நடவடிக்கைகளை நாம் எடுத்து கொண்
டிருக்கிறோம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

[திரு. எம். விஜயசாரதி] [1984 மார்ச் 22

இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், புதிதாக 26 விடுதி களை நாம் திறந்து, அவ்வாறு திறக்கின்ற விடுதிகளில் குறிப்பாக இந்த சமுதாயத்தை சேர்ந்த பெண்கள் பயனடைய வேண்டு மென்பதற்காக நாம் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டி ருக்கிறோம். புதிதாக திறக்கப்படுகிற 26 விடுதிகளில் 8 கல்லூரி விடுதிகள் பெண்களுக்காகவும், உயர்நிலைப்பள்ளிகளிலே படிக் கின்ற பெண்கள் நன்மை பெறுகின்ற விதத்திலே, 12 விடுதிகள் பெண்களுக்காகவும், உயர்நிலைப்பள்ளியில் தங்கி பயிலும் மாண வர்களுக்கு 6 விடுதிகளும் மொத்தத்தில் 26 விடுதிகளை நாம் புதிதாக இந்த ஆண்டில் திறக்கயிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில், பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் குறிப்பாக பழங்குடி மக்களைப் பொறுத்தவரையில், கல்வியறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு கல்வியறிவு பெற்றுத் தரவேண்டுமென்பதை நாம் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்ககக்கூடிய வகையில் குறிப்பாக, பழங்குடி சமுதா யத்தைச் சார்ந்த பெண்களுக்கென்று புதிதாக 2 விடுதிகளை தனி யாக திறக்க இருக்கிறோம். அந்த விடுதிகள் வடாற்காடு மாவட்டத்தில் ஜமுனா மருதூர் பகுதியில் ஒன்றும், திருச்சி மாவட்டத்தில் பச்சைமலைப் பகுதியில் ஒன்றுமாக, ஆக 2 பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களுக்காக தனியாக 2 விடுதிகளை நாம் திறக்கயிருக்கிறோம் என்பதை அவைக்கு நான் தெரிவிக்கவிரும்புகிறேன்.

அதேபோல், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள விடுதிகளை அமைப்பதில் வேலூரில் ஒன்றும், கடலூரில் ஒன்றுமாக 2 விடுதிகளை இந்த அரசின் மூலமாக இந்த ஆண்டு நாம் திறக்க இருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வசதிகள் மட்டுமின்றி, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, இந்த நலத்துறையின் மூலமாக இயங்கி வருகின்ற பள்ளிகளுடைய நிலைமைகளைப் பற்றி இங்கே இறுதியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இவ்வாறு இருக்கக் கூடிய இந் தப் பள்ளிகளின் நிலைமைகளை மாற்றி, நலத்துறையின் மூலமாக இயங்கிவருகின்ற பள்ளிக்கூடங்களை நிரந்தரக் கட்டிடங்களில் இயங்கும் பள்ளிக் கூடக் கட்டிடங்களாக அமைய வேண்டுமென்ற வகையில் அரசு ஒரு முடிவு எடுத்து இதற்குத் தனியாக கடந்த 7 ஆண்டுக் காலத்தில், ஏறத்தாழ 324 இலட்சம் ஒதுக்கி நலத் துறையிலே இருக்கக்கூடிய பள்ளிச்சட்டிடங்களை நிரந்தரமானக் கட்டிடங்களில் இருக்க வேண்டுமென்பதற்காக தமிழகம் முழு வதும் இந்த வகையில் 109 புதிய பள்ளிக் கட்டிடங்களை அமைக்க வேண்டுமென்கின்ற வகையிலே இந்த அரசு நடவடிக்கைகள் எடுத் திருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே பேசுகின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர், இளையபெருமாள் அவர்களும், உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களும்



1984 மார்ச் 22] [திரு. எம். விஜயசாரதி]

பிற்படுத்தப்பட்ட துறையின் மூலமாக டில்லியிலேஇருக்கக் கூடிய ராவ் இன்ஸ்டிடியூட்டிற்கு மாணவர்களை ஐ.ஏ.எஸ். பயிற்சிக்கு அனுப்புகிறார்கள். இத்துறையின் மூலமாக அனுப்பப்பட வில்லை என்ற கருத்தை இங்கே சொன்னார்கள். நான் அவைக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண் புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் சென்ற ஆண்டு பிற்படுத்தப்பட்ட துறையின் மூலமாக இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று என்னிடத்திலே நேரில் சொல்லி, அதற்குத் தனியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட் டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையில் நாமும் நலத்துறை யின் மூலமாக 10 பேருக்கு மிகாமல் டில்லியிலே இருக்கக் கூடிய ராவ் இன்ஸ்டிட்யூட்டிற்கு அனுப்புவதற்கான உத்தரவுகளை நலத் துறையின் மூலமாக பிறப்பித்திருக்கிறோம். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் 5 மாணவர்களும் 1 மாணவியும் இதிலே தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுடைய தகுதிக்கு ஏற்ப டெல்லி யிலே இருக்கக்கூடிய ராவ் இன்ஸ்டிட்யூட்டுக்கு அனுப்பி வைக்கப் பட்டு இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் அங்கே இந்த மாதம் 31 ஆம் தேதி ரிப்போர்ட் செய்ய இருக்கிறார்கள் என்பதை யும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்களும் நலத்துறையின் மூலமாக தமிழகத்திலே இருக்கின்ற ஆதிதிராவிட மக்களுக்கு அடுத்த பிரச் சினையாக இருப்பது வீட்டு மனைகளைப் பற்றிய பிரச்சினை என்று எடுத்துச் சொன்னார்கள். வீட்டு மனைகளை வழங்கு வதிலே இருக்கக்கூடிய காலதாமதத்தை, வீட்டு மனைகளை வழங்குவதிலே இருக்கக்கூடிய பல பிரச்சினைகளை இங்கே எடுத் துச் சொன்னார்கள் விவாதத்திலே கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் இதை விரிவு படுத்துகின்ற விதத்திலே புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்ற அளவிலே அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள்.

இத்தகைய நிலைமைகள் தமிழகத்திலே இருப்பதை உணர்ந்து பார்த்துத்தான், தமிழகத்தைப் பொறுத்தவரையில் எத்த னையோ ஆட்சிக்காலங்களை தமிழகம் கண்டிருந்தாலும்கூட, இதிலே இருக்கச்கூடிய அந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு தமிழகத்திலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுடைய மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிற வீட்டுமனைகளை விரைவாக வழங்க வேண்டும், அந்த மக்களுடைய பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என்பதற்காக, இதுவரை இல்லாத அளவிற்கு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர் கள் பொறுப்பை ஏற்றதற்குப் பின்புதான், 1978 ஆம் ஆண்டு இதற்கு என்று புதிய சட்டத்தை உருவாக்கினார்கள் என்பதை நான் உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப் பட்டிருக்கிறேன்.

இறுதியாக பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் கூட இந்தச் சட்டம் செல்லாது என்ற வகையில் தீர்ப்பு அளிக்கப்பட்டதை எடுத்துச்சொல்லி, இத்தகைய சட்டத்தை நீங்கள் ஏன் உருவாக்கினீர்கள் என்ற அளவிற்கு அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். அரசு கொண்டு வந்த நோக்கத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் இந்த மக்களுக்கு இருக்கக்கூடிய நீண்ட நெடுங்காலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது கூட காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர் பேசுகிற நேரத் திலே கூட 30 ஆண்டுக் காலமாகியும், 35 ஆண்டுக்காலமாகியும், 40 ஆண்டுக்காலம் ஆகியும், வீட்டு மனைகள் வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் எழுப்பப்பட்டும் அவர்களுடைய பிரச் சினைகள் தீர்க்கப்படாத நிலைமையை அவர்கள் சுட்டிக்காட்டி னார்கள். இங்கே கூட போளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பலராமன் அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லி, அவர்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்றும், 30 ஆண்டுகளுக்கு மேலாக தாங்கள் கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய வீட்டு மனைகள் (குறுக்கீடு)— 10 வருடங்களாக, தேவை என்ற அளவிலே அந்தப் பிரச்சினை களை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

ஆனால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் சென்னையிலே இருக்கக்கூடிய மேட்டுப்பாளை யம் பகுதியைக் குறிப்பிட்டுச்சொல்லி, அங்கே இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்கள், அருந்ததி சமுதாயத்தைச் சேர்ந்த அந்த மக்கள் ஏறக்குறைய 60 ஆண்டுக்காலமாக அங்கே இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தப் பகுதியிலே 60 ஆண்டுக்காலமாக இருக்கக்கூடிய அவர்கள் இத்தனை ஆண்டுக் காலமாக கேட்டும், காங்கிரஸ் இயக்கம் தமிழகத்தை ஆண்ட நேரத்திலே அவர்கள் கேட்டும்கூட, அவர்களாலே கூட அந்தப் பிரச்சினைகளை தீர்க்க முடியவில்லை என்பதோடு, இத்தகைய எண்ணத்தை இந்தப் பகுதியிலேயிருந்து தெரிவித்தபோது, அதற்கு உறுப்பினர் அவர்கள் அந்த நேரத்திலே நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இல்லை என்று சொல்லி, தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது அவ்வளவு சரியானதாக இல்லை என்பதை நான் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தக் காலத்திலே அவர்கள் கேட்கவில்லை. இப் போது கேட்கிறார்கள். கேட்டிருந்தால், ஒருவேளை கிடைத்தி ருக்கும்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பல ஆண்டுக்கால மாக அவர்கள் கேட்டு வந்தும், கொடுக்கப்படாத நிலை இருப் பதைச் சுட்டிக்காட்டினார்கள்.





திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை. தமிழகத்தின் முதல்வர் அவர்கள், இந்த மக்களுக்கு உடனடியாக வீட்டு மனைகள் கிடைக்க வேண்டும் என்றுதான், கலெக்டர் அவர்களே, அதை எடுத்து அங்கே செய் தால், கொஞ்சம் துரிதமாகச் செய்யலாம் என்ற நல்ல எண்ணத் தோடு அவர்கள் சொன்னார்கள். கோர்ட்டிலே தவறான தீர்ப்பை கொடுத்துவிட்டார்கள். 1894 ஆம் ஆண்டு சட்ட மும், 1978 ஆம் ஆண்டு சட்டமும் நமக்கு ஒரு பாதகமான நிலை யைக் கொடுத்திருக்கிறது. இப்படி வந்த பிறகும் கூட, சட்ட வல்லுநர்களைக் கூட்டி, எப்படி அந்தச் சட்டத் திற்கு திருத்தம் கொண்டு வந்தால், அவர்கள் கோர்ட்டுக்குப் போய் அங்கே என்ன தீர்ப்பு அளித்தார்களோ, நாம் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளுகின்ற முறையில் ஒரு நல்ல வழியைக் காண்பதற்கு என்ன செய்தீர்கள் என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

(இரவு 7-20)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் செல்லாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்து, தற்போது நாம் தமிழக அரசின் மூலமாக மேல் முறையீட்டினை செய்திருக்கிறோம். அது சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. அவ்வாறு இருக்கக்கூடிய கால கட்டத்தில், அரசு அதன் மீது எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்து, அந்தச் சட்டம் செல்லும் என்கிற, அளவுக்கு வாதாட முடியுமோ, அந்த அளவுக்கு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக காங்கிரஸ் இயக்கத் தைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு. இளையபெருமாள் அவர் களும், இறுதியாக பேசிய திருமதி யசோதா அம்மையார் அவர் களும் காங்கிரஸ் ஆண்ட காலத்திலே ஆதி திராவிட மக்களுக்கு அதிகமான சலுகைகளை வழங்கியது போல ஒரு உணர்வினை இங்கே வெளிப்படுத்தினார்கள். உதாரணத்திற்கு ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத் திலே, கன்னியாகுமரியைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லி, நம் முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர் கள், அங்கே 1962 ஆம் ஆண்டில் பெரும் தலைவர் காமராசர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக இருந்தபோது, அங்கே அடிக்கல் நாட்டப்பட்டு, சமுதாய கூடம் கட்ட வேண்டும் என்ற உணர்வோடு எடுத்த நடவடிக்கைகளை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் இன்னமும் அந்தக் கட்டிடம் அங்கே முடியாத நிலையில் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார் கள்.

[திரு. எம். விஜயசாரதி] [1984 மார்ச் 22

அதை வாதத்திற்காக நாம் எடுத்துக்கொள்கிற ஒரு நிலைமையை நாம் உருவாக்கினோமானால் ஒன்றை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில் அதன்மீது நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயாராக இருக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் உறுப்பினர்களுடைய கவனத்திற்கு சொல்ல விரும்புகிறேன்.

இந்தக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டியது 1962 ஆம் ஆண்டிலே. ஆனால் 67 வரையில் காங்கிரஸ் இயக்கம் தமிழகத்தை ஆண்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலம் 1967 வரையிலே இருந்திருக்கிறது. ஆனால் ஒரு முதலமைச்சர் காலத்திலே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிற ஒரு கட்டிடத்தை அந்த 5 ஆண்டுக் காலத்திலே அந்த இயக்கம் ஆளுகிற பொறுப்பிலே இருக்கிற ஒரு கால கட்டத்திலே கட்ட முடியாத நிலையை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துக் கொண்டு, ஏற்றுக் கொண்டதை பார்க்கிற நேரத்தில், அவர்களுடைய காலத்திலே அவர்களுடைய முதலமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிற அந்தக் கூடம் நிறைவு பெறாத நிலைமையை அவர்களே, ஏற்றுக் கொண்டதற்காக நான் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இருந்தாலும் கூட எங்களைப் பொறுத்த அளவிலே அது எந்தக் காலத்திலே எடுக்கப்பட்ட நிலைமையாக இருந்தாலும் அத்தகைய பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து, அதன்மீது நடவடிக்கை எடுத்து, இவ்வாறு நிலுவையிலே, பாதியிலே நின்றிருக்கக் கூடிய கட்டிடங்கள், வழக்கு மன்றத்திலே இருக்க[illegible] காரணத்தினாலேதான் நம்மால் நடவடிக்கை எடுக்க முடிய[illegible] என்பதை மட்டும் மன்றத்திற்கு நான் எடுத்துச் சொல்லி நிலுவையில் இருக்கக்கூடிய அந்த வழக்குகள் மீது உயர் நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு வருகிற வரையில், நாம் நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலைமையிலே இருப்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வீட்டு மனைகளைப் பொறுத்த அளவிலே புதிய சட்டத்தை தமிழக அரசு உருவாக்கி, தமிழகத்திலே இருக்கிற ஆதி திராவிட மக்களுடைய முக்கியப் பிரச்சினையாக இருக்கிற இந்த வீட்டு மனைகளை வழங்க வேண்டும் என்பதில் இந்த அரசு அதிகமான அக்கறைக் கொண்டிருக்கிறது. புதிய சட்டம் செல்லாது என்ற வகையிலே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. பழைய சட்டம் 1894 ஆம் ஆக்டின்படி, தற்போது வீட்டு மனைகளை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கையை தமிழக அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்த அரசு இந்தப் பிரச்னையில் எந்த அளவுக்கு முனைப்போடு இருக்கிறது என்பதற்காகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் ஒரு சில புள்ளி விவரங்களை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.



1984 மார்ச் 22] [திரு. எம். விஜயசாரதி]

பொறுப்பினைஏற்பதற்கு முன்பு
புரட்சித் தலைவர் அவர்கள்
1967 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரையில் ஏறத்தாழ
11 ஆண்டுகளாக தமிழகத்திலே கையகப்படுத்தப்பட்டு, கொடுக்
கப்பட்டிருக்கிற வீட்டு மனைப் பட்டாக்களை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். ஏறத்தாழ 1 லட்சத்து 34 ஆயிரத்து
618 வீட்டு மனைகள், பட்டாக்கள், 323.32 இலட்சம் செலவில்
அந்த 11 ஆண்டுக்காலக் கட்டத்தில் தமிழகத்திலே கையகப்படுத்
தப்பட்டு தமிழகத்திலே இருக்கிற ஆதி திராவிட மக்களுக்காக
கொடுக்கப்பட்டது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ
கத்திலே 1977 ஆம் ஆண்டு முதல் முதலமைச்சராக பொறுப்
பினை ஏற்றதற்கு பின்னர், 1984 வரையில் கடந்த 7 ஆண்டுக்
காலகட்டத்தில் ஒரு லட்சத்து 63 ஆயிரத்து 281 பட்டாக்களை
694.36 லட்சம் ரூபாய் செலவில் கையகப்படுத்துவதற்கான நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டு, வீட்டு மனைப்பட்டாக்களை இந்த
அரசு பொறுப்பினை ஏற்ற பிறகு வழங்கியிருக்கிறது என்பதை
அவைக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

வீட்டு மனைகளை
இந்த ஆண்டைப் பொறுத்தவரையில்
கையகப்படுத்துவதற்காக 125இலட்சம் ரூபாய்களை அரசு ஒதுக்கி,
அதன் மூலமாக தமிழகம் முழுவதற்கும் 25,000 வீட்டு மனைகளை
கையகப்படுத்தவேண்டுமென்ற அளவில் ஒரு குறியீட்டினை
வைத்து நாம நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.
இந்த ஆண்டை பொறுத்தவரை ஒதுக்கிட்டு இருக்கின்ற ரூ 125
இலட்சத்தைவிட அதிகமாக ரூ. 135 இலட்சம் செலவிட்
டிருக்கிறோம் என்பதை அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.
அதன் மூலமாக ஒதுக்கிட்டு இருக்கக்கூடிய தொகையைக் காட்டி
லும் அதிகமாக ரூ. 10 இலட்சம் செலவிட்டு, பழைய சட்டம்
காலதாமதமாகிறது என்ற நிலை இருந்தாலும்கூட, அந்தச்
சட்டத்தின் அடிப்படையிலே தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்
டிருக்கிறேன்.

அடுத்த பிரச்சினை, இங்கே கலந்து கொண்டு பேசிய அனைத்து
உறுப்பினர்களும், ஆதி திராவிட மக்களுக்கு கட்டப்படுகின்ற
வீடுகளைப் பற்றி சொன்னார்கள் தமிழக அரசை பொருத்த
வரையில் ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோ மூலமாக—
தமிழ்நாடு ஆதி திராவிட வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின்
மூலமாக இலவசமாக வீடுகளை அமைத்துத் தர வேண்டும்
என்பதை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம், அந்த வகையில்
தாட்கோ மூலமாக கட்டப்படுகின்ற வீடுகளுக்கு மொத்தமாக
மானியமாக ரூ. 6,000-ல் வீடுகளை கட்டவேண்டுமென்று நட
வடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த வகை
யில் இரண்டு ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு 5,000 வீடுகள் என்ற
வகையில் 10,000 வீடுகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, வரு
கின்ற ஆண்டிலே, 5,000 என்ற அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்
திருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்,

[திரு. எம். விஜயசாரதி] [1984 மார்ச் 22

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை பொறுத்த
வரையில், இந்த டாட்கோ மூலமாக அமைக்கப்படுகின்ற வீடு
களுக்கு, ஒரு வீட்டிற்கு மொத்தம் ரூ. 6,000 மானியமாகவும்,
அதே நேரத்தில் தானே உழைத்து அந்த வீடுகளை கட்டுவதற்கும்
மேற்கொண்டு, ரூ. 750 சேர்த்து ஆதி திராவிட மக்களுக்கு
கொடுக்கலாம் என்கின்ற அளவிற்கு ஆணை பிறப்பித்திருப்
பதை அவைக்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, ரூ. 6,000 ப்ளஸ் ரூ. 750 கொடுத்து சம்பந்தப்பட்ட
பெனிபிஷியரியே வீடு கட்டிக்கொள்ள வேண்டும் என்பது தான்
அரசாங்கத்தினுடைய கொள்கை என்று கருதுகிறேன். இப்படிப்
பட்ட ஒரு சூழ்நிலையில் நேரடியாக அரசாங்கமே அந்தப்
பணத்தை கொடுக்க முடியும். இடையில், இடைத் தரகராக
இந்த டாட்கோ எதற்காக என்பதை விளக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, டாட்கோ மூலமாக கொடுக்கப்படுகின்ற
இந்த நிதி மூன்று காலக்கட்டங்களில் கொடுக்கப்படுகிறது.
பேஸ்மெண்ட் லெவல்லே ஒரு தொகையும், லிண்டல்
லெவலிலே இன்னொரு தொகையும், கூரை போடுகின்ற போது
மூன்றாவது தொகையும் பிரித்து கொடுக்கப்பட்டு எந்த அளவிற்கு
பணிகளை செய்திருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து,
டாட்கோ, மூலமாக இருக்கக்கூடிய என்ஜினியரிங் செக்ஷனைச்
சேர்ந்தவர்கள் இதற்காக சர்ட்டிபிகேட் அளித்து, அவர்கள்
செய்து இருக்கக்கூடிய பணிகளை பார்வையிட்டு அதன்
மீது, மூன்று காலக் கட்டங்களில், அவர்களுக்கு கொடுக்கப்
பட்டு இருக்கக்கூடிய இந்த பணத்தை பிரித்து தருகின்ற
நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பெனி
பிஷியரியே வீட்டினை கட்ட வேண்டும் என்பதுதான் அரசினுடைய
எண்ணமாக இருக்கிறது. இப்படி கட்டுகின்ற நேரத்தில் கட்டு
கின்றவர்கள், தங்களுடைய வீடுகளை தாங்களே கட்டுகிறோம்
என்ற பொறுப்புணர்வோடு, ஆர்வத்தோடு கட்டுகின்ற வீடுகள்
நல்ல முறையிலே கட்டப்பட வேண்டும் என்ற உணர்வோடு
கட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்று இந்த
நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கமானது டாட்கோ
மூலம் கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
அதில் நான் வித்தியாசப்படவில்லை. யார் கட்டினாலும்.
கட்டட்டும். ஃப்ரீ ஹவுசிங்கில் கட்டக்கூடிய திட்டம் நம்முடைய
அரசு இதுவரையில் செய்யவில்லை. இனிமேலாவது, வருங்காலத்
தில் கட்டுவதற்கு, நம்முடைய அரசு உத்தரவிட இருக்கிறதா?
ரூ. 6,000 என்பதிலே, ரூ. 4,500 போக ரூ. 1,500 யார் உதவி
பெறுகிறார்களோ அவர்களுடைய ஊதியத்தாலும், உழைப்பின்
மூலமாகவும் என்று சொன்னார்கள். இதற்கும் மேலாக அவர்கள்



1984 மார்ச் 22] [திரு. எல். இளையபெருமாள்]

சேர்த்துக் கொடுப்பதாகச் சொன்னார்கள். 750 ரூபாய்
நம்முடைய அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டுவதற்காக விலை
வாசி உயர்விற்கேற்ப கொடுக்கப்படும் என்று சொன்னார்கள்.
இந்த 6,750 ரூபாய் என்பது கிராமாந்திர கூட்டுறவு முறை
மூலமாக கொடுக்கப்படுவதா அல்லது இதற்கு முன்னாலே இருந்த
எந்தவிதமான தொகையும் இல்லாமல் ஃபிரியாகக் கட்டிக்
கொடுக்கப்பட்டு வந்ததே அதுவா? இரண்டில் எது என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : துணைத் தலைவர்
அவர்களே, 3 விதமான திட்டங்கள் ஆதி திராவிட மக்களுக்கென
இருக்கின்றன. டாட்கோ மூலமாக இலவசமாக, அந்த வகை
யிலே மொத்தமாக மானியமாக, 6 ஆயிரம் ரூபாய் தருகிறோம்.
டாட்கோ பற்றி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது ரூரல் ஹவுசிங் ஸ்கீம்
மூலமாக கொடுப்பதைப் பற்றிச் சொல்கிறார்கள். அதிலே
மானியமாகவும் கடனாகவும் வழங்கி உழைக்கின்றவர்கள்
அவர்களுடைய பங்கைக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே
சொல்லப்படுகிற திட்டம். இதைத் தவிர மூன்றாவதாக தேசிய
ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக இலவசமாக
10 ஆயிரம் வீடுகள் கட்டுகிற நடவடிக்கையை எடுத்திருக்கிறார்
கள். அதன் மூலம் 9 ஆயிரம் ஆதி திராவிடர்களுக்கும் ஆயிரம்
பழங்குடி மக்களுக்கும் கட்டிக் கொடுக்க இருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் பேசுகின்ற
நேரத்தில் ரூரல் ஹவுசிங் ஸ்கீம் மூலமாக கட்டப்படுகிற வீடு
களைப் பொறுத்தவரையில் ஜி. ஓ. போடப்படவில்லை என்ற
கருத்தைச் சொன்னார்கள்.

(இரவு 7-30)

திரு. எல். இளையபெருமாள் : முதலமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். ஆனால் இதுவரையில் அங்கே உத்திரவு வந்து
சேரவில்லை என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : அதைப்பற்றி விசாரிப்
போம். இவ்வளவு நடவடிக்கைகளை வீடுகளைப் பொறுத்த
அளவிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு
வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்ற உணர்வை தமிழக அரசு
அதிகமாக அக்கறை கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். இன்னொரு புதிய திட்டத்தையும் தான் சொல்ல
விரும்புகிறேன். மத்திய அரசு இதிலே அதிக அக்கறை
கொண்டு புதிதாக Rural Landless Employment Guarantee
Progromm; என்ற புதிய புரகிராமை RLEYP என்று சொல்லப்
படுகிற ஒரு புரகிராமை அறிவித்து இருக்கிறார்கள்.
மத்திய அரசிடமிருந்து உத்திரவுகளை எதிர்பார்த்துக்

[திரு. எம். விஜயசாரதி] [1984 மார்ச் 22

கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலமாக 10 ஆயிரம்
வீடுகளைக் கட்ட இருக்கிறோம். அதிலே 9,500 ஆதி திராவிடர்
களுக்காகவும், 500 பழங்குடி மக்களுக்காகவும் கட்ட இருக்கி
றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகை
யிலே 1984-85 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் தாட்கோ
மூலமாக 6,666 வீடுகளும் இப்போது புதிதாக வர இருக்கிற
Rural Landless Employment Guarantee Progromme என்று சொல்
லப்படுகிற RLEYP என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் 10
ஆயிரம் வீடுகளும் Thadco Rural Housing Scheme மூலமாக 30
ஆயிரம் வீடுகளும் மொத்தத்தில் 46,666 வீடுகளை வருகிற
1984-85 ஆம் ஆண்டிற்குள் பல்வேறு திட்டங்கள் மூலமாக
தமிழகத்திலே இருக்கிற ஆதிதிராவிட மக்கள் பயன்பெறுகிற
வகையில் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம் என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே பேசிய பல உறுப்பினர்களும் இன்னொரு
கருத்தை எடுத்துச் சொன்னார்கள். 18 சதவீதம் அரசுத்
துறைகளிலே பூர்த்தி செய்யப்படவில்லை என்ற வகையிலே
கருத்துக்களைச் சொன்னார்கள். இன்னொன்றை நான் உங்க
ளுடைய உணர்விற்கும் கவனத்திற்கும் சொல்ல விரும்புகிறேன்.
இதுவரையிலே தமிழகத்திலே எத்தனையோ ஆட்சிகள் இருந்
தாலும் கூட 18 சதவீதம் பூர்த்தி செய்த நிலைமை எந்த ஆட்சிக்
காலத்திலேயும் இல்லை என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சிக் காலத்திலேதான் ஏறத்
தாழ அரசுத் துறை நிறுவனங்களில் 13 சதவீதம் ஆதிதிராவிடர்
கள் பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். இதைத் தவிர இது
வரையில் தமிழகத்திலே எந்த முதலமைச்சரும் செய்யாத
அளவுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் இதற்குத் தனியாகவே
பிரத்தியேக ஆணைகளைப் பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதை
நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில்
ஆதிதிராவிட மக்கள், பழங்குடி மக்கள் 18 சதவீதம் பூர்த்தி
யாகிற வரையில் பதவிகளை நிரப்பாமல் விட்டு வைக்கலாம்
என்ற வகையிலே புரட்சித் தலைவர் அவர்கள் ஆணைகளைப்
பிறப்பித்து இருக்கிறார்கள். அந்த வகையிலே முதலமைச்சர்
அவர்கள் தெரிவித்திருக்கிற சொல்லியிருக்கிற அந்த ஆணை
அரசினுடைய மேல்மட்டத்திலே பரிசீலனையில் இருக்கிறது.
அதைப் பற்றி கூடிய விரைவில் முடிவு எடுக்கப்பட்டு 18 சதவீதம்
பூர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கையை எடுப்பதில் தயக்கம்
காட்டமாட்டோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
இது தவிர இங்கே பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழகத்
தில் இருக்கின்ற பழங்குடி மக்கள் நன்மையை குறித்தும் தங்கள்
கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில்
இருக்கக்கூடிய பழங்குடி மக்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்
தாலும் அவர்களுடைய நலன்களை கருதி பழங்குடி மக்கள் அதிக
மாக வசிக்கின்ற 9 பகுதிகளில் ஒருங்கிணைந்த பழங்குடியினர்
மேம்பாட்டு துறைத் திட்டத்தை நாம் நிறைவேற்றி வருகிறோம்.



1984 மார்ச் 22] [திரு. எம். விஜயசாரதி]

இந்தத் திட்டத்தின் மூலமாக பழங்குடி மக்கள் வசிக்கின்ற பகுதி
களுக்கு தேவைப்படுகின்ற அனைத்து அடிப்படை வசதிகளையும்
குடிநீர், சுகாதார மற்றும் அனைத்து வசதிகளையும் செய்து
தந்து அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் அந்தப் பகுதி
களில் செல்லுகின்ற பாதை வசதிகளையும் இந்த திட்டத்தின்
மூலமாக நாம் நிறைவேற்றி வருகிறோம். இந்தத் திட்டத்தைப்
பொறுத்தவரையில் 1983—84 ஆம் ஆண்டைப் பொறுத்த வரை
யில் 600 லட்சம் ரூபாய் ஒதுக்கி அதன் மூலமாக இந்த 9 பகுதி
களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு துணைத்
திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். இந்த 600 லட்சம்
ரூபாயில் மாநில அரசு 494 லட்சம் ரூபாயும் மத்திய அரசு
106 லட்சம் ரூபாயும் கொடுத்து மொத்தத்தில் 600 லட்சம்
ரூபாய் அளவுக்கு இந்த பழங்குடியினர் மேம்பாட்டு துணைத்
திட்டத்தை பழங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்ற அந்த 9
பகுதிகளில் நாம் நிறைவேற்றி கொண்டிருக்கிறோம் என்பதை
நான் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இது தவிர அந்த
மக்களுடைய பொருளாதார வளர்ச்சி திட்டங்களை நாம் நிறை
வேற்றி வருகிறோம் என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்
கொள்கிறேன். பழங்குடி மக்களுடைய பொருளாதார தன்மை
கள் உயர்த்துகின்ற நடவடிக்கைகளை நாம் எடுக்கின்ற அதே
நேரத்தில் தமிழகத்தில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுடைய
பொருளாதார தன்மையும் உயருவதற்கு மற்ற சமுதாயத்
தோடு இந்த மக்களும் நேருக்கு நேர் வரவேண்டும் என்பதற்காக
நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.
அதற்காக தமிழக அரசைப் பொறுத்த வரையில் மத்திய அரசின்
சீரிய ஒத்துழைப்போடு பல்வேறு வகையான வளர்ச்சி திட்டங்
களை பொருளாதார முன்னேற்றத்திற்காக வறுமை கோட்டிற்கு
கீழே இருக்கக்கூடிய இந்த மக்களை வறுமைக் கோட்டுக்கு மேலே
கொண்டு வரக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய வழி வகை
களை செய்து கொண்டிருக்கிறோம். அந்த வகையில் தமிழகத்
தில் சிறப்பு உட்பகுதி திட்டம் 'Component Plan' திட்டத்தை
நாம் நிறைவேற்றி 1980 ஆம் ஆண்டு முதல் 1985
ஆம் ஆண்டுக்குள் இந்த 5 ஆண்டு கால கட்டத்தில் ஏறத்தாழ
9 லட்சம் ஆதி திராவிட குடும்பங்கள் வறுமைக் கோட்டைக்
கடக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த
திட்டத்தின் சீரிய நோக்கமாக இருக்கிறது. அந்த வகையில்
ஏறத்தாழ 240 கோடி ரூபாய் இந்த சிறப்பு உட்பகுதி திட்டத்தின்
மூலமாக நாம் செலவழித்து இருக்கிறோம் என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன். அதேபோல் இதுவரையில் ஏறத்தாழ 6.35
லட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டை கடக்கக்கூடிய நட
வடிக்கைகளை நாம் எடுத்து இருக்கிறோம் என்பதை நான் இந்த
அவைக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அது தவிர மத்திய அரசிலிருந்து நமக்கு கிடைக்கக் கூடிய
சிறப்பு நிதி உதவிக் கொண்டு பல்வேறான வளர்ச்சித் திட்டங்
களை பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை எடுத்து அவர்
கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையக்கூடிய வகையில்

[திரு. எம். விஜயசாரதி] [1984 மார்ச் 22

நாம் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.
அந்த வகையில் சிறப்பு மத்திய உதவியாக தமிழக அரசுக்கு
ஏறத்தாழ 38.56 கோடி ரூபாய் இதுவரையில் கிடைத்து இருக்
கிறது. இதன் மூலமாக 37.48 கோடி ரூபாய் அளவுக்கு புதி
தாக திட்டங்களை நாம் அறிவித்து அந்த திட்டங்களுக்கு அரசு
ஒப்புதலும் அளித்து இந்தத் திட்டங்களை தமிழ்நாடு ஆதிதிராவிட
வீட்டு வசதி வளர்ச்சி கழகத்தின் மூலமாகவும் தமிழகத்தில்
இருக்கக் கூடிய மற்ற துறைகள் மூலமாகவும் நடவடிக்கைகளை
எடுத்து இருக்கிறோம் என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்
கொள்கிறேன். இந்த சிறப்பு நிதி உதவி கொண்டு நாம்
பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை வகுத்து இருக்கக்
கூடிய திட்டங்களில் ஒரு சிலவற்றை மட்டும் நான் இங்கே
எடுத்துச் சொல்லக் கடப்பாடு உடையவனாக இருக்கிறேன். அந்த
வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்
கள் பேசுகிற நேரத்தில் எடுத்துச் சொன்னது போல் 500 பங்கு
கள் கொடுக்கக்கூடிய நிலையில் காலணி தயாரிக்கக் கூடிய பணி
யில் ஈடுபட்டு இருக்கக்கூடிய அருந்ததியர் சமுதாயத்தினருக்கு
பயன் தருகின்ற வகையில் 500 பங்குகளை ஒவ்வொரு ஆண்டும்
கொடுத்து நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.
அந்த வகையில் இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ
ஒவ்வொருவருக்கும் 7,500 ரூபாய் மதிப்பில் அதற்கான நிதி
ஒதுக்கீடுசெய்து மொத்தம் 37.50 லட்சம் இதற்காக ஒதுக்கப்
பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு தெரிவிக்க
கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்கள் பேசுகிற நேரத்தில் கூட
காதி மூலமாக அவர்கள் அறிவிக்கிற நேரத்தில் கூட இதே
திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லி அவர்களும் இதை
செய்வதாக சொல்கிறார்கள் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

(இரவு 7-40)

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றவர்கள் காதியை
சேர்ந்தவர்கள்; ஆனால் இந்தத் திட்டத்திற்குப் பண உதவியைக்
கொடுப்பவர்கள் இந்த நலத் துறையைச் சேர்ந்தவர்கள் என்
பதை நாம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன். அந்த வகையில் இந்த ஆண்டும் காலணி தயாரிக்கும்
பணியிலே ஈடுபட்டிருப்பவர்கள் 500 பேர் பயன் அடையும் விதத்
தில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதை
தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தவிர தமிழகத்தில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்
களில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் பயன்பெறும் விதத்தில்
ஏறத்தாழ 4,000 பேர்களுக்குக் கறவை மாடுகளை வழங்கும்
நடவடிக்கையாக இந்தச் சிறப்பு நிதி உதவியிலிருந்து நடவடிக்கை
களை எடுத்திருக்கிறோம். அந்த வகையில் கொடுக்கப்படும் ஒரு
மாட்டுக்கு 2,500 ரூபாய் விலையாக இருக்கும். இந்த 2,500
ரூபாயில் பாதியை அதாவது 50 சதவீதத்தை மானியமாகத்



1984 மார்ச் 22] [திரு. எம். விஜயசாரதி]

தரயிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். தரவிருக்கின்ற இந்த மானியம் சிறப்பு நிதி உதவி யிலிருந்து கொடுக்கப்படுகிறது. மானியமாக மட்டும் தமிழ்நாடு முழுவதும் இருக்கும் இந்த 4,000 பேர்களுக்கு நாம் 50 இலட்சம் ரூபாய்களைக் கொடுக்கவிருக்கிறோம் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதைத் தவிர, தமிழக அரசு புதிதாக 14 பவர்லூம் காம்ப் ளக்ஸ் அமைக்கவிருக்கிறது. விசைத் தறி வளாகங்களைப் புதி தாக நாம் நிறுவ இருக்கிறோம். இப்படி நிறுவயிருக்கும் இந்த விசைத்தறி வளாகங்களிலே மொத்தம் 100 பேர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். இவ்வாறு அமர்த்தப்படுகின்றவர்களுக்கு சிறப்பு மைய உதவியிலிருந்து பத்து லட்சம் ரூபாய்களை நாம் அவர்களுக்கு பங்காகக் கொடுத்து அல்லது மூலதனத்திற்காகக் கொடுக்கும் பங்காகக் கொடுத்து, இதன் மூலம் மொத்தத்தில் எடுக்கப்படும் 100 பேர்களில் 50 பேர்கள் ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டுமென்ற அளவில் நாம் நடவடிக்கை எடுத்திருக்கி றோம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இவ்வளவு இலட்சம் ரூபாய் கொடுத்து இத்தனை பேர்களுக்கு வேலை என்று நாம் சொல்லுகிறோம். இப்படி வேலையில் வைக்கின்ற பொழுது நல்லெண்ணத்தோடு தான் வைக்கிறோம். ஆனால் செங்கற்பட்டு ஜில்லாவிலே நான் அந்த ஆலையைப் பார்த்த பொழுது, நம்முடைய துறையின் மூலம் ஏழு லட்சம் ரூபாய்களைக் கொடுத்திருக்கிறோம். அந்த சமயத்தில் பத்துப் பேர்களுக்கு உத்தியோகம் கொடுத்ததாகச் சொன்னார்கள். ஆனால் பல காரணங்களைக் காட்டி இப் பொழுது இருந்த பத்துப் பேர்களில் இப்பொழுது 2 பேர்களைத் தான் வைத்திருக்கிறார்கள். ஏழு இலட்சம் ரூபாய்களைப் பெற்றுக் கொண்டு, பத்து பேர்களுக்கு வேலை கொடுக்கிறோம் என்று சொல்லி, இப்பொழுது இரண்டு பேர்களைத் தான் வேலைக்கு வைத்திருக்கிறார்கள். சிலோன் ரீப்பேட்ரியேட்ஸ்க்கு பேங்கு மூலமாகக் கொடுக்கும் பொழுது நல்லெண்ணத்தோடு செய்கிறோம். அதைப்போல இவர்கள் வாங்குகின்ற பொழுது இப்படிச் சொல்லிவிட்டு கடைசியில் ஏதோ காரணங்களினால் இப்படிப் போகின்றது. இலட்சணக்கான ரூபாய்களை வாங்கிக் கொண்டு இரண்டு பேர்களைத் தான் வேலைக்கு வைத்திருக்கி றார்கள். எனவே, இதையெல்லாம் அனுசரித்துச் செய்ய வேண் டும். சென்ற ஆண்டு நம்முடைய முதல்வரவர்கள் இராமநாத புரம் மாவட்டத்தில் நல்ல தொழிற்சாலையே உண்டாக்கி 100 குடும்பங்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத் தில் செய்தார்கள். அதைப் போல நாம் பணத்தைக் கொண்டு, நல்ல முறையில் செய்ய வேண்டும். ஆனால், சீர்கெட்டுப் போன மில் அதிபர்கள் அணுகி, உங்கள் ஆட்களுக்கு வேலை கொடுக்கி றோம் என்று சொல்லி இலட்சக்கணக்கில் ரூபாய்களை நம் துறையின் மூலம் வாங்கிக் கொண்டு, பத்து பேர்களுக்கு வேலை

[திரு. எல். இளையபெருமாள்] [1984 மார்ச் 22

தருகிறோம் என்று சொல்லி, பிறகு ஏதாவது காரணத்தினால்
எட்டுப் பேர்களை விட்டுவிடுகின்ற அவல நிலை உண்டாகிறது.
இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து, வருங்காலத்திலேயாவது,
இந்த நிலை ஏற்படாமல் நம்முடைய துறையின் மூலமாகவே செய்ய
அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு துணைத்
தலைவரவர்களே, ஆதி திராவிட மக்கள் நிரந்தர வேலைவாய்ப்பு
பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான், இதுவன்ரயில்
இல்லாத அளவிற்குத் தமிழக அரசு இத்தகைய நடவடிக்கைகளை
எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச்
சொன்னதைப் போல, இராமநாதபுரம் மாவட்டம் கமுதிக்கு
அருகில் நூற்பாலை அமைத்து ஏறத்தாழ 350 ஆதி திராவிடர்
களுக்கு வேலைவாய்ப்பு தரும் திட்டத்தை நாம் எடுத்திருக்
கிறோம்.

அந்த வகையில் நாம் குறிப்பிட்டிருக்கும் 14 விசைத்தறி
வளாகங்களில் ஒரு வளாகத்திற்கு 50 பேர் என்று நடவடிக்கை
எடுத்திருக்கிறோம். அவர்களுக்குக் கொடுக்கப்படும் அந்த வேலை
வாய்ப்பு நிரந்தரமாக இருக்க வேண்டுமென்பதில் நாம் கண்ணும்
கருத்துமாக இருப்போம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

இதைத் தவிர இதுவரையில் ஆதிதிராவிட மக்கள் பொருளா
தார முன்னேற்றத் திட்டங்கள்-குறிப்பாக சுய வேலைவாய்ப்புத்
திட்டம்-கிராமப் பகுதிகளில் ஆதி திராவிடர்களுக்கு ஏற்படுத்தப்
பட்டு வந்தன. ஆனால் இந்த ஆண்டு முதல் நகர்ப் பகுதியிலே
வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களுக்கும் இந்தச் சலுகையை
நீட்டித்து இந்த வசதிகளை அவர்களும் பெற வேண்டும் என்ற
அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்
துக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த வகையிலே இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில்
இதிலே பல்வேறு விதமான தொழில்கள் ஆதி திராவிட மக்களுக்
காக அவர்களுக்கு இதுவரையிலும் சிறிதும் தொடர்பு இல்லாத
தொழில்களிலே அவர்களை ஈடுபடச் செய்ய வேண்டும் என்பது
தான் அரசினுடைய எண்ணம். அந்த வகையிலே எந்தெந்தத்
தொழிலிலே அவர்கள் ஈடுபட முன் வருகிறார்களோ அவர்களுக்கு
அந்தத் தொழிலுக்கேற்ப அவர்களுக்கு முன்னோடிப் பயிற்சியை
அளித்து, அந்தப் பயிற்சிக்காலம் ஏறத்தாழ மூன்று மாதங்
களிலே இருந்து 6 மாதங்கள் வரையில் இருக்கும் என்ற அளவுக்கு
சில வரைமுறைகளை வைத்து அந்த வகையிலே நடவடிக்கை
எடுத்திருக்கிறோம். இப்படி கிட்டத்தட்ட 1,500 நபர்கள்
பயிற்சி பெறுகின்ற அந்தக் கால கட்டத்தில் ஆகக் கூடிய செலவுக்
காகத் தனியாக ரூபாய் 18 இலட்சம் ஒதுக்கி இருக்கிறோம் என்
பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 மார்ச் 22] [திரு. எம். விஜயசாரதி]

இத்தகைய பயிற்சியினைப் பெற்று முடிந்திருப்பவர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டங்களுக்காக முன் வருகின்றபோது முதன் முதலிலே 3,500 நபர்கள் பயன் பெறுகின்ற வகையில் நடவடிக்கைகளைக் குறிப்பாக நகர்ப் பகுதியிலே இருக்கக்கூடிய அதாவது தமிழகம் முழுவதும் இருக்கின்ற நகர்ப் பகுதிகளிலே வாழ்கின்ற ஆதித் திராவிட மக்கள் பயன் பெறுகின்ற விதத்திலே நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அந்த வகையில் ஏறத்தாழ 3,500 நபர்கள் பயன் பெறுகின்ற விதத்தில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதன் மூலமாக சுய வேலை வாய்ப்பிலே ஈடுபட முன் வருபவர்களுக்கு மானியமாக மட்டும், அதாவது சிறப்பு நிதியுதவியிலிருந்து மானியமாக மட்டும் 70 இலட்சம் ரூபாய் அளவுக்கு தர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எஞ்சி இருக்கக்கூடிய தொகை தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் மூலமாக அவர்களுக்கு அளிக்கப்பட்டு அதன் மூலமாக அவர்கள் சுய தொழிலில் ஈடுபடுகின்ற அளவுக்கு நட வடிக்கைகளை எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். இதைத் தவிர தமிழகம் முழுவதும் 1,500 ஆடு வளர்ப்பு யூனிட்டுகள் அமைக்க இருக்கிறோம். அந்த வகையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 400 யூனிட்டுகளும், தென்னாற்காடு மாவட்டத்தில் 400 யூனிட்டுகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டத் தில் 400 யூனிட்டுகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 300 யூனிட்டு களும் ஆக மொத்தம் 1,500 யூனிட்டுகள் அமைக்கப்பட இருக் கின்றன. இந்த யூனிட்டுகள் அமைப்பதன் மூலம் 1,500 நபர்கள் பயன்பெறுகின்ற விதத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆகக்கூடிய மொத்தச் செலவு 60 இலட்சம் ரூபாய் ஆகும். இவ்வாறு இருக்கக் கூடிய இந்த 60 இலட்சம் ரூபாயில் பாதியை சிறப்பு நிதியிலிருந்து மானியமாகத் தர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். அந்த வகையில் 30 இலட்சம் ரூபாய் நாம் மானியமாகத் தர இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இதைத் தவிர, பல்வேறு வகையான வளர்ச்சித் திட்டங்களில் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்கள் முன்னுரிமை பெறுகின்ற விதத்தில் நடவடிக்கைகள் எடுக்க இருந்தாலும் கூட இப்போது இருக்கக்கூடிய இந்த கால கட்டத்தில் அனைத்தையும் எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்காது என்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவார்களேயானால் அரசின் முயற்சியால் என்னென்ன வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி இருக்கிறோம் என்பதை அச்சிட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் தரத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுடைய மேன்மைக்காக இத்தகைய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கித் தமிழகத்தில் மற்ற மக்க ளுக்கு நிகராக இந்த மக்களும் வரவேண்டும் என்ற உணர்வு இந்த அரசுக்கு இருப்பதால்தான். இத்தகைய நடவடிக்கைகளை நாம் எடுத்து இருக்கிறோம். அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும்தான் இப்போது சொல்லி இருக்கிறேன்.

[திரு. எம். விஜயசாரதி] [1984 மார்ச் 22

எழுதுபொருள் அச்சுத் துறையைப் பொறுத்தவரையில் அரசினுடைய மைய அச்சகத்தை நவீனப் படுத்துவதற்காக முதற் கட்டமாக இரு வண்ண் ஆப்செட் வெப்-ஆப்செட் இயந்திரமும், ஃபோட்டோ டைப் செட்டிங் இயந்திரமும் வாங்குவதற்காக 1983–84 ஆம் ஆண்டில் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசிய நேரத்தில் நான் அவர்களுக்குப் பதிலளித்துப் பேசுகின்ற போது எடுத்துச் சொல்லி இருந்த அந்த வகையில் இருவண்ண ஆப்செட் இயந்திரம் ஒன்று தற்போது வாங்கப்பட்டு மத்திய அச்சகத்தில் நிறுவப்பட்டு கடந்த ஒரு மாத காலமாக அது இயங்கி வருகின்றது. ஃபோட்டோ டைப் செட்டிங் இயந்திரமும் வாங்கப்பட்டு மத்திய அச்சகத்தில் நிறுவப்பட்டிருக்கின்றது.

1984–85 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய 25 இலட்சம் ரூபாயில் ஒரு வண்ண ஷீட் ஃபெட் ஆப் செட் இயந்திரமும், ஃபோட்டோ பாலிமர் ப்ளேட் மேக்கிங் இயந்திரமும் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்களும், ஃபோட்டோ நெகட்டிவ் ப்ராசசிங் கேமிரா ஆகியவற்றையும் வாங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

(இரவு 7–50)

இந்த இயந்திரங்கள் அரசு மைய அச்சகத்திலே இருப்பது திறனைபெருக்குவதோடு அண்மைக்கால அச்சுத் தொழில் நுட்பவியலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான முதல் கட்டத்தைக் குறிக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசு அச்சகங்களிலே பல்வேறு தொழில்களிலே பயிற்சி பெறுகின்ற தொழில் பழகுநர்களுக்கு அதிகப் பயிற்சிக் கால ஊதியம் வழங்குவது குறித்த கருத்து ஒன்று அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சென்ற மானியக் கோரிக்கையின் பொழுது பேசுகிற நேரத்திலே நான் எடுத்துச் சொல்லி இருந்தேன். அந்த வகையிலே, அதற்கேற்ப, முதல் ஆண்டு பயிற்சி பெறுகின்ற தொழில் பழகுநர்களுக்குப் பயிற்சிக் கால ஊதியத்தை ரூ. 130–லிருந்து ரூ. 230 ஆகவும், இரண்டாம் ஆண்டு பயில்கின்ற தொழில் பழகுநர்களுக்கு ரூ. 140–லிருந்து ரூ. 260 ஆகவும், மூன்றாம் ஆண்டு பயில்கின்ற தொழில் பழகுநர்களுக்கு ரூ. 150 லிருந்து ரூ. 300 ஆகவும், உயர்த்தி அரசு வழங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல டிப்ளமோ பெற்ற பழகுநர்களுக்கு பயிற்சிக்கால ஊதியம் ரூ. 180–லிருந்து ரூ. 320 ஆகவும், சான்ட்விச் பழகுகிறவர்களுக்கு ரூ. 150–லிருந்து ரூ. 250 ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1984 மார்ச் 22] [திரு. எம். விஜயசாரதி]

இந்தப் பயிற்சிக் கால ஊதியம் முன் தேதியிட்டு 25–1–1982 முதலே வழங்கப்பட்டிருக்கிறது என்பனதயும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசு அச்சகத்திலே பணியாற்றுகின்ற பார்வையற்றவர்கள் எதிர்நோக்குகின்ற இன்னல்கள் குறித்தும் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய செய்மானத்தை விரயம் செய்யக்கூடாது என்கிற வகையில் அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதனை உணர்ந்து பார்வையற்றவர்களுக்கு மட்டும் மடித்தல், உறை தயார் செய்தல் போன்ற சுலபமான வேலைகள மட்டுமே தரப்படுகின்றன என்று கூறியதோடு அவர்களுக்கு வேலை அளிப்பதிலே சலுகை அளிப்பது குறித்தும் அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்றும் நான் சென்ற முறை பேசுகிற பொழுது எடுத்துச் சொல்லியிருந்தேன்.

அதே போல், தற்போது பார்வையற்றவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற செய்மானத்தில் 25 விழுக்காடுகளைக் குறைத்து அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் அவர்கள் மடித்தல், உறை தயார் செய்தல் போன்ற சுலபமான பணிகளைத் தொடர்ந்து செய்கின்ற வழிவகைகளையும் நாம் செய்திருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சென்ற மானியக் கோரிக்கையின் பொழுது இங்கே பேசுகிற பொழுது மாண்புமிகு உறுப்பினர் தனபாலன் அவர்கள் சேலம், விருத்தாசலம், திருச்சி மற்றும் மதுரையிலே இருக்கக்கூடிய அரசு அச்சகத் தொழிலாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே தற்போது அரசு நாம் சொல்லியிருக்கக் கூடிய அந்த அரசு அனைத்து வட்டாரத் தொழிலாளர் சங்கங்களுக்கும் அங்கீகாரத்தினை வழங்கியிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்கான ஆணைகளை அரசு பிறப்பித்திருக்கிறது என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வரவு செலவு வெளியீடுகளைப் பொறுத்த வரையிலும் அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்புகளையும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குத் தேவையான பயணச் சீட்டுகள் மற்றும் ஏனைய அவசரப் பணிகளுடன், 1982 பிப்ரவரி மாதம் மத்தியிலேயிருந்து 1982 ஏப்ரல் மாதம் முடியும் வரையில் உணவு வழங்குகின்ற உணவுப் பங்கீட்டு அட்டைகள் அச்சிட்டு வழங்குகின்ற பணிகளிலே ஈடுபட்டிருந்த சென்னை மைய அச்சகத்தினைச் சேர்ந்த மற்றும் சூளை கிளை அச்சகத்தினைச் சேர்ந்த 1,052 தொழிலாளர்களுக்கு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 1· ,

வீதம் 64 நாட்களுக்கு ஊக்க ஊதியம் வழங்க அரசு உத்தர விட்டிருக்கிறது என்றும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமின்றி திருட்டைக் கண்டு பிடிக்கக் கூடியவர்களுக்கு வழங்கப்படுகின்ற வெகுமதியையும் நாம் உயர்த்தியிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது அவர் களுக்கு ஏறத்தாழ ரூ. 15 வழங்கப்பட்டு வருகிறது. அதனை நாம் உயர்த்தி களவாடப்பட்டிருக்கக்கூடிய பொருள்களுடைய மதிப்பு ரூ.1,000 வரையில் இருந்தால் திருட்டைக் கண்டு பிடிக்க உதவிய அந்தப்பணியாளருக்கு வெகுமதியாக ரூ.50 வழங்கியிருக்கிறோம். அதைத் தவிர களவாடப் பட்டிருக்கக்கூடிய பொருள்களுடைய மதிப்பு ரூ. 1,000-க்கு மேற்பட்டிருந்தால் வெகுமதியை ரூ. 75 ஆகவும் நாம் உயர்த்தி இருக்கிறோம் என்பதையும் நான் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் பணியில் இருக்கும் போது இறந்திருக்கக்கூடிய அரசு ஊழியர்களின் வாரிசுதாரர் களுக்கு 14 பேர்களுக்குக் கருணை அடிப்படையிலே இந்தத் துறையில் அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என் பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மஸ்தூர்களைப் பொறுத்த வரையில் 20 விழுக்காடு ஒதுக் கீட்டின்படி 11 மஸ்தூர்களுக்குப் பல்வேறு தொழில் நுட்பப் பணி இடங்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சேலம் வட்டாரத்தினுடைய அச்சகத்தைப் பொறுத்தவரையில் அங்கே புதிய கட்டடம் அந்த அச்சகத்திற்கு அமைக்கக்கூடிய கட்டு மானப் பணிகள் ஏறத்தாழ ரூபாய் 43 இலட்சம் செலவில் நடை பெற்று, கட்டடம் திருப்தி அளிக்கிற வகையில் தற்போது உரு வாகிக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் சௌந்திரராசன் அவர்களும், ஜே. எஸ். இராசு அவர்களும் தொழிலாளர்களுக்கு இருக்கிற பிரச்சனைகளை எடுத் துச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக திரு. சௌந்திரராசன் அவர்கள் இரவுப்படி குறித்தும், டீ, பன் போன்றவைகளுக்கு அலவன்ஸ் வழங்குவது குறித்தும் சொல்லி இருக்கிறார்கள். இந் தப் பிரச்சினைகளைக் குறித்து அரசு மிக பரிவோடு கவனிக்கும். அதிலே இருக்கிற நியாய உணர்வுகளை ஏற்றுக்கொண்டு, தற் போது இருக்கிற விலைவாசியை கவனத்தில் கொண்டு, தேவைப் படுமானால் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களோடு கலந்து பேசி விரைவில் முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சூப்பர்வைசரி ஸ்டாப்பை பொறுத்தவரையில் அந்தச் சங் கத்தைச் சேர்ந்தவர்கள் என்னுடன் பலமுறை சந்தித்துப் பேசி, அவர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக சம்பள பட்டுவாடா பிரச்சினையைப் பற்றி அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இத்தகைய பணி களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கவேண்டு மென்று நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில் அவர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளிக் கக்கூடிய விதத்தில் ஒரு இன்சென்டிவ்வை, ஒரு ஊக்க ஊதி யத்தைக் கொடுக்க வேண்டுமென்கிற அளவிற்கு முடிவை எடுக்க விரும்புகிறோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிற அரசு அச்சகத்தைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஒற்றுமை உணர்வோடு இது நாள் வரையில் எந்தவிதமான போராட்டத்திலும் ஈடுபடாமல் இருப்பதை நான் இந்தஅவையில் பாராட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அப்படிப்பட்ட நிலையில் இருக்கிற அவர்களுடைய உணர்வுகளை மதித்து அவர்களுக்கு இருக்கிற பிரச்சினைகளை தீர்க்க வேண்டியது அரசினுடைய கடமை என்பதை நாம் உணர்ந் திருக்கிறோம். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு தாய் உணர்வோடு, அந்தப் பிரச்சினை களை பரிவோடு ஆராயும் என்பதை இந்த அவைக்கு எடுத்துச் சொல்லி, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதும் உறுப் பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் பழங்குடியினர் என்று போலி சான்றிதழ்களைப்பெற்று அரசினுடைய பணிகளிலே மோசடியாக சலுகைகளை பெற்றிருக் கிற நிலைமை இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டே இங்கே சீப் செக்ரட்டரி அவர்களின் தலைமையில் ஒரு கமிட்டி போட்டு, ஆய்வு செய்து அவைகளை கவனிக்க வேண்டுமென்று அறிவுரை செய்திருக்கிறது. அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? அந்தக் குழுவிலே யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய போலி சான்றிதழ்களை வாங்கி அரசுப் பணிகளில் மற்ற இடங்களில் அவர்கள் சேருகிறார்கள் என்ற அளவிற்கு அரசிற்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழக அரசைப் பொறுத்த வரையில் இத்தகைய சான்றிதழ்களை வழங்கக்கூடிய அதிகாரத்தை இது வரையில் தாசில்தார்கள் பெற்றிருந்தார்கள். கொண்டாரெட்டி இனத்தவர்களுக்கு மட்டும் அதை மாற்றி, ஆர்.டி.ஓ. அளவில்

அவர்கள் ஆராய்ந்து பார்த்து சான்றிதழ்களை வழங்கவேண்டு
மென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் நீண்ட காலமாக
கேட்டுவருவது, அரிசன் வெல்பேர் கமிட்டி அமைப்பது ; அல்
லது மைசூரில் இருப்பதைப் போல ஸ்டாண்டிங்கமிட்டி அமைப்பது
அவற்றைப் பற்றி அமைச்சர் அவர்கள் எந்த கருத்தும் தெரி
விக்கவில்லை. அடுத்து, அச்சகத் தொழிலாளர்கள் சென்னை
யிலிருந்து வேறு பல கிளைகளுக்கு மாற்றப்படுவதைப் பற்றி
சொல்லி இருக்கிறேன். அதை மீண்டும் பரிசிலனை செய்ய
வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

அச்சகத்திலேபணிபுரிகிறதொழிலாளர்களுக்கு அரசாங்க அலு
வலர்களுக்கு உள்ளது போல் மருத்துவ விடுப்பு 18 மாதங்கள்
அளிக்க வேண்டும் என்பது நீண்டகாலக் கோரிக்கையாக இருக்
கிறது. அதைப்பற்றி அமைச்சர் பதில் அளிக்க வேண்டுகிறேன்.
அதைப் போலவே, வட்டியில்லாக் கடனை நீக்கச்சொல்லி ரொம்ப
நாளாக கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எல்லாக் கட்சி சட்ட
மன்ற உறுப்பினர்கள் கூட கையெழுத்துப் போட்டுக் கொடுத்து
இருக்கிறோம். ஆகவே, அதைப்பற்றியும் அறிவிக்க வேண்டு
கிறேன்.

(இரவு 8—00)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் வாங்கி
யிருக்கும் வட்டியில்லாக் கடன் ரத்து செய்ய வேண்டும் என்று
கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது குறித்து அரசு மட்டத்திலே முடிவு
எடுக்கவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இது தவிர, அந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இன்
னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அந்தத் திட்டத்தை
மாற்றி தாட்கோ மூலமாக 25 சதவீதம் மானியமாகவும், எஞ்சிய
தொகை 4 சதவீதம் வட்டி விகிதத்திலும் தரப்படும் என்ற
அளவிற்கு மாற்றி அமைத்து இருக்கிறோம். அந்த வட்டியில்
லாக் கடனை ரத்து செய்வது என்பது கொள்கை அளவில் முடிவு
எடுக்க வேண்டிய பிரச்சினையாக இருப்பதால், அரசு ஆராய்ந்து
பார்த்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

அரசு அச்சகத் துறையில் உள்ள பணியாளர்களுக்கு 18 மாத
மருத்துவ விடுப்பு தரவேண்டும் என்று கேட்டார்கள். அந்தத்
தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்
லிக்கொள்வேன். சில சமயங்களில் அவர்கள் அரசு ஊழியர்கள்
பெறுகின்ற சலுகைகளைப் பெறுகிறார்கள். சில சமயங்களில்
தொழிலாளர்கள் பெறுகின்ற சலுகைகளைப் பெறுகிறார்கள்.



இப்போது இரண்டு சலுகைகளையும் அவர்கள் பெறுகின்ற நிலை
யில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை அரசு ஊழியர்களாகக்
கருதுவதா அல்லது தொழிலாளர்களாகக் கருதுவதா என்பது
தனியாக பரிசிலனையில் இருக்கிறது. அதன் மீது முடிவு எடுத்த
பின்தான் அவர்களுக்கு 18 மாத மருத்துவ விடுப்புத் தருவது
பற்றி நாம் ஒரு உறுதியான முடிவுக்கு வர முடியும்.

திருமதி டி. யசோதா : நான் நிறைய கோரிக்கைகளைச்
சொன்னேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்
றுக்கும் பதில் சொல்லவில்லை. ஸ்ரீபெரும்பூதூரில் ஒரு கம்யூ
னிட்டி ஹால் வேண்டும் என்று கேட்டேன். அதைப்பற்றியாவது
சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (பதில்
இல்லை.)

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, அட்வைசர் கமிட்டி போடவேண்டும் என்று கேட்டோம்.
அது எப்போது அமைக்கப்படும் ?

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுக்காலமாக
அட்வைசர் கமிட்டி பார் தி அரிசன் வெல்பேர் போர்ட் போடப்
படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவருகிறார்கள். முதல
மைச்சர் அவர்களிடத்தில் பேப்பர் பெண்டிங்காக இருக்கிறது,
பைல் அவர்களிடத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள்.
ஆகவே, நானே முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டேன்.
ஏன் போடவில்லை என்று என்னைப்பார்த்தே அவர்கள் கேட்
டார்கள். ஆகவே, அது போட முடியுமா, போட முடியாதா ?
அப்படியில்லையென்றால் எஸ்டிமேட் கமிட்டி, பப்ளிக் அக்
கௌண்ட்ஸ் கமிட்டி என்று இருப்பதுபோல, ஒரு ஸ்டேண்டிங்
கமிட்டி போட அரசு முன் வருமா ? நான்கு வருஷமாக அந்த
பைல் பெண்டிங்காக இருப்பதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ஸ்டான்டிங் கமிட்டியைப் போடக்
கூடாது என்ற எண்ணம் அரசுக்குக் கிடையாது. மிக விரை
வாக அதை நாம் போட இருக்கிறோம் என்பதை நான் தெரி
வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடி
வுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர்
நலிந்தோர் நலன்.

திருமதி தா. இராசாம்பாள், திருவாளர்கள் சு. பாலன்,
என். பழனிவேல் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள்,
பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்
றன.

திரு. மு. அப்பாதுரை இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி ;

'' மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. [illegible]3,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண்.44 எழுது பொருள் அச்சுத்துறை

திரு. என். எஸ். வி. சித்தன் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி ;

'' மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,16,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 23—3—1984 பேரவையின் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### [அ] சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளு .

140. வேளாண்மைத் துறையின் 2—4—1974 ஆம் நாளிட்ட II (2)/AG/2228/74 ஆம் எண். அறிவிச்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 31—10—1983 ஆம் நாளிட்ட 1889 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

141. வேளாண்மைத் துறையின் 12—5—1976 ஆம் நாளிட்ட II(2)/AG/2779/76 ஆம் எண். அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 31—10—1983 ஆம் நாளிட்ட 1890 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

142. வேளாண்மைத் துறையின் 8—3—1976 ஆம் நாளிட்ட II(2)/AG/1362/76 ஆம் எண். அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 31—10—1983 ஆம் நாளிட்ட 1891 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

143. வேளாண்மைத் துறையின் 15—5—1978 ஆம் நாளிட்ட II(2)/AG/2455/78 ஆம் எண். அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 3—1—1984 ஆம் நாளிட்ட 13 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

144. உணவு மற்றும் வேளாண்மைத் துறையின் 4—5—1983 ஆம் நாளிட்ட II-I/2812/1963 ஆம் எண். அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத்துறையின் 3—1—1984 ஆம் நாளிட்ட 20957/A.M. II/83-12 ஆம் எண் அரசு கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

[ஆ] அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்,

72. கோரிக்கை எண். 31—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

73. கோரிக்கை எண். 31—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் இணைப்புகள், 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

74. 1984–85 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சாதனைத் திட்டம். (ஆங்கிலம்).

75. கோரிக்கை எண். 44—எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984–85. (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I

568ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை.

மானியக் கோரிக்கை, எண். 31.

கொள்கை விளக்கக் குறிப்பு(1984—85)

''ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன்'' என்ற தலைப்பின் கீழ் 1984-85 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 31-ல் ரூ. 4803·21 இலட்சம் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச்சட்டமன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.

2. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 88.81 இலட்சம் பேர். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர், இது மொத்த மக்கள் தொகையில் முறையே 18.35 சதவீதமும் 1.07 சதவீதமும் ஆகும். தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 46.76 சதவீதம். இதில் கல்வியறிவு பெற்ற ஆதிதிராவிடர் 29.67 சதவீதமும், பழங்குடியினர் 20.45 சதவீதமும் ஆவர்.

3. தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு கொண்டு வந்த பலமுனைத்திட்டங்களின் கீழ் பயன் பெறுவதோடு கல்வி, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வருவாய் கூட்டுறவு, தொழில் போன்றபல பொதுத்துறை திட்டங்களின்



கீழ் ஏனைய பொது மக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களின் பலனையும் இவர்கள் பெறுகின்றனர்.

4. ஆதிதிராவிடர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப் படுத்த புதிதாகக் கொண்டு வரப்பட்ட இரண்டு முக்கியக் குறிக்கோளுடன் கூடிய சிறப்பு உள்ளடக்கத் திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருவதை இந்த அவையினர் நன்கறிவர்.

(1) ஆதிராவிடர்களில் பாதிப்பேர் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர். ஆறாம் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் இவர்கள் வறுமை நிலையிலிருந்து விடுபட்டு நல்ல நிலைமைக்கு வர உதவுதல்.

(2) ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின்வசதி, சுகாதார வசதி,, பள்ளிக்கூடவசதி முதலியவற்றை செய்து கொடுத்தல்.

இவ்விரண்டு நோக்கங்களையும் எய்த, இதர வளர்ச்சித் துறைகளின் முயற்சியையும் நிதி வாயில்களையும் ஒழுங்கு திரட்டப்பட்டு பொதுத் துறையிலிருந்து நன்மையை ஆதிதிராவிடர்கள் பெற அரசு வழி வகுத்துள்ளது. இதற்காக, ஒவ்வொரு வளர்ச்சித் துறைக்கும் திட்ட இலக்கும், நிதி இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் சுமார் 4.46 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு பொருளாதார உதவி செய்யப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் 1.8 இலட்சம் ஆதிதிராவிட குடும்பங்கள் பொருளாதார மேம்பாடு திட்டங்களின் கீழ் பயன்பெறும். 1984-85 ஆம் ஆண்டில் சுமார் 12.3 கோடி ரூபாய் இதற்கென்று செலவழிக்கப்படும். மீதமுள்ள ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமை நிலையிலிருந்து மேம்பாட்டு நிலைக்கு கொண்டு வரும் குறிக்கோளுடன் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆதிதிராவிடர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். நிதி இலக்கம் விவரங்கள் இணைப்பு IX-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்களின் நலனைக் கவனித்துக்கொள்ள தமிழ்நாட்டிலுள்ள 378 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விரிவாக்க அதிகாரியை அரசு 1982-83 ஆம் ஆண்டில் நியமித்துள்ளது. மேலும், சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்படும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களின் திட்ட மேம்பாட்டையும், நிதி மேம்பாட்டையும் கோட்ட அளவிலேயே திறம்பட ஆய்வு செய்து கண்காணிக்க சென்னை மாவட்டதைத் தவிர பிற அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இது இதற்காக திங்கள் ஒருமுறை கூடும். கோட்டாட்சியர் இதன் தலைவராக இருப்பார்.

5. பழங்குடியினர் நலனுக்காக பழங்குடியினர் நலத் துணை திட்டத்தின் கீழ் தனித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரு கின்றன. பழங்குடியினர் நலத்துணைத்திட்டம் வந்ததையடுத்து பழங்குடியினர் மேம்பாட்டு நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கல்வி, பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் ஏனைய திட்டங்களின்கீழ் உள்ள இயல்பான துணைத் திட்டங்களுடன் இத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

6. இந்திய் ஆட்சிப் பணிபதவி நிலையிலுள்ள இயக்குநரின் தலைமையின் கீழ் ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை செயல்பட்டு வருகிறது. பொது நிர்வாகத்தில் இவருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் உள்ள இணை இயக்குநர் ஒருவர் உள்ளார். நேர்முக உதவியாளர் ஒருவரும் உள்ளார். கல்வி தொடர்பான திட்டங்களில் இவருக்கு கல்வித்துறை துணை இயக்குநர் உதவி புரிகிறார். துணை இயக்குநரின் வேலைப் பளு அதிகமாக உள்ளதால், அவருக்கு உதவி புரிய மாவட்டக் கல்வி அலுவலர் ஒருவரை சார் பணி யாளர்களுடன் நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இதனால் இத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் கல்வி மற்றும் நிர்வாக சம்பந்தமாக மேலும் கவனம் செலுத்தி பள்ளிகள் நல்ல முறையில் இயங்கவும் கல்விப் பணிகள் சீராக்கவும் இயலும். கணக்குப் பிரிவின் கணக்கு அலுவலர்கள் இருவர் இயக்குநருக்கு உதவியாக இருக்கின்றனர். இவர்கள் துறை கணக்குகளுக்கும் துறை கணக்கு குறித்து துறை தணிக்கைக்கும் பொறுப்பு வகிக் கின்றனர். பல்வேறு கூட்டுறவுத் திட்டங்கள், சில்லறை வ்யாபாரி களுக்கு வட்டியில்லாக் கடன்கள் வழங்க அனுமதி அளிப்பது ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் கூட்டுறவு துணைப்பதி வாளர் ஒருவர் இயக்குனருக்கு உதவுகிறார். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர்களின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் இத்துறையின் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர். மாவட்ட அளவில் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் செயல்படுத்துவதை ஆய்ந்து கண்காணிப்பது மாவட்ட ஆட்சியாளர்களின் பொறுப் பாகும். குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை முறை யாக செயற்படுத்துவதும் மாவட்ட ஆட்சியாளரின் பொறுப் பாகும்.

7. ஆதிதிராவிடருக்கான சிறப்பு உள்ளடக்கம் கொண்ட திட்டத்தின் கீழ் வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் பழங்குடியினர் நலத்துறைத் திட்டத்தின்கீழ் வரும் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டதன் பயனாக ஆதிதிராவிடர் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார வளர்ச்சி வேகம் பெற்று ளளது. இதுவரை, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்கு நர், இயக்குநர் அலுவலகத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள நலத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டுமே



பொறுப்பேற்றிருந்தார். அரசுத் துறைகளிலும், அரசு பொதுத் துறை நிறுவனங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் ஆதிதிராவிட ருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து கண்காணிக்கவும் அவர் உயர் அதிகாரக்குழுவின் உறுப்பினர்-செயலாளர் என்ற முறையில் பொறுப்பேற்றுள்ளார். இது போன்ற சிறப்பு உள்ளடக்கத் திட்டம் குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பழங்குடியினர் நலத்துணைத் திட்டம ஆகியவை செயற்படுத்தப்படுவதையும் ஆய்வு செய்வதும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரின் பொறுப் பாகும். சிறப்பு உள்ளடக்கம் கொண்ட திட்டம், குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பழங்குடியினர் நல துணைத் திட்டம் ஆகியவை செவ்வனே செயற்படுத்தப்படுவது குறித்து அரசுக்குத் தெரிவிக்கும் கூடுதல் பொறுப்பும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்டங்களிலுள்ள அத்துறை அதிகாரிகள் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர்— பழங்குடியினர் நலத் திட்டங்கள்.

8. ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நல மானியத் கோரிக் கையில் ஒதுக்கப்பட்ட தொகையைத் தவிர ''மூலதனச்செலவு'' என்ற தலைப்பில் ரூ. 540.01 இலட்சமும், ''கடன்கள்-முன் பணங்கள்'' என்ற தலைப்பின் கீழ் ரூ. 70.70 இலட்சமும், ''கொத்தடிமைகளுக்கு புது வாழ்வு அளித்தல்'' என்ற தலைப் பின்கீழ் ரூ. 0.28 இலட்சமும், சாட்டியவை என்பதில் ரூ. 15.02 இலட்சமும் ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் திட்டங்களுக் காக 1984—85 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆதிதிரா விடர்-பழங்குடியினர் நலத் திட்டத்திற்காக 1984—85 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 5,429.22 இலட்சம் ஒதுக்கப்படும்..

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலனுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பணிகள் பின்வரும் மூன்று பெருந்தலைப்பு களாக வகைப்படுத்தப்படுகின்றன :—

(1) கல்வி.

(2) வேலைவாய்ப்பு பொருளாதார மேம்பாடு.

(3) பொதுச் சுகாதாரம், வீட்டு வசதி.

(1) கல்வி :

9. ஆதிதிராவிடர்-பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு முதன்மையானதாகவும், இன்றியமையாததாக வும் திகழ்வது கல்வி தான் என்பதை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை. தற்போது ஆதிதிராவிடர்-பழங்குடியினர் மாணவர்களுக்கென்றே ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் துறை நடத்தி வரும் பள்ளிகளில் மட்டுமல்லாமல், கல்வித்துறை தனியார் நிறுவனம் நடத்தும் பள்ளிகளிலும் அவர்களுக்கு தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைக் கல்வி அளிக்கப்

படுகிறது. வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு ஒதுக்கப்படும் தொகையில் பெரும்பகுதியானது கல்விக்காக ஆண்டு தோறும் செலவிடப்படுகிறது. அதன் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலனுக்காக மொத்த ஒதுக்கீட்டுத் தொகை. | ஆதிதிராவிடர்-பழங்குடியினர் கல்விக்காக மட்டுமான ஒதுக்கீடு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1981–82 | 2,702.17 | 1,791.25 |
| 1982–83 | 4,285.64 | 2,117.58 |
| 1983–84 | 4,460.99 | 2,378.27 |
| 1984–85 | 4,828.62 | 2,617.17 |

படிப்புதவித் தொகை.

**10. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு:**

1976-77 ஆம் ஆண்டு இறுதிவரை, முதல் வகுப்பு முதல்
பதினோராம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் (இந்து)
பழங்குடியினர், கிறித்தவராக மாறிய ஆதிதிராவிடர் மாணவர்
களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்காக மாணவ
ரில்லங்களில் தங்கிப் பயிலாதவர்களுக்கான படிப்புதவித் தொகையும்
வழங்கப்பட்டது. இந்த படிப்புதவித் தொகை, புத்தகங்களுக்
காகவும், தனிக் கட்டணங்களுக்காகவும் ரொக்கமாகக் கொடுக்
கப்பட்டது. படிப்புதவித் தொகையுடன், அவசியமான போது
தேர்வுக் கட்டணங்களும் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது.
இந்த படிப்புதவித் தொகை வழங்க, பெற்றோர்/பாதுகாவலரின்
அதிக அளவு ஆண்டு வருமானம் ரூ. 3,000 என்று நிர்ணயிக்கப்
பட்டிருந்தது. 1977-78 ஆம் ஆண்டு முதற்கொண்டு, நான்காம்
வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் பயிலும் ஆதிதிராவிட
(இந்து) பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி
திராவிடர் மாணவர்களுக்கு, அவர்களின் பெற்றோரின்/பாதுகாவ
லரின் வருமானத்தைப் பாராமல் இலவசமாகப் பாடப் புத்தகங்
கள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு
வரை பயிலும் மாணவர்களுக்குக் கல்வித் துறை இலவசமாக
புத்தகங்களையும், சிலேட்டுகளையும் வழங்கி வருகிறது. சம்
பந்தப்பட்ட நிலையங்களுக்குத் தனிக் கட்டணங்களைத் திருப்பி
கொடுப்பது தொடர்பான சலுகைகள், தேர்வுக் கட்டணங்களைச்
செலுத்துவதில் அளிக்கப்பட்ட சலுகைகள், ஆதிதிராவிடர்-
பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்
மாணவர்களுக்கு, அவர்களுடைய பெற்றோரின்/காப்பாளரின்
வருமானத்தைக் கருதாமல் அளிக்கப்படுகிறது. இச்சலுகைகளு
னால், IV முதல் X ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில்



பயிலும் மாணவர்களில் இந்து ஆதிதிராவிடர்-பழங்குடியினர் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த சுமார் 8.26 இலட்சம் மாணவர்கள் 1982-83 ஆம் ஆண்டில் பயனடைந்தனர். இதைத் தவிர, பள்ளிகளுடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் VI முதல் X வகுப்புகளில் பயிலும் இந்து ஆதிதிராவிடர்-பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு, மாணவர் இல்லங்களில் தங்கிப் பயில்வதற்குரிய கட்டணங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பிற்கு மாணவர் இல்லங்களில் தங்கிப் பயில்வதற்கான கட்டணத் தொகைக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ.3,000-லிருந்து ரூ.6,000-மாக உயர்த்தப்பட்டது. இது 1981-82 ஆம் கல்வி ஆண்டிலிருந்து செயலுக்கு வந்தது. தங்கிப் பயிலும் மாணவர் ஒருவருக்கு 1981-82 ஆம் ஆண்டில் உணவு, தங்குவதற்குரிய கட்டணங்கள் வகையில் வழங்கப்படும் தொகை திங்களொன்றுக்கு 10 ரூபாய் உயர்த்தப்பட்டது. உணவு மற்றும் தங்குவதற்குரிய தற்போதைய கட்டண வீதம் ஆண்டொன்றுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 350 வரை ஆகும். இந்தச் சலுகை மாணவர் அல்லது மாணவி எந்த வகுப்பில் பயிலுகிறார் என்பதைப் பொறுத்து வழங்கப்படுகிறது.

**11. மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு.**

மெட்ரிக் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் இந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் அனைவருக்கும் அவர்களுடைய பெற்றோரின்/காப்பாளரின் வருமானத்தைக் கருத்திற் கொள்ளாமல் படிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. இவ்விதம் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்புக்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு எல்லா வகுப்புகளிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

மேல்நிலைப் பள்ளிப் படிப்பு, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு, கலைக் கல்வி, அறிவியல் கல்வி, உயர்மட்ட தொழில் நுட்ப பயிற்சிகள் ஆகியவற்றைப் பயிலும் இந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர் இல்லத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவர் இல்லத்தில் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் (எம்மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கருத்திற் கொள்ளாமல்) மத்திய அரசின் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசின் படிப்புதவித் தொகையைப் பெறத் தகுதியற்ற இந்து ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர்களுக்கும் (அவர்கள் எம்மதத்தைச் சேர்ந்தவராயினும்) கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும், மாநில அரசின் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசின் உதவித் தொகையைப் பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டு ஒன்றுக்கு

[1984 மார்ச் 22.

ரூ. 9,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக 1—7—1981 முதற் கொண்டு உயர்த்தப்பட்டது. மாநில அரசின் உதவித் தொகையை பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,000 லிருந்து ரூ. 6,000 ஆக 1981-82 ஆம் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப்பட்டது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மருத்துவ பொறியியற் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மாணவர் இல் லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் பராமரிப்புப் படியினை மத்திய அரசு 1—1—1978 லிருந்து திங்களொன்றுக்கு ரூ. 60 ஆக உயர்த்தியது. ஏனைய படிப்பு களுக்கும், பராமரிப்புப் படியை 1—7—1981 லிருந்து திங்க ளொன்றுக்கு ரூ. 5 லிருந்து ரூ. 60 வரை உயர்த்தியுள்ளது. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட பராமரிப்புப் படிகள், மாணவர் அல்லது மாணவி எந்த வகுப்பில் பயிலுகிறார் என்பதைப் பொறுத்து வழங்கப்படுகிறது. மத்திய அரசு வழங்கும் படிப் புதவித் தொகையில் பராமரிப்புச் செலவிற்கான தற்போதைய தொகை திங்களொன்றுக்கு ரூ. 50 லிருந்து ரூ. 200 வரை உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு உயர்த்தப்பட்ட தொகை மாணவர் அல்லது மாணவி எந்த வகுப்பில் பயிலுகிறார் என் பதையும் மாணவர் இல்லத்தில் தங்கிப் பயிலுகின்றாரா இல்லையா என்பதைப் பொறுத்தும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் பயனடைந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1977-78லிருந்து 1982-83 வரையிலான ஆண்டு களில் செலவிடப்பட்ட தொகை ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | மாநில அரசின் விதிமுறைகளின்கீழ். மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பு. (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை). | மாநில அரசின் விதிமுறைகளின்கீழ். மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு. (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை). | தொகை (ரூபாய் இலட்சத்தில்). | மத்தியஅரசின் விதிமுறைகளின்கீழ் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு. (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை) | தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| ஆதிதிராவிடர்கள் : | | | | | |
| 1977-78 .. | 6,10,070 | 4,930 | 83.48 | 18,050 | 153.67 |
| 1978-79 .. | 6,69,688 | 3,819 | 102.46 | 18,254 | 153.02 |
| 1979-80 .. | 7,74,964 | 5,887 | 160.67 | 22,890 | 213.41 |
| 1980-81 .. | 7,79,444 | 8,229 | 171.49 | 39,214 | 278.10 |
| 1981-82 .. | 7,88,781 | 8,149 | 152.23 | 43,940 | 415·21 |
| 1982-83 .. | 8,25,898 | 8,362 | 175.97 | 49,920 | 446.80 |



1984 மார்ச் 22]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| பழங்குடியினர் : | | | | | |
| 1977-78 .. | .. | .. | .. | 225 | 2.52 |
| 1978-79 .. | 3 | .. | 0.01 | 218 | 1·97 |
| 1979-80 .. | .. | 1 | 0.01 | 69 | 0.74 |
| 1980-81 .. | 53 | .. | 0.10 | 255 | 2.08 |
| 1981-82 .. | 39 | .. | 0.09 | 473 | 2.88 |
| 1982-83 .. | .. | 48 | 0.12 | 374 | 8.15 |

குறிப்பு : மத்திய அரசின் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1978-79 ஆம் ஆண்டு முடிவில் செலவிடப்பட்ட தொகையை விட அதிகமாகச் செலவிடப்பட்ட தொகையை மத்திய அரசு ஏற்கும். எஞ்சிய தொகையை பொறுப்பேற்ற செலவுத் தொகையாக மாநில அரசு ஏற்கும்.

மத்திய அரசின் படிப்புதவித் தொகை குறித்த நடைமுறை களின் கீழும் மாநில அரசின் படிப்புதவித் தொகை குறித்த அறிக்கையின் கீழும், மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட அனைத்துப் படிப்புகளுக்கும் படிப்புதவித் தொகை வழங்குவதற்கு கல்வி நிறுவனங்களின் தலைவர்களே ஒப்புதலளிக்கும் அதிகாரி களாவர் என்று 1982-83 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பள்ளி இறுதி வகுப்பில் தேறியிருக்க வேண்டிய அவசியமில்லாத தொழில் நுட்ப பயிற்சிப் படிப்புகளும் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பாகக் கருதப்படும்.

இப்புதிய நடைமுறையின்படி, 1982-83 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட படிப்புதவித் தொகையின் முதல் தவணைத் தொகை செலவிடப்பட்ட தொகையில் 90 சதவீதத்திற்குச் சமமான தொகை 1983-84 ஆம் ஆண்டில் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையின் முதல் தவணைத் தொகையாகப் பிரித்துக் கொடுப்பதற்கான முன் பணமாக கல்வி நிறுவனங்களின் தலைவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 58,000 மாணவர்களுக்கு முதல் தவணைத் தொகை வழங்குவதற்காக, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்புகளைக் கொண்ட 1,400 கல்வி நிறுவனங்களுக்கு இதுவரை ரூ. 281.16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத் தலைவர்கள் வழங்கிய படிப்புதவித் தொகையை அடிப்படையாகக் கொண்டு படிப்புதவித் தொகையின் இரண்டாம் தவணைத் தொகை வழங் கப்பட உள்ளது.

12. செயலாக்கத் திட்டம்.

கல்வியில் சிறந்து வரும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ் வொரு மாவட்டத்திலும் பள்ளி இறுதித் தேர்வில் முதலாவ தாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் ஆதிதிராவிடர் மாணவர்கள் (ஆண்கள்) இருவருக்கும், இறித்தவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் (ஆண்கள்) இருவருக்கும்

மேற்படிப்பைத் தொடர்வதற்கு உதவியளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றிற்கு (விடுமுறைக் காலம் உட்பட) ரூ. 80 கல்விச் சிறப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. அம்மாணவர்கள் மாணவர் இல்லத்தில் தங்கவேண்டும் என்ற நியதியோ அல்லது அவர்களுடைய பெற்றோரின் வருமானத்திற்கு வரம்போ இத்திட்டத்தின்கீழ் வரையறுக்கப்படவில்லை. 10+2+3 என்ற கல்வி முறை கொண்டு வரப்பட்ட பின்னர் 10-ஆம் வகுப்பில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் வெற்றி பெறும் ஆதிதிராவிடர் (ஆண்கள்) மாணவர்களுக்கும், கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும் 1978-79 ஆம் ஆண்டு முதல் படிப்புதவித் தொகை வழங்கப்படுகின்றது. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர் மாணவியர், கிறித்தவர்களாக மாறிய ஆதிதிராவிடர்/பழங்குடியினர் (ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும்) இத்திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுத்தேர்வில் மிக அதிகமாக மதிப்பெண்களையும் அதற்கு அடுத்த அதிகமான மதிப்பெண்களையும் ஒரே மாதிரியாகப் பெறும் மாணவர்கள் இருவருக்கும் மேற்பட்டு இருப்பார்களேயானால், அவர்களுக்கு இப்படிப்பு உதவித் தொகை முழுவதும் வழங்கப்படும். மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்களுடைய உணவுக் கட்டணம், மாணவரில்ல வாடகைக் கட்டணம் ஆகியவற்றைக் கழித்துக்கொள்ளாமல் பரிசுத்தொகை முழுவதும் வழங்கப்படுகிறது.

1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

13. காந்தியடிகள் நினைவு படிப்புதவித் தொகை.

கல்வியில் சிறந்து விலங்கும் இந்து ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழக்கமாக அளிக்கப்படும் படிப்புதவித் தொகையுடன் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலைக் கல்வித்தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு "காந்தியடிகள் நினைவுப் படிப்புதவித்தொகை" வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு மாணவரும் ஒரு மாணவியும் தெரிந்தெடுக்கப்படுவர். படிப்புதவித்தொகை முதலாண்டிற்கு ரூ. 1,500-ம் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 1,000-ம் வழங்கப்படுகிறது.

14. காந்தி நினைவுப் பரிசுத் திட்டம்.

கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோரின் நலனைக்கருதி "காந்தி நினைவுப் பரிசுத் திட்டத்தைப்" போன்றே தகுதி-வருவாய் பரிசுத் திட்டம் 1976-77 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவரும் ஒரு



மாணவியும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவரும் ஒரு மாணவியும் இப்பரிசுத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

15. தகுதிக்கென்று வழங்கப்படும் தனி மானியம்.

பள்ளி இறுதித்தேர்விலும், புகுமுக வகுப்புத் தேர்விலும் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெற்றுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தகுதி மானியமாக ரூ. 300-ஐ 1976-77 முதல் ஒவ்வொராண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை 1980-81 ஆம் ஆண்டு முதல், பள்ளி இறுதித் தேர்விலும் (10 ஆண்டு பாட முறைத் திட்டம்) மேல் நிலைக் கல்வி படிப்பின் இரண்டாம் ஆண்டிற்குரிய தேர்விலும் 60 சதவீதம் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர்; பழங்குடியினர், கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்தத் தகுதி மானியம் வழங்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக ரூ. 14.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

16. கடன் படிப்புதவித் தொகைகள்.

பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற் கல்வி கற்கும் மாணவர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகையைவிட அதிகப்படியான தொகையினை செலவிட வேண்டியுள்ளது. எனவே அரசு இதனைப் பரிசீலித்து, நிதி உதவி தேவைப்படும் மாணவர்களுக்குக் கடன் வழங்க ஆணை பிறப்பித்து உள்ளது. 1974-75 ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்புப் பயிலும் மாணவர்களுக்கும் கடன் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை, இதற்குச் செலவிடப்பட்ட தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு:—

| ஆண்டு. | ஆதிதிராவிடர்-பழங்குடியினர். எண்ணிக்கை. | ஆதிதிராவிடர்-பழங்குடியினர். வழங்கப்பட்ட தொகை. | கிருத்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர். எண்ணிக்கை. | கிருத்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர். வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1979-80 | 4,912 | 36.09 | 153 | 0.89 |
| 1980-81 | 6,015 | 57.78 | 158 | 1.13 |
| 1981-82 .. .. | 7,884 | 54.62 | 176 | 1.09 |
| 1982-83 .. | 7,547 | 51.45 | 415 | 2.79 |
| 1983-84 .. .. (15-2-1984 வரை). | 5,675 | 41.36 | 326 | 2.06 |

1984-85-ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 56.75 இலட்சமும், இறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 2.35 இலட்சமும் ஒதுக்கப்பட்டு உள்ளது.

மேலும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் நேரடி வசதியற்ற கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல் தோல் பதனிடுதல், தோல் உரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆதிதிராவிடர் அல்லாத வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்காக வழங்கப்படும் படிப்புதவி தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது. 1983—84-ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மாணவர்களை அதிக எண்ணிக்கையில் சேர்க்கவேண்டும் என்று சிறப்பான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இத்திட்டம் மாநிலம் முழுவதிலும் தற் போது செயல் படுத்தப்பட்டுவருகிறது. மேலும், 500 மாணவர்களுக்கு மேலாக இத்திட்டத்தின் கீழ் பயன் பெறு வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1984-85—ஆம் ஆண்டிற்கு ரூ. 6.60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

17. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள்:—

(அ) ஆதிதிராவிடர்:—இம்மாநிலத்தில் 952 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| 1. தொடக்கப்பள்ளிகள் .. .. | 842 |
| 2. நடுநிலைப் பள்ளிகள் .. .. .. | 71 |
| 3. உயர்நிலைப் பள்ளிகள் .. .. | 31 |
| 4. மேல்நிலைப் பள்ளிகள் .. .. | 8 |
| மொத்தம் .. .. | 952 |

இப்பள்ளிகளில் ஆதிதிராவிடா, பழங்குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 2.05 லட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.



(ஆ) பழங்குடியினர்.—இத்துறை பழங்குடியினருக்காக 150 பள்ளிகளை நடத்தி வருகிறது. அவற்றின் விவரம் வருமாறு—

| | |
|---|---|
| அரசு பழங்குடியினர் உறைவிட தொடக் பள்ளிகள். | 130 |
| அரசு பழங்குடியினர் உறைவிட நடு நிலைப் பள்ளிகள். | 12 |
| அரசு பழங்குடியினர் உறைவிட உயர்-நிலைப் பள்ளிகள். | 4 |
| அரசு பழங்குடியினர் உறைவிட மேல் நிலைப் பள்ளிகள். | 3 |
| அரசு பழங்குடியினர் உறைவிடம் இல்லாத பள்ளி. | 1 |
| மொத்தம் | 150 |

மேற்குகூறிய உறைவிடப் பள்ளிகளில் இலவச உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் 9,198 மாணவர்கள் பயனடை கின்றார்கள். 1983—84-ஆம் ஆண்டில் புதிதாக 12 பழங் குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட் டுள்ளன.

1982—83-ஆம் ஆண்டில் 3 பழங்குடியினர் உறைவிட தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 2 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப் பட்டுள்ளன. பள்ளி ஆண்டில் மாணவிகள் குறிப்பாக மேல் நிலைக் கல்வி பயிலும் ஆதி திராவிடர் பழங்குடி மாணவியர் தம் கல்வியை இடையிலேயே நிறுத்தி விடுவதைத் தவிர்க்க வும், அதிக எண்ணிக்கையில் மாணவர்களை சேர்க்கவும் பள்ளித்தலைமை ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பரிசுத்திட்டம் ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

1983—84-ம் ஆண்டில் அரசு கீழ்க்கண்டவாறு ஐந்து உயர் நிலை மேல்நிலைப் பள்ளிகளை பிரித்து மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கென தனித்தனி பள்ளிகளாக உருவாக்கியுள்ளது. (சென்னை ஒன்று) செங்கல்பட்டு (இரண்டு) வடாற்காடு (ஒன்று) மற்றும் திருச்சிராப்பள்ளி (ஒன்று).

மேலும் தலைமை ஆசிரியர்களுக்கென 5 பணியிடமும், முதுநிலை பட்டதாரி உதவியாளருக்கென 2 பணியிடமும், பட்டதாரி உதவியாளர்களுக்கென 23 பணியிடமும், தமிழ் பண்டிதர்களுக்கென 13 பணியிடமும் உடற்கல்வி பயிற்சி

யாளர்களுக்கென 6 பணியிடமும் இடைநிலை உதவியாளர் களுக்கென 163பணியிடமும், கைத்திறத் தொழில் பயிற்சிகளுக் கென 9 பணியிடமும் ஓவிய ஆசிரியர்களுக்கென 9 பணியிடமும் இளநிலை உதவியாளர்களுக்கென 18 பணியிடமும், தட்டச்சர் களுக்கென 34 பணியிடமும் ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு மேசை, நாற்காலிகள் கணித சாதனங்கள், நூலக வசதிகள், துப்பரவு வசதிகள், விளையாட்டுச் சாமான்கள் ஆகியவற்றை வழங்கவும். கருதப் பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை நடத்தும், பள்ளிகளுக்குக் கட்டிட வசதி செய்து கொடுப்பதற்காக 1980-81-இல் ரூபாய் 1 கோடி செலவில் அனுமதிக்கப்பட்ட திட்டம் ஒன்று 1981-82-ல் தொடர்ந்து செயல் படுத்தப் பட்டது.

1984-85 அம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள்கட்டுவதற்காக ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் மூலம் நடத்தப்பெறும் 39 ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளிகள்/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணித சாதனங்கள், போதனை வசதிகள் மற்றும் சுவர் வரை படங்கள் வழங்குவதற்காக 0.72 லட்சம் ரூபாய் வழங்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

18. மாணவ மாணவியருக்கு உடைகள் வழங்குதல்:

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் பயிலும் அல்லது அரசினர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவியர் அனைவருக்கும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு ஜதை உடைகள், வழங்கப்படுகின்றன. 4 முதல் 10 வரையில் உள்ள வகுப்பு களில் பயிலுகின்றவர்களும் அரசின் ஆதிதிராவிடர் நல மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுவர்களுமான மாணவர் களுக்கு இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1 முதல் 8 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவரா யிருப்பினும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு உடைகள் வழங்கப் படுகின்றன. இந்த இரண்டு ஜதை உடைகளும் கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் உறைவிடப்பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள சாரணர்களுக்கு சாரண பயிற்றுநர்களுக்கும் 1982-83 ஆம் ஆண்டிலிருந்து சீருடைகள் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் 1.25 இலட்சம் ரூபாய் இதற்கென்று சேர்க்கப் பட்டுள்ளது.



19. கல்விச் சுற்றுலா:

மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை முக்கியமான இடங் களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லும் திட்டம் 1969-70 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலிருந்தும் 40 மாணவர்களை கல்வி—சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும், ரூ. 1,000 வழங்கப்படு கிறது. அதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 0.37 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

20. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1-முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் 5 வயது முதல் 14 வயது வரை யுள்ள மாணவர்களுக்கு நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 45 காசு செலவில் சத்துணவு வழங்கும் முதலமைச்சரின் சத்துணவு திட்டம் 1983-84 ஆம் ஆண்டில் செயல்படுத்தப் பட்டது.

45. காசு செலவில், 34 காசு உணவுப்பொருள் வழங்குதுறை யாலும், மற்றும் கூட்டுறவுச் சங்கங்களும் வழங்கும் அரிசி, எண்ணெய், பருப்பு போன்றவற்றிற்காக சரிக்கட்டப்படுகிறது. எஞ்சிய 11 காசு காய்கறிகள், சுவைப் பொருட்கள், வாங்கு வதற்காக மானியமாக வழங்கப்படுகிறது. துறை நடத்தும் 14 பள்ளிகள் உட்பட ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப்பள்ளி களில் பயிலும் 1,77,815 மாணவர்களுக்கு 1,070 மையங்களில் சத்துணவு வழங்கப்படுகிறது.

இதுவரையில் 1,092 சமையற்காரர்களும், 1,064 உதவியாளர் களும் சத்துணவுக் கூடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். வொரு சத்துணவுக் கூடத்திலும் ஒரு பகுதி நேர அமைப்பாளர், மாதம் 150 ரூபாய் மதிப்பூதியத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். வரசப் பகுதிகளில் உள்ள சத்துணவுக் கூடங்களில் குழந்தை களுக்கு பற்பொடி வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலப் பள்ளிகளில் புதிய மதிய உணவு வழங்குவதற்காக 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 109.56 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

21. மாணவர்களுக்குப் பாடபுத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், எழுது பலகைகள் முதலியவற்றை வழங்குதலும் பள்ளிகளுக்குச் சாதனங்கள் வழங்குதலும்.

இம்மாநிலத்தில் ஆதி திராவிடர்களுக்காகவும், பழங்குடி யினருக்காகவும் 1,102 பள்ளி களை இத்துறை நடத்தி வருகிறது. கல்வியாண்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு, இப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்

அனைவருக்கும் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாய்
இருந்தாலும் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள்,
எழுது பலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.
இத்திட்டத்தின்கீழ் 1983-84 ஆம் ஆண்டில் 2.13 இலட்சம்,
மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக 1984-85 ஆம் ஆண்
டில் ரூ. 37.07 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

22. ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணி
புரியும் ஆசிரியர்களுக்குச் சமவெளிகளில் ஒவ்வொன்றும் ரூபாய்
15,080 செலவிலும், மலைப் பகுதிகளில் ஒவ்வொன்றும் ரூபாய்
17,000 செலவிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இது
வரை 182 ஆசிரியர்கள் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.
மலைப் பகுதிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ரூ. 41.10
இலட்சம் ரூபாயில் 1983-84 ஆம் ஆண்டில் 137 தனி நபர்
வசிக்கும் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு ஆணைகள் இடப்
பட்டுள்ளன. இதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 4.65
இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன. இதில் ஆசிரியர்கள்
குடியிருப்புகளைப் பராமரிப்பதற்கான செலவும் அடங்கும்.

23. குழந்தைகள் காப்பகம்;

1977-78 ஆம் ஆண்டிலிருந்து 1980-81 ஆம் ஆண்டு வரையில்
ஒவ்வோராண்டும் 50 என்ற வீதத்தில் குழந்தைகள் காப்பகங்
களை ஏற்படுத்த அரசு அனுமதித்து வந்துள்ளது. 200 குழந்தை
கள் காப்பகங்களை ஏற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. குழந்
தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் 70 குழந்தைகள் உள்ள
னர். பணி புரியும் மகளிரின் குழந்தைகளைப் பார்த்துக் கொள்
ளும் பொறுப்பினை அவர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வதும்
வளர்ந்து வரும் வயதில் அவர்களுக்கு தூய சுகாதாரமான நல்ல
பழக்க வழக்கங்களைக் கற்பிப்பதும், அக் குழந்தைகளுக்குப்
பள்ளி செல்லும் பழக்கத்தை உருவாக்குவதும் இதன் நோக்க
மாகும். 3 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் இக்
காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இத்திட்டம் நண்பகல்
உணவுத் திட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்
காக 1984-85 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5.77
இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

24. தட்டச்சு, சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம்:

தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர்,
பழங்குடியினர் மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை
யாதலால், தட்டச்சு, சுருக்கெழுத்தர் பதவிகளில் அவர்களுக்காக
ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள 18 சதவீத இடங்களை நிரப்ப
இயலாது போகிறது. இதனைக் கருத்திற் கொண்டு, தனியார்
நடத்தும் வணிகக் கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் மாணவர்களுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்தில்
பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு
வந்தது. இத்திட்டத்தின்படி 950 மாணவர்களுக்கு தட்டச்சுப்



பயிற்சியும், 475 மாணவர்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சியும்
அளிக்கப்படுகிறது. இதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 3.54
இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

25. சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி.

சட்டத் தொழிலை மேற்கொள்ள ஆதி திராவிடர் பழங்குடி
யினரைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம்
அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம்
ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத் திட்டத்தின்கீழ்
சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்புகிற ஆதி திராவிடர்
பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த சட்டம் பயின்ற பட்டதாரி
கள் ஐவருக்கு 1974-75ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட நிதி
உதவிகள் அளிக்கப்படுகின்றன :—

(i) வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்வதற்கான கட்
டணம், வழக்குரைஞர்கள் அறைக்கான வாடகைக் கட்டணம்
முதலிய வகையில் ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 கடன்.

(ii) புத்தகங்கள், மேசை, நாற்காலி முதலியவை வாங்க
ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 உதவித் தொகை.

1982-83ஆம் ஆண்டிலிருந்து இத் திட்டத்தின்கீழ் தெரிந்
தெடுக்கப்படும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 5-லிருந்து 15 ஆக
அதிகரிக்கப்பட்டுள்ளது.

26. கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம்.

கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம்,
அரசியல், கணிதம் போன்ற பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்
கும் பொருட்டு, சென்னை மாநகரில், மாணவர்களுக்காக ஒரு
நிலையமும், மாணவிகளுக்காக ஒரு நிலையமும் ஆக இரண்டு
நிலையங்கள் இரு திங்கள் காலத்திற்கு செயல்படுகின்றன. இந்த
வசதி, 1976-77 இல் மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்
களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி வசதி 189 கல்
லூரிகள் அனைத்திலும் ஓராண்டில் இரு திங்கட்கு அளிக்கப்
பட்டது. இப்பயிற்சிக் காலத்தின்போது ஒவ்வொரு கல்லூரிக்
கும் ரூ. 1,000 மொத்தத் தொகையாக அளிக்கப்படுகிறது.
1984-85 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்
படுத்தப்படும். இதற்காக இவ்வாண்டில் ரூ. 1.00 இலட்சம்
நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்
டின்கீழுள்ள 7 பொறியியல் கல்லூரிகளில் பயிலும் ஆதி திரா
விடர், பழங்குடியினர் மாணவர்களுக்கும் இச்சிறப்புப் பயிற்சித்
திட்டத்தை 1981-82 ஆம் ஆண்டில் அரசு விரிவுபடுத்தியுள்ளது.
இத்திட்டம் 1984-85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்
படுத்தப்படும்.

27. மாணவர் இல்லங்கள்.

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் பயிற்சிப்பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் தேவை, நிதி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் புதிய மாணவரில்லங்கள் திறக்கப்படுகின்றன. ஆதி திராவிடர், பழங்குடியினர் நல மாணவர் இல்லங்களில் கீழ்க்கண்டவாறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் :—

| ஆதி திராவிடர் மாணவர் இல்லங்கள் | சதவீதம். |
|---|---|
| (1) | (2) |
| ஆதி திராவிடர், பழங்குடியினர் .. .. .. | 75 |
| பிற்பட்ட வகுப்பினர், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் .. .. | 20* |
| முன்னிலை வகுப்பினர் .. ... .. .. | 5 |
| **பழங்குடியினர் மாணவர் இல்லங்கள்** | |
| பழங்குடியினர் .. .. .. .. .. | 60 |
| ஆதி திராவிடர் .. .. .. .. .. | 30 |
| பிற்பட்டோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையினர் .. .. .. .. | 10 |

1983-84 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்கென்று உள்ள 685 மாணவர் இல்லங்களில் மொத்தம் 43,438 மாணவர்கள் பயனடைந்தனர். மாணவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் 10 சதவீதம் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினரைப் பொறுத்தமட்டில், மொத்தம் 905 மாணவர்களைக் கொண்ட 20 மாணவர் இல்லங்கள் உள்ளன. 1983-84 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்காக 10 புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில் 460 மாணவர்கள் தங்கலாம். இவற்றில் இரண்டு மாணவர் இல்லங்கள், சுகாதாரமற்ற தொழில்களில் ஈடுபடுபவர்களின் குழந்தைகளுக்கென்றே ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் தங்கலாம். இவைகளில் ஒன்று வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூரிலும், மற்றொன்று மதுரை மாவட்டம் திண்டுக்கல்லிலும் துவங்கப்படும். 1984-85 ஆம் ஆண்டு 8 கல்லூரி மாணவியர் விடுதிகளும், 6 உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகளும், 12 உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதிகளும் ஆக மொத்தம் 26

*குறிப்பு.—பிற்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட இருபது விழுக்காட்டில் விதவைகளின் குழந்தைகளும், உடல் ஊனமுற்ற குழந்தைகளும் அடங்கும்.



விடுதிகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன. தவிர, தொழில் பயிற்சி மாணவர்களுக்காக இரண்டு விடுதிகள் திறக்கப்பட உள்ளன.

ஜவ்வாது மலையில் வாழும் பழங்குடி மாணவியர் ஜமுனா மருதூரில் உள்ள பள்ளிக்குச் செல்ல தினமும் 15 கிலோ மீட்டர் கூடுதலாக பிரயாணம் செய்ய வேண்டியுள்ளதால் அநேக மாணவிகள் கல்வியை இடையிலேயே நிறுத்திவிடுகிறார்கள். இதே நிலை திருச்சி மாவட்ட பச்சைமலைப் பகுதியில் நிலவி வருகிறது. ஆகவே, இப்பகுதியிலுள்ள பழங்குடியினர் மாணவியர்களின் இடர்ப்பாடுகளைக் களைய வேண்டி 2 பழங்குடி மாணவியர் விடுதிகள் 1984-85-ல் ரூ. 1.35 இலட்சத்தில் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் புதிய மாணவரில்லங்களைத் திறப் பதற்கும் 705 மாணவரில்லங்களை (ஆதி திராவிடர்களுக்கு 685 பழங்குடியினருக்கு 20) பராமரிப்பதற்கும் ரூ. 550.49 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள அரசு ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ. 2 மதிப்புள்ள விளையாட்டுப் பொருட்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

ஆதி திராவிட மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல்லங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்கள் வருமாறு :—

| | மாணவர் இல்லங்களின் வகை. | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கட்டணம். |
|---|---|---|
| | (1) | (2) |
| | | ரூ. |
| 1 | சென்னை நகரிலுள்ள அரசு கல்லூரி மாணவர்/மாணவியர் இல்லங்கள் சென்னை மாநகரிலுள்ள அரசு தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்கள் .. .. .. .. | 95 |
| 2 | வெளியூர்களிலுள்ள அரசு கல்லூரி மாணவர்/மாணவியர் இல்லங்கள், அரசு தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்கள் .. .. | 80 |
| 3 | உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள் .. .. .. .. .. | 60 |

பழங்குடியினர் உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கும், பழங்குடியினர் மாணவர் இல்லங்களுக்கும் அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்களின் விவரம் வருமாறு :—

| வகை. (1) | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கட்டணம். (2) |
|---|---|
| | ரூ. |
| பழங்குடியினர் உறைவிட தொடக்க பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் .. .. .. .. .. | 45 |
| பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப்பள்ளி, மேல் நிலைப்பள்ளி .. .. .. .. .. | 60 |

1983-84 ஆம் ஆண்டில், அரசுக் கல்லூரி தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்களில் தங்கிப் படிப்பவர்களுக்கு சிறிய மேசை ஒன்றும், நாற்காலி ஒன்றும், 4.25 லட்சம் செலவில் வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது.

மலைப்பகுதிகளில் அமைந்துள்ள பழங்குடியினர் உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கும், பழங்குடியினர் மாணவர் இல்ல மாண வர்களுக்கும் 1983-84 ஆம் ஆண்டில், கம்பளிச் சட்டைகள் வழங்குவதற்கென ரூ. 2.99 இலட்சமும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

28. அரசு இல்லங்களிலுள்ள மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலையில் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல்.

இத் துறை நடத்திவரும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலைகளில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப்படுகின்றன.

29. மாணவ, மாணவியர் இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல்

ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை நடத்தும் 705 அரசு இல்லங்களில் (ஆதி திராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு 685, பழங்குடியினர் மாணவர்களுக்கு 20) 206 இல்லங்கள் (ஆதி திராவிடர்களுக்கு 191, பழங்குடியினர்களுக்கு 15) அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன. ஆதி திராவிடர், பழங்





யினர் மாணவ/மாணவியர்களுக்கான இல்லங்களைக் கட்டும் பணியை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் மேற்கொண்டுள்ளது. இதுவரையில், ஆதி திராவிடர்களுக்காக 241 இல்லங்கள் (ஆதி திராவிடர்களுக்கு 237, பழங்குடியினர்களுக்கு 4) கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவற்றில் 127 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டன. இவற்றில் 126 விடுதிகள் ஆதி திராவிடர்களுக்கும், 1 விடுதி பழங்குடியினருக்கும் ஆகும். 114 இல்லங்கள் கட்டும் பணி (ஆதி திராவிடர்களுக்கு 111, பழங்குடியினருக்கு 3) பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது.

1984-85 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவ, மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக ரூ. 240.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

30. பகுதி நேர சிற்றாசிரியர்கள்.

ஆதி திராவிடர், பழங்குடியினருக்கான அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்கள் தேர்வுகளை சிறப்பாக எழுத துணை புரியும் பொருட்டு, பகுதி நேர சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இத்தகைய பகுதி நேர சிற்றாசிரியர்கள் பதவிகள் 248 உள்ளன. இவை தவிர கல்லூரி மாணவர் இல்லங்களுக்காக மூன்று பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகளும், தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள நந்தனார் அரசு மாணவர்/மாணவியர் இல்லங்களில் ஐந்து பதவிகளும் உள்ளன. அக்டோபர் முதல் நாள் தொடங்கி ஓர் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள். மேல்நிலைக் கல்வி புதியதாகத் தொடங்கப்பட்டதால், உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்களில் ஒன்பதாவது, பத்தாவது வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பதினைந்தும் அதற்கு மேற்பட்டும் இருப்பின் பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதற்காக 1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.47 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

31. தனியார் நடத்தும் மாணவர் இல்லங்களுக்கான உதவித் தொகை.

ஆதி திராவிடர், மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான அரசு இல்லங்களைத் தவிர, 41 இல்லங்கள் ஆதி திராவிடர் மாணவர்களுக்காகவும், நான்கு பழங்குடியினர் மாணவர்களுக்காகவும் உறைவிடப் பள்ளிகள் தனியார் நிறுவனங்கள் அரசு நிதியுதவியுடன் நடத்தி வருகின்றன.

உதவித் தொகை பெறும் இல்லங்களுக்கு அளிக்கப்படும் உணவு மானியத் தொகையை 1981–82 ஆம் கல்வி ஆண்டிலிருந்து அரசு உயர்த்தியுள்ளது. சென்னை மாநகரம், மற்றும் மாவட்ட,

வட்ட தலைமை இடங்கள், இரண்டாம் நிலை நகராட்சிகள் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு உதவியுடன் நடத்தப் பட்டு வரும் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 ஆக இருந்ததை ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது ; ஏனைய இடங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 30-ல் இருந்து ரூ. 40-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. தனியாரால் நிருவகிக்கப்படும் நான்கு பழங்குடியினர் மாணவர் உறைவிடப் பள்ளிகளில் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும் மானியத் தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ. 36-லிருந்து ரூ. 46-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ. 11.23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 11 வேலை வாய்ப்பும் பொருளாதார மேம்பாடும்.

### 32. வேளாண்மை:

**உழவு மாடுகள் வாங்க மற்றும் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கான மானியம் வழங்குதல்.**

வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகியோரின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பொருட்டு உழவு மாடுகள், வாங்குவதற்காக நிதி உதவி அளிக்கப்படும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**உழவு மாடுகள் :**

உழவு மாடுகளின் விலை ஏற்றத்தினை மதிப்பீட்டில் கொண்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ப, ஒரு சீரான நடைமுறையை மேற்கொள்ளும் பொருட்டு, அரசு இத் திட்டத்தினை மாற்றியமைத்துள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகியோருக்கு மாற்றியமைக்கப்பட்ட முறையின் கீழ் நிதி உதவி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த உத்திர விடப்பட்டுள்ளது.

இதன்படி, உழவு மாடுகளின் விலையில் 1/3 பாகம் அல்லது உயர் அளவுத் தொகை ரூ. 600-ஐ உழவு மாடுகள் வாங்குவதற்கு மானியமாக வழங்கப்படும். மீதமுள்ள 2/3 பாகம் அதாவது ரூ. 1,200-ஐ பயன்பெறுவோர்களுக்கு வங்கிகளின் மூலம் கடனாக வழங்கப்படும். இவ்வாறாக மாற்றியமைக்கப்பட்ட முறை, 1983–84 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.



**பாசனக் கிணறுகள் :**

பாசனக் கிணறு வெட்டுவதற்காக கொடுக்கப்பட்டு வரும் உதவித் தொகை திட்டத்தினை, அரசு மாற்றியமைத்துள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ் கிணறு வெட்ட ஆகும் மொத்த செலவில் 1/3 பாகம் மானியமாக அளிக்கப்படும். மீதமுள்ள 2/3 பாகம் நிலவள வங்கி வணிக வங்கிகளிலிருந்து கடனாக வழங்கப்படும். மேற்கூறிய அரசு மானியம் பயனடையும் ஒவ்வொருவருக்கும் உயர் அளவுத் தொகை ரூ. 5,000—மாக இருக்கும்.

1984–85 ஆம் ஆண்டில் இதற்கென ஆதி திராவிடர்களுக்கு ரூ. 6.68 இலட்சமும் பழங்குடியினருக்காக, ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, இந்த இனங்களுக்கு கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு ரூ. 1.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆதி திராவிடர் வைத்திருக்கும் நிலங்களுக்குப் பாசன வசதிகள் அளிப்பதற்காக, மத்திய அரசு அளிக்கும் சிறப்பு நிதியுதவியைக் கொண்டு, பெரும் பாசனத் திட்டம் ஒன்றை இம்மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் நிறுவனத்தைச் சேர்ந்த தனிப் பணியாளர்கள், ஆதி திராவிடர் வைத்திருக்கும் நிலங்களை இத் திட்டத்தின் கீழ்க் கண்டறிந்து வருகின்றனர். செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஆதி திராவிடர் நிலங்களுக்குப் பாசன வசதிகளை அளிக்க தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் நிறுவனம் திட்டங்களை வகுத்துள்ளது.

### 33. தோட்டக்கலை:—

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லி மலை, சின்னக் கல்ராயன் மலை, பெரிய கல்ராயன் மலை ஆகிய இடங்களில் தோட்டக் கலையை மேம்படுத்துவதற்கு தட்ப வெட்ப நிலை சாதகமாக உள்ளது. எனவே, அங்கு வாழும் பழங்குடி மக்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, தருமபுரி, தோட்டக்கலை—மலைத்தோட்டப் பயிர் இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேற்சொன்ன திட்டத்திற்கு 31—7—1982 வரை ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் நிதியிலிருந்து தொகை செலவிடப்பட்டது. இத்திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழுள்ள ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்துடன் சேர்க்கப்பட்டு தோட்டக்கலை—மலைத் தோட்டப் பயிர்கள் இயக்குநரால் 1—8—1982 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

34. தொழில் கருவிகளை இலவசமாக வழங்குதல்.

கருமார், தச்சர், தையல் தொழில்கள் ஏனைய 18 தொழில்களில், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர்கள், கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகியவர்களுக்கு இலவசமாக கருவிகள், சாதனங்கள் வழங்கும் திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 9.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

35. சிறு தொழில் கடன்.

சைக்கிள் கடைகள், ஓட்டல்கள் (சிற்றுண்டிச் சாலைகள்) மளிகைக் கடைகள், அச்சகம், முதலியவை போன்ற முப்பத்தோறு (31) தொழில்களை நடத்துவதற்காக ஆதி திராவிடர்களுக்கு சிறு தொழில் கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் வகைகளுக்கு ஏற்ப ரூ. 125-லிருந்து ரூ. 15,000 வரை கடன் தொகை வழங்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்காக, ரூ. 10.00 இலட்சமும், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்காக ரூ. 1.00 இலட்சமும், பழங்குடியினருக்காக 0.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

36. பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சிக்கான உதவித் தொகை;

வேலை வாய்ப்பு பயிற்சித் துறையிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ. 25 பெறும் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த பயிற்சியாளர்களுக்கு ஆதி திராவிடர் நல நிதியிலிருந்தும் திங்கள் ஒன்றுக்கு கூடுதலாக ரூ. 30 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1—8—1980-லிருந்து அவர்கள் பெறும் பயிற்சி உதவித் தொகை மொத்தம் ரூ. 55 ஆகிறது. ஆதி திராவிடர் மாணவர் அனைவருக்கும் ரூ. 55 பயிற்சி உதவித் தொகையும் பழங்குடியினர் மாணவர்களுக்கு ரூ. 82.50 பயிற்சி உதவித்தொகையும் தொடர்ந்து வழங்கப்படுகின்றது. 1984-85 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 13.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேலை வாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

37. கூட்டுறவு :

(அ) ஆதி திராவிடர் :

தொழில் துறையில் ஆதி திராவிடர் துரிதமாக முன்னேற வசதி செய்து கொடுக்கும் நோக்கோடு குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பயிற்சி நிலையங்கள், பயிற்சி உற்பத்தி நிலையங்கள், பணி



நிலையங்கள் பலவற்றை அரசு நிறுவியுள்ளது. இவை, தொழில் வணிக இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவர்களால் நடத்தப்படுகின்றன. இந்நிலையங்களையும் சங்கங்களையும் நடத்துவதற்குத் தேவையான செலவுத் தொகை ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையால் ஏற்கப்படுகிறது.

(ஆ) பழங்குடியினர் :

பழங்குடியினரை சுரண்டல்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் பொருட்டும், காடுபடு பொருட்களைப் பழங்குடியினர் விற்பனைச் செய்வதற்கு இயலும் பொருட்டும், அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டும், அவர்களுக்கென இம்மாநிலத்தில் கூட்டுறவு, விற்பனைச் சங்கங்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், வனத் தொழிலாளர்கள், ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், ஆகியவற்றை அரசு அமைத்துள்ளது. தற்போது பழங்குடியினருக்காக, இரண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ஐந்து வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள், இரண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை உள்ளன. நியாயமான வட்டி விதத்தில், நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலம் பழங்குடியினருக்கு மாற்றுக் கடன் வசதிக்கு வகை செய்வதற்காக பெரிய அளவிலான பழங்குடியினர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 13 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச் சங்கங்கள் உற்பத்திக்காக கடன் வசதியை அளிப்பதோடு மட்டுமின்றி, நுகர்வோர் கடன் வசதிகளையும் அளிக்கின்றன.

38. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் :

ஏழை ஆதி திராவிடர்களுக்கு உதவிபுரிதல், அவர்களுக்கு சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த ஆதி திராவிடர் உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு கால்நடைக்கு 1,500 ரூபாய் பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவர். இந்தத் தொகையில் ரூ. 500 ஆதி திராவிடர் நல நிதியிலிருந்து மானியமாகவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 1,000 ரூபாய் கடன் தொகையாகவும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் இரு கால் நடைகளை வாங்குவதற்கு மட்டுமே மேற்கூறிய உதவியைப் பெறத் தகுதியுடையவராவர். ஆதி திராவிடர் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியோருக்கு மானியம் வழங்க இத்திட்டத்திற்கு 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 31.95 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 22

### சிறப்பு மத்திய உதவி.

[illegible] ஆதி திராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் பொருட்டு மத்திய அரசு சிறப்பு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. 1981-82 ஆம் [illegible]லிருந்து தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம் பாட்டுக் கழகத்தின் மூலமாக இந்த மத்திய நிதியுதவி செயல் படுத்தும் துறைகளுக்கு வழங்கப்படுகிறது. 19[illegible] ஆம் ஆண் டில் பெறப்பட்ட ரூ. 9.56 கோடி மத்திய உதவி, ஆதி திரா விடர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு செலவு செய்ய மாவட்ட [illegible] வளர்ச்சி நிறுவனங்களின் வசம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், வேளாண்மை மற்றும் அது சார்ந்த தொழில்கள் மட்டும் ஆதி திராவிடர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக் காது. எனவே, இவர்களின் தொழில் முறையை மாற்றியமைக் கும் பொருட்டு, நிறைய வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய, [illegible] வாய்ந்த தொழில்கள்/தொழிற் மையங்கள் ஏற்படுத்த மத்திய உதவி நிதி செலவிடப்பட்டு வருகிறது. இதுவரை சிறப்பு மத்திய நிதி உதவியாக ரூ. 87.20 கோடி பெறப்பட்டுள் ளது.

சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்து கைத்தறி மற்றும் துணி நூல் துறை வாயிலாக அநேக திட்டங்களை செயல்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக 6,151 ஆதி திராவிடர் வேலைவாய்ப்பு பெறுவர். அவைகளில் குறிப்பிடத் தக்கவை பின்வருமாறு :—

(i) கூட்டுறவு நூற்பாலைகள்.

(ii) 11 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

(iii) 14 விசைத்தறி வளாகங்கள்.

(iv) பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நிதி உதவி போன்றவை ;

தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கும் தொழில் கூட் டுறவுச் சங்கங்களின் வாயிலாக சுமார் 3,[illegible] ஆதி திராவிடர்கள் வேலை வாய்ப்பளிக்க உதவி செய்யப்பட்டுள்ளது. அவைகளில் முக்கியமான தொழில்கள் வருமாறு :—

(i) செங்கல் உற்பத்தி தொழிற் சங்கங்கள்.

(ii) பாலிதீன் பைகள் செய்யும் தொழில்கள்.

(iii) தீப்பெட்டித் தொழில்கள்.

(iv) கயிறு உற்பத்தித் தொழில்கள்.



1984 மார்ச் 22]

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் [illegible] நெசவு மையங்கள், நேபாள் தறி மையங்கள், [illegible] மற்றும் பனை உற்பத்தி வளர்ச்சி, பாய் நெசவு கூட்டுறவுச் சங் கங்கள் [illegible] பிரிவு பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் போன்றவை உருவாக்கப்படுகின்றன. மேலும், 1,000 [illegible] செய்யும் தொழிலாளர்களுக்கு [illegible] [illegible]; சிறு முதலீடு ஆகியவை இவ்வாரியம் மூலம் வழங்கப்பட்டது. இவ்வாரியம் மூலம் 12,860 ஆதி திரா விடர் பயனடைந்துள்ளார்கள். 3,192 ஆதி திராவிடர் களுக்கு வேலைவாய்ப்பளிக்க உழைப்பாளர் ஒப்பந்தச் சங்கங்கள் மற்றும் கல் உடைக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது.

பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, ஆதி திராவிடர் களுக்கு ஒருங்கிணைந்த [illegible] வளர்ச்சித் திட்டத்தால் அளிக்கப் படும் உதவித் தொகையோடு சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்து உதவித் தொகை சேர்த்து 50 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு அளிக்கப்படுகின்றது. மேலும், செயலற்று கிடக்கும் பால் கூட் டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கொட்டகை [illegible] கள் முதலியவை அளிக்கப்படுகிறது. 50 சதவீத [illegible] 1,500 ஆடு மற்றும் 200 கோழிப்பண்ணைகளும் அளித்து சுமார் 1,700 ஆதி திராவிடர்களுக்கு உதவி செய்யப்பட்டன.

#### நகர வளர்ச்சித் திட்டங்கள் :

நகர்ப்புறத்தில் வசிக்கும் ஆதி திராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவி அளிக்கப்படுகிறது. 3,500 ஆதி திராவிடர்கள் சுய வேலை வாய்ப்புப் பெற ரூபாய் 70 இலட்சம் செலவிடப்படும். ரூபாய் 12 இலட்சம் செலவில் 1,500 ஆதி திராவிடர்களுக்கு டிரைசம் (TRYSEM) முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

#### கூட்டு கிராம வளர்ச்சித் திட்டங்கள் :

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மாநிலத்தில் 15 பின்தங்கிய வட்டாரங்களில் 15,000 ஆதி திரா விடர் குடும்பங்களைத் தெரிந்தெடுத்து அக் குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான எல்லா [illegible] உதவி களையும் அளிக்கிறது. அக் குடும்பங்களில் [illegible] முழுவதும் வேலை வாய்ப்புப் பெறும் வகையில் [illegible] தொழில் கள் நிறுவப்படும். இதைத் தவிர ஆதி திராவிடர் குடியிருப்புகள் அடிப்படை வசதிகளுடன் கூடிய [illegible] அமைத்துக் கொடுக்கப் படும்.

41. பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு—தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்விற்குப் பயிற்சி அளித்தல்.

ஆதி திராவிடர் பழங்குடியினர், கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வினை எழுத விண்ணப்பித்துள்ளவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் 2 மாதங்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இத் திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 16 மாவட்டங்களில் 17 பயிற்சி நிலையங்கள் 1976 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் ஆதி திராவிடர், பழங்குடியினரில் 40 நபர்கள் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்களில் 20 நபர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவர். பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு நாளுக்கு முதல் நாள் வரையில் வகுப்புகள் நடத்தப்படும். பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெற்ற மற்றும் புகுமுக வகுப்பு தேர்ச்சி பெற்ற/தேர்ச்சி பெறாத ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகியோர் இப் பயிற்சியில் சேர தகுதி உடையவர்கள். இவர்கள் தகுதி அடிப்படையில் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சி காலத்தில் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 45 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழுவினால் 1977 ஆம் ஆண்டு முதல் 1981 வரையில் இப் பணிக்குரிய தேர்வுகள் நடத்தப்படாததால் அந்தக் காலங்களில் இப் பயிற்சி நடத்தப் பெறவில்லை. 1982-83 ஆம் ஆண்டில், ரூ. 1.30 இலட்சத்தில், இத்திட்டத்தின் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது.

42. ஆயுதப் படைப் பிரிவு, காவல்துறைப் பணிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக ஆதி திராவிடர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

ஆதி திராவிடர் (இந்து வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள்) தரைப்படை மற்றும் காவல் துறையில் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பினை அதிகரிக்க, இவர்களுக்கு உடல் அமைப்பு, அறிவுக் கூர்மை இவற்றை அதிகரிக்கும் நோக்கோடு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டமாகும் இது. சென்னை, முன்னாள் இராணுவத்தினர் நல வாரியத்தின் இணை இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி முகாம்களை நடத்துகிறார். தேவைப்படும் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலருடையதாகும். முதற்கண், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்





டத்திலும் 100 ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 2 திங்கள் கால அளவிற்கு பயிற்சி முகாம்கள் நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த முகாம்கள் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளதால் 16 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 100 ஆதி திராவிட மாணவர்களுக்கு 6 நாட்களுக்கு படைப் பிரிவு காவல் துறையில் சேர்வதற்கு வகை செய்யும் பொருட்டு மேற்சொன்ன பயிற்சி முகாம்களை நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. பயிற்சி மாணவர்களுக்கு உணவு, தங்குமிட வசதிகள் போன்ற எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 1982-83-ஆம் ஆண்டில் 911 நபர்கள் ஆயுதப் படைப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகவும், 164 நபர்கள் காவல் துறைப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகவும் பயிற்சி பெற்றனர். ஆயுதப் படை பிரிவில் பயிற்சி பெற்ற 911 நபர்களில், 636 நபர்கள் பணியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

43. அனைத்திந்திய அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பை சேர்ந்த மாணவர்களுக்குத் தேர்வுக்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம்.

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி போன்ற அனைத்து இந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுக்குத் தேர்விற்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையம் 1966-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது இந் நிலையம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இப் பயிற்சிக்கு இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந் நிலையத்துடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லம் ஒன்றும் உள்ளது. பயிற்சி பெறும் மாணவியருக்கு சென்னை, மாநிலக் கல்லூரி மகளிர் விடுதியில் தங்குமிட வசதியும், உணவு வசதியும் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 125 உணவிற்காக செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று அனைத்திந்திய பணிகளில் நியமனம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மானியம் அளிக்கப்பட்டு வருகின்றது இத் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 44 மாணவர்கள் அனைத்திந்தியப் பணிகளில் நியமிக்கப்படுவதற்கு இறுதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். இத் திட்டத்திற்கென 1984-85-ஆம் ஆண்டில் ரூ. 9.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்னோடி பயிற்சி நிலையம் செயல்படுவதைத் தவிர, முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற அறிவுக் கூர்மை மிக்க 10 ஆதி திராவிடர், பழங்குடியினர் மத்திய தேர்வாணைக் குழுவினால் நடத்தப் பெறும் குடிமுறை அரசுப் பணி தேர்வில் சிறப்பான தேர்வுகளைப் பெற புது டில்லியில் உள்ள டாக்டர் ராவ் படிப்பு

நிலையத்தில் பயிற்சி பெற அனுப்புவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற அனுப்பப்படும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். 1984-85-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள தேர்வுக்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையத்திற்கு துணையாக இரண்டு துணை நிலையங்கள், ஒன்று மதுரையிலும், மற்றொன்று திருச்சிராப்பள்ளியிலும் நிறுவப்பட்டுள்ளன.

44. பொது சுகாதாரம் வீடு வசதி வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் :—

வீட்டு மனைகள்—

எங்கெல்லாம் அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் இந்த நிலங்கள், மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக ஆதி திராவிடர்கள் பழங்குடியினருக்கு வீட்டு மனைகளாக ஒப்படைப்பு செய்யப்படுகின்றன. அரசு நிலங்கள் இல்லாத போது 1894-ஆம் ஆண்டு நிலங்கள் கையகப்படுத்துதல் சட்டம் 1-ன் கீழ் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி அவற்றை தகுதியுடைய ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு 3 சென்டுகள் வீதம் வீட்டு மனைகளாக வழங்கப்படுகிறது. 1949-ஆம் ஆண்டிலிருந்து 1983-84 ஆம் ஆண்டு வரை (31-12-1983 ஆம் நாள் அன்று இருந்தவாறு) 4,23,282 மனைகள் வழங்குவதற்காக 26,493.62 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. 3,78,619 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும். 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ரூ. 1,175.24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இயன்ற வரையில் சாதி இந்துக்கள் வாழ்கின்ற குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர் வீட்டு மனைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 125.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்னும் உணர்வைப் போக்கவும் எல்லா வகுப்பு மக்களிடையே உள்ளத்தளவில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும், உண்மையிலேயே நலிந்த பிரிவினர் அனைவருக்கும் உதவி புரியவும், ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகளை வழங்குதல்/வீடு கட்டிக் கொடுத்தல் என்னும் திட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட வீட்டு மனைகளில்/கட்டப்பட்ட வீடுகளில் ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள், உயர் வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள் ஆகியோருக்கு இலவசமாக முறையே 80, 10 மற்றும் 10 விழுக்காடு வீதத்தில் ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



தேசிய கிராமப் பகுதி வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக கையகப்படுத்தப்பட்ட மனைகளை சமப்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவருக்கும் அரசு அறிவுரை வழங்கி உள்ளது.

45. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் :

இந்நிறுவனம் பிப்ரவரி திங்கள் 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆதி திராவிடர், பழங்குடியினர், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், மீனவர் மற்றும் துப்புரவாளர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும் பொறுப்பு மற்றும் மாணவர் இல்லங்கள்/பள்ளிக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றைக் கட்டும் பணியையும் இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி தவிர ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கும் இந்நிறுவனம் பொறுப்பு வகிக்கிறது. 1974 முதல் 1979 முடிய இந்நிறுவனம் ஆதி திராவிடர்களுக்கு 41,675 வீடுகளைக் கட்டி பயனடைவோர்க்கு இலவசமாக அளித்துள்ளது. 1979-ஆம் ஆண்டு திட்டத்திலிருந்து இத்திட்டத்தை அரசு மானியம் மற்றும் பயன்பெறுவோரின் உழைப்பின் அடிப்படையில் செயற்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது. (மானியம் ரூ. 3,250 பயனடைவோர் உழைப்பின் பங்கு ரூ. 750) இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் வடிவமைப்பைப் பின்பற்றி 201 சதுர அடி பரப்பளவில் பயனடைவோர் தாமே அரசு மானியத்துடன் வீடுகளைக் கட்டிக்கொள்வர். பயன் பெறுவோருக்கு தேவையான பொறியியல் மேற்பார்வை உதவிகள் மேற்படி கழகப்பொறியாளர் மூலம் அளிக்கப்படும். 1979-80, 1980-81-ல் 10,000 வீடுகள் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில் 562 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 5,290 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 1982-83 முதல் ஆதி திராவிடர் மேம்பாட்டு சிறப்புத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுக் கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன. இது வரை 55 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1,536 வீடுகள் கட்டுமானப் பணியில் உள்ளன. தற்போது வீட்டின் மதிப்பீட்டுச் செலவினை ரூபாய் 4,000-ல் இருந்து ரூ. 6,000 ஆக அரசு உயர்த்தி உள்ளது. ரூபாய் 6,000 முழுவதும் மானியமாக வழங்கப்படும்.

இந்நிறுவனம் ஆதி திராவிடர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் பணியினை நிறைவேற்ற இயலும் பொருட்டு ஆதிதிராவிடர் வளர்ச்சி நிறுவனத்திற்கு நிதி முதலீடு செய்வதற்காக மாநில அரசுக்கு மத்திய உதவி புரியும் திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. பங்கு முதலீட்டில் 49 சதவீதத் தொகையை மத்திய அரசும், 51 சதவீதத் தொகையை மாநில அரசும் அளிக்கின்றன. இத்தொகை வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஆதி திராவிடர்களுக்கு உதவி புரிவதற்காக பொருளாதார

மேம்பாட்டுத் திட்டங்களில் தொடக்கச் செலவுத் தொகையாக
பயன்படுத்தப்படும். ஆதிதிராவிடர் தங்களது வருமானத்தை
பெருக்கிக் கொள்ள ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்கு
வதற்காக மொத்த செலவில் 25 விழுக்காடுத் தொகை இந்தத்
தொடக்கச் செலவு தொகையாக 4 விழுக்காடு வட்டி வீதத்தில்
அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு டிசம்பர்
திங்கள் 31 ஆம் நாள் வரை 75,395 ஆதிதிராவிடர் குடும்பங்
ளுக்கு ரூ. 458.75 இலட்சம் தொடக்கச் செலவு தொகையாக
வழங்கப்பட்டுள்ளது. 1984-85ன் வரவு செலவு மதிப்பீட்டில்
இதற்காக ரூ. 200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

46. கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் :

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிராம வீட்டு
வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஒவ்வோர் வீடும் 6,000
ரூபாய் செலவில் கிராமப் பகுதிகளில் வீடு கட்டப்படுகின்றது.
ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு மேற்படாதவரும் இத்
திட்டத்தின் மூலம் பயனடைவோருமான ஆதிதிராவிடர், பழங்
குடியினர் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனுக்கும் ;
1,000 ரூபாய் மானியமாக வழங்க இத்திட்டம் வகை செய்கிறது.
ஆதிதிராவிடர் பெரும் அளவில் உள்ள இடங்களில் வீடுகட்ட
விழையும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேராதவரும் இத்திட்டத்
தின் கீழ் உதவித் தொகை பெறத் தகுதியுடையவர் ஆவர்.
பயன்பெறும் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கும் வழங்கப்படு
வதற்காக உதவித் தொகை குறித்து ஆதிதிராவிடர்—பழங்கு
டியினர் நலத் துறையின் 1984-85 ஆம் ஆண்டிற்குரிய வரவு—
செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 600 லட்சம் மூலதனம்
மற்றும் வட்டிக்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்
திட்டம் சென்னை கூட்டுறவுச் சங்கங்கள் (வீட்டு வசதி) பதிவாள
ரால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ்
1—4—1983 முதல் 31—12—1983 வரையில் 21,734 வீடுகள்
கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் 18,003 வீடுகள் ஆதிதிராவிடர்
களுக்கு கட்டப்பட்டவையாகும்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆதி
திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் வீடுகள் கட்டித் தரப்
படுகின்றன. 1983-84ல் 10,000 வீடுகள் கட்ட ஆணையிடப்
பட்டுள்ளது. இவற்றில் 9,000 ஆதி திராவிடர்களுக்கும், 1,000
பழங்குடியினருக்கும் ஆகும். சமவெளியில் இதற்கென வீடு ஒன்
றிற்கு தொகை ரூ. 6,000 எனவும், மலைப் பிரதேசங்களுக்கு
ரூ. 9,000 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம்
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரால் செயல்
படுத்தப்படுகிறது.



47. துப்புரவுப் பணியாளர்கள், குப்பைக் கூட்டுபவர்கள் பணி நிலையை மேம்படுத்தல்.

துப்புரவுப் பணியாளர்கள் மலக்கூடையை தலையில் சுமக்கும் பழக்கம் தற்போது இம்மாநிலத்தில் நடைமுறையில் இல்லை. பெருக்குபவர்களுக்கும், துப்புரவுப் பணியாளர்களுக்கும், தள்ளு வண்டிகள், கையுறைகள், புதை காலணிகள், தட்டுகள், சுரண்டு கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவதுபோன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78-ஆம் ஆண்டில் 432 தள்ளுவண்டிகளும் 216 தட்டுகளும், சுரண்டு கருவிகளும் ரூ. 1.76 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் செயற்படுத்த 1979-80-ல் 58 நகராட்சி களுக்கு 2,980 தள்ளு வண்டிகளும் 102 பேரூராட்சிகளுக்கு 390 தள்ளு வண்டிகளும், 480 சுரண்டு கருவிகளும் வழங்க ரூபாய் 9,66,400 வழங்கப்பட்டது. 1981-82ஆம் ஆண்டில் 250 தள்ளு வண்டிகள், 250 சுரண்டு கருவிகள், தட்டுகள் ஆகியவற்றை ரூ. 1,58,154 செலவில் 53 பேரூராட்சிகளுக்கு வழங்க ஆணை யிடப்பட்டது:

48. குடிநீர் வசதி.

ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியின மக்களுக்கும், கிறித்து வர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கென ஆதி திராவிடர் குடியிருப்புக்களில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு குடிநீர்க் கிணறு தோண்டுவதற்காகும் உயர் அளவு செலவு வரம்பு ரூ. 7,500 ஆகும். குடிநீர்க் கிணறுகள் தவிர, ஆதி திராவிடர் பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகியோருக்காக ஆண்டு தோறும் படிப்படியாக நிறை வேற்றும் திட்டத்தின்கீழ் நிலமட்ட நீர்த்தேக்கங்களும் அமைக்கப் படுகின்றன. இவ்வாறு நில மட்ட நீர்த் தேக்கம் கட்டவும் ஆழ் கிணறு தோண்டவும் உயர்அளவு செலவு வரம்பு ரூ. 15,000 லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரண திறந்த கிணறுகளுக்கு பதிலாக இயன்ற அளவிற்கு துளைக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. ஆதி திராவிடர்களுக்கும் பழங் குடியின மக்களுக்கும் கிறித்தவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் குடிநீர்க் கிணறுகள் அமைத்துகொடுப் பதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூபாய் 29.12 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது

49. மின் வசதி.

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய ஒவ்வோராண்டும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957-58 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 1984 சனவரி வரை 25,863 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டு விட்டது.

50. சமுதாயக் கூடங்கள்.

ஆதி திராவிடர் குடியிருப்பில் வாழும் மக்கள் திருமணம், சமூக விழாக்கள், கூட்டங்கள் நடத்துவதற்கென்று அக்குடியிருப்பு களில் 1971-72 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக நிறை வேற்றும் திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் ரூ 10,500 செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டித்தரப்பட்டன. 1974-75 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொன்றும் ரூ 15,000 மதிப்பீட்டுச் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டன. 1983-84 ஆம் ஆண்டில் சமுதாயக் கூடங்கள் ஒவ்வொன்றும் ரூ. 55,000 செலவில் கட்டுவதற்காக 3 இடங்கள் தெரிந் தெடுக்கப்பட்டன. அவை செங்கை மாவட்டத்தில் உள்ள பம்மல் மற்றும் வடஆற்காடு மாவட்டத்திலுள்ள களத்தூர் மற்றும் தக்கோலத்திலும் ஆகும். இத்தொகை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கென 1984-85 ஆம் ஆண்டில் ரூ 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

51. சமுதாய நிலையங்கள்.

ஆதி திராவிடர், அவர் தம் குழந்தைகள் ஆகியோரி டையே நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பரவச் செய்யும் பொருட்டு ஆடவர் சமூகப் பணியாளர் ஒருவரும், மகளிர் சமூகப் பணியாளர் ஒருவரும் குற்றேவலர் (பெண்) ஒருவரும் கொண்ட 25 சமுதாய நிலையங்கள் இம்மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் தங்கள், தலைமை இடத்திலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள கிராமங்களில் தீவிர பிரச்சாரம் செய்கின்றனர். சிறார் களை நீராட்டி, ஆரோக்கியமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் பழக்கத்தையும் அவர்கள் கற்றுக் கொடுக்கின்றனர். இந்நிலை யங்களில் முதலமைச்சரின் சத்துணவும் பல்வகை வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் ஆதி திராவிடர் பழங்குடியினர் சிறார்களுக்கு வழங்கப்படுகின்றன.

இச்சிறார்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 14 ரூபாய் செலவில் ஆண்டுக்கு இருமுறை உடைகளும் வழங்கப் படுகின்றன. இதற்கென 1984-85 ஆம் ஆண்டில் 5·31 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

52. நீர்ப்புற சலவைக் கூடம்

1978-79 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள சலவைத் தொழிலாளி சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சலவைக்கூடம் அமைத்துத் தரும் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சியில் செயல் படுத்தப்பட்டது 1979-80 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் இரண்டு பேரூராட்சியில் (மணவாளக்



குறிச்சி மற்றும் அருமனை) நீர்ப்புறச் சலவைக் கூடங்கள் கட்டித் தரப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட் டத்தைச் சேர்ந்த ஆய்குடியிலும், திருநெல்வேலி மாவட்டத் தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டம் பரக்கைக் குளத்திலும் நீர்ப்புறச் சலவைக் கூடங்கள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருகனூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலுள்ள இலத்தூரிலும், நீர்ப்புற சலவைக் கூடங்கள் அமைக்கும் பணிக்காக உதவித் தொகை மற்றும் கடனாக ஒவ்வொரு ஊருக்கும் ரூ. 10,000 வழங்கப்பட்டுள்ளது. 1982-83-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சேரமங்களத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத் திலுள்ள சாம்பவர் வடகரையிலும் நீர்ப்புற சலவை கூடங்கள் அமைக்கும் பணிக்காக உதவித் தொகை மற்றும் கடனாக ஒவ்வொரு ஊருக்கும் ரூபாய் 10,000 வழங்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

53. தீண்டாமை ஒழிப்பு

திருத்தி இயற்றப்பட்ட '' குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் '' 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் செவ்விய முறையில் செயல்படுத்தப்படுவதற்காக காவல் துறைத் துணைத் தலைமை அதிகாரி பதவித் தரத்தில் காவல் துறை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம் மாநிலத்தில் தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர் (மேற்கு), மதுரை (தெற்கு), கோயம்புத்தூர் (நகர்ப்புறம்), செங்கற்பட்டு (கிழக்கு), இராம நாதபுரம் (மேற்கு), வட ஆற்காடு, கன்னியாகுமரி, சேலம், தருமபுரி, நீலகிரி, புதுக்கோட்டை, செங்கற்பட்டு (மேற்கு), மதுரை (வடக்கு), இராமநாதபுரம் (கிழக்கு), தஞ்சாவூர் (கிழக்கு), கோயம்புத்தூர் (கிராமப்புறம்) மற்றும் பெரியார் ஆகிய மாவட்டங்களில் 20 இயங்கும் காவல் படைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இக்காவல் படைப் பிரிவுகள் அனைத்திற்கும் ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 31-12-83-ம் நாள் வரையில் இயங்கும் காவல் படைப்பிரிவுகள் 10,177 வழக்குகளைப் பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,090 வழக்குகளில் நீதி மன்றங்கள் தண்டனை வழங்கியுள்ளன.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான குற்றங்களைப் பதிவுசெய்து, விரைவில் விசாரித்து முடிவு செய்ய திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் (கும்ப கோணம்) மாவட்டங்களில் நான்கு தனி நீதிமன்றங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

தனி நீதி மன்றங்கள் செயல்பட்டு வரும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலும் வழக்குகள் பெருமளவு நிலுவையில் உள்ள தென் ஆற்காடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் நீதி மன்றப் பணிகளைக் கவனிக்க 6 வழக்குத் தொடர்பு குழுக்களை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைச்' செம்மையாகச் செயல்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை நல்கும் மாநில அளவிலான குழுவை அரசு 'மாற்றியமைத்துள்ளது.

ஒவ்வொரு வட்டத்திலும் துப்புரவுடன் பராமரிக்கப்படும் ஆதி திராவிடர் குடியிருப்பு ஒவ்வொன்றிற்கும் ஒரு வானொலிப் பெட்டி பரிசாக வழங்கப்படுகிறது. இதற்காக 1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 0.75 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாநகர் நீங்கலாக) தீண்டாமையை ஒழிக்கத் தீவிரமாகப் பாடுபடும் இரண்டு கிராமங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதற்பரிசின் மதிப்பு ரூ. 1,000, இரண்டாவது பரிசின் மதிப்பு ரூ. 500. இதற்காக 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 0.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தீண்டாமை கொடுமைகளை எடுத்துரைக்க ரூ.3.10 இலட்சம செலவில் ஒரு செய்திச் சுருள் படம் தயாரிக்கப்படுகிறது.

ஆண்டு தோறும் சனவரி திங்கள் 24 ஆம் நாள் முதல் 30 ஆம் நாள் வரை '' தீண்டாமை ஒழிப்பு வாரம் '' கொண்டாடப் படுகிறது. இந்த வாரத்தில் தீண்டாமை ஒழிப்பினை பொது மக்கள் கவனத்திற்கு கொண்டுவர மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் நலனுக்காக ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை எடுத்த நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடுகள் முக்கிய நாளேடுகளில் 1978–79 ஆம் ஆண்டு முதல் அரசால் வெளியிடப்பட்டு வருகிறது.

54. கலப்புத் திருமணங்கள்

சாதி சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டுள்ள தம்பதிகளுக்கு தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் 1968–69-ல் கொண்டு வரப்பட்டது. கிறித்தவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் மக்களுக்கும் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் முதல் இத்திட்டம் பொருந்துமாறு நீட்டிக்கப் பட்டுள்ளது. தற்போது கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் பின்வரும் பரிசுகளும் சலுகைகளும் பெறத் தகுதியுடையவராவர்.





(அ) 8 கிராம் (14 காரட்டு) எடையுள்ள தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

(ஆ) தம்பதிகளின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் திருமணச் செலவு வகையில் 300 ரூபாயும் ஆறாவது அல்லது ஏழாவது வெளியிட்டு தேசியச் சேமிப்புப் பத்திரமாக 4,000 ரூபாய்க்கும் வழங்கப்படும். இப் பத்திரம் அவர்கள் இருவர் பெயரிலும் இருக்கும். இதனை அவர்கள் விற்கவோ அடைமானம் வைக்கவோ கூடாது. ஆறு ஆண்டு காலத்திற்குள் அவர்கள் பிரிந்துவிட்டால், வட்டி உட்பட சேர்ந்துள்ள தொகை முழுவதும் அரசுக்குச் சேரும. மனைவியை இழந்தவர்களுக்கும் கணவனை இழந்தவர்களுக்கும் மணவிலக்கு செய்து கொண்டவர்களுக்கும் குழந்தைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி 21–8–1979 முதல் மேலே குறிப்பிட்டுள்ள சலுகைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன.

(இ) கலப்புத் திருமணம் செய்த தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு இணங்க தந்தையின் சாதியோ, தாயின் சாதியோ சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர். ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் உறுதிமொழி இத் தம்பதியினரின் மற்ற குழந்தைகளுக்கும் சாரும்.

(ஈ) மேல்நிலை வகுப்பில் அல்லது அதற்கு சமமான வகுப்பில் தேறியவர்களுக்கு ஒருங்கிணைந்த எம். பி. பி. எஸ்., முதலாம் ஆண்டு பட்டப்படிப்பிற்காக ஆறு இடங்கள் 1979–80-ம் ஆண்டு முதல் கலப்புத் திருமணத் தம்பதிகளின் பிள்ளைகளுக்கென்று ஒதுக்கப்படுகின்றன.

(உ) பொறியியல் (B.E.) முதலாம் ஆண்டு பட்டப் படிப்பில் ஐந்து இடங்கள் 1980 முதல் கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஊ) கலப்புத் திருமணத் தம்பதிகளின் மாத வருமானம் ரூ. 250-ம் அதற்கு குறைவாகவும் உள்ளவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகளில் பத்து குடியிருப்புகள் தவணை கொள்முதல் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படுகின்றன. தவிர தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அல்லது தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடமிருந்து குடியிருப்போ, வீட்டு மனையோ, வீடோ, சென்னை நகரில் வாங்குவதற்காக கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு உதவித் தொகை ரூபாய் 1,200 வழங்கப்படுகிறது.

இத்திட்டம் தொடங்கியதிலிருந்து 31–12–1983 முடிய 1,497 தம்பதியருக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 7.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 22

55. இறுதிச் சடங்குகளுக்குத் தொகையளித்தல்

ஆதி திராவிடர், பழங்குடி மக்கள், கிறித்தவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் குடும்பத்தினரில் ஒருவர் இறந்துவிட் டால் இறுதிச் சடங்குகளுக்காக ரூ. 50 நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக் குடும்பங்களின் எளிய பொருளாதார நிலையையும் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஈமக் கடனுக்கும் வறுமைச் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது.

1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 52.83 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட் டம் உள்ளாட்சி மன்றங்களின் மூலம் செயல்படுத்தப்படு கிறது.

56. பழங்குடியினர் துணைத் திட்டம்

தமிழ் நாட்டிலுள்ள பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற் காகப் பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் 1976–77 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியின துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து வருகின்றது. இதற்காக தொகை (1976–77 ஆம் ஆண்டில்) ரூ. 101.82 லட்சமாக இருந்தது. தற்போது 1984-85 ஆண்டில் 685.00 இலட்சமாக உள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் துணைத் திட்டத்திற்காக (1980–85) ரூபாய் 2,167.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டமானது பகுதி அடிப்படையி லான திட்டமாகும். பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ஒன்பது ஒருங்கிணைந்த பழங்குடியினர் முன்னேற்றத் திட்டப் பகுதிகளில் (துணைத் திட்டம் பகுதி) வசிக்கின்ற சுமார் 2.10 இலட்சம் பழங்குடியினர் பயனடைகின்றனர். குறைந்தது 15,000 பழங்குடியினரை கொடிய வறுமையிலிருந்து மீளச் செய்து நல் வாழ்வு வாழச் செய்வதே இந்த பழங்குடியினர் துணைத் திட்டத்தின் நோக்கமாகும். ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஓராண்டுக்கு 3,000 விதம் பழங்குடியினர் குடும்பத்தினரை முன்னேறச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தில் தோட்டக்கலை, மண் வளப் பாதுகாப்பு, சிறு பாசனம், கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு, வன வளர்ப்பு, கல்வி, சுகாதாரம் சமூகநலம், கிராமியத் தொழில் கள், பட்டுப்புழு வளர்ப்பு, சாலைப் போக்குவரத்து, குடிநீர் வழங்கல், மின் இணைப்பு வழங்குதல் ஆகியன அடங்கும்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப் பெறும் பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாட்டு அதிகாரக் குழு ஆய்வு செய்யப்பெறுகின்றது.



1984 மார்ச் 22].

முதலமைச்சரின் சிறப்புக் கட்டளையின் பேரில், தமிழ் நாட்டில் வசிக்கும் அனைத்து பழங்குடியினருக்கும் இரண் டாண்டு காலத்திற்குள் குடிநீர்வழங்கும் நோக்கத்துடன் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் பழங்குடியினர் வசிக்கும் பகுதி களில் ஆய்வினை மேற்கொண்டு இதற்கான பெரு நோக்குத் திட்டம் முடியும் நிலையில் உள்ளது.

இத்திட்டங்களைச் செயற்படுத்த அந்தந்த துறைகள், பொறுப் பேற்கின்றன. மாவட்ட ஆட்சியர்கள் அந்தந்த மாவட்ட ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் தலைமைத் திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளாவர்.

57. ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு செய்வதற்கான விதிகள்.

கல்வி நிறுவனங்களில் அனுமதி

மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழில் கல்வி நிறுவனங்கள் உட்பட கல்வி நிறுவனங்களில் ஆதி திரா விடர்களுக்கும், பழங்குடியினருக்கும் உரிய இடம் கொடுக்க 18 விழுக்காடு இடங்கள் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடி யினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கென அமைக்கப்பட் டுள்ள குழு 4–7–1983 அன்று ஆதி திராவிடர் நல அமைச்சரின் தலைமையில் கூடி, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் கலைக் கல்லூரிகளில் ஆதி திரா விடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களை சேர்த்துக் கொள் வது குறித்து விரிவாக ஆய்வு செய்தது. 1981-82 மற்றும் 1982–83-ல் பல்வேறு கல்வி நிலையங்களில் மாணவர்களின் சேர்க்கை பற்றிய விவரங்கள் மேற்படி கூட்டத்தில் எடுத் துக் கொள்ளப்பட்டு அவை குழுவினால் ஆய்வு செய்யப்பட் டன.

அரசுப் பணிகளில் நியமனம்

மாநில அரசுப் பணிகளில் 18 விழுக்காடு இடங்கள், ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைத் தலைவரும் தலைமைச் செயலகத் துறை களும் ஆண்டுதோறும் விவரக் கணக்கு ஒன்றை அனுப்ப வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதன் மூலம், இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்று கின்றனரா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வரு கிறது.

அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்பட் டுள்ள இடங்கள் (விழுக்காட்டில்) வருமாறு :—

| | விழுக்காடு. |
|---|---|
| அரசுத் துறைகள் .. .. .. | 11.27 |
| அரசு பொதுத்துறை நிறுவனங்கள் .. | 12.43 |

[1984 மார்ச் 22

58. தமிழ்நாட்டில் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறு வாழ்வு அளிப்பது

தமிழ்நாட்டில் உள்ள 16 மாவட்டங்களில் 1981 வரையி
லான காலத்தில் 10 மாவட்டங்களில் கொத்தடிமைகள் முறை
இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு 27,874 நபர்கள் விடுவிக்கப்பட்
டுள்ளனர். இதில் 1976 ஆம் ஆண்டில் அரசால் எடுத்துக் கொள்
ளப்பட்ட தென்னாற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைக்
குன்றுகளில் ஜாகிர்தார்களின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்
பட்ட 24,945 மலை சாதியினரும் அடங்குவர். 27,874
விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கும் மறுவாழ்வு அளிக்கப்
பட்டு விட்டது.

விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் மறு வாழ்வுக்கென
அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்
றன. அவை வீட்டுமனை வழங்குதல், விவசாய நிலம் வழங்கு
தல், உழவுக் கருவிகள் வழங்குதல், உழவு மாடுகள், கறவை
மாடுகள் வாங்க மான்யம் வழங்குதல், கோழி வளர்ப்புக்கு
உதவி செய்தல் முதலியன ஆகும்.

விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் மறு வாழ்வுக்கென்று,
அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சேலம் மாவட்டத்
தில் ஜல்லி உடைப்போர் கூட்டுறவு தொழிலாளர் சங்கம்
அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி
மேம்பாட்டு கழகத்தின் மூலம் இவர்களுக்கு விடுகள் கட்டித்
தரப்படுகிறது. கல் உடைக்கும் கருவிகள் வழங்கவும் அரசு
அனுமதி வழங்கியுள்ளது. வேளாண்மைப் பணியில் விருப்பம்
உள்ளோருக்கு வேளாண்மைக்கான நிலம் வழங்குவதுடன்,
உழவு மாடுகள் மற்றும் வேளாண்மைக் கருவிகள் வழங்கவும்
உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியாளர்
களும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளை தேசிய ஊரக
வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்
திட்டம் ஆகியவற்றில் சேர்க்கும்படியும் சிறப்பு-மற்றும் நடை
முறைத் திட்டங்களின் கீழ் மறுவாழ்வு அளிக்கும்படியும் அர
சால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மறுவாழ்வு திட்டங்களை
சரிவர நிறைவேற்ற வழிவகைகளை தெரிவிக்கும் பொருட்டும்
ஊரக வங்கிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் முறை
களை ஒருமுகப்படுத்தவும் 1976 ஆம் ஆண்டைய கொத்தடி
மைகள் (ஒழிப்புச்) சட்டத்தினை சரிவர செயல்படுத்துவதற்கு
மாவட்ட குற்றவியல் நீதிபதிக்கு ஆலோசனை வழங்கு
வதற்கும் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட மற்றும்
உபகோட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்
கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் செயல்படுவதை கண்காணிக்க
அரசு மட்டத்தில் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்திய
அரசு வெளியிட்டுள்ள கையேட்டின்படி மத்திய மாநில அரசு
நிதி ஒதுக்கீட்டின் கீழ் திட்டங்கள் தயாரிக்கும்படி மாவட்ட



1984 மார்ச் 22]

ஆட்சியர்கள் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மத்திய
அரசின் உதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டங்களின்
கீழ், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் மறு வாழ்விற்காக
மாவட்ட ஆட்சியர்கள் தயாரிக்கும் திட்டங்களை ஆய்வு செய்
வதற்காக அரசு மட்டத்தில் தலைமைச் செயலரைத் தலை
வராகக் கொண்ட ஒரு தடுப்புக் குழு (Screening Committee)
அமைக்கப்பட்டுள்ளது. இந்த தடுப்புக் குழுவின் ஒப்புதல்
பெற்ற திட்டங்களுக்கான செலவினை மாநில அரசு தொடக்
கத்தில் ஏற்கிறது.

59. 31 ஆம் எண்ணுள்ள இம்மானியக் கோரிக்கையின் கீழ்
ரூ. 48.18 கோடி (சாட்டிய செலவு உட்பட) செலவு ஏற்படும்
என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர ஏனைய மூன்று
மானியக் கோரிக்கையின் கீழ் ஆதி திராவிடர் பழங்குடியினர்
நலத்திற்காகச் செலவு செய்யக் கருதியுள்ள தொகை பற்றிய
விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| | (ரூபாய் கோடியில்.) |
| மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை .. | 0.0028 |
| மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு. | 5.4000 |
| மானியக் கோரிக்கை எண் 58—கடன்களும் முன் பணமும். | 0.7070 |
| மொத்தம் .. | 6.1098 |

ஆதி திராவிடர், பழங்குடியினரின் சமூக, பொருளாதார
மேம்பாட்டுக்காக மேற்சொன்ன மானியக் கோரிக்கைகள்
அனைத்தின் கீழும் மொத்தத்தில் 54.29 கோடி ரூபாய் செலவு
செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே இம்மாநிலத்தின் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய
மக்களைப் போல் ஆதி திராவிடர், பழங்குடியினரின் வாழ்க்கைத்
தரத்தையும் உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

[1984 மார்ச் 22

## இணைப்பு II

(58-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

எழுதுபொருள் அச்சுத்துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

அமைப்பு :

எழுதுபொருள் அச்சுத்துறை பெருமைப்படும் வகையில் பணி
யாற்றி 152-வது ஆண்டை எட்டியுள்ளது. அச்சக பிரிவிற்காக 10
பணியாட்களை மட்டுமேகொண்டு தலைமைச் செயலக அரசிதழ்
களை அச்சிடுவதற்காகவென்றே 1831-ல் தொடங்கப்பட்டது.
இந்த அச்சகம் பணியாளர்களின் எண்ணிக்கையிலும், அளவிலும்
கடந்த ஆண்டுகளில் படிப்படியாக வளர்ந்துள்ளது. இத்துறை
யில் 31-3-1983-ல் உள்ளவாறு மொத்தம் 6,087 பணியாளர்கள்
பணிபுரிகின்றார்கள். இத்துறையின் பல்வேறு பிரிவுகளாக
8 அச்சகங்களும் (நகரில்-3, வெளியூர்களில்-5) மற்றும் சென்னை
ராஜாஜிசாலையில் எழுதுபொருள் கிடங்கு, சென்னை உயர்நீதி
மன்ற வளாகத்தில் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம்
ஒன்று, அண்ணாசாலையில் விற்பனை நிலையம் ஒன்று ஆகியவை
உள்ளன. எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் இத்துறையின்
தலைவர் ஆவார். இயக்குநருக்கு நிர்வாகம் சம்பந்தமாக ஒரு
இணை இயக்குநரும், அச்சகம் சம்பந்தமாக ஒரு பொது மேலாள
ரும், கணக்குகளைப் பொறுத்த வரையில் முதன்மைக் கணக்கு
அலுவலரும், எழுதுபொருள் பிரிவிற்கு ஒரு துணை இயக்குநரும்
உதவியாகப் பணியாற்றுகின்றனர். இவர்களைத் தவிர ஒரு
உதவி இயக்குநர் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்திற்கு
பொறுப்பு வகிக்கின்றார்.

2. இயக்ககம் :

எழுதுபொருள் அச்சுத் துறை இயக்ககம் பெரும்பாலும்
பணியாளர் நிர்வாகம், தொழில் உறவுகள், பொது நிர்வாகம்,
இயந்திரங்கள் வாங்குதல், அச்சிடும் துறைக்குத் தேவையான
பொருட்களை கொள்முதல் செய்தல், எழுதுபொருட்கள், தட்
டச்சு இயந்திரங்கள், படிபெருக்கிகள் மற்றும் கணக்கிடும்
பொறிகள் ஆகியவற்றை கொள்முதல் செய்து எல்லா அரசுத்
துறைகளுக்கும் வழங்குதல் ஆகியவற்றைக் கவனிக்கிறது. இந்த
இயக்ககம் 231 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.
மேலும் மாநில அரசிற்கு அச்சிடுதல் மற்றும் எழுதுபொருள்
பற்றிய எல்லா விவரங்களுக்கும் ஆலோசகராகவும் இருந்து வரு
கிறது.



1984 மார்ச் 22]

3. அச்சிடும் பிரிவு :

3.1 எழுதுபொருள் அச்சுத் துறை பின்வரும் அச்சுப் பிரிவுகளை
கொண்டுள்ளது :—

1. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.
2. அரசு கிளை அச்சகம் (உயர்நீதிமன்ற வளாகம்), சென்னை.
3. அரசு கிளை அச்சகம் (ஆனைக்காரத் தோட்டம்), சூளை, சென்னை.
4. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.
5. அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.
6. அரசு வட்டார அச்சகம், சேலம்.
7. அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.
8. அரசு வட்டார அச்சகம், மதுரை.

3. 2. அரசு மைய அச்சகம். வள்ளலார் நகர், சென்னை

இந்த அச்சகம் 1831 ஆம் ஆண்டு தலைமைச் செயலகத்தில்
பத்து தொழிலாளர்களை மட்டுமே கொண்டு முக்கியமாக அர
சிதழ்களை அச்சிடுவதற்கென சிறிய அச்சகமாக நிறுவப்பட்டது.
பிறகு வள்ளலார் நகரில் உள்ள சொந்தக் கட்டிடத்திற்கு மாற்
றம் செய்யப்பட்டது. மைய அச்சகம் பணி மேலாளரின் கட்டுப்
பாட்டின்கீழ் மூன்று முறை மாற்றுப் பணியின் மூலம் செயல்பட்டு
வருகிறது. 31-3-1983 அன்றுள்ளவாறு மொத்தம் 3,561 பணி
யாளர்கள் பணிபுரிகின்றனர். இவ்வச்சகம் அச்சிடும் இயந்தி
ரங்கள் மற்றும் புத்தகம் கட்டும் இயந்திரங்கள், அச்செழுத்து
கோர்க்கும் இயந்திரம், படிமம் தயாரிக்கும் பிரிவு, இரப்பர் முத்
திரை தயாரிக்கும் பிரிவு ஆகியவற்றை முழுமையாகப் பெற்று
இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்திற்காக கீழ்க்கண்ட இயந்திரங்கள் 1983-84 ஆம்
ஆண்டில் வாங்கப்பட்டன :—

1. சிலிண்டர் பாரம் ப்ரூப் பிரஸ்—1 (Cylinder forme proof press).

2. ஹெவி பிளாட்டன் அச்சு இயந்திரம்—1 (Heavy platen proof press).

3. கெஸ்டட்னர் தானியங்கி பிளேன் பேப்பர் காப்பியர்—1 (Gastetner Automatic plain paper copier).

[1984 மார்ச் 22

மின் தடை ஏற்படும் காலங்களில் தடங்கல் இன்றி அச்சுப் பணிகளைச் செய்யும் வகையில் ஒரு 75 கே.வி.ஏ. டீசல் மின் உற்பத்தி இயந்திரம் (Diesel Generator set) துணை கருவிகளுடன் 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ரூ. 1.33 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. அதனை இடம் பெயர் பிரிவாகச் செயல்படச் செய்ய தொடர் வண்டி (டிரெய் லர்) ஒன்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

பின்வரும் இயந்திரங்கள் பழையனவற்றை மாற்றி அமைக்கும் வகையிலும் அச்சிடும் பிரிவை நவீனமாக்குதலில் ஒரு பகுதி யாகவும் வாங்குவதற்கு அரசிற்கு செயற் குறிப்புகளை எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர் அனுப்பியுள்ளார். 1984-85 ஆம் நிதியாண்டில் இச்செயற் குறிப்பு மேற்கொள்ளப்படும்.

1. தானியங்கி சிலிண்டர் அச்சு இயந்திரம்—7 (Automatic Cylinder Printing machine).

2. புரோக்ராம் வெட்டும் இயந்திரம்—3 (Programme cutting machine).

1985-86 ஆம் நிதியாண்டில் பின்வரும் இருதிட்டங்களுக்கு அனுமதியளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது :—

1. சுவிப்ட் 300 டீலக்ஸ் எதிரீட்டு அச்சு இயந்திரம்-2 (Swift 300 deluxe Off-Set Machine).

2. மின்னணு தட்டச்சுப்பொறி நெட்வொர்க்-208-1 (Electronic Typewriter net work).

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 15 இலட்சம் 1983-84 ஆம் ஆண்டிற்காகவும் ரூ. 35 இலட்சம் 1984-85 ஆம் ஆண்டிற்காகவும் அனுமதிக்கப்பட்டு உள்ளது. 1983-84 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட ரூ. 15 இலட்சத்தைக் கொண்டு, 1984, பிப்ரவரி திங்களில், சென்னை மைய அச்சகத் தில் இரண்டு நிறங்களில் அச்சிடும் ஒரு "வெப் எதிரீட்டு" அச்சு இயந்திரமும் (Web Offset), ஒரு நிழற்பட அச்சுக் கோர்க்கும் இயந்திரமும் (Photo Type Setting Machine) வாங்கப் பட்டு நிறுவப்பட்டன. இது அரசு அச்சகத்தை நவீனப்படுத்து தலின் முதற்படியாகும். 1984-85 ஆம் ஆண்டிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட ரூ. 35 இலட்சத்தில் பின்வரும் இயந்திரங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

1. ஒரு நிறதாள் அணைப்பு எதிரீட்டு அச்சுப்பொறி (Single Colour Sheet Fed Offset Machine).



1984 மார்ச் 22]

2. நிழற்பட பாலிமர் சமதளப் படிமத் தட்டு தயாரிக்கும் பொறி (Photo Polymer Plate making Machine)

3. செய்முறை நிழற்படமெடுக்கும் பொறி (Process Camera)

4. இரண்டு தலை கம்பியடிக்கும் இயந்திரம் (Double Head wire Stitching Machine).

மைய அச்சகத்திற்காக 1984-85ஆம் ஆண்டில் பின்வரும் இயந்திரங்கள் வாங்கவும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது :—

1. ஒரு நிற "வெப் எதிரீட்டு" அச்சு இயந்திரம் (Single Colour Web Offset Machine).

2. புரோகிராம் வெட்டும் இயந்திரம் (Programme Cutting Machine).

3. ஒரு தலை கம்பியடிக்கும் இயந்திரம்-4. (Single Head Wire Stitching Machine).

4. RA-IIஅளவு ஹாண்பெட் சிலிண்டர் அச்சிடும் இயந்தி ரங்கள்-7 (RA-II size Handfed Cylinder Machine).

தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், மாநில கணக் காய்வுத் தலைவர் (தமிழ்நாடு), பொதுத் துறை கழகங்கள் ஆகிய துறைகள் மூலம் பெறும் அச்சிடும் பணிகளையும் வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ்கள், பரிசுச் சீட்டுகள், மந்தன ஆவணங்கள், தலையாய மறைச் செய்தி மற்றும் வகை யான வினாத்தாள்கள், மற்றும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், நிலைப்படுத்தப்படாத படிவங்கள் ஆகியவற்றையும் மைய அச்ச கம் அச்சடித்து வழங்குகிறது.

மைய அச்சகம் 1983-ல் செய்து முடித்துள்ள சில முக்கிய பணிகள் வருமாறு :—

1. சுவர் நாட்காட்டிகள் மற்றும் 3 மாத நாட் காட்டிகள் (Wall Calendar).

2. அட்டவணை நாட் குறிப்பேடுகள், சிறப்பு நாட் குறிப் பேடுகள் மற்றும் அமைச்சர்களின் நாட் குறிப்பேடுகள்.

3. முதலமைச்சரின் மதிய உணவு திட்ட விளக்கங்களின் கையேடுகள், நெறிமுறை குறிப்புகள் (Guide Book), சிறு வெளி யீடுகள், விரிவான உத்தரவுகள்.

4. பெரியகுளம் நாடாளுமன்ற வாக்காளர் தொகுதி மற்றும் திருச்செந்தூர் சட்டப் பேரவை வாக்காளர் தொகுதி தேர்தல் வாக்காளர் சீட்டுகள்.

5. தீர்ப்புத் திரட்டு—8 பிரதிகள்.

[1984 மார்ச் 22

6. சிறு சேமிப்பு படிவங்கள்.

7. பல்லவன் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச் சீட்டுகள் மற்றும் எல்லா வழித் தட அடையாள வில்லைகள்.

8. கிராமக் கணக்குகளின் நடைமுறை நூல்.

9. இடைநிலைப் பள்ளி தேர்வுகள், மேல் நிலைப் பள்ளி தேர்வுகளுக்குரிய விண்ணப்ப படிவங்கள் நெறி முறைக் குறிப்பு கள், சிறப்பு கூடுதல் விடைத் தாள்கள்.

10. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர் களின் விவாதங்கள்.

11. ஓய்வூதிய அடையாள அட்டைகள்.

12. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களின் விவரப் பட்டியல்.

13. கள், சாராய அனுமதிச் சீட்டுகள்.

14. பங்கீடு அட்டைகள் வழங்குவதற்கான படிவங்கள்.

15. பரிசுச் சீட்டுகள் (Raffle Ticket).

1983-84 ஆம் ஆண்டில் (31—12—1983 வரை) பல துறை களுக்கு அச்சுப் பணியாற்றியதற்காகவும் படிவங்கள் புத்தகங்கள் முதலியன வழங்கியமைக்காக ரூபாய் 63,03,155.69-க்கு பட்டியல் அனுப்பி, அதில் 31—12—1983 அன்றையப்படி ரூ. 59,35,772.20 வசூலிக்கப்பட்டுள்ளது. 1983-ஆம் ஆண்டிற்கு முன் வசூலிக்கப் படாமல் உள்ள நிலுவைத் தொகைகளையும் சேர்த்து ரூ. 1,62,78,534.05 வசூலிக்க தீவிர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வச்சகத்தில் தொழிலாளர் நலன் கருதி ஓய்வு அறை ஒன்றும் சிற்றுண்டிச்சாலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு பணிபுரியும் மகளிரின் குழந்தைகளை பணி நேரங் களில் கவனித்துக்கொள்ள ஒரு குழந்தைகள் காப்பகம் உள்ளது.

31—12—1983 வரை பணியில் உள்ள போது இறந்த 13 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ஒருவருக்கு ரூ. 100 வீதம் பணியாளர்கள் நல நிதியில் இருந்து ரூ. 1,300 வழங்கப்பட்டுள்ளது மேலும், 1983 நவம்பர் வரை இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000 குடும்பநல நிதியாக வழங்கப்பட்டது. தொழிலாளர் நலப் பணிகளை தொழி லாளர் நல அலுவலர் ஒருவர் கவனித்து வருகிறார். இவருக்கு தொழிலாளர் நல உதவி அதிகாரி உதவி புரிகிறார்.

1983-ல் மைய அச்சகத்தில் மூன்று சிறு விபத்துக்கள் ஏற் பட்டன.



1984 மார்ச் 22]

3. 3. அரசு கிளை அச்சகம், ஆனைக்காரன் தோட்டம். சூளை, சென்னை.

இந்த அச்சகம் 1974-ஆம் ஆண்டு தனியார் வாடகை கட்டி டத்தில் நிறுவப்பட்டு 696 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

இவ்வச்சகம் முக்கியமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணைக்குழு, காவல் துறை, மருத்துவத் துறை மற்றும் வணிகவரித் துறை சம்பந்தப்பட்ட அச்சுப் பணிகளை செய்து வருகிறது.

பெண் பணியாளர்களின் வசதிக்கென குழந்தைகள் காப்பகம் உள்ளது. பணியாளர்களின் தேவைக்கான தனியார் ஒப்பந்தக் காரரால் ஒரு சிற்றுண்டி சாலை இயங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் 4 இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதியாக ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1983-ஆம் ஆண்டில் இறந்த 3 பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கும் தொழிலாளர் நல நிதியில் இருந்து ஒவ்வொரு வருக்கும் ரூ. 100 வழங்கப்பட்டுள்ளது.

ஒரு தொழிலாளர் நல உதவி அலுவலர், இக்கிளை அச்ச கத்தில் பணிபுரியும் பணியாளர்களின் நலனைக் கவனிக்கிறார். 1984-85-ஆம் ஆண்டில் அச்சு இயந்திரங்களில் ஏற்படும் சிறு பழுதுகளைச் சரி செய்து கொள்ளும் வகையில் ஒரு கடைசல் இயந்திரம் (Lathe Machine) வாங்க உத்தேசிக்கப்பட்டுள் ளது.

3. 4. கிளை அச்சகம் (உயர்நீதி மன்ற வளாகம்) சென்னை.

1933 ஆம் ஆண்டு உயர்நீதி மன்ற வளாகத்தில் நிறுவப் பட்ட இக்கிளை அச்சகம் தொடர்ந்து 237 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகின்றது. இக்கிளை அச்சகத்தின் முக்கியப் பணி உயர்நீதி மன்றத்திற்குரிய நிரைசரி வழக்குப் பட்டியல்கள், இந்திய சட்ட அறிக்கைகள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்குதலாகும். கூடுதலாக "தீர்ப்பு திரட்டு" என்ற தமிழ் மாத வெளியீட்டை அச்சிட்டு வெளியிடு வதையும் மேற்கொண்டுள்ளது. நடப்பு ஆண்டில் இறந்த பணி யாளர் இருவரின் வாரிசுதாரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000 குடும்ப நல நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறிய வாரிசுதாரர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 100 இறுதிச் சடங்கு செலவிற்காக தொழிலாளர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 22

கருவூலக் கணக்குத் துறைக்குத் தேவையான சில நிலைப் படுத்தப்பட்ட படிவங்களும் இவ்வச்சகத்தில் அச்சிடப்படு கின்றன.

R.A. II அளவு ஹாண்ட்பெட் சிலிண்டர் அச்சிடும் இயந் திரங்கள் 3 வாங்குவது குறித்து 1984-85-ல் பரிசீலிக்க உள்ளது.

இவ்வாண்டில் இவ்வச்சகத்தில் சிறு விபத்து ஒன்று ஏற் பட்டது.

3. 5. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

இக்கிளை அச்சகம் 1949 ஆம் ஆண்டில் இருந்து அரசுக் கட்டிடத்தில் 256 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகிறது.

இக்கிளை அச்சகத்திற்கு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் தென் ஆர்க்காடு, சேலம் மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களின் அரசிதழ்களையும் ஆங்கிலம், தமிழில் அச்சிடும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவிர பதிவுத்துறை, ஆதி திரா விடர் நலத்துறை பிற்பட்டோர் நலத்துறை ஆகியவற்றுக்குத் தேவைப்படும் விதித் தொகுப்பு, ஒய்வூதியத் தொகுதி படிவங் கள் போன்ற சில நிலைப்படுத்தப்பட்ட, நிலைப் படுத்தப்படாத படிவங்கள் அச்சிட்டு வழங்குவதுடன் அச்சகத்திற்குத் தேவைப் படும் ஏனைய பொருட்களையும் தயாரிக்கின்றது.

இக்கிளை அச்சகத்திற்காக பின்வரும் இயந்திரங்கள் நடப்பு 1983-84 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டுள்ளன:—

1. உருளை படிவ பார்வைப்படி அச்சு இயந்திரம் 1. (Cylinder Forme Proof Press).

2. செமி ஆட்டோமடிக் வெட்டும் இயந்திரம் 1. (Semi Automatic Cutting Machine).

3. பிளேட் வெட்டும் இயந்திரம் 1. (Plate Cutting Machine).

இவ்வச்சகத்திற்கு 1984-85-ஆம் ஆண்டு மேலும் ஒரு ஹான் பெட் சிலிண்டர் (Handfed Cylinder) அச்சிடும் இயந்திரம் ஒன்று வாங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வச்சகத்தில் அதிகரித்துள்ள பணிகளை மேற்கொள் வதற்குக் கூடுதல் இடவசதிக்காக ரூ. 2.36 இலட்ச மொத்தச் செலவில் ஒரு துணைக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.



1984 மார்ச் 22]

இக்கிளை அச்சகம் தேவையான இயந்திரங்களை முழுமை யாகக் கொண்டுள்ளது. தொழிலாளர்கள் பயனடைய ஒரு மனமகிழ் மன்றமும், கூட்டுறவு கடன் வசதி சங்கம் ஒன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

3. 6. அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.

இவ்வட்டார அச்சகம் 1965-ம் ஆண்டிலிருந்து அரியமங்கலம் தொழிற்பேட்டையில் நான்கு வாடகைக் கட்டிடங்களில் 172 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப்பணியில் இயங்கி வருகிறது. இவ்வச்சகத்தில் அரசுத்துறைக்குத் தேவை யான பொதுப் படிவங்கள், நிலைப்படுத்தப்படாத படிவங்களான பணியாளர் பட்டியல், அட்டவணைகள், பொதுப்பணித்துறைக்குத் தேவையான படிவங்கள், இடை நிலைப்பள்ளி விடைத்தாள் கள் (30 இலட்சம்) தலைமைச் செயலத்திற்கு தேவையான படிவங்கள் போன்றவை 1983 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டன. இதைத் தவிர, திருச்சி, தஞ்சாவூர் மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

இவ்வச்சகத்தை சொந்தமான கட்டிடத்தில் நிறுவும் வகையில் அதற்கு தேவையான 3.08 ஏக்கர் பரப்பளவு நிலம் துவாக்குடி கிராமத்தில் ரூ. 23,100-க்கு ஏற்கனவே வாங்கப்பட்டுள்ளது.

இவ்வச்சகத்தில் ஒரு மனமகிழ்மன்றம் தொடர்ந்து செயல் பட்டு வருகிறது.

3. 7. அரசு வட்டார அச்சகம். சேலம்.

இவ்வச்சகம் 1966-ம் ஆண்டு துவங்கப்பட்டு மூன்று தனியார் வாடகைக் கட்டிடங்களில் 150 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப்பணியில் இயங்கி வருகிறது. இவ்வச் சகத்தை சொந்த கட்டிடத்தில் நிறுவுவதற்காக ரெட்டியார் பாளையத்தில் ரூ. 2.89 இலட்சத்தில் வாங்கப்பட்ட நிலத்தில் ரூ. 43 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டும் பணிநடந்து வருகிறது.

இவ்வச்சகம் முக்கியமாக கருவூலத்துறைக்கு நிலைப் படுத் தப்பட்ட படிவங்கள், நில அளவை, வேலை வாய்ப்பகம் ஆகிய துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்படாத படிவங்கள் பள்ளி இறுதி வகுப்பு புத்தகங்கள் ஆகியவைகளை அச்சிட்டு வழங்கி வருகிறது. இதைத் தவிர சேலம் மாவட்ட அரசிதழும் அச்சிடப்படுகிறது.

இவ்வச்சகத்தில் 3 இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000 குடும்ப நல நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வச்சகத்தில் ஒரு மனமகிழ் மன்றமும் இயங்கி வருகிறது.

விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் இவ்வச்சகத்திற்கு 3 எச்.எம்.டி. அச்சிடும் இயந்திரங்கள் வழங்க தேவைக் குறிப்பு ஆணை அனுப்பப்பட்டுள்ளது. மேலும் தற்போது உள்ள பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக மேலும் 5 எச்.எம்.டி. அச்சிடும் பொறிகள் கொள்முதல் செய்யுப்படும்.

3. 8. அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.

இவ்வச்சகம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 158 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகிறது. 1981-ம் ஆண்டு ரூ. 17.95 இலட்சம் செலவில் கட்டப்பட்ட சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இவ்வச்சகம் பொதுப்பணித்துறை, நீதித்துறை, வேலைவாய்ப்பு அலுவலகம், வேளாண்மை, தொழில் மற்றும் வணிகம், வனம், கால் நடை பராமரிப்பு ஆகிய துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் அச்சிடும் பணிகளை மேற்கொண்டுள்ளது. கூடுதலாக தென்னாற்காடு மாவட்ட அரசிதழும் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகிறது.

ஹான்ட்பெட் சிலிண்டர் அச்சிடும் இயந்திரம் ஒன்று வாங்குவது குறித்து 1984-85 ஆம் ஆண்டில் பரிசீலிக்க உள்ளது.

தொழிலாளர்கள் பயனுக்காக ஒரு மனமகிழ் மன்றமும் கூட்டுறவு கடன் வசதி அளிக்கும் சங்கமும் இயங்கி வருகிறது.

3. 9. அரசு வட்டார அச்சகம், மதுரை.

இந்த வட்டார அச்சகம் 1976-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு நல்ல வடிவமைப்புள்ள சொந்தக்கட்டிடத்தில் 243 பணியாளர்களுடன் இரண்டு முறைமாற்றுப் பணியில் இயங்கி வருகிறது.

இந்த அச்சகத்தில் வருவாய், சிறைச்சாலை, கருவூலம், துறைகளைச் சார்ந்த படிவங்களும், மோட்டார் வாகன சட்ட குழுவைச் சார்ந்த படிவங்களும் இந்த ஆண்டில் அச்சிடப்பட்டன. தொழிலாளர்கள் பயனுக்காக ஒரு கூட்டுறவு கடன் வசதி சங்கம் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தில் 1984-85-ம் ஆண்டில் கைமுனை உருளை (Handfed cylinder Printing Machine) அச்சிடும் பொறி ஒன்று கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



4. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம். அண்ணா சாலை மற்றும் கிளை விற்பனை நிலையம், உயர்நீதி மன்ற வளாகம், சென்னை.

சென்னை, அண்ணாசாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும் சென்னை உயர்நீதி மன்றக் கட்டிட வளாகத்தில் உள்ள கிளை விற்பனை நிலையமும் உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் 58 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் சட்டங்கள், விதிகள், விதிக் கோவை, நடைமுறை நூல்கள், அரசிதழ்கள் செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப்பதிவேடுகள் போன்ற அரசு வெளியீடுகளை விற்பனை செய்து வருகிறது. இந்திய அரசு வெளியீடுகளுக்கும் முகவரமைப்பாக செயல்படுகிறது. அரசு வெளியீடுகள் 51 அதிகாரம் பெற்ற முகவர்களாலும் தரகு அடிப்படையில் மாநிலம் முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன. 1-4-1983 முதல் 31-3-1981 வரையில் இந்நிலையத்தில் விற்பனை விவரம் வருமாறு :—

| | ரூபாய். |
|---|---|
| இலவசமாக அரசு அலுவலகங்களுக்கு வழங்கிய வெளியீடுகளின் மதிப்பு. | 68,195 |
| மாநில அரசு மற்றும் மைய அரசின் வெளியீடுகளின் விற்பனை. | 3,71,065 |
| உயர்நீதி மன்ற வளாகத்தில் உள்ள கிளை விற்பனை நிலையத்தில் விற்பனையாகிய வெளியீடுகள். | 58,824 |

விற்பனை அதிகரிக்க 1981 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ''மாலை நேர விற்பனை திட்டம்'' மாலை 5-30 மணி வரை நீட்டிக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

எழுது பொருள் பிரிவு.

5·1. அரசு எழுது பொருள் பிரிவு கிடங்கு, இராஜாஜி சாலை, சென்னை.

எழுதுபொருள் அச்சுத்துறையின் எழுது பொருள் பிரிவு எழுது பொருள்கள், தட்டச்சுப் பொறிகள், படிப் பெருக்கிகள், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவற்றை தேவைக்கேற்ப கொள்முதல் செய்து அரசு அலுவலகங்களுக்கு இலசவமாக வழங்கும் மைய முகவரமைப்பாக இயங்கி வருகிறது. இது துணை இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் 327 பணியாளர்களைக் கொண்டு 31-3-1983 ஆம் நாளிலிருந்து இயங்கி வருகிறது. 1-4-1983-ல்

இருந்து 30-11-1983 வரையிலான காலத்தில் ரூ. 1·56 கோடி அளவிற்கு எழுது பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டன. மைய அரசின் உதவி பெறும் அல்லது மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு முன் கூட்டியே உரிய தொகை பெற்றுக் கொண்டு எழுது பொருட்கள் வழங்கப்படுகின்றன.

5·2. எழுது பொருள் கொள்முதல் :

காகிதம், அட்டை, தட்டச்சு பொறிகள், படி பெருக்கிகள், கதர், கைத்தறி, துணிகள் அச்சகம், சிறை ஆகியவற்றில் தயாரிக்கப்படும் பொருட்கள் நீங்கலாக எல்லா எழுது பொருள்களும் ஆண்டு தோறும் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் வெளி அங்காடியில் வாங்கப்படுகின்றன.

5·3. காகிதம் அட்டைகள் கொள்முதல் :

காகிதமும் அட்டைகளும் புதுடில்லியில் உள்ள வழங்கல் விற்பனை தலைமை இயக்குநர் வீத ஒப்பந்த அடிப்படையில் செய்யும் ஒதுக்கீட்டின் பேரில் பல காகித ஆலைகளில் இருந்து கொள் முதல் செய்யப்படுகின்றன.

சிறப்பு வகைக்காகிதம், அட்டை முதலியவை மேற் கூறிய மைய அரசு வீத ஒப்பந்த அடிப்படையில்லாமல் வெளி அங்காடியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதின் மூலம் (வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள், வரம்பிற்குட்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் தனி ஒப்பந்தப்புள்ளிகள்) சிறப்பு கொள்முதல் குழுவின் ஒப்புதல் பெற்று கொள்முதல் செய்யப்படுகின்றன.

அரசு எழுது பொருள் பண்டகசாலையிலும் கிடங்கிலும் பணிபுரியும் எல்லா தொழில் நுட்ப ஊழியர்களுக்கும் தற்போது பணியாளர் வருகைப் பட்டியல் முறையை மாற்றி அடையாள வில்லைகள் மூலம் பணியாள்ர் வருகையை பதிவு செய்யும் முறையை அமுல் செய்யும்படி அரசு 1983 ஆம் ஆண்டு ஜுலைத் திங்களில் உத்தரவு பிறப்பித்துள்ளது.

6. பணியாளர் வசதிகள் :

பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சில வசதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

(1) குடியிருப்புகள் :

சென்னையிலுள்ள தண்டையார்பேட்டையில் பணியாளர்களுக்கென 300 வீடுகள் உள்ளன. இந்த வீடுகளில் கம்பி வலை பொருத்தி, மின் விசிறி, பாதுகாக்கப்பட்ட குடி நீர் வசதிகளும், தெருவிளக்குகள் வசதிகளும், உள்ளன.



(2) தொழிலாளர் நலன் :

தொழிலாளர் நல அலுவலரும் சுகாதார ஆய்வாளரும், குடியிருப்புகளை அடிக்கடி பார்வையிட்டு அங்குள்ளவர்களின் நலனைக் கவனித்து வருகின்றனர். தொழிலாளர்களின் தேவைக்காக கூடுதலாக 232 குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. தொழிலாளர்களின் இன்னல்களைக் களைய தொழிலாளர் நல அலுவலர் இத்துறையின் சென்னை மற்றும் வெளியூர் பகுதிப் பிரிவுகளுக்கு நேரிடையாகச் சென்று வருகிறார். சுகாதாரம் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்று சுகாதார ஆய்வாளர் நகரில் உள்ள எல்லா பிரிவுகளுக்கும் சென்று மேற்பார்வையிடுகிறார். ஓய்வு அறை, சிற்றுண்டி அறை, மிதிவண்டி நிறுத்துமிடம், வானொலி, பிரிவு நிலை வகுப்புகள் நடத்தும் அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டு தொழிலாளர்கள் தொடர்ந்து இவற்றை பயன் படுத்தி வருகின்றனர்.

(3) மருத்துவ வசதி :

மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தைச் சார்ந்த மருத்துவ அலுவலர் வாரம் ஒரு முறை இயக்ககம், எழுது பொருள் பண்டக சாலை, உயர்நீதி மன்ற கட்டிடக் கிளை அச்சகம், ஆனைக்காரன் தோட்டம் ஆகியவற்றிற்குச் சென்று பார்வையிடுகிறார். நாள்தோறும் பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தில் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. சூளையில் உள்ள கிளை அச்சகத்திற்கு தனியே மருத்துவ அலுவலரை நியமிப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(4) பன், தேநீர், பால், இலவசமாக வழங்குதல் :

அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் அனைத்திலும் பணிபுரியும் எல்லா பணியாளர்களுக்கும் பன், தேநீர் இலவசமாக வழங்குவதற்குப் பதிலாக, ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் படி வழங்கப்படுகிறது. மேலும் உலோகப் புகையினால் உடல் நல இன்னல்களுக்காட்படக்கூடிய பணியாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் 250 மில்லி லிட்டர் பாலுக்குப் பதிலாக ஒரு நாளைக்கு ரூ. 0.60 ஒவ்வொரு பணியாளருக்கும் வழங்கப்படுகிறது. அத்துடன் இலவசமாக பல வகை ஊட்டச்சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

(5) பணியாளர் நல நிதி :

பணியாளர் நல நிதியிலிருந்து விளையாட்டுகளுக்கும், நலப் பணிகளுக்கும் தொகை வழங்கப்படுகிறது. மேலும் விடுதலை நாள் விழா, ஆயுதபூசை முதலியன கொண்டாடவும் இந்த நிதியில் இருந்து பணியாளர்களுக்குத் தொகை வழங்கப்படுகிறது.

(6) சீருடைகள் :

இத்துறையின் பணியாளர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரை 1,018 பணியாளர்களுக்குச் சீருடைகள் வழங்கப் பட்டுள்ளன. மேலும் 953 பணியாளர்களுக்குச் சீருடை வழங்க அரசு பரிசீலித்து வருகிறது.

(7) பணியாளர் நல நிதி :

பணியாளர் இறக்க நேரின் அவருடைய குடும்பத்தினருக்கு உடனடி நிவாரணமாக ரூ. 100 இந்த நிதியிலிருந்து வழங்கப் படுகிறது. இதைத் தவிர, இறந்த பணியாளர்களின் சட்டப் படிக்கான வாரிசுதாரர்களுக்குத்தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 200 வழங்கப்படுகிறது.

(8) நலத் திட்டங்கள் :

(i) நலத் திட்டமாக, பெண்கள் துணை வருவாய் பெற உதவும் வகையில் புத்தகம் கட்டும் வேலை, மேலுறை தயாரித்தல் ஆகியவை சென்னை மாநகரில் உள்ள காவல் துறை நலப் பிரிவுகள், பட்டினப்பாக்கம் மகளிர் மன்றம், உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றினிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

(ii) 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அரசு வட்டார அச்சகங்களில் உள்ள கீழ்க்கண்ட தொழில் சங்கங்களுக்கு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது :—

1. மதுரை வட்டார அச்சகத் தொழிலாளர்கள் சங்கம்.

2. அரசினர் பிராந்திய அச்சகத் தொழிலாளர்கள் சங்கம், சேலம்.

3. அரசினர் வட்டார அச்சகத் தொழிலாளர்கள் சங்கம், விருத்தாசலம்.

4. அரசினர் பிராந்திய அச்சகத் தொழில்ாளர்கள் சங்கம், திருச்சிராப்பள்ளி.





(iii) மைய அச்சகத்திலும் இதர அச்சகங்களிலும் எல்லா நிலைகளிலும் பணிகளைத் திட்டமிட்டு மேலும் திறம்பட செயல் படுத்துவதற்காக உதவிப் பணி மேலாளர் பதவியை துணைப் பணி மேலாளர் பதவியாக நிலை உயர்த்தி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(iv) அரசு அச்சகங்களில் பொருட்கள் திருடு போவதைத் தவிர்ப்பதற்காக திருட்டைக்கண்டு பிடிக்கும் வாயிற் காப்பாளருக்கு தற்போது வழங்கப்படும் வெகுமதித் தொகை ரூ. 15 கீழ்க்கண்டவாறு உயர்த்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது:—

1. ரூ. 1,000-க்கும் அதற்குக் கீழும் மதிப்புள்ள திருட்டுப் பொருட்களைக் கண்டு பிடிப்போர்க்கு ரூ. 50.

2. ரூ. 1,000-க்குமேல் மதிப்புள்ள திருட்டுப் பொருட்களைக் கண்டு பிடிப்போர்க்கு ரூ. 75.

(v) புத்தகம் கட்டும் பிரிவில் பணிபுரியும் கண் பார்வை இழந்த தொழிலாளர்கள் இதர தொழிலாளர்கள் செய்து முடிக்க வேண்டிய பணியில் 75 விழுக்காட்டுக்குக் குறையாமல் பணி செய்து முடித்தால் அவர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப் பட வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

(vi) அச்சுத் துறையில் பட்டயம் பெற்ற ஊழியர்களுக்கு 1-4-1978 முதல் கீழ்க்கண்டவாறு கூடுதல் அடிப்படைச் சம்பளம் அனுமதிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது :—

1. தொழில் நுட்ப உதவியாளர்கள்.—

ரூ. 295—5—315—10—475 சம்பள விதத்தில் உள்ளவர்கள். ரூ. 325

2. இளநிலை முதலாள்.—

ரூ. 325—10—445—15—550 சம்பள விதத்தில் உள்ளவர்கள். ரூ. 375

(vii) 1983 ஆம் ஆண்டில் இறந்த பணியாளர்களின் சட்டப் படிக்கான வாரிசுதாரர்கள் 14 பேருக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(viii) 167 உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பளித்த பெருமை இத்துறைக்கு உண்டு.

(9) தொழில் பழகுதல் :

1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தை அமல் படுத்தும் வகையில் வெவ்வேறு வகை தொழில்களின்கீழ் 249 தொழில் பழகுபவர் பதவிகளுக்கு அரசு அனுமதி அளித்திருப்ப தோடு 45 பதவிகளின் குறுகிய காலப் பாடப் பட்டயம் பெற்ற வர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு, தொழில் பழகுபவர் சென்னை மாநகரிலும் வெளியூர்களிலும் உள்ள அரசு அச்சகங் களில் பணிபுரிய அனுப்பப்படுகின்றனர். தொழில் பழகுவோருக் கான உதவித் தொகையையும் அரசு கீழ்க்கண்டவாறு உயர்த்தி, 1983 ஜுனில் உத்தரவு பிறப்பித்துள்ளது :—

| | தற்போது அளிக்கப் படும் உதவித் தொகை. | உயர்த்தப் பட்ட உதவித் தொகை. |
|---|---|---|
| | (திங்கள் ஒன்றுக்கு). | |
| | ரூ. | ரூ. |
| முதலாம் ஆண்டு .. .. | 130 | 230 |
| இரண்டாம் ஆண்டு .. .. | 140 | 260 |
| மூன்றாம் ஆண்டு .. .. | 150 | 300 |
| நான்காம் ஆண்டு .. .. | 180 | 350 |

பட்டயதாரர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 180-லிருந்து ரூ. 320 ஆகவும், குறுகிய காலப் படிப்பு (Sandwich course students) மாணவர்களுக்கு ரூ. 150-லிருந்து ரூ. 250 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட உயர்வீத உதவித் தொகை தொழில் பழகுவோர் அனைவருக்கும் 25-1-1982 முதல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(10) கூட்டுறவுச் சங்கம் :

சென்னை மைய அச்சகத்தில் இயங்கிவரும் தமிழ் நாடு அரசு அச்சகம் எழுதுபொருள் துறை பணியாளர் கூட்டுறவு சங்கத்தில் (வரையறுக்கப்பட்டது), 30-6-1983-ல் உள்ளபடி 2,639 உறுப் பினர்கள் உள்ளனர். அதன் பங்கு முதலீடு, ரூ. 23.37 இலட்ச மாகும். இச்சங்கத்தின் மூலம் 1981-82-ல் இச்சங்க உறுப்பினர் களுக்கு 2.83 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டது. ஆனால்,



1982-83-ல் இச்சங்க உறுப்பினர்களுக்கு மூன்று கோடி ரூபாய் கடன் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இச் சங்கம் 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 4.61 இலட்சம் நிகர லாபம் ஈட்டியது. ஆனால் 1982-83-ல் இது 4.94 இலட்சம் ரூபாயாக உயர்ந்தது. இச் சங்கம் அதன் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து 12 சதவீதம் ஆதாயப் பங்குத் தொகை வழங்கி வருகிறது.

(11) கூட்டுறவுப் பண்டகசாலை :

மைய அச்சகத்தில் செயல்படும் கூட்டுறவு பண்டகசாலை கட்டுப்பாட்டு ஏற்பாட்டின்கீழ் வரும் பொருட்கள் உட்பட இன்றியமையாத பண்டங்களை நியாயவிலையில் பணியாளர் களுக்கு வழங்குவதன் மூலம் பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. இச்சங்கத்தில் 31-12-1983 ஆம் நாளன்று உள்ள படி 1,503 உறுப்பினர்கள் உள்ளனர். இதன் பங்கு மூலதனம் ரூ. 60,140 ஆகும். அதிகபட்சமாக மாதம் ரூ. 200 வரை பொருட்களைக் கடனாக வாங்கிக் கொள்ளும் வசதியும் அனு மதிக்கப்பட்டுள்ளது. இப்பண்டகசாலை, 1-7-1982 முதல் 31-12-1983 வரை ரூ. 4,377 நிகர லாபம் ஈட்டியுள்ளது. தொழிலாளர் நலன் கருதி, 3 முதல் 6 சதவிகிதம் வரை ஆதாயம் கிடைக்கும் வகையில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வரு கின்றன.

(12) சென்னை அரசு அச்சகக் குழு :

தொழிலாளர்களால் சென்னை அரசு அச்சகக் குழு (Government Press Party) ஒன்றும் அமைக்கப்பட் டுள்ளது. இக்குழுவில், 31-12-1983-ல் உள்ளபடி 3,423 உறுப் பினர்கள் உள்ளனர். இக்குழு உறுப்பினர்கள் எவரேனும் இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்திற்குத் தேவையான அவசர உதவிகளைச் செய்து வருகிறது. 1983 ஆம் ஆண்டில் 61 உறுப் பினர் குடும்பங்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 64,067 வழங்கப் பட்டுள்ளது.

இத்துறையின் பல்வேறு பிரிவுகள், பாதுகாப்புப் பராமரிப்புக் காக பின்வரும் பரிசுகளைப் பெற்றுள்ளன :—

1. கிளை அச்சகம் (ஆனைக்காரன் தோட்டம்), சென்னை 21-1-1984-இல் 1981 ஆம் ஆண்டுத் திட்டம் 2-ன்கீழ் மாநிலப் பாதுகாப்புக் குழுவினால் முதல் பரிசாக ரூ. 1,000 ரொக்கமாக வும் சுழல் கேடயமும் பெற்றுள்ளது.

2. கிளை அச்சகம், புதுக்கோட்டை, 21-1-1984-ல், 1981 ஆம் ஆண்டிற்கு மாநிலப் பாதுகாப்புக் குழுவினால் முதல் பரிசாக ரூ. 250 ரொக்கமும், ஒரு சான்றிதழும் பெற்றுள்ளது.

3. கிளை அச்சகம் (உயர் நீதிமன்றம்), சென்னை, 1981-82 ஆண்டிற்கு ரொக்கப் பரிசாக ரூ. 500-ம் ஒரு சான்றிதழும் பெற் றுள்ளது.

[1984 மார்ச் 22

பொது.

நிர்வாகத்திற்கும் பணியாளர்களுக்குமிடையே உள்ள உறவு எப்பொழுதும்போல் சுமுகமாக இருந்து வருகின்றது. பணியாளர்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்யும் பொருட்டு எழுது பொருள் அச்சகத் துறை இயக்குநர், இணை இயக்குநர் ஆகியோர் நேரம் ஒதுக்கி உள்ளனர். இத்துறையின்கீழ் இயங்கும் சென்னை, வெளியூர்ப் பிரிவுகளில் தொழிலாளர் ஒத்துழைப்பு நல்ல முறையில் இருந்து வருகிறது. இவ்வச்சகம், அது ஏற்றுக் கொண்ட சிறப்பு அச்சுப் பணிகள் அனைத்தையும் குறித்த காலத்திற்கு முன்னரே முடித்துக் கொடுத்தது மெச்சத்தக்க சாதனையாகும். பணிகள் செவ்வனே நடைபெறத் தொழிலாளர்கள் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர்.

800 009
136239
V211,31 N84
N84.62-3

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.